விலை ரூபா 30 பக்கங்கள் 52

# உதயன்

மகாராஜா பொதிகள் சேவை
வவுனியாவில் ஓர் நம்பகரமான பொதிகள் சேவையினை தேடுகிறீர்களா ?
* விரைவானதும் நம்பகரமானதுமான 25 வருட அனுபவம் வாய்ந்த எமது நிறுவனத்தை நாடுங்கள்
GTV Enterprises (Pvt)Ltd.
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
024 - 4930200 / 076 - 6908961

சுடர் 31 கதிர் 059 வள்ளுவர் ஆண்டு 2047 தை 10, ஞாயிற்றுக்கிழமை 24.01.2016

# புதியதொரு வாழ்க்கை தமிழருக்கு வேண்டும்

*முல்லைத்தீவு பொங்கல் விழாவில் வைரமுத்து கோரிக்கை*



முல்லைத்தீவு,ஜனவரி 24
தமிழர்களுக்கு காணியைப் பெற்றுக் கொடுங்கள். அவர்களுக்குக் கல்வியைப் பெற்றுக் கொடுங்கள். ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்களுக்குப் புதியதொரு வாழ்க்கையைப் பெற்றுக் கொடுங்கள். அதற்கு நாங்களும் துணை நிற்போம் என முல்லைத்தீவில் நேற்று நடைபெற்ற வடக்குமாகாண பொங்கல் விழாவில் வைத்து பகிரங்கக் கோரிக்கை விடுத்தார் கவிப்பேரரசு வைரமுத்து. நேற்றைய பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் அங்கு உரையாற்றிய போதே இந்தக் கோரிக்கையை முன் வைத்தார். பக். 49

## விக்கிரமாதித்யா கப்பலை பார்வையிட்டார் மைத்திரி



கொழும்பு, ஜன.24
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று கொழும்புத்துறைமுகத்தில் தரித்து நிற்கும் இந்தியாவின் மிகப் பெரிய விமானந்தாங்கிப் போர்க்கப்பலான ஐஎன்எஸ் விக்கிரமாதித்யாவைப் பார்வையிட்டார்.
இதன்மூலம், ஐஎன் எஸ் விக்கிரமாதித்யா விமானம் தாங்கிக் கப்பலுக்குப் பயணம் மேற்கொண்டு பார்வையிட்ட முதல் வெளிநாட்டு அரச தலைவர், மைத்திரிபால சிறிசேன என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
மூன்று நாள் நல்லெண்ணப் பயணமாக கடந்த வியாழக்கிழமை கொழும்புத் துறைமுகத்தை பக். 05

## புத்தூரில் நேற்று அதிகாலை 650 மீற்றருக்கு நில வெடிப்பு

*இதனால் பெரும் பரபரப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 24
புத்தூரில் நேற்று அதிகாலை சுமார் 650 மீற்றர் சுற்றுவட்டாரத்தில் நிலவெடிப்பு இடம்பெற்றுள்ளது. அங்கு மட்டுமன்றி வடக்கு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இந்த நில வெடிப்பு அரை அங்குலம் முதல் ஒன்றரை அங்குலம் வரை அகலமாகக் காணப்படுவதாக இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவிக்கிறது. பக். 49



மேலும் படங்கள் 2 ஆம் பக்கத்தில்

## ஹெரோயினுடன் இளவாலையில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 24
ஆபத்தான, 140 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளவாலையில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இளவாலையில் வைத்து நேற்றுமுன்தினம் அதிகாலை பக். 47

## இன்று கொழும்பு வருகிறார் ஜப்பானின் விசேட பிரதிநிதி

*போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை அமைப்பது தொடர்பில் ஆராய்வதற்காக*



கொழும்பு, ஜன. 24
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவது தொடர் பக். 48

முச்சந்தி முரளி



அப்பம் தின்னுற ஆசையில இப்ப எல்லாரும் வருகினம் பாருங்கோ...

## அமெரிக்க ராஜதந்திரி நாளை இலங்கைக்கு

கொழும்பு, ஜன.24
அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் மற்றொரு உயர் அதிகாரி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப் பக். 48

## எதிர்காலத்தில் இலங்கைக்கு மேலும் கடன்கள், உதவிகள்

### ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் சுவிஸில் தெரிவிப்பு

*-டாவோஸிலிருந்து உதயன் பிரதிநிதி-*



டாவோஸ், ஜன.24
ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தனிமனித சுதந்திரம் ஆகிய துறைகளில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தின் காரணமாக எதிர்காலத்தில் இலங்கைக்கு மேன்மேலும் உதவிகளையும், கடன்களையும், நிபுணத்துவ ஆலோ பக். 49

## வீட்டுப் பிளாற் இடிந்து மேசன் தொழிலாளி சாவு

*வலி.வடக்கில் நேற்றுப் பரிதாபம்*

யாழ்ப்பாணம், ஜன. 24
வலி.வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் வீடு புனரமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது வீட்டின் சிமெந்தினாலான பரந்த முகப்பு பக். 47



## ஆஸி. ஆள்கடத்தலுடன் புலிகளுக்கு தொடர்பா?

*சந்தேகம் வெளியிடுகிறது தமிழக பொலிஸ்*

கொழும்பு, ஜன. 24
இந்தியாவில் இருந்து ஆஸ்திரேலியா நோக்கி இடம் பெறும் சட்டவிரோத ஆள் கடத்தல் சம்பவங்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கோ அல் பக். 49

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்னும் 5 நாட்களில்
JITF 2016
7th JAFFNA INTERNATIONAL TRADE FAIR

www.sdb.lk
நிலையான வைப்புகளுக்கு
உயர்ந்த வட்டி
ஐந்து வருட நிலையான வைப்பொன்றுக்கு
10.75 % உச்ச வருட வட்டி (முதிர்ச்சியில்) வ.தே.வ. 8.98%

| | 3மாதம் | 6மாதம் | 1வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ. வ. வீ.) | 7.25% | 8.25% | 8.75% |
| வ.தே.வ. | 7.45% | 8.42% | 8.75% |

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு 1 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கு அதி உயர் வட்டியும் உரித்தாகும்.
ஏனைய நிலையான வைப்புகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதம்
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சணச அபிவிருத்தி வங்கிக் கிளையை நாடுங்கள்
011 5 411 411
SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

# பாணுக்குள் கஞ்சா மறைத்து வைத்து கைதிகளுக்கு விற்க முயன்றவர் கைது

## யாழ். சிறைச்சாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜன.24
யாழ். சிறைச்சாலைக்குள் இருக்கும் கைதிகளுக்கு விற்பனை செய்யும் நோக்கில் பாண் ஒன்றுக்குள் கஞ்சாவை வைத்துக் கொடுக்க முற்பட்ட ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளார்.



நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மானிப்பாய் பூங்காவடி பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.
பருத்தித்துறையைச் சேர்ந்த நபர் ஒருவர் 30 கிராம் கஞ்சாவை ஒரு இறாத்தல் பாணுக்குள் வைத்து சிறைச்சாலைக்குள் கொடுத்து விடுமாறு மானிப்பாயைச் சேர்ந்த குறித்த நபரிடம் கொடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இவை தொடர்பில் தகவலறிந்த பொலிஸார் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு தகவல் வழங்கியுள்ளனர். சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன், யாழ். பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயலத்தின் சிறப்பு அணியினரும், பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் மற்றும், சார்ஜன்ட் அழகக்கோன், இளைய பெருமாள் ஆகியோர் இணைந்து கைது நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.
கைது செய்யப்பட்ட நபர் வேறு நபரின் தூண்டுதலின் பேரில் குறித்த நபருக்குக்கஞ்சாவைக் கொண்டு சென்றுள்ளார் என்று ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர்.
தான் கையளிக்க வேண்டிய நபரை தெரியாது என்றும் தனது நண்பரின் வேண்டுகோளுக்கு இணங்கக்கஞ்சா பொதியைக் கொண்டு சென்றதாகவும் கைது செய்யப்பட்டவர் விசாரணையில் கூறினார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
குறித்த நபர் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார்.விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
அதேவேளை, இரண்டு வாரங்களுக்கு முன்னரும் யாழ்.சிறைச்சாலைக்குள் கஞ்சா கொண்டு சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.
கஞ்சா விற்பனை செய்த குற்றச்சாட்டில் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஒருவருக்கு கொடுப்பதற்காகவே அதனைக் கொண்டு சென்றிருந்தார் என்று விசாரணையில் தெரிய வந்திருந்தது என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.
இதுதவிர, குருநகர் சின்னக்கடை பகுதியில் 23 கிராம் மாவா பாக்கை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட இருவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அதன்பின்னர் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
(ந-ஜ-4,106)

## முல்லைத்தீவுக்கு இன்று வருகிறார் ஜனாதிபதி

முல்லைத்தீவு, ஜன.24
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இன்று வருகை தரவுள்ளார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலை ஒன்றை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கும் நோக்கில் இன்றைய தினம் வருகை தரும் ஜனாதிபதி குறித்த நிகழ்வு முடிந்ததும் கொழும்பு திரும்புவார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.
இவ்வாறு ஜனாதிபதி இன்றைய தினம் முல்லைத்தீவிற்கு வருவதையிட்டு நேற்று மாலையில் இருந்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.
(வ-101)

## வடமராட்சி கிழக்கில் கட்டுமரத்தில் மீன்பிடி

யாழ்ப்பாணம், ஜன.24
வடமராட்சி கிழக்குக் கடற்பகுதியில் சுமார் 200 வரையிலான கட்டுமரங்களில் மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.
தற்போதைய காலநிலை, காற்றின் தாக்கம் போன்றவற்றைப் பயன்படுத்தி மீனவர்கள் கட்டுமரங்களில் கடலுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.
கடற்கரையில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்கு உட்பட்ட பகுதியில் சென்று இந்த மீன் பிடித் தொழிலில் மீனவர்கள் ஈடுபட்டும் வருகின்றனர். எனினும் மீன்களின் பிடிபாடு மிகக் குறைந்தே காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.
தற்போதைய காலநிலையைப் பயன்படுத்தி மீனவர்கள் கட்டுமரங்களில் சென்று மீன் பிடியில் ஈடுபட்டாலும், அவர்களுக்கு தொழில் மூலம் அதிக வருமானம் கிடைப்பதில்லை என்று மீனவர்கள் தெரிவித்தனர்.
குடா நாட்டின் கடற்பகுதியில் வடமராட்சி கிழக்கு கடற் பகுதியிலேயே அதிகமான மீனவர்கள் கட்டு மரங்களில் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். (ந-ஜ-17)



கவிப் பேரரசு வைரமுத்து வட மாகாணசபையின் அவைத் தலைவரைச் சந்தித்ததோடு சபா மண்டபத்தையும் பார்வையிட்டார். வட மாகாண சபையின் செயலகத்தில் வைரமுத்துவுக்கு அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவித்து வரவேற்றார். அதனைத் தொடர்ந்து சபையின் செயலகத்தையும் பார்வையிட்டதுடன் நினைவுப் பரிசில்களையும் பரிமாறிக் கொண்டனர். (ந-101)



புத்தூர், நவக்கிரிப் பகுதிகளில் நேற்று அதிகாலை நிலத்தில் திடீரென நீண்ட வெடிப்புகள் தென்பட்டன. அதனால் வீடொன்றும் பாதிப்புக்குள்ளானது. இந்தத் திடீர் சம்பவத்தால் அந்தப் பகுதியில் நேற்றுப் பரபரப்பு நிலவியது.

## தலையில் காயங்களுடன் ஒருவர் சடலமாக மீட்பு

*மல்லாவியில் நேற்று முன் தினம் சம்பவம்*

மாங்குளம், ஜன. 24
மல்லாவி தேறாங்கண்டல் பகுதியில் தலையில் காயங்களுடன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்..
அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று உறவினர்கள் சந்தேகம் தெரிவித் துள்ளனர். அதே கோணத்தில் விசாரணை முன்னெடுக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்று முன்தினமிரவு வீடு புகுந்து இந்தக் கொலை நடத்தப் பட்டுள்ளது.
இந்தச் சம்பவத்தில் காளிதாஸ் ஜெயகாந்தன் (வயது - 37) என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அவரது மகன் அயல் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்துள்ளார்.
குறித்த குடும்பஸ்தரின் மனைவி அயல்வீடு சென்று மகனைக் கூட்டிக் கொண்டு வீடு திரும்பும் சில விநாடி களில் அந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்று விசாரணையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வீடுதிரும்பியமனைவி கட்டிலில் கணவன் தலையில் காயத்துடன் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டார். அயலவர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோதும் அவர் உயிரிழந்து விட்டதால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.
சடலத்தின் தலைப் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை சம்பவ இடத்துக்குச் சென்ற நீதிவான் விசாரணை மேற்கொண்டார். வவுனியா பொது வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
குறித்த உயிரிழப்பில் சந்தேகம் இருப்பதாகவும் எந்த வகையான ஆயுதத்தினால் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது போன்ற விசா ரணையைப் பொலி ஸார் ஆரம்பித்துள்ள தாகவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் தாக்குதலுக்குள்ளாகிவவுனியா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

### காணி விற்பனைக்கு

கொக்குவில் தலையாழியில் 6 பரப்புக் காணிகள் (1½ பரப்பு வீதம் 4 துண்டுகள்) விற்பனைக்கு உண்டு.

தொ.பே: 0776033259
077 728 6061

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சீனியர்லேன் கலட்டி பிள்ளையார் வடக்கு வீதி முன் ஒழுங்கையில் கிணற்றுப் பங்குடன் 1½ பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 721 0121, 077 117 5544

### கடை வாடகைக்குண்டு

தொடர்புக்கு: 077 500 6769

யாழ் நகரில் ஸ்ரான்லி வீதியில் (சிறாம்பியடி ஒழுங்கை) கடை வாடகைக்குண்டு.


### வீடு வாடகைக்கு

தொ.இல.0776741213

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 3 அறைகளுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

## கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

## German Language Academy



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

21.12.2015 அன்று ஜேர்மன் தூதரகத்தில் நடைபெற்ற A1 பரீட்சையில் எமது நிறுவனத்தின் ஊடாக தோற்றி (60-81 புள்ளிகள் வரையான) அதிகூடிய புள்ளிகள் பெற்று சித்தியடைந்தவர்களை எமது நிறுவனம் பாராட்டி வாழ்த்துகின்றது.

- ✔ புதிய பிரிவுகள் வெகுவிரைவில் ஆரம்பமாகவுள்ளன.
- ✔ எமது நிறுவனத்தில் குறைந்த கட்டணத்தில் கற்கைகள்.

-அரச அங்கீகாரம் பெற்றது-

ஆரியகுளம் சந்தி, இரண்டாம் மாடி, யாழ்ப்பாணம். தொடர்பு: 077 9707 322

### வேலைவாய்ப்பு

தொடர்பு 0766606970

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல்யமான "ரெஸ்ரூரண்ட்டுக்கு" சுத்திகரிப்பாளர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

### வீடு விற்பனைக்கு

தொடர்பு 0766575936

யாழ்-சுண்டுக்குழி பஸ்ரியன் சந்தியில் A9 வீதிக்கு அண்மித்ததாக சிறந்த சுற்றாடலில் வீடு விற்பனைக்கு உண்டு. 4 அறைகள், சமையல் அறை, வரவேற்பறை, குளியலறை, கராஜ் மற்றும் மேலதி வாகனத்தரிப்பிட வசதியும் உண்டு.

### வீட்டு பணிப்பெண் தேவை

தொடர்பு 0776138964

இருவர் கொண்ட குடும்பத்துக்கு சமையல் வேலை, சாதாரண வீட்டு வேலைகள் தெரிந்தவர் வீட்டில் தங்கி இருக்க வேண்டும்.பாதுகாப்பான இடம். மாத வேதனம் 10.000/=. வேலைசெய்ய விரும்புவோர் தொடர்புகொள்ளவும். யாழ்.நகரில் நேரிலும் பேசமுடியும்.

### ஆள்தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள வரும், பழக விரும்புபவரும் தொடர்புகொள் ளவும். தொடர்பு: 077 2026295

### பணிப்பெண் தேவை

தொடர்பு 0776146735/0776135632

சிறுப்பிட்டி மேற்கு பகுதியில் வசிக்கும் 85 வயது வயோதிப தாய் ஒருவரை வீட்டில் தங்கி நின்று பராமரிக்க பணிப்பெண் தேவை.

### தவறிவிட்டது

காயத்திரி என்பவருடைய தேசிய அடை யாளஅட்டை பேர்சுடன் மந்திகை கூட்டுறவு கடைக்கு முன்பாக தவறி விட்டது. கண்டெடுத் தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 021 226 0277

### வீடு விற்பனைக்கு

இல.120.120/1 புகையிரத நிலைய வீதி யாழ்ப்பாணத்தில் ஒரு பரப்புக் கொண்ட 2 காணிகள் 2 வீட்டுடன் விற்பனைவுக்கு உண்டு.

தொடர்பு:
077 798 9200 ,077 224 9523

### வீடு வாடகைக்கு உண்டு

A9 வீதி கிளிநொச்சி கந்தசாமி கோயிலில் இருந்து 500m தூரத்தில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 633 7307

## வேலை வாய்ப்பு

இலத்திரனியல் சாதனங்கள் விற்பனை செய்யும் **Samsung Singhagiri** நிறுவனத்தின் யாழ். கிளையில் வேலைவாய்ப்பு.

1. Showroom Assistant
2. Field Officer

ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்

**0777 064 368**

## ஆசிரியர் பதவி வெற்றிடம்
## மூலைக்கல் சமுதாய அமைப்பு

மூலைக்கல் சமுதாய அமைப்பானது கிளிநொச்சி மாவட்டத்தில் "செழிமையான உதயத்துக்கான கல்விசார் அபிவிருத்தி திட்டத்தினை" செயற்படுத்த கீழ்வரும் பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கு வெற்றிடம் காணப்படுகின்றது. மேலும் இக் கல்வி நடவடிக்கையானது மாலை நேர வகுப்பாக திங்கள் முதல் வெள்ளிவரையான கிழமை நாள்களில் பி.ப 3.30 மணி தொடக்கம் பி.ப 5.30 மணிவரை நடைபெறும். சிறந்த கொடுப் பனவு வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: பெப்ரவரி - 05.02.2016**

**தேவைப்படும் பாட ஆசிரியர்கள்**

1. புலமைப்பரிசில் ஆசிரியர்,
2. தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு (6-11)

**மேலதிக விவரங்களுக்கு:**

இயக்குநர் :- 021 228 5533, 077 2458658
admin@cornerstonecommunity.foundation
Reg.No. GA-3127
இல.6A, ஆனந்தபுரம், கிளிநொச்சி.
( A9 வீதி, பொது வைத்தியசாலை முன்பாக)

### சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2729 திகதி: 2016-01-23

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 02 07 11 43 R
போனஸ் இல.: 27
திங்கட்கிழமை ஜக்பொட: ரூ. 23,737,200/-

தொ.இல: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk

நீல நிற டிக்கட்டுக்கள் 2016.01.25 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 452
சீட்டிழுப்பு திகதி 2016.01.23

வெற்றி இலக்கங்கள்: 07 28 36 58 E

அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்: ரூ. 46,678,220/=

தொ.இல: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## MAHALUCKSMY CONSTRUCTION
## மஹாலஷ்மி கொன்ஸ்ரக்சன்

✦ வீடுகள், கடைகள், மண்டபங்கள் மற்றும் பல மாடிக்கட்டடங்கள் சிறந்த முறையில் பொறியியலாளர்களின் தலைமையில் அமைத்துத் தரமுடியும்.

✦ மேலும் நீங்கள் கட்டடம் கட்டுவதற்காக முதலீடு செய்யும் பணத்தின் வருடத்துக்கு 5% னை போனஸ் பணமாக 10 ஆண்டுகளுக்கு. வருடாந்தம் அல்லது மாதாந்தமாக பெற்றுக்கொள்ளலாம்.

**வேலைத்திட்டத்தின் முதற்படி பணத்தை எங்கள் நிறுவனம் முதலீடு செய்து வேலைகள் ஆரம்பிக்கப்படும்.**

இல.340/5, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புக்கு: 0766605047

Tel: 021 561 6061 mahalucksmy@gmail.com

## நேரடியாக கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பொருட்களை யாழ் விலையில் சாவகச்சேரி நகரில் பெற்றுக்கொள்ள....



# பொதிகை

கொம்பியூட்டர் கிராபிக்ஸ்

**புத்தகசாலை** இல. 03, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.[நவீனசந்தை அருகாமை]

நவீனவிதமான
வெற்றிக்கிண்ணங்கள்
வெற்றிப் பதக்கங்கள்
கேடயங்களை
ஒரே இடத்தில் தரமாகவும்
மலிவாகவும்
பெற்றுக்கொள்ளுங்கள்

மாதாந்த, தவணைப் பரீட்சை வினாத்தாள்கள்

T.P :0212270447
email : phothigai@gmail.com

## இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான கல்லூரி

## British College of Beauty Studies & Olialakan Studio

இணைந்து நடத்தும் பெண்களுக்கு பொருத்தமான பல துறைகள் சார்ந்த Diploma பாடநெறிகள்.

அழகுக்கலையில் மட்டும் **20 பாடநெறிகளை வடிவமைத்துள்ளோம்.**

Advance Level உம் எம்மிடம் உண்டு.

Video editing, Album designing training வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

Icing, தையல், Computer, Variety Cakes, Ladies Skills Development போன்ற Special ஆக தயாரிக்கப்பட்ட பாடநெறிகளும் உண்டு.

**எங்கள் சிறப்பம்சங்கள்:**

- ஒருநாள் மற்றும் 3.6 மாத கால அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
- எங்களுடைய சான்றிதழ்கள் அனைத்துமே International Certificates ஆகும்.
- வகுப்பு முடிவில் Parlour System Training வழங்கப்படும்
- வகுப்புகள் முடிந்தபின் மாணவர்களுக்கு சொந்த தொழில் அமைக்க பண உதவி செய்து தரப்படும்.
- எங்கள் கல்லூரியில் படிக்கும் ஒவ்வொருவருக்கும் சுய தொழில் செய்வதற்கான உதவிகள் செய்து தரப்படும்.

### Olialakan Award 2016

**Photographers Beauticians** கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற உள்ளது. உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்



O/L, A/L மாணவர்களுக்காகவும், சுயதொழில் செய்ய விரும்புபவர்களுக்காகவும் வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காகவும் விஷேடமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறிகளும் எம்மிடம் உள்ளன.

BCBS

**British College of Beauty Studies** Palaly Road, Thirunelvely Junction. ✆0767011645

# விளம்பரம்



**வாடகைக்கு** **071 462 0806**

நல்லூர்ப் பகுதியில் அனெக்ஸ் (தனிஅறை, இணைந்த குளியலறை, சமையலறை) வாடகைக்குண்டு.
2 பெண்கள் மட்டும் வசிக்கலாம்.
(சி/28545)(11.15.18)

**இணுவைக்கந்தனுக்கு இன்று திருமஞ்சம்**

திருமஞ்சத்தில் எழுந்தருளி காட்சி கொடுக்கும் இணுவையூர் வேல் முருகன்.......

அற்புதம் நிகழ்த்தும் அற்புதன்
அழகன் இணுவையூர் வேலவன்
குற்றம் குறைகளை கூறிடு
கூடிடும் பக்தியை நாடிடு
பற்றுடன் பாதம் பணிந்திடு
பாரினில் சிறந்து வாழ்ந்திடு
சற்று நீ மனதை அவன்பால் சாய்த்திடு
எல்லாமே கை கூடும்.... அவனை நாடிடு

**சேவை** **076 897 0707**

உங்களது அன்புக்குரிய முதியோரை எங்களது முதியோர் இல்லத்தில் ஆதரவுடனும் அரவணைப்புடனும் வைத்திய தாதியர் சேவையுடனும் பராமரிக்கத் தயாராக உள்ளோம்.
(சி/28350)(11.15.18)

**விற்பனைக்கு** தொடர்பு: 076 603 6597

**KDH:201 ரக PG இலக்கம் உடைய கயஸ் வான் விற்பனைக்கு உண்டு.**

**வீடு வளவு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அண்மையில் K.K.S வீதிக்கு மிகமிக அருகில் 4அறைகள், 2ஹோல், ஒரு குளியலறை, ஒரு சமையலறை, கராஜ், கிணற்றுடன்கூடிய நல்ல வீடு வளவு உடனடி விற்பனைக்குண்டு. வாங்கவிரும்புவோர் 077 905 0274 என்ற தொலைபேசி இலக்கத்துடன் காலை 6 மணிமுதல் காலை 9மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.
(c 28004)(14,15) (தரகர்கள் தேவையில்லை)


**சாரதிகள், உதவியாளர்கள் தேவை**

கொழும்பில் இருந்து நாடு முழுவதும் பொருள்கள் விநியோகம் செய்யும் தனியார் கொம்பனி ஒன்றிற்கு கனரக/இலகுரக வாகனசாரதிகள், உதவியாளர்கள் தேவை.
சம்பளம்:
சாரதிகள் 22000+ Over time
உதவியாளர்கள் 15000+ Overtime
மற்றும் நாளொன்றுக்கு 250/= வீதம் உணவுத் தொகை வழங்கப்படும்.
தொடர்பு: 077 731 5004

**வேலை ஆள்கள் தேவை** தொடர்பு: 077 663 6732

விற்பனை பொருள் காட்சிப்படுத்துனர்
**(Merchondiser)**
தேனு களஞ்சியம்
(நெஸ்லே விநியோகஸ்தர்)
No. 237 கே.கே. எஸ் றோட்
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 31 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் சைவசித்தாந்த முதுகலைமாணி பட்டத்தினைப் பெற்ற எமது நிறுவன இந்துநாகரிகத்துறை ஆசிரியர்

**திரு. சிவசம்பு சிறிதரன்**
(B.A(Hons)- இந்துநாகரிகம், M.A- சைவசித்தாந்தம்)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மென்மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:- ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**உயர்கலைக் கல்லூரி, கொக்குவில், குளப்பிட்டிச்சந்தி.**

(67820)(11.17.18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு
**சிவசண்முகநாதன் நிரோஷன்**

எமது ஆலய பரிபாலன சபையின் செயலாளர் திரு.சி.நிரோஷன் அவர்கள் கடந்த 19.01.2016 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தின் 31 ஆவது பட்டமளிப்பு விழாவில் B.Sc விஞ்ஞானமாணி (பொது) பட்டம் பெற்றுக் கொண்டமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**மீனாட்சி, கண்ணகை நாகம்மாள் ஆலய பரிபாலனசபையினர், தொண்டர் சபையினர் சண்டிலிப்பாய்.**

# இணுவில் கந்தசுவாமி கோயில்





## கோயில் வாசல்

## கோபுர திறப்பு விழா

24.01.2016 ஞாயிற்றுக்கிழமை



அமரர் சுப்பையா வைத்திலிங்கம் ஞாபகார்த்தமாக இணுவில் சந்தியில் காலை 7.30 - 8.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற கோயில் வாசல் கோபுர திறப்புவிழா இன்று நடைபெறவுள்ளது.

இரவு சிறப்பு நிகழ்வாக இலங்கையின் புகழ் பூத்த பல பாடகர்கள் சங்கமிக்கும் மாபெரும் இன்னிசை கானங்கள் இடம்பெறும்.

வை. தனகேசவன்
கோபுரம் அரிசி ஆலை
வவுனியா.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

## விக்கிரமாதித்யா

வந்தடைந்த இந்தியக் கடற்படையின் விமானந் தாங் கிப் போர்க்கப்பலான ஜஎன்எஸ் விக்கிரமாதித்யாவுக்கு, இலங்கை அமைச்சர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் தொடர்ந்து பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை அமைச்சர் மங்கள சமரவீர மற்றும்பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜே வர்த்தன மற்றும் முப்படைகளின் தளபதிகள், ஜஎன் எஸ் விக்கிரமாதித்யாவுக்கச் சென்று பார்வையிட்டனர்.

அத்துடன், நேற்றுமுன்தினமிரவு ஜஎன்எஸ் விக் கிரமாதித்யாவில் நடந்த வரவேற்பு மற்றும் கலாசார நிகழ்வுகளில் இலங்கை அமைச்சர்கள் மற்றும் பாது காப்பு அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தநிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று ஜஎன்எஸ் விக்கிரமாதித்யாவுக்குச் சென்று பார்வையிட்டார். அங்கு இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா மற்றும் இந்தியக் கடற் படை அதிகாரிகள் அவரை வரவேற்றனர். இந்தியக் கடற்படையினரின் அணிவகுப்பு மரியா தையும், ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டது.

அத்துடன், ஜஎன்எஸ் விக்கிரமாதித்யாவை சுற்றிக் காண்பித்து, அதன் செயற்திறன் குறித்து இந்திய கடற்படை அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

இதேவேளை, இந்தியக் கடற்படையின் விமானந்தாங்கிப் போர்க்கப்பலான ஐ.என் எஸ் விக்கிரமாதித்யா, கொழும்புத் துறைமுகத்துக்குள் பிரவேசித்த போது, மேற்கு கடற் பகுதியில் சீனக் கடற்படையின்போர்க் கப்பல்களுடன் இலங்கை கடற்படை போர்ப் பயிற்சி ஒன்றை மேற்கொண்டிருந் ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐந்து நாள் நல்லெண்ணப் பயணமாக, சீனக்கடற்படையின், 21 ஆவது வழிப்பாது காப்பு செயலணியைச் சேர்ந்த லியூசோ மற்றும் சன்யா ஆகிய ஏவுகணைப் போர்க் கப்பல்களும், விநியோக கப்பலான குயிங் ஹாய்ஹூவும் கடந்த 17ஆம் திகதி கொழும் புத் துறைமுகத்துக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-வ)

சாவகச்சேரி மீசாலை மேற்கு
இலந்தைக்கூடல் கங்காணியார் திருவருள் மிகு
கந்தசாமி திருக்கோயில்

**பூஜாதீன அந்தரித சம்புரோக்சஷண
கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2016**

**கந்தன் அடியார்களே,**

பூஜை தடைப்பட்டதால் ஏற்பட்ட பூஜாதீன
அந்தரித சம்புரோக்சஷண கும்பாபிஷேகம்
நிகழும் மங்களமிகு மன்மதவருஷம் தை
மாதம் 10ஆம் நாள் 24.01.2016
ஞாயிற்றுக்கிழமை காலை 6.00
மணிமுதல் 7.00 மணி வரை கேதூளிகா
லக்கினமும் தைப்பூசமும் கூடிய திருநாளில்
நிகழ திருவருள் கைகூடியுள்ளது.
அடியவர்கள் தரிசித்து இஷ்ட சித்திகளைப்
பெற்று உய்யுமாறு அன்புடன்
வேண்டுகின்றோம்.

தர்மகர்த்தாவும்
அடியவர்களும்

(c 28789) (14,15)

மங்கலகரமான
திறப்புவிழா
அழைப்பு



தைப்பூச தினமான இன்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை
மு.ப. 9.36 முதல் 11.00 மணிவரையுள்ள
சுப நேரத்தில்

கண்டி வீதி, சாவகச்சேரியில்
**ஸ்ரீ மீனாட்சி வெல்டிங் சொப்**

என்னும் நிறுவனம்
மங்கலகரமாக திறந்து வைக்கப்படுகின்றது.
அத்தருணம் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



கண்டி வீதி,
சாவகச்சேரி.

உரிமையாளர்
ஜெ.பிரபு

தைப்பூசம்
**உலகப் பெருமஞ்சத் திருவிழா**
**இணுவில் கந்தசுவாமி கோவில்**
**24.01.2016 ஞாயிறு**



* காலை 5.30 மணிக்கு பூஜை ஆரம்பம்.
* காலை 7.30 மணிக்கு கோயில் வாசல் கோபுர கும்பாபிஷேகம்.
* காலை 10.00 மணிக்கு மாபெரும் பொங்கல் விழா.
* மாலை 6.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை.
* மாலை 7.00 மணிக்கு உலகப் பெருமஞ்சத்தில் முருகப்பெருமான் வீதி வலம் வரும் அருட்காட்சி இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

ஓம் TV யில் நேரடி
ஒளிபரப்பு இடம்பெறும்.

ஆலய தர்மகர்த்தா சபை

*********** விளம்பர அனுசரணையாளர்கள் ***********

**Pb Mobile Phone Shop**
Kit Card, Sim Card, Unlock, Hand Phone Services,
Phone Cover, Battary Charger and
all Phone Accessories.
No.381/1, K.K.S Road,
Chunnakam.
banu724@gmail.com
T.P : 0776636619 / 0214545135

**மகுடம் புத்தக நிலையம்**
பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள்
அன்பளிப்புப் பொருட்கள் யாவும்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்
704, 706 கே. கே. எஸ். வீதி
இணுவில்.
தொ. பேசி : 021 5685270
075 9440929



# மாவை கொல்லங்கலட்டி கேணிக்கரை
# வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
# ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரர் திருக்கோயில்
# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாச் சிறப்பிதழ்
# இன்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை

### மாலை ஆதீன குருவின் ஆசிச்செய்தி

வரலாற்றுப் பெருமை மிக்க கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் ஆலயம் புதுப்பொலிவு பெற்றுத் திகழும் வேளையில் விநாயகப் பெருமானின் உற்சவ காலத்தில் தேரேறி வீதி வலம் வர வேண்டுமென ஆலய புனருத்தாரணத் தேர்த் திருப்பணிக் குழுவினரால் பல லட்சம் ரூபா செலவில் புதிய சித்திரத் தேர் உருவாக்கி வெள்ளோட்டம், விடுவதையிட்டு மாவை ஆதீனப் பேரரசும் தொண்டர்களும் பக்தர்களும் மிக்க மகிழ்ச்சியடைந்துள்ளனர். எந்தவித இடையூறுகளும் இன்றி தேர் வெள்ளோட்டம் ஓடி உற்சவ காலத்திலும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் தேரேறி வீதியுலா வந்து பக்தப் பெருமக்களுக்குப் பூரண திருவருள் புரிய பிரார்த்திக்கின்றோம்.

மேலும் திருப்பணிக் குழு ஆலய பரிபாலன சபையினரின் முயற்சியையும் பாராட்டி அடியவர்கள் எல்லோருக்கும் எம் பெருமானின் திருவருள் கிடைக்க மாவைக் கந்தனைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

மஹா ராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள்
ஆதீனகர்த்தா.



### ஆசிர்செய்தி

மாருதப் புரவீக வல்லியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட விநாயக விக்கிரகத்தைக் கொண்ட வரலாற்றுப் பெருமை மிக்க முதலாவது தலமாகக் கொல்லங்கலட்டிப் பதியில் மந்திர சிம்மாசனத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்து கொண்டிருப்பவர் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான்.பல ஆண்டு காலமாக எமது தேசத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பின் தங்கியிருந்த நிலையை உணர்ந்து அடியவர்கள் பேருதவிகளால் திருப்பணி வேலைகள் அற்புதமாக நடைபெற்று வருகின்றன. அவ்வகையில் புதிய சித்திரத் தேரொன்றும் நிர் மாணிக்கப் பெற்று தைப்பூச நன்நாளில் வெள்ளோட்ட விழாக் காண்பதில் பெரும் மகிழ்ச்சி.

இந்தச் சித்திரத் தேரினை ஆக்குவதற்குப் பொருளுதவி புரிந்த விநாயகப் பெருமான் அடியார் வி.ஹரிகரன் குடும்பத்தினருக்கு விநாயகப் பெருமான் திருவருள் கிடைக்க வாழ்த்துவதுடன் இந்தச் சித்திரத்தேரை கலை அம்சத்துடன் உருவாக்கியிருக்கும் திருநெல்வேலி கலை அரசு சதீஸ்வரன் ஆச்சாரியாருக்கும் அவரது குழு வினருக்கும் இந்தத் தேர்த் திருப்பணி சிறப்பாக அமைய உதவிய புனருத்தாரண சபையினருக்கும் தேர்த்திருப் பணியில் ஓர் அம்சமான தேர்க்கொட்டகை (தேர்த் தரிப்பிடம்) அமைப்பித்துதவிய வேலுப்பிள்ளை வாத்தியார் வம்சா வழியினருக்கும் மற்றும் அனைத்து அடியவர்களும் நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமான் - ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர சுவாமிகளின் பாதங்களை வணங்கிப் பிரார்த்தித்து நல்லாசி கூறி வாழ்த்து கின்றேன்.

க.கணேசலிங்கம் ஐயா. தேவஸ்தான சிவாச்சாரியார்.

### வலி.வடக்குப் பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஈழமணித் திருநாட்டின் வடபால் சைவமும் தமிழும் செழித்தோங்கும் மாவை கொல்லங் கலட்டிப் பதியில் இருந்து அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத் தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்றைய தினம் 24.01.2016 ஆம் திகதி தைப்பூச நன்நாளில் இடம்பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.சமூகத்தின் நிலைக் களன்களாக விளங்கும் ஆலயங்கள் எங்கெல்லாம் சிறப்பாக இலங்கு கின்றனவோ அங்கெல்லாம் ஆன்மீகம் குடிகொண்டு சிறந்த நிலைபேறுடைய பகுதிகளாக மிளிர் வதைக் காணலாம், சுவாலித்து எரியும் அக்கினியின் தோற்றத்தில் அமைக்கப்பெற்ற தேரானது அழித்தலைக் குறிப்பது. ஆன்மாக்களைப் பீடித்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்று சொல்லப்படுகின்ற மும்மலங்களையும் பக்குவப்படுத்தும் வெளிப்படையைத் தேர் உற்சவம் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

ஊர்கூடித் தேர் இழுக்கின்ற பெரும்பக்குவத்தை விநாயகர் எமக்களித்து அருள் பாலித்திருக் கின்றார். அதன் மூலாம்சமாக இன்று மிளிரும் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் சிறப்புற அமைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

புதிய சித்திரத்தேர் உருவாக்கத்தில் முன்நின்று உழைத்த அத்தனை உள்ளங்களுக்கும் எனது இனிய நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

க.ஸ்ரீமோகனன் பிரதேச செயலாளர், வலி.வடக்கு, தெல்லிப்பழை.

### அருளும் நிறையும் ஐங்கரத்தான் ஆசி அனைவருக்கும் கிடைக்கட்டும்



பொன்றாப் புகழ் பூத்த ஈழத் தமிழ் நாட்டில்குன்றேத்து தீபமதாய் குவலயத்தில் ஒளி மிளிர எத்திசையும் போற்றும் எழில் பொழியும் மாவை - கொல்லங்கலட்டிப் பதி வித்தகனாம் வீரகத்தி விநாய கனுக்கு அழகிய சித்திரத்தேர் சிறப்புற அமைந்தமை கண்டு அகம் மிக மகிழ்கிறது.

மாமேவு பவளத்தாற் கால்களாக்கிமணிவைர ரத்தினத்தால் விட்டம் பூட்டி
பூமேவு தங்கமணிப் பலகை தேக்கிபூவேறு சித்திரங்கள் பொழியச் செய்த
சித்திரத்தேர் வடம் பிடித்து இழுத்துவர அத்திமுகத்தையானவன் அருள் கிடைக்கப் பெற்றிருப்பது வரமேயாகும்.உத்தமனாம் அவன் கிருபை ஊர் சிறக்க இன்னும் எத்தனையோ வேண்டும்.

திருப்பணிச்சபையினரின் சேவையோடு அன்பர்கள் மனமுவந்து அளித்த பொருளுதவி அருட் பணிச் சேவைகள் இன்னும் சிறக்க வேண்டும்.அருளும் பொருளும் நிறை ஐங்கரத்தான் ஆலயத்து அரும்பணிகள் சிறப்பாகத் தொடர்ந்து நிறைவேறவும் அடியவர்கள் அன்பர்கள் அனைவருக்கும் விநாயகப் பெருமான் - சிதம்பரேஸ்வரர் திருவருள் கிடைக்க வேண்டியும் வணங்குகிறேன்.

கு.புரந்தரன், சட்டத்தரணி, போசகர் - ஆலய புனருத்தாரண சபை.

### பிரதிஷ்டா குருவின் ஆசிச்செய்தி



சோழ தேசத்து இராஜ குமாரியான மாருதப் புரவீகவல்லியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட விநாயகர் ஆலயங்களில் கொல்லங்கலட்டி விநாயகரும் ஒருவர் ஆவார். இரண்டு தசாப்த காலத்தின் பின் புனர்நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப் பட்டுவரும் வேளையில் அவ்வூரைச் சேர்ந்த அன்பர்கள் பலர் தாமாக முன்வந்து திருப்பணிகளைப் பொறுப்பேற்று பொருளுதவி செய்யும் வகை கண்டு மனம் மிக மகிழ்கின்றேன், மனதாரப் பாராட்டுகின்றேன்.

திருப்பணி வேலைகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொண்டிருக்கும் ஆலய திருப்பணிச் சபையினரும் பாராட்டுக்குரியவர் களே.இத்திருப்பணிகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் புதிய சித்திரதேர் சிறப்பாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஒரு தனிநபராக உபயம் செய்த அடியவரும் அழகிய முறையில் அதனை நிர்மாணித்திருக்கும் சிற்பாசாரியார் குழுவினரும் நீடூழிவாழி. வீரகத்தி விநாயகர் தம் மெய்யடியார்கள் அன்பர்கள் அனைவருக்கும் ஐங்கரப் பெருமானது அருளாசி வேண்டி வணங்குகிறேன்.

வேதாரணியக் குருக்கள் கனகசபைக் குருக்கள், கருணை வெற்றிகாட்டு விநாயகர் பிரதமகுரு
வேதாரணிய ஆதீனம்.

### ஆசிச்செய்தி



சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவை கொல்லங்கலட்டி, கேணிக்கரை வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு அழகிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெறுவது குறித்து மிகவும் ஆனந்தமடைகிறேன். சோழஇளவரசி மாருதப்புரவீகவல்லி ஸ்தாபித்த இத்திருக்கோயில் அருள்வளம் நிறைந்த அற்புதத் திருக்கோயில் போரின் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இத்திருக்கோவிலைப் பக்தர்கள் மீளவும் கட்டி வளர்ப்பதில் மிகுந்த ஆர்வத்தோடு செயற்பட்டு வருவது பெருமைக்குரிய விடயமாகும். கொல்லங்கலட்டி மக்கள் கடவுள் பக்தியிலும், கல்வியிலும் மேலானவர்கள். நிறை செல்வத்தோடும் பரம்பரைப் பாரம்பரியத் தோடும் வாழ்ந்தவர்கள். அவர்களின் கலங்கரை விளக்கமாக வீரகத்தி விநாயகர் விளங்குகிறார். விநாயகப்பெருமானின் திருப்பணி வேலைகள் சமீபகாலமாக மிக வேகமாக நடைபெற்று வருவதைப் பலரும் பாராட்டுகின்றார்கள். ஆலயத்திருப்பணிச் சபையின் தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது.புதியதேரை உருவாக்குவதற்கு உதவிய பரோபகாரி உயர்திரு விவேகானந்தன் ஹரிகரன் அவர்களின் பெருந்தொண்டு குறித்துப் போற்றுகின்றேன். திருத்தேரை கலையம்சத்துடனும், விதிநெறிகளுடனும் படைத்த சிற்பகலாமணி, திரு.பரஞ்சோதி சதீஸ்வரன் ஆச்சாரியார் அவர்தம் குழுவினரின் கலைப்பணி சிறக்க வாழ்த்துகிறேன். சூரியர் சந்திரர் உள்ளவரை இத்தேர் நன்முறையில் பாதுகாக்கப்பட்டு எம்பெருமான் வீதிவலம் வரவேண்டுதல் செய்து சிறியேனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பிக்கின்றேன்.

செஞ்சொற்செல்வர்,கலாநிதி ஆறு. திருமுருகன்.
(தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை)
(இளைப்பாறிய அதிபர், ஸ்கந்த வரோதயக் கல்லூரி, சுன்னாகம்.)

### வேழமுகன் திருத்தேர் வெள்ளோட்ட விழாச் சிறக்க வாழ்த்துகின்றேன்



அருள்மிகு கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு அமைந்த திருத்தேர் வெள்ளோட்ட விழாவினை எண்ணி அகம் மிக மகிழ்ந்து வணங்குகிறேன். எங் களூரின் எழிலுக்கும் அதன் செழிப்புக்கும் காரணனாக விளங்குபவர் விநாயகனே ஆவார். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என எங்கள் மூதாட்டியும் கூறியுள்ளார்.

கி.பி 7 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஈழம் வந்த சோழ நாட்டு இராஜகுமாரியான மாருதப் புரவீக வல்லி தனக்குற்ற குன்மபிணி தீர்த்த பெருமான் மாவைக் கந்தனுக்கு ஆலயம் அமைத்த பின்னரும் தன் முகத்தில் அந்நோயின் வடுக்கள் இருப்பதைக் கண்டு திகைத்தாள். அதனாலேயே தன்குருவாம் சாந்தலிங்க முனிவரின் ஆலோசனைப்படி ஏழு இடங்களில் விநாயகர் சிலைகளை தாபித்தாள் என்பர்.அவ்விதம் முதன்முதல் வைக்கப்பட்டதாகிய பெருமை பெறுகின்றது கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம். எமது ஆலயத்தில் மஹோற்சவ காலத்தில் எம்பெருமான் எழுந்தருளத் திருத்தேர் இல்லாக் குறையும் இன்றே நீங்கிட நன்றே அமைந்த சிற்ப சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இன்று நிகழ்வதை இட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.அருளுதவியாய் ஐங்கரப் பெருமான் ஆசி வழங்க இப்புண்ணிய பூமியிலே பெருளுதவி செய்யும் அடியவர்களும் போற்றுதற்குரியவர்கள் அதனோடு இணைந்து இத்திருத்தலத்தின் திருப்பணிகளிற்காய் சபை அமைத்து எனக்குப் பக்க பலமாக இருந்து அரும்பணியாற்றி வரும் அன்பர்கள் அனைவருக்கும் என் உள்ளத்தால் உணர்வால் நன்றி பகர்கிறேன்.

எம் பெருமான் வேழமுகன் திருத்தேர் வெள்ளோட்ட விழாச் சிறக்க வாழ்த்துகிறேன்.

க. துரைசிங்கம், தலைவர் ஆலய புனருத்தாரண சபை.

### தேர் உபயகாரரின் உள்ளத்திலிருந்து......
### வீரகத்திப் பிள்ளையாரின் சித்திரத்தேரோட, ஊர்ச்சிறப்பெய்தட்டும் !



நாம் வாழ்ந்த ஊரி எம்மோடு வாழ்ந்த ஊர் மக்கள் எல்லோருமே எம் வாழ்வின் உயர்ச்சிக்கு வழியமைந்தவர்கள். வீரகத்திப் பிள்ளையார் கோயில் எமது பரம்பரை வழிபாட்டுத்தலம். அங்கே தான் ஏடு தொடக்கி எம் எல்லோருக்கும் அறிவுக்கு வித்திடப் பட்டது. அந்த அத்திபாரமே நான் என்று வாழ எம் பொது வாழ்விற்கும் வழிசமைத்தது. வீரகத்திப் பிள்ளையார் எம் வாழ்விற்கு வழிகாட்டி எம்மைக்காத் தருளும் குலதெய்வம்.அந்த நன்றியின் பிரகாரம் வீரகத்திப் பிள்ளையாருக்கு சித்திரத்தேர் செய்து அழகு பார்க்க எமது பரம்பரையினர் சார்பாக எனக்கு சந்தர்ப்பம் கிட்டியது பிள்ளையாரின் கிருபை தான். இன்றும் எமது கொல்லங் கலட்டி ஊர் மேலும் சிறக்க எல்லாம் வல்ல வீரகத்திப் பிள்ளையார் அருள்பாலிக்க வேண்டுமென அவரது பாதார விந்தங்களை இறைஞ்சு கின்றேன்.எம்மூர் மக்கள் கல்வி எனும் கடலிலே நீந்திக் கரைசேர வேண்டும். வாழ்வின் சகல சௌபாக் கியங்களையும் அவர்கள் அடைய வேண்டும். எமது ஊர் மீண்டும் புதுப்பொலிவுடன் மிளிர வேண்டும். இதற்கு உலகமெல்லாம் புலம் பெயர்ந்து வாழும் கொல்லங்கலட்டி ஊர் மக்கள் அனை வரும் கரம் கோர்த்து உதவவேண்டுமென சித்திரத்தேர் வெள்ளோட்டம் நிகழும் இத்தைப்பூச நன் நாளில் அனைவரையும் அன்பாக வேண்டுகிறேன்.

ஊர் கூடி வடம்பிடிக்க தேர் அசையும் !

எஸ். வி. ஹரிகரன்,தொழிலதிபர், தலைவர், மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்.பிரான்ஸ்.

## சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாச் சிறப்புற வாழ்த்துவோர்

**விநாயகர் விவசாயக் களஞ்சியம்**
அம்பனைச்சந்தி,
பன்னாலை, தெல்லிப்பழை.

**பிரகலாத் பவன்**
சைவ உணவகமும், பல்பொருள் வாணிபமும்
நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.

**ராசன் போட்டோ அன் வீடியோ**
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.

**ஸ்ரீராம் ரேட்சென்ரர்**
அம்பனைச்சந்தி,
பன்னாலை, தெல்லிப்பழை.

**தர்மபல்பொருள் வாணிபம்**
(சதீஸ்வரன்)
அரசடி வீதி,
சாயுடை மாவிட்டபுரம் தெற்கு.

**நாதன் ஸ்ரோர்ஸ்**
மடத்தடி, கொல்லங்கலட்டி
தெல்லிப்பழை,

**திரு கிறைன்டிங் மில்**
மடத்தடி, கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

## தைப்பூச விழா

யாழ்ப்பாணம், ஜன.24
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் தைப்பூச தின விழா இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது அடியார்களின் நன்மை கருதி விசேட போக்குவரத்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் அன்று அன்னதானமும் வழங்கப்படும் என ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (ற-ஐ)

## மணவாளக்கோல விழா

வடமராட்சி, ஜன.24
தம்பசிட்டி, மாயக்கை சித்தி விநாயகர் ஆலய நவோத்தர, சகஸ்ர கலச சங்காபிஷேகமும், முதலாவது ஆண்டுமணவாளக் கோல விழாவும் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகும்.
அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு விநாயகப்பெருமானுக்கு 1008 கலச சங்காபிகேமும், பஞ்சமுக விநாயகருக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறும். (ற-ஐ-173)

# இந்திய மீனவர் அத்துமீறல் குறித்து வெளிநாட்டு அமைச்சுக்குக் கடிதம்

## மன்னார் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

மன்னார், ஜன.24
மன்னார் கடற்பரப்பில் இந்திய மீனவர்களுடைய அத்துமீறலை நிறுத்துமாறு கோரி இலங்கை வெளிநாட்டு அமைச்சுக்குக் கடிதம் அனுப்புவதுஎன்றும், அதனூடாக இந்தியாவுக்கு இதுகுறித்து தெரியப்படுத்துவது என்றும் மன்னார் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றமாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகள், இணைத் தலைவர்களால் இது குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி இழுவைப் படகுகளில் தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் கடல் வளங்களை முற்றாக அழிப்பதோடு மன்னார் மாவட்ட மீனவர்களுடைய வாழ்வாதாரத்தை அழித்து வருகின்றனர்.

> வருடத்தில் ஆறு மாதம் கடற் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் அதில் போதிய வருமானம் இல்லாததன் காரணமாக மிகுதி ஆறு மாதங்கள் வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

வருடத்தில் ஆறு மாதம் கடற் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் அதில் போதிய வருமானம் இல்லாத தன் காரணமாக மிகுதி ஆறு மாதங்கள் வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர்.
இந்திய மீனவர்களால் இலங்கை மீனவர்களுக்கு ஏற்படுகின்ற அநீதிகளில் இருந்து காப்பாற்ற இலங்கை வெளிநாட்டுஅமைச்சுக்குக் கடிதம் எழுதுவதற்கும் அதனூடாக இந்தியாவுக்குத் தெரியப்படுத்துவது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-21)

## மருதடி விநாயகர் சபை உறுப்பினர் வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.24
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் தர்மகர்த்தா சபையில் வெற்றிடமாக விருக்கும் இரு உறுப்பினர்களுக்கான பதவிகள் நிரப்பப்படவுள்ளன.
இதுபற்றி அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ள தர்மகர்த்தா சபை, வெற்றிடமாக இருக்கும் இந்தப் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வழிபடுவோர் சங்கத்தைக் கோரியுள்ளது.
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் தர்மகர்த்தா சபையினரைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் யாழ். அரசஅதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் கண்காணிப்பின் கீழ் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை யில் நடைபெற்றது.
ஏழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இந்தத் தேர்தலில் பதினான்கு பேர் கொண்ட இரு அணியினர் போட்டியிட்டனர். இதில் பழைய அணியின் சார்பில் போட்டியிட்டவர்களில் 3 பேரும்புதிய அணியில்இருந்து 4 பேரும் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து புதிய அணியினர் ஆலயத்தின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றனர்.
இந்த நிலையில் பழைய அணியைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளாமையினால் ஐந்து உறுப்பினர்களுடன் மட் டும் கூட்டம் இடம் பெற்றுவரு கிறது.
தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்குச் சமுகமளிக்காது விட்டால் உறுப்பினர் பதவியை இழக்க வேண்டி வரும் என்ற சட்ட விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ள தர்மகர்த்தா சபையினர், இது பற்றி அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததுடன் வெற்றிடமாகவுள்ள இரு உறுப்பினர் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் வழிபடுவோர் சங்கத்தைக் கோரியுள்ளனர். (ற-ஐ)

# நாற்பது வருடங்களாக திருத்தப்படாத வீதிகள்

யாழ்ப்பாணம், ஜன.24
ஆனைக்கோட்டை உப அலுவலகத்துக்கு உட்பட்ட நவாலி வடக்கு தலுவில் வீதி கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மீள்புனரமைக்கப்படாது அழிவடைந்துள்ளது. அதே போன்று நவாலி வடக்கு பெத்தனாச்சி அம்மன் ஆலயத்துக்குச் செல்லும் வீதியும் போக்குவரத்து மேற் கொள்ள முடியாத நிலையில் உள்ளது. அவற்றைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
நவாலி வடக்கு தலுவில் வீதி நவாலிவடக்கு வீதிஅபிவிருத்தித் திணைக்கள வீதியையும், வீதி அபிவிருத்தி அதிகார சபை வீதியையும் இணைக்கும் முக்கிய வீதியாகும். குறித்த நவாலி வடக்கு வீதியை புனரமைத்துத் தருமாறு கடந்த 10 வருடத்தில் 15 க்கும் மேற்பட்ட கடிதங்கள் சபைத் தலைவர், செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் எனினும் இதுவரை இந்த நவாலி வடக்கு தலுவில் வீதிக்கு விமோசனம் கிடைக்கவில்லை என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.
இதேபோல நவாலி வடக்கு பெத்தனாச்சி அம்மன் ஆலய வீதியை வலி.தென்மேற்கு வீதி வலையமைப்புத் திட்டத்தில் உள்வாங்கி அதற்கான புனரமைப்பையும் மேற்கொள்ளுமாறு பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
குறித்த வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-50)



வரணி மத்திய கல்லூரியில் கற்று மூன்று "ஏ" தரச் சித்திகளைப் பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிய மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி முதல்வர் க.மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய அழகியல் பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் ஓவியர் கோ.கைலாசநாதன் கலந்து சிறப்பித்தார். முன்னதாக மாணவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு பாண்ட் அணியிசை மரியாதையுடன் அழைத்து வரப்பட்டனர். அரங்கில் வாழ்த்துரைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து மாணவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. (ற-ஐ)

# போலியான ஆவணங்களாலேயே சேவைகள் வழங்குவதில் தாமதம்

## வடமாகாண உதவிப் பதிவாளர் நாயகம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன.24
போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி மூலப் பிரதிகளைப் பெற வருபவர்கள், உரிய ஆவணங்களை சமர்பிக்காமல் முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங் களுடன் வருவதால் மக்களுக்கான சேவைகளை வழங்குவதில் சிரமங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று வடமாகாண உதவிப்பதிவாளர் நாயகம் அனந்தி ஜெயரட்ணம் தெரிவித்தார்.
மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மக்கள், சேவையை பெறுவதில் அசௌகரியங்களை எதிர் கொள்வதாக விசனம் வெளியிட்டிருந்தனர். இது தொடர்பாக பதிவாளர் நாயகத்தைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு முதலான ஆவணங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் பலர் எம்மிடம் வருகின்றனர்.
தமக்கான பதிவுகளை உரிய வகையில் செய்து தருமாறும் காணி, திருமணம், பிறப்புப்பதிவு மாற்றங்களுக்காக அதிகளவில் வருகின்றனர். ஒரு படிவத்தை சரிபார்பதற்காக ஆகக்கூடியது ஒரு மாதமே செலவிடப்படுகிறது.
தூரப் பிரதேசங்களில் இருந்து வருபவர்களுக்கு முடிந்தவரை விரைவாகச் செய்து கொடுக்கின்றோம். எனினும் ஆளணிப் பற்றாக் குறை, இட்ப் பிரச்சினைகளால் சேவையை வழங்குவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன.
மாவட்ட செயலகத்தின் புதிய கட்டடத் தொகுதி அமைக்கும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதால் இடப்பிரச்சினைகள் ஓரிருமாதங்களில் தீர்க்கப்படும். இருக்கைகள், குடிதண்ணீர்ப்பிரச்சினைவிரைவாகத் தீர்க்கப்படும், குழாய்கள் உள்ள போதும் அவை மக்கள் குடிப்பதற்கு ஏற்றவகையில் சீர்செய்யப்பட வேண்டிய கட்டாயம் தொடர்பில் அரச அதிபரிடம் வலியுறுத்துவேன். மலசல கூடங்கள் கீழ்பகுதியில் பொதுமக்கள் பாவிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளன.
கடந்த ஆண்டு 4938 கோவைகள் முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்களாக வந்துள்ளன. மக்கள் உரிய பிரதேச செயலகங்கள் மற்றும் அலுவலகங்களில் தமது படிவங்களை சீரான முறையில் பூர்த்திசெய்துள்ளதை உறுதிப்படுத்திய பின்னர் எம்மிடம் வருகை தந்தால் சிறப்பான மற்றும்காலதாமதமற்றசேவையை எம்மால் வழங்க முடியும். - என்றார்.
பழைய யாழ்ப்பாணம் பிரதேசசெயலகத்தின் கட்டடத்தில் இயங்கி வரும் மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலக கட்டடத் தொகுதியில் சேவையைப் பெற்றுக்கொள்ள வரும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றும், காலையில் இருந்து நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய தேவைகள் உள்ள போதும், பொதுமக்களுக்குப் போதிய இருக்கைகளோ, மலசலகூட வசதி, குடிநீர் வசதிகளோ இல்லை எனவும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். (ஐ-ரி5-107)

## கரையோரப் பகுதிகளுக்கு வீதி விளக்குகள் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.24
யாழ்.மாநகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட கரையோரப்பகுதிகளில் பழுதடைந்த வீதி விளக்குகள் மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பிரதேசங்களில் அனேகமான வீதி விளக்குகளின் மின்குமிழ்கள் பழுதடைந்தால் வீதிகள் இரவு வேளையில் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.
கொழும்புத்துறை, பாசையூர், குருநகர் போன்ற இடங்களில் வீதி விளக்குகளின் மின்குமிழ்களே இவ்வாறு மாற்றப்பட்டு வருகின்றன.
குறிப்பிட்ட இடங்களில் அண்மையில் பெய்த மழையால் மின்குமிழ்கள் பழுதடைந்தன. பழுதடைந்த மின்குமிழ்களை மாற்றி வீதிக்கு இரவில் ஒளியூட்டுமாறு மக்கள் மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அதையடுத்தே அவற்றை மாற்றி அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-17)

# உருளைக்கிழங்கு விளைச்சல் குடாநாட்டில் அதிகரிக்கும்

## உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ்.குடாநாட்டில் விவசாயிகளால் பயிரிடப்பட்டுள்ள உருளைக்கிழங்குச் செய்கையில் அதிக விளைச்சல் எதிர்பார்க்கப்படுகின்றது என்று மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் செயலாளர் தி.சதீஸ்குமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

குடா நாட்டில் மொத்தமாக 98 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் இந்த முறை உருளைக்கிழங்குச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

தற்போதைய காலநிலைக்கு ஏற்ப பயிரிட்ட உருளைக்கிழங்குப் பயிர்கள் நல்ல நிலையில் காணப்படுகின்றன. குறிப்பாக முன் கூட்டியே நடுகை மேற்கொண்ட விவசாயிகள் அடுத்த மாதத்தில் அறுவடை செய்யத் தயாராகி வருகின்றனர். குடா நாட்டில் பரவலாக விவசாயிகள் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்டும் உள்ளனர்.

வடமராட்சி கிழக்கு, தொண்டமானாறு, தீவுப்பகுதி, தென்மராட்சி போன்ற குறிப்பிட்ட இடங்களில் இந்த முறை பரீட்சார்த்தமாக விவசாயிகள் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட பயிர்கள் நல்ல நிலையில் காணப்படுகின்றன.

இதே சமயம் விவசாயிகள் உருளைக்கிழங்கை அறுவடை செய்யும் காலத்தில் அதன் சந்தை வாய்ப்பை ஏற் படுத்தித்தருவதற்கு அரச அதிபர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கின் வரியை அதிகரிக்க வேண்டும். இவ்வாறு அதற்கான வரியை அதிகரிப்பதன் மூலம் உருளைக்கிழங்கின் விலையும் அதிகரிக்கும்.

இந்த உள்ளூர் உருளைக்கிழங்கின் சந்தைவாய்ப்புக் குறைந்தால் விவசாயிகள் பாதிப்படைவார்கள்- என்றார். (ற-ஜ-17)

## வவுனியா வர்த்தகர் சங்கத்தால் மாணவருக்கு கற்றல் உபகரணம்

வவுனியா, ஜன.24

வவுனியா வர்த்தகர் சங்கத்தால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களில் உள்ள பாடசாலை செல்லும் மாணவர் களுக்கான கற்றல் உபகரணங்கள் கடந்த வியாழக்கிழமைவவுனியா மாவட்டஅரசஅதிபரிடம் கையளிக்கப்பட்டன.



வவுனியாமாவட்ட அரச அதிபரின் வேண்டுகோளுக் கிணங்கவே குறித்த வவுனியா வர்த்தகர் சங்கத்தால் வவுனியா மாவட்ட செயலகத்தில் வைத்து அரச அதிபர் எம்.பி. புஸ்பகுமாரவிடம் குறித்த பாடசாலை உபகரணங்கள் கையளிக்கப்பட்டள்ளன. அவை பெண்களைத் தலைமைத்துவங்களாகக் கொண்ட குடும்பங்களில் உள்ள வசதியற்ற பாடசாலை மாணவர்களுடைய விவரங்கள் திரட்டப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் வனியா வர்த்தகர் சங்கத் தலைவர் ரி.கே. இராஜலிங்கம், பொருளாளர் மா.கதிர்காமராஜா, நிர்வாக உறுப்பினர் ஆ. அம்பிகைபாகன், நிர்வாக உறுப்பினர் க.சிறிசங்கர் ஆகியோர் கலந்து கொண்டு பொருள்களை வழங்கினர். (ற-ஜ-21)

## தொலைபேசிகள் இல்லாத இரு பிரதேச செயலகங்கள்

முல்லைத்தீவு, ஜன.24

இலங்கையில் உள்ள 330 பிரதேச செயலகங்களில் நிரந்தர மேசை இணைப்புத் தொலைபேசியோ அல்லது தொலைநகல் (பக்ஸ்) வசதிகளோ இன்றி இயங்கும் இரு பிரதேச செயலகங்களாக துணுக்காய் , பாண்டியன் குளம் பிரதேச செயலகங்கள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடு பூராகவும் 330 பிரதேச செயலகங்கள் உள்ளன. அவற்றில் 2016 ஆம் ஆண்டு வரையிலும் நிரந்தர மேசை இணைப்புத் தொலைபேசியோ, அல்லது தொலைநகல் (பக்ஸ்) வசதிகளோ அற்ற இரு பிரதேச செயலகங்களாக முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேச செயலகங்கள் உள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப் பகுதியாகவுள்ள இந்தப் பிரதேசத்தின் பிரதான வீதியான மாங்குளம் துணுக்காய் வீதியில் மல்லாவியில் அமைந்துள்ள மத்திய கல்லூரி வரைக்கும் தொலைபேசி இணைப்புக்கள் உள்ளன.

எனினும் அங்கிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை, ப.நோ.கூ சங்கம், கமநல சேவை நிலையங்கள் உள்ளிட்ட முக்கிய அலுவலகங்கள் அமைந்துள்ள துணுக்காய் நகருக்கு வழங்கப் படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த செயலகங்களின் முக்கியத்துவம் கருதி துணுக்காய் , பாண்டியன் குளம் பிரதேச செயலகங்களுக்கும் நிரந்தரத் தொலைபேசி இணைப்பு வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும்எனக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-101)



வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மற்றும் கன்ரர் ரக வாகனம் வீதியின் அருகே நின்ற பாரவூர்தி ஒன்றுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகின. அதில் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை கிளிநொச்சி, பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் நடந்துள்ளது. வீதியில் மின் விளக்குகள் ஒளிரவிடாமல் பாரவூர்தி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த வேளை குறித்த் வீதியால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் பாரவூர்தி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது தெரியாது பாரவூர்தியின் பின்பகுதியில் மோதி விபத்துக்குள்ளாகியது. மோட்டார் சைக்கிளின் பின்பாக வந்துகொண்டிருந்த கன்ரர் வாகனமும் மோட்டார் சைக்கிளின் பின்புறம் மோதி விபத்துக்குளானது. இரண்டு தடவைகள் விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் முற்றாகச் சேதமடைந்த நிலையில் பாரவூர்திக்குள் நசியுண்டது.

மோட்டார் சைக்கிள் செலுத்திய சாரதி பலத்த காயங்களுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி போக்கு வரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற- 21,ரி3)

## இறம்பைக்குளம் ரயில் கடவையில் சமிக்ஞைக் கருவி இயங்கவில்லை

வவுனியா, ஜன.24

ஓமந்தை இறம்பைக்குளம் பகுதியில் உள்ள ரயில் கடவையில் உள்ள சமிக்கைக் கருவி இயங்காதுள்ளது.

ஓமந்தை இறம்பைக்குளம் ரயில்கடவையை அரசமுறிப்பு, பாலமோட்டை, ஓமந்தைப் பகுதி மக்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட முந்நூறுக்கு மேற்பட்டவர்கள் நாளாந்தம் பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்தப் பாதுகாப்பற்ற ரயில்வே கடவையின் ஒளிச் சமிக்ஞைகள் சீராக இயங்கவில்லை. இதனால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதால் உரிய வகையில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ஒளி சமிக்ஞைக் கருவிகளைதிருத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஜ-402)

## துவரங்குளத்தை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.24

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மிகவும் தொன்மை வாய்ந்த குளமான துவரங்குளத்தைப் புனரமைப்புசெய்துதருமாறு வன்னிவிளாங்குளம், அம்பாள்புரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



குறித்த குளத்தின் கீழ் பயிர் செய்கையைமேற்கொள்ளும்வயல் காணிகள் சீர் செய்யப்பட்ட போதும் இதுவரை பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு அனுமதிக்கவில்லை எனவும் அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரனால் அண்மையில் வன்னிவிளாங்குளம், அம்பாள்புரம் ஆகிய கிராமங்களில் முன்னெடுக்கப்பட்ட மக்கள் குறைகேள் சந்திப்பிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேசத்துக் குட்பட்ட துவரங்குளம் இது வரை புனரமைக்கப்படாது உள்ளது. இந்தக் குளத்தின் கீழ் உள்ள பல ஏக்கர் விவசாய காணிகளில் வன்னிவிளாங்குளம், அம்பாள்புரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நீண்டகாலமாக பயிர்ச்செய்கையை மேற்கொண்டு வந்தனர்.

போர் காரணமாக இடம்பெயர்ந்து மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளோம். இந்த நிலையில் நாங்கள் பயிர்ச் செய்கையை மேற்கொண்ட வயல் காணிகள் தற்போது துப்புரவு செய்யப்பட்டு சீராக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும் குறித்த காணி எங்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. எனவே அந்தக் காணியைப் பெற்று விவசாய நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஜ-21,ரி7)

## உழவனூர் கிராமத்தின் அபிவிருத்திக்கு கிராம அபிவிருத்தி அமைச்சு நிதியுதவி

கிளிநொச்சி, ஜன.24

கிளிநொச்சி உழவனூர் கிராமத்துக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் உறுதி அளித்தார்.

நேற்றுமுன்தினம் குறித்த கிராமத்துக்கு நேரடியாகச் சென்ற அமைச்சர் கிராமத்தின் தேவைகள் குறித்து மக்களுடன் கலந்துரையாடிய பின்னரே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின் தங்கியுள்ள உழவனூர் கிராமத்துக்கு, இந்த ஆண்டு கிராம அபிவிருத்தித் திணைக்களம் மூலம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு சில திருத்த வேலைகளை செய்வதற்காக ரூபா 3 லட்சமும், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் உழவனூர் கிராமத்தில் உள்ள உணவு பதனிடும் நிலையத்தை சிறப்பாக இயங்க செய்வதற்காக ரூபா 5 லட்சம் நிதியும் தனது அமைச்சில் இருந்து ஒதுக்கித் தரப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனைச் சரியான முறையில் பயன்படுத்தி அங்குள்ள வறிய குடும்பங்கள், பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள் ஆகியவர்களுக்கு பயனுள்ள வகையில் நாளாந்தம் ஒரு நிலையான வருமானத்தைப்பெற்றுக்கொள்ளும் வகையில் சிறப்பாக நடை முறைப் படுத்தவேண்டும் எனவும் தெரிவித்த அமைச்சர் எதிர்வரும் காலத்தில் தம்மால் இயன்ற அனைத்து உதவிகளும் இந்தக் கிராமத்துக்கு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். (ற-ஜ-21)

# சாவகச்சேரியில் கடந்த ஆண்டு 242 பேருக்கு டெங்குத் தொற்று

## 66 பேருக்கு உண்ணிக் காய்ச்சல்

சாவகச்சேரி, ஜன.24

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பால் கடந்த வருடத்தில் 242 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். 66 பேர் உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 64 பேர் டெங்குத் தொற்றுக்கும், 37 பேர் உண்ணிக் காய்ச்சலுக்கும் உள்ளாகியுள்ளனர் என சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் சாவகச்சேரி வைத்திய சாலை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் பிரதேசத்தில் பெய்த பெருமழை மற்றும் வெள்ளம் காரணமாக டிசெம்பர் மாதத்தில் மட்டும் 96 பேர் டெங்குத் தொற்றினாலும், 36 பேர் உண்ணிக் காய்ச்சலாலும் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஜனவரி மாதத்தில் மூன்று தடவைகள் விசேட டெங்கு பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு டெங்கு அதிகமாகக் காணப்பட்ட பகுதிகளில் விசேட டெங்குப் பரிசோதனைகள் கிளி நொச்சி, முல்லைத்தீவு மாவட்ட சுகாதார குழுக்களின் உதவியுடன் மேற் கொள்ளப்பட்டுடெங்குக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

> டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலையில் காணிகள் மற்றும் குடியிருப்புகளை வைத்திருந்த 23 பேருக்கு சாவகச்சேரி, கொடிகாமம் பொலிஸாரினால் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டு கடந்த 21 நாள்களில் சாவகச் சேரி நீதிமன்றால் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப் பட்டது.

அத்துடன் அனைத்து பகுதிகளிலும் சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின்பங்களிப்புடன் டெங்குத் தொற்று அதிகமாக இனங்காணப்பட்ட பகுதிகளில் வாகனத்தின் மூலமும் ஆள்கள் மூலமும் புகையூட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்ட போதிலும் தற்போது மழை வெள்ளம் வடிந்த நிலையிலும், தினமும் மூன்றுக்கு மேற்பட்டோர் டெங்குத் தொற்றுக்குள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில்சேர்க்கப் பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மழை வெள்ளம் அதிகம் தேங்கி நின்ற சாவகச்சேரி நகரம், மந்துவில், மீசாலை வடக்கு, மட்டுவில், மீசாலை கிழக்குசாவகச்சேரிகோயிற் குடியிருப்புப் பகுதிகள் டெங்குத் தொற்று அதிகமுள்ள பகுதிகளாக இனங்காணப்பட்டு தினமும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சுகாதாரப் பகுதியினரால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை பிரதேசத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலையில் காணிகள் மற்றும் குடியிருப்புகளை வைத்திருந்த 23 பேருக்கு சாவகச்சேரி, கொடிகாமம் பொலிஸாரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 21நாள்களில் சாவகச்சேரி நீதிமன்றால் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ந-ஜ-9)

## ஆண்டு விழாவும் கலை விழாவும்

காரைநகர், ஜன.24

காரைநகர் கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலையின் ஆண்டு விழாவும் கலை விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்துள்ள தெய்வீகத் திருப்பணியரசு சுப்பிரமணியம் கதிர்காமநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் மழலைகளின் கலை நிகழ்வுகள், மழலைகள் பூங்காவில் கல்வி கற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு, காரை கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலையைத் தொடக்கி வைத்த மணிவிழா நாயகர்கள் கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் தம்பதிகள் கௌரவிப்பு நிகழ்வு என்பன இடம் பெறவுள்ளன. (ந-ஜ-250)

## சாரதிக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.24

சாரதி அனுமதி பத்திரம், வருமானவரிப் பத்திரம் இன்றி மது போதையில் வாகனம் செலுத்திய தெல்லிப்பழைப் பகுதியைச் சேர்ந்த வாகன சாரதிக்கு 11 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார் மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன்.

தெல்லிப்பழைப் போக்குவரத்து பொலிஸார் தாக்கல் செய்த வழக்குகடந்த செவ்வாய்க் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேகநபர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து நீதிவான் இவ்வாறு தீர்ப்பளித்தார். (ந-ஜ-107)

## ஓய்வூதியம் பெறுவோர் உயிர் வாழ்வுச்சான்றிதழ் சமர்ப்பிக்க அறிவிப்பு

அச்சுவேலி, ஜன.24

வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவில் ஓய்வூதியம் பெறுவோர் இந்த வருடத்துக்கான உயிர் வாழ்வுச்சான்றிதழை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக ஓய்வூதியப் பிரிவில் சமர்ப்பிக்க வேண்டும் என வலி.கிழக்குப் பிரதேச செயலக கணக்காளர் அறிவித்துள்ளார்.

வலி. கிழக்கு பிரதேச செயலக பிரிவில் ஓய்வூதியம் பெறும் விதவைகள், தபுதாரர், ஆசிரியர், குடிசார் ஓய்வூதியம், ஆசிரியர் விதவைகள் ஓய்வூதியம், அநாதை ஊனமுற்றோர், படையினர், பராயமடையாத ஓய்வூதியம்பெறுவோர் அனைவருக்கும் பிரதேச செயலக ஓய்வூதியப் பிரிவினால் தனித் தனியாக உயிர்வாழ்வு சான்றிதழ் – 2016 அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுவோர் உயிர் வாழ்வுச்சான்றிதழை பூரணப்படுத்தி தமது பிரிவு கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன், பிரதேச ஓய்வூதியப் பிரிவுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கச் செய்ய வேண்டும். உயிர் வாழ்வுச்சான்றிதழ் உரிய காலப் பகுதியில் கிடைக்காவிடில் மார்ச் மாத ஓய்வூதியம் வழங்கலில் தடங்கல் ஏற்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-ஜ-11)

## சைக்கிளில் இருந்த கைப்பை அபகரிப்பு இருவருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, ஜன.24

சைக்கிளில் சென்ற பெண் சைக்கிள் கூடைக்குள்வைத்திருந்தகைப் பையை திருடி அதனுள்ளிருந்த பணம் மற் றும் பொருள்களை எடுத்த இருவரையும் விளக்கமறியலில்வைக்குமாறும், அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கான ஏற்பாடுகளைமேற்கொள்ளுமாறும் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை கச்சாய் அம்மன்கோவில்வீதியில்சென்ற பெண் செலுத்திச் சென்ற சைக்கிள் கூடைக்குள் வைக்கப்பட்டிருந்த கைப் பையை, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இதன் போது மோட்டார் சைக்கிள் இலக்கத்தைக் கண்ணுற்ற பெண்,கொடிகாமம்பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடுசெய்த போது மோட்டார் சைக்கிள் இலக்கத்தையும் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து கொடிகாமம் பொலிஸார் மந்துவில் மற்றும் மீசாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரைக் கைது செய்து நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு அன்றைய தினம் அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார். (ந-ஜ-9)



மன்னார் மாவட்டச் செயலகம் ஏற்பாடு செய்த உழவர் விழா கடந்த புதன் கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 10 உழவர்களுக்கு மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ந-ஜ-56)

## பாவனைக்குதவாத உணவு யாழ். நகரத்தில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்.நகரிலுள்ள உணவகம் ஒன்றில் குளிர் ஊட்டப்பட்ட, மக்கள் பாவனைக்கு உதவாத உணவுப்பொருள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சமயம் சுகாதாரப் பகுதியினரின் திறன் சோதனையின் போது அவை கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் நகரின் மின்சார நிலைய வீதியில் நேற்றுக் காலை இடம் பெற்றது.

குறித்த உணவகத்திற்குப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் சென்ற குழுவினர், அங்கு குளிரூட்டப்பட்ட பழுதடைந்த உணவுப்பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்த சமயம் கைப்பற்றியுள்ளனர்.

உடனடியாக யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

உணவக உரிமையாளரைத் தண்டப்பணமாக 25 ஆயிரம் ரூபா செலுத்துமாறும், இவ்வாறு குளிரூட்டப்பட்ட பழுதடைந்த உணவுப் பொருள்களை இனி வருங்காலங்களில் விற்றால் உணவகம் முற்றாக சீல் வைத்து மூடப்படும்என்றும்விசாரணையை மேற்கொண்ட யாழ். நீதி மன்ற நீதிவான் தெரிவித்தார். (ந-ஜ-17)

# சாவகச்சேரி வரியிறுப்பாளர்களை ஆதன வரி செலுத்த அறிவுறுத்து

## எதிர்வரும் 29க்கு முன்னர்

சாவகச்சேரி, ஜன.24

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வரியிறுப்பாளர்களை தமது ஆதனங்களுக்குரிய ஆதன வரியை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும்என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. நகரசபைஅலுவலர்கள் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் இது குறித்து அறிவித்தல் விடுத்து வருகின்றனர்.

எதிர்வரும் 30ஆம், 31ஆம் திகதிகள் சனிஞாயிறுதினங்கள் ஆகையால் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் செலுத்தி வரிக் கழிவைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை ஆதன வரி செலுத்த வரும் வரியி றுப்பாளர்களின் நலன் கருதி விசேட கரும பீடம் ஆதன வரிப் பிரிவில் அமைக்கப்பட்டு கூடுதலான அலுவலர்கள் கடமையாற்று கின்ற னர் என்று தெரிவிக் கப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டுக்குரிய ஆதன வரியைச் செலுத்த பெருமளவு வரியிறுப்பாளர்கள் வருவதால் மேலதிகமாக அலுவலர்களை கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று நகர சபையினர் தெரிவித்தனர். கடந்த வருடங்களைவிட இந்தவருடம் பெருமளவு ஆதனவரி தினமும் வரியிறுப்பாளர்களால் செலுத்தப்பட்டு வருகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் வட்டார ரீதியாக நட மாடும் சேவைகளை நகர சபை நடத்தி பெரும்பாலான வட்டாரங்களில் நிலுவைகள் இல்லாமல் செய்ததுடன், ஆதனவரி செலுத்துவதற்கான அறிவித்தல்கள் டிசெம்பர் மாதத்துக்கு முன்னரே அனைத்து ஆதன உரிமையாளர்களுக்கும் விநியோகிக்கப்பட்டு விட்டதால் பெருமளவு வரியிறுப்பாளர்கள் தமது ஆதனங்களுக்குரிய வரியை ஆர்வத்துடன் செலுத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப் பட்டது. (ந-ஜ-9)

## சமூக சேவையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.24

கண்டி இரத்தின தீபம் அமைப்பினரின் ஏற்பாட்டில் கண்டியில் இடம்பெற்ற எம்.ஜி.ஆரின் 99 ஆவது பிறந்த தின விழாவில் தமிழ், சிங்கள சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். யாழ்.பிரதேச செயலக அபிவிருத்திச் சங்க சமாசத் தலைவரும், தேசிய தேசோதய சபையின் யாழ் மாவட்டத் தலைவருமான லயன் நா.தனேந்திரன் சிங்கள திரைப்பட தயாரிப்பாளர் கொடிக்காரவால் பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப் பட்டார். (ந-ஜ-135)


பரம்பரை பரம்பரையாக அசைக்கமுடியாத நம்பிக்கையின் இருப்பிடம்
றைனோ
கிறிஸோடைல் கண்ணாடிஇழை சீமெந்து கூரைத்தகடுகள்
நாளுக்கு நாள்... வருடத்திற்கு வருடம்... காலம் நகர்கின்றது ஆனால்,
ஒன்றுமட்டும் பரம்பரை பரம்பரையாக காலத்தால் அழியாத
நம்பிக்கையின் இருப்பிடமாக திகழ்கின்றது.
அதுதான் றைனோ
எதிர்காலத்திலும் இந்த நம்பிக்கை தொடரும்
அதுமட்டுமல்ல அனுபவமுடைய தச்சுத்தொழிலாளர்களின்
தெரிவும் என்றுமே றைனோதான்
புதிய
Colorup
MARKETED BY RHINO
ரூபிங் மற்றும் சீலிங் தகடுகள்
உடன் தொடர்புகளுக்கு
011 5748728/5748738
ரு. 1,285/= க்கு மேல்
/ RhinoRoofinglk
RHINO
றைனோ ரூபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டட்
752, பேஸ்லைன் வீதி, கொழும்பு 9, இலங்கை.
ஈ-மெயில்: telemarketing@rhino.lk வெப்: www.rhino.lk
நாம் கிறிஸோடைலின் "பாதுகாப்பான பாவனைக்கான" நம்பத்தகுந்த நிறுவனம்
HOLMES POLLARD & STOTT


லக்ஸ் நறுமணத்துடன்
ஜொலிக்கும் ஸ்வர்ணம்
LUX பொதியிலுள்ள இரகசிய இலக்கத்தை
0720 444 000 க்கு SMS செய்து,
தங்கப் பெண்டன்ட் ஒன்றுக்கு
உரிமையாளராகுங்கள்.
LUX
Soft Touch
100g
நியதி நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
* இவ் ஊக்குவிப்புத் திட்டம் 2016 ஜனவரி 16 முதல் மார்ச் 11 வரை இடம்பெறும்.
* வெற்றியாளர்களுக்கு மத்தியில் மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் 56 பெண்டன்கள் பகிர்ந்தளிக்கப்படும்.
* அனைத்து உள்ளீடல்களும் SMS மூலம் அனுப்பப்படும் தனித்துவ இலக்கத்தை அடிப்படையாக கொண்டு
அந்த இலக்கம் அனுப்பப்படும் தொலைபேசி இலக்கமே அவ் உள்ளீடலுக்கு உரிய இலக்கமாக கருதப்படும்.
* போட்டிக்கு தெரிவு செய்யப்படின், போட்டிக்கான SMS களை அனுப்பிய தொலைபேசி இலக்கத்தின் உரிமையாளருக்கு
மட்டுமே இப் பரிசுப் பெண்டன்ட்டினை வெல்வதற்கான தகுதி உள்ளது.
* ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் இவ் ஊக்குவிப்புத் திட்டம் தொடர்பில் இதன் ஒருங்கிணைப்பாளரால்
மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும் என்பதை கருத்தில் கொள்ளவும்.
LUX

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### காணி விற்பனை

கைதடி யாழ் கண்டி வீதியில் Leyland Garage எதிரில் சிங்கமலை தோட்டத்தில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779 175 279

### காணி விற்பனைக்கு

077 731 0414

சிறுகைத்தொழில் / பெருங்கைத்தொழில் அல்லது பண்ணைக்கு ஏற்றவகையில் இரண்டு வீடு கிணற்றுடன் கூடிய சுற்றிவர அடைக்கப்பட்ட 8 ஏக்கர் தோட்டக்காணி ஒன்று ஓமந்தை புகையிரத நிலையத்துக்கு எதிராகவுள்ள வீதியில் உடனடி விற்பனைக்கு உண்டு.

### லொறி விற்பனைக்கு

டோயோட்டா டவுன்ஏஸ், ஜப்பான் புல் எல்மினியிம் பொடி 8 அடி, GN-2691, வருடம் - 1996, பதிவு - 2002, சகல நோக்கங்களுக்கும் பாவிக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கொழும்பு இஷாராபொடி, விலை -1275000/=

076 867 8609, 077 227 8609

### வீடு காணி விற்பனைக்கு

மாடி வீடு நான்கு பரப்பு காணியுடன் பூந்தோட்டம் வவுனியாவில் விற்பனைக்கு உண்டு. இக்கட்டடம் நில தளத்தில் ஒரு வீடும், கடையும் மற்றும் முதலாம் மாடியில் இரண்டு வீடுகளும் கொண்டது.

தொடர்புகொள்ள :077 378 3305
அல்லது 077 798 1995

உதயன்
உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 493 1111, 021492 7415
advt@uthayan.com

### ஜப்பான் சைக்கிள் விற்பனை

077 790 5333

யாழ்.மண்ணில் மீண்டும் உதயம். **ராசிக் சைக்கிள் பஸார்** Original ஜப்பான் Ladies சைக்கிள் மொத்தமாகவும் சில்லறையாகவும் Fram,Fork உத்தரவாதத்துடன் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

### விற்பனைக்கு

தொடர்புகளுக்கு: 0777 283705, 021 223 1733

வெதுப்பக உபகரணங்கள் டீசல் அவன், மா குழைக்கும் இயந்திரம், பாண் வெட்டும் கட்டர், நெஸ்கோப்பி மெசின், யூஸ் தயாரிக்கும் மெசின், ஹீட்டர், சோக்கேஸ், மேசைகள், கதிரைகள் என்பன விற்பனைக்குள்ளன.

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பருத்தித்துறை வீதியில் கனகம்புளியடி சந்திக்கு அண்மையில் 13½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 021 224 2713

### காணி விற்பனைக்கு

தொடர்பு: 077 296 2226

சுன்னாகம் பிரதேசசபை எல்லைக்குள் உடுவில் மானிப்பாய் வீதியில் வீட்டுடன் 5 பரப்பு 13 குளி காணி விற்பனைக்குண்டு.

### தேநீர் கடை உபகரணங்கள் விற்பனைக்கு

01. குளிர்சாதனப் பெட்டி
02. சோக்கேஸ்
03. அலுமினிய பிற்றிங்

மற்றும் தேநீர்கடை தளபாடங்கள்

தொடர்பு: 076 879 7369



## தேவை



### தேவை

தொடர்பு: 077 7701 523, 077 311 6996

யாழ் நகர் மத்தியில் அமைந்துள்ள வியாபார ஸ்தாபனத்திற்கு பணியாளர் ஒருவர் தேவை.

### வாடகைக்கு அறை தேவை (Room)

தனி ஒருவர் அரச ஓய்வூதியர் வசிப்பதற்கு ஓர் அறை தேவை.

தொடர்பு: 077 4985 875

### விற்பனையாளர் தேவை

நெல்லியடியிலுள்ள புடைவைக் கடைக்கு அனுபவமுள்ள ஆண், பெண், விற்பனையாளர்கள் உடன் தேவை.

தொடர்பு:
077 714 9459

### தையல் வேலை தெரிந்தவர் தேவை

பருத்தித்துறையில் இயங்கும் தையல் நிலையத்துக்கு (பெண்) தையல் வேலை தெரிந்தவர் உடன் தேவை.

077 724 4723

### Room Boy (சுத்திகரிப்பாளர்) தேவை

யாழ் நகரின் மத்தியில் அமைந்துள்ள சுற்றுலா விடுதிக்கு **Room Boy** தேவை.

தொடர்பு: 021 222 4605, 077269 9052

### ஆசிரியர் தேவை

தொடர்பு: 076 807 9161

தரம் 8 இல் கல்வி பயிலும் மாணவிக்கு வீட்டுக்கு வந்து ஆங்கில மொழி மூலம் கணிதம், விஞ்ஞானம் கற்பிப்பதற்கு பெண் ஆசிரியை அல்லது ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் தேவை.

### விருந்தினர் விடுதிக்கு ஆள்கள் தேவை

யாழ்ப்பாணம் சிவப்பிரகாசம் வீதியில் இயங்கும் சொகுசு விருந்தினர் விடுதிக்கு பரமாரிப்பாளர் முகாமைத்துவம் செய்யக்கூடியவர்கள் தேவைப்படுகின்றார்கள்.

தொடர்பு: 075 520 2860, 077 648 7264, 021 222 5226

### மணமகள் தேவை

தொடர்பு: 077 850 0395

யாழ்ப்பாணத்தில் அரசாங்க தாதி (நேர்ஸ்) உத்தியோகத்தராகப் பணிபுரியும் 1984 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு படித்த நற்குணமுள்ள மணமகள் தேவை.

## வேலைவாய்ப்பு

### வேலைவாய்ப்பு

எமது நிறுவனம் உணவு உற்பத்தி செய்யும் பிரசித்தி பெற்ற நிறுவனமாகும். அதி உயர் சம்பளம் பெற்றுக் கொள்ளலாம். (பிஸ்கட், சொக்லெட், கிளவுஸ், குளிர் பானம், லேபல் பொதியிடல் பிரிவுகளுக்கு OT-150, மாத சம்பளம் ரூபா.45000 இற்கு மேல் திறமையானவர்களுக்கு . விசேட கொடுப்பனவு கொடுக்கப்படும். உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். நாள் சம்பளம்,கிழமை சம்பளம்,பெற்றுக்கொள்ளலாம். (மொதம் ஒரு முறை போனஸ் ரூபா 25,000) பெற்றுக் கொள்ளலாம். (வயது-18-55)

076 915 5233, 077 165 7473

நண்பர்களே இன்று வேலை தேடி அலைய வேண்டியதில்லை. குறைந்த உழைப்புக்குக் கூடிய வருமானம் ஈட்டிக் கொள்ளலாம். எமது புதிதாகத் திறக்கப்படும் தொழிற்சாலைக்கு ஆண், பெண் இருபாலாரும் உடனடியாகத் தேவை. லேபல், பொதியிடல், களஞ்சியப்படுத்தல் பிரிவுகளுக்கு (நாள் சம்பளம் ரூபா 1500), கிழமை சம்பளம், மாதசம்பளம் பெற்றுக் கொள்ளலாம். உணவு, தங்குமிடம், ஆடை முற்றிலும் இலவசம். 6 மாத காலம் தொடர்ந்து நீங்கள் வேலை செய்தால் சம்பளத்துக்கு மேலதிகமாக ரூபா 25,000 போனஸ் வழங்கப்படும். விண்ணப்பங்களுக்கு முந்துங்கள். உடனடியாக தொடர்பு கொள்ளவும். (முன் அனுபவம் தேவையில்லை)

077 401 7543, 075 544 6898

எமது பிரசித்திபெற்ற தொழிற்சாலைகளில் 50 உடனடி வேலை வாய்ப்புகள். ஐஸ்கிறீம், யோகட், பிஸ்கட், டிபி.டிபி போன்ற பிரிவுகளுக்கு ஆண், பெண் (18-50) மாதாந்த சம்பளம். ரூபா (25,000- 40,000) வரை நாள்சம்பளம் (ரூபா 1500), போனஸ் ஆகியவற்றுடன் உணவு தங்குமிடம் முற்றிலும் இலவசம். மொழி அவசியமில்லை. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். நீங்கள் வேலை செய்யும் அன்றே உங்கள் ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

077 165 7473, 072 246 7945

2016ஆம் ஆண்டின் முற்பகுதியில் அதிக சம்பளத்துடன் வேலையை எதிர்பார்க்கும் ஆண், பெண் இருபாலாருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம். பிறிமா நூடில்ஸ் (லொக்கா), சொசேயஸ் பால்மா போன்ற கம்பனிகளில் உதவியாளர்கள் உடனடியாகத் தேவை. ஒருநாள் சம்பளம் 1000/= OT மணித்தியாலத்துக்கு 100/= 35000 - 45000 ரூபா வரை மாதாந்த சம்பளம் பெற்றுக்கொள்ள முடியும். வயது எல்லை - 18-50 வரை. தங்குமிடம், உணவு இலவசம்.

076 980 4744, 075 286 9947

அரசால் அங்கீகரிக்கப்பட்ட பெயின்டிங், டிங்கரிங், வெல்டிங், கப்பல் சுத்திகரிப்பாளர்கள் போன்ற உதவி ஆள்கள் உடனடியாகத் தேவை. உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும். சம்பளம் 29,000 - 55,000 ரூபா வரை. வயது எல்லை - 18-40 வரை

077 956 9606, 075 028 7319

## ஏனையவை

### வீடு வாடகைக்கு உண்டு

076 944 6569

யாழ்.இந்துக் கல்லூரிக்கும் பல் கலைக்கழகத்துக்கும் அருகில் இரண்டு அறைகளுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.



- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### அறை வாடகைக்குண்டு

தொடர்பு: 077 880 8411

நல்லூர் கோயிலுக்கு அண்மையில் படிக்கும்/ வேலைபார்க்கும் 2 பெண்பிள்ளைகளுக்கு சகல வசதிகளுடனும் அறை வாடகைக்குண்டு.

### செய்து கொடுக்கப்படும்

Engineer 076 903 7423, 077 856 1745

அனுபவம் வாய்ந்த பொறியியலாளரால், வீடுகள், கட்டடங்கள் வடிவமைத்துக் கட்டிக் கொடுக்கப்படும். அத்துடன் சகல விதமான Electrical வயறிங் வேலை களும் செய்து கொடுக்கப்படும்.

### ஓம் நமசிவாய சோதிடம்

தொடர்பு: 075 024 1319

ஜாதகம் பார்த்து கணித்து பலன் சொல்ல இந்தியா சித்தர் வழிவந்த ரவிச்சந்திர சாத்திரியார் சில நாள்கள் வவுனியாவில் தங்கியுள்ளார். (66691) (14,15)

மதுமிதா லொட்ஜ், வவுனியா.

### மின்சார வேலைகள்

தொடர்பு: 077 719 4373

மின்சார வயறிங் வேலைகள் மின்சார திருத்த வேலைகள் . குழாய் பொருத்தும் வேலைகள் ஏனைய திருத்த வேலைகளுக்கு தொடர்பு கொள்ளவும்

### வாடகைக்கு

வர்த்தகக் கட்டடம் வாடகைக்கு உண்டு. தரை மாடி 3000 ச.அடி முதலாம் மாடி.3 வீடுகள்.
438. கே.கே.எஸ் றோட்,கோண்டாவில்.

தொடர்பு: 077 735 0088, 071 8484 967

### வீடு வாடகைக்குண்டு

தொடர்பு: 077 767 8318

பிறவுண் வீதி. நீராவியடியில் சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கு மட்டும் கொடுக்கப்படும். (66870) (14,15)

### Personal/ Group Classes

Maths (English Medium), English from Grades 6to 10 Conducted by experienced teacher.
Contact- 071 536 0635

### பிரத்தியேக வகுப்பு - கணிதம்

அனுபவம் கொண்ட ஆசிரியரினால் உங்கள் இல்லங்களுக்கு வருகை தந்து ஆண்டு 8 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும்.

தொடர்பு: 077 748 2542

### பதவி வெற்றிடம்

வெள்ளவத்தை W.A.Silva Mawatta இல் உள்ள Consultation Firm ஒன்றுக்கு

1. Design Engineer
2. Drafts Man தேவை

077 634 5751
info@skconsultation.com

### ELOCUTION வகுப்புக்கள்

3 வயது முதல் 10 வயது வரையான பிள்ளைகளின் ஆங்கில உச்சரிப்பு முறையை மேம்படுத்தக் கூடிய வகுப்புக்கள்,

**திங்கள், புதன், வெள்ளி நாள்களில் 3.30 - 5.30 வரை**

Beefort International School
136,Navalar Road, Jaffna

## Want to be a Doctor?

Only $135,000 for All 5 years



Manipal
Melaka-Manipal Medical College
SLMC Approved University

2.5 Years in **India** &
2.5 Years in **Malaysia**

**SPOT OFFERS**
On 27th January 2016
from 9.00 a.m -12.00 p.m

Scholarships Available

**Call us on: 077 55 44 000 / 077 82 46 666**

Campus Direct — N0.110, Elvitigala Mawatha, Colombo 08
www.cduk.lk — Follow us on:

---

## நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு அவதானம்

அதிகளவு சீனிப்பண்டங்களை உண்பதனால் நீரிழிவு நோய் ஏற்பட்டு விரைவாக மரணம் ஏற்படலாம்.

**Sugar kills, consume with care**

அனுசரணை: கிருபா லேனர்ஸ்(தலைமையகம்)
இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 077 722 5292

---

## Ashwiha Medical Clinic
## அஸ்விகா மெடிக்கல் கிளினிக்
### திறப்புவிழா வாழ்த்து

Reg No: 14623 — கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

Dr.சாமளா சஞ்சீவனாத்
அவர்கள் இன்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை
அஸ்விகா மெடிக்கல் கிளினிக் தொடங்குவதை முன்னிட்டு
இவ் வைத்தியசாலை மென்மேலும் சிறப்புற்று
மேன்மையடைய வேண்டுமென நல்லைக்கந்தனை
வேண்டி உளமார வாழ்த்துகின்றேன்.

Dr.இரஜேஸ்வரி
கல்வியங்காடு.

[67936][13.15.16]

---

## கிளி/கரைச்சி புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் விழா

### ஆலோசனைக் கூட்ட அறிவித்தல்

23.03.2016 புதன்கிழமை நடைபெறவுள்ள பங்குனி உத்தர பொங்கல் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் 25.01.2016 திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஆலய மதிய பூசையின் பின் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனினதும் மாவட்ட அரச அதிபர் மதிப்புக்குரிய சுந்தரம் அருமைநாயகத்தினதும் இணைத் தலைமையில் ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு அனைத்து திணைக்களங்கள், நிறுவனங்களின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். எனவே அனைத்து அங்கத்தவர்கள், அடியார்கள், தொண்டர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் கலந்து, விழா சிறப்புற ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி

ஆலய பரிபாலன சபையினர்,
நாகதம்பிரான் ஆலயம்,
புளியம்பொக்கனை.

---

## மகப்பேறு இனவிருத்தி நிலையம்

மகளிருக்கு குழந்தைப்பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சினைகளையும் அடிக்கடி ஏற்படும் அடி வயிற்றுநோ கருச்சிதைவுமாதவிடாய் உட்பட சகல விதமான பிரச்சினைக்கு சிகிச்சையளித்தலும் மகப்பேறு இனவிருத்திக்கான சிகிச்சைகளும் IVF, ICSI யும் கொடை முட்டை (Donor Egg) விந்து நன்கொடை (Donor Sperm) போன்ற சிகிச்சைகளை ஐக்கிய இராட்சியத்தில் (UK) 40 வருட அனுபவம் கொண்ட வைத்திய நிபுணர் சதானந்தம் அவர்கள் திருநெல்வேலி நொதேன் சென்றல் வைத்தியசாலையில் அளித்து வருகின்றார். சென்ற மாதம் இவரின் சிகிச்சை மூலம் இரு தாய்மாருக்கு சோதனைக்குழாய் மூலம் குழந்தைகள் பிறந்தது யாவரும் அறிந்ததே.

தொடர்புகளுக்கு : திருமதி கௌரி
இல : 077 343 9988
021 221 9988, 021 221 9977 , 021 222 63

---

# வேலைவாய்ப்பு

## ICBT யாழ்ப்பாண கிளையில்

இலங்கையில் முன்னணி தனியார் துறை கல்வி சேவை வழங்குநரான ICBT Campus, UK இலுள்ள அதிசிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்விச் சேவை வழங்குநர்கள் சிலவற்றுடன் இணைந்து பல்வகை சர்வதேச கற்கை நெறிகளை வழங்கி வருகிறது.

### Electricians / AC Technicians
### மின்னியலாளர்கள் / AC தொழில்நுட்பவியலாளர்கள்

**தகமை**

ஆண், 30 வயதிற்கு குறைந்த, குறிப்பிட்ட துறையில் குறைந்தது 2 வருட அனுபவம் கொண்ட, நீண்ட நேரம் தொழில் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி சனி மற்றும் ஞாயிறு தினங்களில் வேலை செய்பவராக இருத்தல் வேண்டும்.

கவர்ச்சிகரமான ஊதியத்துடன் இத்துறையில் காணப்படும் ஏனைய சலுகைகளும் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும். இவ்விளம்பரம் பிரசுரமாகி 7 நாட்களுக்குள் முழுமைப்படுத்தப்பட்ட சுயவிவரக் கோவை, புகைப்படம் ஆகியவற்றுடன் உறவினரல்லாத இருவரின் சிபாரிசுடன் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும். விண்ணப்பதாரிகள் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிடவும்.

ICBT CAMPUS
HR Manager
No. 36, De Krester Place,
R.A. De Mel Mawatha, Colombo 04
hr@icbtcampus.edu.lk

---

## உங்கள் க.பொ.த உயர்தர பரீட்சை முடிவுகள் வந்துவிட்டதா? நீங்கள் அவுஸ்திரேலியா அல்லது நியூசிலாந்தில் கல்வியை தொடர நாங்கள் உதவுகின்றோம்

**FREE SEMINAR**
for students & parents

திகதி:
2016 ஜனவரி 31

நேரம்:
காலை 9.30 முதல் நண்பகல் 12 வரை

இடம்:
IIS ஆடிட்டோரியம்,
200,
சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்

**To register call**
**021 5 700 750**

கவர்ச்சிகரமான கல்விக் கட்டணங்கள் வருடாந்தம் $11,500 இல் இருந்து

We offer in-house IELTS Class for subsidized prices

எமது அனைத்துச் சேவைகளும் இலவசம்

Meet Edlocate staff together with Tamil speaking counselors for an one on one interview session to learn about:

- Studying in Australia | New Zealand & also UK | Malaysia | Singapore
- Scholarship opportunities for high achieving students
- Financial requirements for VISA purposes
- Post Study Work Visa & PR possibilities in Australia / New Zealand

edlocate — 16 years of excellence
Reach Light Beyond Borders
www.edlocate.lk

Jaffna: 200, Sivan Pannai Road, Jaffna
E: counsel3@edlocate.lk
FOLLOW US ON

# மஞ்சள்கோட்டு விபத்து; இவ்வருடம் 7 பேர் சாவு

கொழும்பு,ஜன.24

வீதியில் மஞ்சள் கோட்டின் மீது இடம்பெற்ற வாகன விபத்துக்களால்இந்தவருடத்தில் இதுவரையான காலப் பகுதியில் 7 பேர் உயிரிழந்துள்ளதாக வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.

சாரதிகளின் கவனயீனமே இந்த விபத்துகளுக்குக்காரணமென வீதிப் பாதுகாப்புக்கான தேசியசபையின்தலைவர் வைத்தியர் சிசிர கோதாகொட தெரிவித்தார்.

இதுதவிர வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் வீதி விபத்துகளால், நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

பாதசாரிகள் மஞ்சள் கோடு என்பதால் அஜாக்கிரதையுடன் அதனூடாக பயணித்தல் மற்றும் வாகன சாரதிகள் மஞ்சள்கோட்டுக்கடவையைபொருட்படுத்தாமல் வாகனங்களை செலுத்துதல் ஆகிய காரணங்களே விபத்துகளுக்கு ஏதுவாகின்றன.

இந்நிலை மாற்றமடையவேண்டுமெனின் அத்தகைய இடங்களில் இடம்பெறும் விபத்துக்கள் மற்றும் விபத்து உயிரிழப்புக்களுக்கு கடும் தண்டனையும் அதிக பட்ச நஷ்ட ஈடும் விதிக்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஜ-4)

## 10 வருடங்கள் அரச காணிகளில் வசிப்போருக்குக் காணி உரிமை

கொழும்பு, ஜன.24

பல ஆண்டுகளாக அரச காணிகளில் வாழ்ந்துள்ள 25 லட்சம் வரையிலான குடும்பங்களுக்கு, அந்தக் காணிகளுக்கு சட்ட ரீதியிலான உரித்துரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்காக அடுத்த மாதத்தில் நாடாளுமன்றத்தில் சட்டமொன்று கொண்டு வரப்படுமென உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக அரச காணியொன்றில் 10 வருடங்களுக்கு மேலாகக் குடியிருந்து வருவோருக்கு, அந்தக் காணிகளின் சட்ட பூர்வமான உரித்துரிமை பெற்றுத் தரப்படுமெனவும் தெரிவித்திருந்தார். (த-ஜ-22)




## தணிகா நுண்கலைக் கல்லூரி

ஓர்கன் - முற்பகல் 11 மணி (ஸ்ரீ குகன்)
சங்கீதம் - மாலை 3 மணி (திருமதி சக்திதேவி)
நடனம் - மாலை 4 மணி (திருமதி நாகாமினி)
சித்திரம் - மாலை 5 மணி ( S.பிரசன்னா)

ஆகிய நுண்கலை வகுப்புக்கள் தைப்பூச தினமாகிய இன்று சிறந்த நுண்கலை ஆசான்களால் புதிய பிரிவுகள் ஆரம்பம்.

151/1, (528) பலாலிவீதி, திருநெல்வேலி,
சிறுவர் பூங்கா முன்பள்ளி அருகில்,
பரமேஸ்வராச்சந்தி. 077 762 4475
(68264)(11,17,18)

## வேலை வாய்ப்புக்கள்

முல்லைத்தீவில் இயங்கிக் கொண்டிருக்கும் சர்வதேச கம்பனி ஒன்றிற்கு விற்பனை விநியோகஸ்தர்கள் தேவை.

- சம்பளம் 12,000/= -15, 000/=
- 10 பேர் மட்டும் தேவை.
- O/L & A/L உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு: 077 556 6226, 077 136 3797

## உடனடி வேலைவாய்ப்பு

சர்வதேச ரீதியாக இயங்கிவரும் Optimo International ஆகிய எமது நிறுவனத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 06 வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொண்டு தங்களுக்கான நேர்முகத்தேர்வு நேரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

தகைமை O/L மற்றும் A/L 18 - 30 வயதெல்லை

இறுதித்திகதி: 16.01.2016 தொடர்புகளுக்கு: 076 6048 878

## விநியோகஸ்தர்கள் தேவை

உயர்தரம் வாய்ந்த. பிரசித்திபெற்ற தேயிலை வகைகளை சந்தைப்படுத்தி வருவதும் இலங்கை நுகர்வோர் மத்தியில் பல வருடகாலமாகப் படிப்படியாக பிரபல்யம் அடைந்து வருவதுமான ஒரு நிறுவனத்துக்குப் பின்வரும் பிராந்தியத்தில் விநியோகஸ்தர்கள் தேவை.

வடக்கு மாகாணம் முழுவதும்

தற்போது தங்கள் பிரதேசங்களில் ஒரு விநியோகப் பணியை மேற்கொண்டு வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 076 607 0044
தபால்பெட்டி இல.2016, கொழும்பு
மின்னஞ்சல்:- nafeel2005@yahoo.com
(68264)(11,17,18)




# விற்பனை முகவர் (Agent)
# விநியோகஸ்தர்கள் (Distributors)
# தேவை

நாடளாவிய ரீதியில் பிரசித்தி பெற்ற Velona by Thred works (pvt) Ltd நிறுவனத்தின் குழந்தைகளின் Velona Cuddles (Diaper) அரையாடை மற்றும் இதர ஆடை உற்பத்திகளை விநியோகிக்க யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து விற்பனை முகவர்கள் (Agent) மற்றும் விநியோகஸ்தர்கள் (Distributors) உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு:
075 708 2379,
071 236 6000

## கிளிநொச்சியில் வேலைவாய்ப்புக்கள்

HERITAGE AGRI (Pvt) LTD (ஹெரிடேச் அக்ரி) ஒரு நவீன முறைகளைக் கொண்ட கவன்டிஷ் (CAVENDISH) வாழைப்பண்ணையாகும். வடமாகாணத்தின் முதலாவது வர்த்தகப் பெயரான இயக்கச்சி எனும் பெயரின் கீழ் இப்போது எங்கள் உற்பத்திகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள பல்பொருள் அங்காடிகளில் (Super Market) சந்தைப்படுத்தப்படுகின்றது. விரைவில் இவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது. எங்கள் பண்ணை முகாமைத்துவக் குழுவில் இணைந்து கொள்ள விவசாயத்தில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளுக்கு கீழ்வரும் பதவிகளுக்கு வாய்ப்பு உள்ளன. தகுதி உடையவர்கள் கீழ் உள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

### 01. JUNIOR MANAGER PROCESSING

- விவசாயக் கல்லூரியில் டிப்ளோமா அல்லது பல்கலைக் கழகப் பட்டம்.
- கீழே வேலை செய்பவர்களுடன் சுமுகமாக பழகும் குணம்
- ஆங்கிலத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும் திறமை
- ஏதாவது தொழிற்சாலையில் வேலை செய்த அனுபவம் இருத்தல் நன்று
- வயதெல்லை 35

### 02. FIELD SUPERVISOR

- இலங்கை விவசாயக்கல்லூரியில் டிப்ளோமா பட்டம்
- பண்ணையொன்றில் தொழில் புரிந்த அனுபவம்
- ஆங்கிலத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும் திறமை
- வயதெல்லை 35

*இந்த விளம்பரம் பிரசுரமாகி 7நாள்களில் ஆங்கிலத்தில் பதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.*

(63627) (14,15)

HERITAGE AGRI (pvt) LTD (ஹெரிடேச் அக்ரி)
வாழைத்தோட்டம்.
YMCA கிராமவீதி, இயக்கச்சி.
Email: admin@heritage-agri.com

Iyakachchi
HERITAGE AGRI (PVT) LTD.

# கைதிகளுக்காக ஆர்ப்பாட்டம்

காணாமற்போனவர்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்துமாறும், சகல அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் சம உரிமை இயக்கத்தினால் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் காணாமற்போனவர்களின் பெற்றோர், உறவினர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர் எனக் கூறப்பட்டது. (த)

After O\L or A\L
COMPUTER COURSES
Diploma in Computerized Accounting — Tally, Quick Book, Accpack, M.Y.O.B
Diploma in Video Editing — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio.
Diploma in Web Designing & Development
Advanced Diploma in Hardware & Networking
Java (for Developers) | C, C++, V.B.NET, PHP
தகவல்தொழில்நுட்ப கல்விக்கு முழுமையான கற்கை நெறி
DiTEC
DIPLOMA IN INFORMATION TECHNOLOGY
DMI COMPUTER EDUCATION
Diploma in AutoCAD 2D & 3DModeling
புதிய பிரிவுகள் ஆரம்பம்- சனி, ஞாயிறு 9.30
அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு
DMI COMPUTER EDUCATION
No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில், சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில், சுன்னாகம் Tel.: 021-224 1970
No.19, A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655

Tourist / Business Visit Visa / Settlement / Refusal
வெள்ளவத்தையில் சகல நாடுகளுக்குமான
Online Visa Applications
UK, CANADA, USA, AUSTRALIA
SWEDEN, DENMARK, NORWAY, GERMANY, FRANCE, ITALY, NEW ZEALAND, HOLLAND, SWITZERLAND, INDIA
Travel Itinerary, Translation, Travel Insurance, Valuation, Dual Citizenship Applications ஆகியன செய்து தரப்படும்.
IELTS A1 B1 Life Skills Classes
JANA COMPUTER TECH
No. 385-1/1, Galle Road, Colombo- 06
Tel: 0773 480 494, 2 360494 | E-mail : visaonline5@gmail.com

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
கதகளி
BAJIRAO MASTANI
10.30 / 1.30 / 7.30 (Tamil Dub) 4.30 p.m.
கெத்து
சில்வர் 10.30 a.m. / 4.30 p.m. 1.30 p.m. / 7.30 p.m.
தாரை தப்பட்டை
ப்ரொன்ஸ் 10.30/ 2.30 / 6.30
விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

உத்தரவாதத்திற்கு உத்தரவாதமளிக்கின்றோம்!!
சிசிரிவி கமரா பாவனையாளர்களே, பொருத்தும் நண்பர்களே...!
CCTV கமராகளும் அதை பொருத்துவதற்கு தேவையான அனைத்து இலத்திரனியல் உதிரிபாகங்களையும்
சன்சக்தி ரேடர்ஸில்
இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்..
Monitor, Hard Disk, Power Suply, BNC, DC Juck, Video Balun, cat 5 Cable, Cat 5E, Cat 6E, Kelani Cat 6, Kelani Coaxial 5c2v, Kelani Coaxial 3c2v
Kelani TT Wire மேலும்.......
தரத்திற்கு உத்தரவாதமளிக்கின்றோம்!!
கிக்விசன்/HIKVISION
உலகின் முதன்மைத்தரம் வாய்ந்த சிசிரிவி கமராகள்
World No.1 CCTV Cameras
By asmag Germany/Frankfurt 2014
பாதுகாப்பு! நீண்டபாவனைக்கு உத்தரவாதமளிக்கின்றோம்!!
நம்பிக்கைக்கு உத்தரவாதமளிக்கின்றோம்!!
சன்சக்தி ரேடர்ஸ் 021 221 7994 077 593 0335
இல 651, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்
www.sunsakthy.com Email info@sunsakthy.com

பங்குதாரர்கள் தேவை
எமது Blooming Buds பாடசாலை திறமையான நிர்வாகத்துடன் தெமட்டகொட, புத்தளம், சுதுமலை ஆகிய இடங்களில் சர்வதேச பாடசாலை, ஆசிரியர் பயிற்சிப் பாசறை, ஆங்கிலப்பேச்சு பயிற்சிப் பாசறை, சிறப்பு நிலைக் கல்விப்பயிற்சி நிறுவனம், தொழில் வழிகாட்டல் பயிற்சிநெறி, மேலதிக வெளிநாட்டு பட்டப்படிப்பு, மேலதிக GAQ, BA பட்டப்படிப்பு போன்றன வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் எமது நிறுவனத்தின் புதிய கிளைகளை சுன்னாகம், சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் ஸ்தாபிக்க இருப்பதால் ரூபா 5 லட்சம் முதலீடு செய்யக்கூடிய பங்குதாரர்கள் தேவை. முதலீடு செய்பவர்களுக்கு பங்கு இலாபமும் நிறுவனத்தில் நிர்வாகி பதவியும் வழங்கப்படும். இந் நிறுவனத்தில் முதலீடு செய்ய விரும்புவோர் கீழ்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.
Blooming Buds International School
390/2/1 Base Line Rd, Dematagoda Colombo 09
PV 94034
தொடர்புகளுக்கு: 071 566 9641/ 077 152 9731/ 075 493 3349 / 011 267 7641 / 021 225 6641

Study & Work in Singapore
Hotel Management, Business Management etc.
• அடிப்படை தகைமை O/L மட்டும்
• பாடநெறிக் கட்டணம் தவணை முறையில்
• No Need Bank Balance
• விசாவின் பின் பணம் செலுத்தும் வசதி
• Transfer Option to USA, CANADA, Australia, New Zealand
STUDY, WORK & SETTLE IN CANADA
விசாவின் பின் பணம் செலுத்தும் வசதி
GERMANY
USA, UK, AUSTRALIA
STUDENT & VISIT VISA
ONLINE VISA FORM FILLINGS
USA, CANADA, UK, EUROPE, MALAYSIA, AUSTRALIA, INDIA
சிறந்த முறையில் செய்து தரப்படும்.
flex Institute
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777 761 346
Tel : 2364157 Fax : 2501766
www.flexinstitute.lk

இவ்வருடமும் க.பொ.த. உ/தர வர்த்தக பிரிவில் முன்னணி முடிவுகள்
aat SRI LANKA
நாடளாவிய ரீதியில்
32 முதல் 50இல்
54 முதல் 100இல்
490 முதல் 1000இல்
இம்முறையும் தேசிய மற்றும் மாவட்ட ரீதியில் AAT மாணவர்களே அதிசிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளனர்.
க.பொ.த. (சா/த) முடிவுகள் வரும்வரை காத்திருக்காமல் 2016 ஜுலை AAT பரீட்சைகளுக்கு
உடன் பதிவு செய்யுங்கள்
அதிசிறந்த பெறுபேறுகள் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர் கழகம்
AAT நிலையம் இல. 540, வண. முறுத்தெட்டுவே ஆனந்த நாஹிமி மாவத்தை, நாரஹேன்பிட்டிய, கொழும்பு 05.
Jaffna Branch → 0217 559 669
registration@aatsl.lk
www.aatsl.lk
அங்கீகாரம் பெற்ற கல்வி நிலையங்கள் மூலம் AAT வகுப்புக்களில் சேர்ந்து கொள்வதற்காக சிபாரிசு செய்யப்படுகின்றது.
International Recognition
IFAC Associate Member - International Federation of Accountants
CAPA Member - Confederation of Asian & Pacific Accountants

ஜூஸ் பக்கெட் மெசின்
புதிய ஐடியாவில், அதிக இலாபம் !!
முதலீடு ஒருமுறை மட்டுமே !!
1 மணித்தியாலத்தில் 2000 பக்கெட்டுகள்
பக்கெட்டுகளை தயாரிக்கலாம்
Eastman
தேவையாட்கள் தேவையில்லை
தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD

# இணுவிலூரின் அடையாளம் கந்தசுவாமி ஆலயம்



இணுவில் கந்தசுவாமி ஆலயம் யாழ்ப்பாண நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள இணுவில் கிராமத்தில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் மூர்த்தி,தலம், தீர்த்தம் இவை மூன்றும் முறையாக அமையப் பெற்று காணப்படும் இந்தத்திருத்தலம், கி.பி.1365 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதாக வரலாற்று ஆய்வுகள் மூலம் அறியக்கிடக்கின்றது.

இந்தியத் தமிழ் நாட்டிலுள்ள காஞ்சிபுரத்து திருக்கோவலூரில் வசித்த பேராயிரமுடையோன் என்பவன் மதுரையை ஆண்ட தம்பநாயக்கனது அரண்மனையில் உயர் அதிகாரியாக அமர்ந்திருந்தான். அங்கு இடம்பெற்ற அரசியல் மாற்றத்தால் தெலுங்குப் பாளையக்காரர்கள் உயர் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டமையால் மனமுடைந்த வேளான் தலைவர்கள் மதுரையில் நின்றும் யாழ்ப்பாண இராச்சியத்துக்கு இடம் பெயர்ந்தனர்.

அப்படி இடம்பெயர்ந்தவர்களுள் திருக்கோவலூர் பேராயிரமுடையோன் என்பவன் இணுவிலில் குடியமர்தப்பட்டான். ஜெயவீர சிங்காரிய மன்னன் காலத்தில் இணுவிலுக்கு நியமிக்கப்பட்ட இம்முதலி இவ்வூரை வளம்படுத்தினான்.

அங்கு குடில் வடிவில் ஆலயம் அமைத்து காஞ்சிபுரத்து கந்தப் பெருமானாக எண்ணி வேலையும், காலபைரவப்பெருமானாக எண்ணி சூலத்தையும் வைத்து வழிபாடியற்றினார்.

பின்னர் பேராயிரமுடையோன் முதலியின் வழிவந்த கனராச முதலிஎன்பான் பேராயிரம் உடையோன் முதலியின் கட்டளைக் கமைவாக ஆலயச்சூழலில் ஓர் திருக்குளத்தையும் அமைத்து கந்தக்கோட்டத்தை ஒத்த ஆலயத்தையும் அமைத்து கந்த கோட்டத்தில் உள்ள அற்புத விருட்சங்களை ஒத்த விருட்சங் களையும் ஆலயச்சூழலில் நட்டு காஞ்சி புரத்துத் தீர்த்தமான காஞ்சிக்னால பைரவத் தீர்த்தத்தையும் திருத்தல காவடிகளில் சுமந்து வந்து வைரவர் திருத்தலத்தின் முன் திருக்கேணியையும் அமைத்தான் என வரலாறுகள் கூறுகின்றன.

இத்தகைய பாரம்பரிய தொன்மையைத்தன்னகத்தே கொண்ட இந்த ஆலயம் ஆட்சி மாற்றங்களாலும் பிற தேசத்தவர்களுடைய படையயடுப்புக்களாலும் வேற்ற மதப்புகுத்தல்களாலும் அழிவுற்றச் சிதைந்து போக எம் பெருமான் தன்னை வெளிக் கொணரும் பொருட்டு மீண்டும் குழந்தையர், வேலாயுதர் என்பவரது கனவில் தோன்றினார்.

" உனது வெற்றிலைத்தோட்டத்தில் நொச்சித்தடியை ஊன்றி அவ்விடத்தில் காலால் மிதித்து அடையாளமிட்டிருப்பேன். அவ்விடமே நான் முன்பிருந்த இடம். நீ தினமும் உண்ணும் உணவே எனது நிவேதனப் பொருள். நீ உண்ணும் உணவையே எனக்குத் திருவமுது செய்து என்னை வணங்குவாயாக" என அருட்கட்டளை யிட்டார்.

காலையெழுந்ததும் வேலாயுதர் தனது தோட்டத்துக்குச் சென்றார். என்ன அதிசயம் கனவில் குறிப்பிட்டபடியே அங்கு ஓர் நொச்சித்தடி ஊன்றப் பெற்றுக்காணப்பட்டது. அங்கே சென்று பார்த்தவருக்கு இரு பாதங்கள் ஒன்றுசேரப் பதிந்திருப்பது தென்பட்டது. அந்தக்காட்சியைக்கண்டு மெய்சிலிர்த்த வேலாயுதர் அவ்விடத்தில் வேற் பெருமானைப் பிரதிஷ்ட்டை செய்து வழிபாடியற்றத் தொடங்கினார்.

பின் வந்த இவர் மரபினரால் கற் கோயிலாகக் கட்டப்பட்டு இணுவைப்பெரிய கோயில் என்றும் பெயரைப் பெற்றதும் அல்லாமல் இந்த கோயிலின் நுழைவாயிலாகக் கருதப்படும் இணுவில்ச்சந்தி, கோயில் வாசல் என்னும் காரணப் பெயரை தன்னகத்தே கொண்டும் காணப்படுகின்றது .

இந்த ஆலயத்தில் கி.பி. 1884 ஆம் ஆண்டளவில் ஆலய பூசைகளைக் கவனித்து வந்த செல்லையர் சின்னையர் என்பவர் தனக்கிருந்த பிள்ளையில்லாத குறையை நிவர்த்தி செய்தருளும் படி ஆண்டவனை வேண்ட அந்தணரது என்னை நீ உருவாக்கு எனக்கூறி தான் அமையப்போகும் இடக்குறிப்பையும் அளவுப்பிரமாணத்தையும் கூறியதாகவும் அதற்கேற்ப ஐயர் சண்முகப் பெருமானை பஞ்சலோகத்தால் அமைத்து தன் குறை தீரப் பெற்றார். இந்தச்சண்முகப் பெருமானது திரு உருவம் போல் எங்கும் காணப் பெறுவதில்லை எனவும் இங்குவரும் யாத்திரிகர்களும், கலைஞர்களும் கூறுவர்.

இங்குகாணப்படும் சோமஸ்கந்தத்திருவுருவம், நடேசர் சத்துரு சங்காரவேல், காசிலிங்கம் போன்ற ஐம்பொன் விக்கிரகங்கள் கண்களைக் கொள்ளை கொள்ளும் அழகுத்திருக்கோலங்கள் கொண்டவை.

இவ்வாலயத்தில் கி.பி 1905 ஆம் ஆண்டளவில் இராஜகோபுரம் அமைக்கப்பட்டது. இதனைக் கோபுரவாசல் கல் வெட்டு உறுதி செய்கின்றது. தற்போது இது ஐந்து தலத்திலான கோபுரமாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்துக்கு சித்தர் பெரிய சந்நியாசியார் அவர்களால் கி.பி1910 ஆம் ஆண்டளவில் அற்புதத் திருமஞ்சமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அன்று வேலாயுதரின் கனவில் காட்சி கொடுத்து இடக்குறிப்பைக்காட்டுவதற்காக ஊன்றப் பெற்ற நொச்சி மரம் இன்றும் தல விருட்சமாக மூலஸ்தானத்துக்கு கருவில் காணப்படுகிறது.

இந்த வகையில் மூர்த்தியாக சண்முகப் பெருமானும் நொச்சி மரத்தை தலவிருட்சமாக (பஞ்ச வில்வங்களில் ஒன்று) கொண்ட இரட்டைப் பஞ்சாக்கத் தூபி கற் கோயிலைத் தலமாகவும் தீர்த்தமாக வைரவ தீர்த்தத்தையும் கொண்டு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றை முறையாக உடைய புனிதத் திருப்பதியாம் இணுவைக் கந்தன் சந்நிதியைத தொழுதுய்வோமாக.



SAITM
South Asian Institute of Technology and Medicine Ltd

# உங்கள் எதிர்காலத்தை SAITM இணைந்து ஆரம்பியுங்கள்

## நீங்கள் எதிர்பார்க்கும் விசேடமானவராக ஆகுங்கள்...

SAITM நிறுவனம் தென் ஆசியாவில் முன்னணி தொழில்நுட்ப மற்றும் மருத்துவ கல்வி நிறுவனமாக இலங்கையில் பசுமையான சுற்றுச்சூழலை கொண்ட நகரமான மாலபேயில் அமைந்துள்ளது. சர்வதேச அங்கீகாரம் பெற்ற விசேட உயர் தொழில்வாய்ப்பிற்கு அவசியமான மேம்பட்ட படிப்புகளான மருத்துவ, பொறியியல், ICT மற்றும் ஊடகம், முகாமைத்துவம் மற்றும் முக்கிய துறைகளுக்கு அவசியமான பட்டப் பாடநெறிகள் கற்பிக்கப்படும். அனைத்து பாடநெறிகளையும் பரிபூரணமாக கற்பதற்கும், கணினிமயமாக்கப்பட்ட நிறுவன பின்னணியின் கீழ் விசேட விரிவுரையாளர்களிடம் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பமும் தற்போது இலங்கையில்.

**2016 ஜனவரி 29, 30 மற்றும் 31 திகதிகளில் யாழ்ப்பாண நகரசபை மைதானத்தில் நடைபெறும் கல்விக் கண்காட்சியிலுள்ள (Stall No 147) எமது காட்சியறைக்கு வருகை தாருங்கள்**

### மருத்துவ பீடம்

**MBBS (SAITM) Sri Lanka**

Dr. Neville Fernando

### பொறியியல் பீடம்

**B.Sc. Eng in Mechatronics B.Sc.Eng in Civil Engineering**

AIT
Asian Institute of Technology

### முகாமைத்துவம் மற்றும் நிதியியல் பீடம்

- B.Sc in Accounting & Finance
- BA (Hons) in International Management

CIMA, CIM, CMA, ACCA, ACA HND

bucks new university

### ICT மற்றும் ஊடக பீடம்

- B.Sc in Computing
- B.Sc. in Computing with Interactive Media
- EDEXCEL HND in Interactive Media
- Diploma in Interactive Media

edexcel
advancing learning, changing lives

bucks new university



South Asian Institute of Technology and Medicine
P.O Box 11, Millennium Drive, Off Chandrika Kumaratunga Mawatha, Malabe, Sri Lanka.
Tel: 0112413351, 0112413331 Fax: 0112413332
Email: medifac@saitm.edu.lk Web: www.saitm.edu.lk

SAITM · Dr. Neville Fernando · AIT · RMIT UNIVERSITY · bucks new university

## கையிலை நாயகிக்கு நாளை நல்லூரில் கோபுர அத்திபாரம்

யாழ்ப்பாணம், ஜன.24

நல்லூரில் அமைந்துள்ள கைலாசபிள்ளையார் கோயிலில் இருந்து அருள்பாலிக்கும் கைலை நாயகிக்கு கோபுரம் அமைக்கப் படவுள்ளது.

கைலாச கோபுரத்துக்கான அத்தி பாரக் கல் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு நடப்படும்.

ஆலய பிரதம குரு குருசாமி சர்மா தலைமையில் அத்திபாரக் கல் நடும் பூசைகள் நடைபெறும். (அ)

## கும்பாபிஷேகம்

சாவகச்சேரி, ஜன.24

கொடிகாமம் தாவளை - இயற்றாலை மதுரை மீனாட்சி அம்பாள் ஆலய நூதன பஞ்சகுண்ட மகா யாக மகா கும்பாபிஷேகம் இன்று காலை 7.45 மணி தொடக்கம் இடம்பெறும்.

மகா கும்பாபிஷேக நிகழ்வில் இந்திய காஞ்சிபுரம் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், வேதாகம ஞானபாஸ்கரன் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள், நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நோர்வே ஒஸ்லோ முருகன் ஆலயப் பிரதம குரு கிரியாதிலகம் சிவஸ்ரீ நாகரட்ண குகேந்திரக் குருக்கள், கிரியா திலகம் சிவஸ்ரீ நாகரட்ண ஹீரிந்திரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளனர். (ற-ஜ-9)

## நிர்வாக சபை தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ். மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் சபைத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

இதில் போசகராக மா. சங்கர்ராஜும், தலைவராக கி. துரைசிங்கமும், உப தலைவராக கு. கமலினியும், செயலாளராக ப. நிமலகாந்தனும், உப செயலாளராக ந.கவிந்தாவும், பொருளாளராக தி.சுதர்சனும், கணக்காய்வாளராக சே.விஸ்ணுதாஸும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக இ.குணசிங்கம், கி.தேபாலன், இ.மோகன்றாஜ், கி. குமரகுரு, சி.மகேந்திரன், து. ஆரூரன், ஞா. டிலக்சன், சி.றஞ்சித்குமார், த.மதன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.(ற-ஜ)

★ ★ ★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.24

வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் நடப்பு ஆண்டுக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நிர்வாக சபையின் தலைவராக ந. சிவரஞ்சனும், உபதலைவராக மா.கணேசும், செயலாளராக க. சந்திரசேகரனும், உப செயலாளராக நா. அருணகிரிநாதனும், பொருளாளராக எஸ். ஜெயபாலனும், நிர்வாக உறுப்பினர்களாக க. செல்வராசா இ. தெய்வேந்திராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் அங்கத்தவராக இணைந்து கொள்வோர் புதன்கிழமைகளில் வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் தலைவர், செயலாளரைச் சந்தித்து இணைந்து கொள்ளலாம் என சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ற-ஜ)






உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழர் எதிர்பார்ப்பும் அரசின் இழுத்தடிப்பும்

ஆட்சி பீடத்தில் அமர்ந்து கோலோச்சக் கிடைத்திருந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் நாட்டின் இரண்டு பெரிய பேரின கட்சிகளும் சிறுபான்மை தமிழர்கள் மீதும் அவர்கள் அனுபவித்த உரிமைகள் மீதும் கைவைப்பதென்பதை ஒரு கொள்கை மட்டத்திலான கடமையாகவே கடைப்பிடித்து வந்துள்ளார்கள்.

டி.எஸ். சேனநாயக்காவின் ஐ.தே.கட்சி மலையகத் தமிழ் மக்களின் உரிமைகளை கபளீகரம் செய்து அம்மக்களில் லட்சக் கணக்கானவர்களை குடியுரிமையும் வாக்குரிமையுமற்ற ஓட்டாண்டிகளாக்கி மகிழ்ந்தது.

அதன் பிறகு புதிய கட்சி அமைத்துக் கொண்டு பதவிக்கு வந்தவரான எஸ். டபிள்யு.ஆர்டி பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் கொள்கையை செயற்படுத்தி நாட்டின் சகல பிரதேச தமிழ் பேசும் மக்களின் மொழி உரிமைகளையும் ஒட்டுமொத்தமாகப் பறித்து விட காரியம் பார்த்தார். அவரைத் தொடர்ந்து பதவிக்கு வந்தவரான சிறிமாவோ பண்டாரநாயக்க் அம்மையாரோ இன்னும் ஒருபடி மேலே சென்று ஏற்கனவே சோல்பரி அரசமைப்பில் சிறுபான்மையோரைப் பாதுகாப்பதற்கென புகுத்தப்பட்டிருந்த 29 ஆவது சரத்தை அகற்றியது மட்டுமன்றி விகிதர்சார கல்விமுறையையும் கொண்டு வந்து தமிழ் பேசும் மக்களின் மேலும் பல உரிமைகளில் கைவைத்தார். அதற்குப் பின்னர் வந்த ஜே.ஆர் - மற்றும் பிரேமதாசவினரின் காலத்து ஐ.தே.கவின் செயற்பாடுகளை இன்றைய தலைமுறையினர் நன்கு அறிவார்கள். இதற்கிடையில் பதவியில் அமர்ந்தவரான எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டார நாயக்கவின் வாரிசு சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்க அம்மையார் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான ஒரு திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருப்பதாக அக்காலத்தில் செய்திகள் அடிபட்டுக் கொண்டிருந்தன.

இந்த கால கட்டத்தில் தான் அந்தக் கொடுமை நடந்தேறியது. ஆம், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்ககுமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தை நினைக்கும் போதெல்லாம் நவாலி தேவாலயத்தின் மீது 1995 ஆம் ஆண்டு நடத்தப்பட்டிருந்த ஈவிரக்கமற்ற குண்டு வீச்சும்/அதில் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களும் நினைவுக்கு வருகிறார்கள். இப்பொழுது ஏறத்தாழ 20 வருடங்களின் பின்னர் அந்தச் சம்பவம் பற்றி அம்மையார் வாய்திறந்துள்ளார்.

பிரத்தியேக நேர்காணல் ஒன்றின்போது குறித்த சம்பவம் பற்றிய கேள்விக்கு விடை அளிக்கையில் "நவாலியில் மட்டுமல்ல போரின் போது நிறையவும் சம்பவங்கள் இடம் பெற்றிருந்தன.

நவாலி விமானத்தாக்குதல் பற்றி அறிவிக்கப்பட்டபோது பாதுகாப்புச்சபை கூட்டமொன்றில் பங்குபற்றிக் கொண்டிருந்தேன். இராணுவத்தரப்பினரையும் விமானப்படை யினரையும் நோக்கி உரத்துக்கத்தினேன்.

இந்தத் தாக்குதல் ஒரு தவறு... விமானப்படை, இராணுவம் மற் றும் அரசு இதற்குப் பொறுப்புக் கூறவேண்டும்" என்பதாக அவர் பதிலளித்துள்ளார்.

அவர் கூற்றின் பிரகாரம் பார்த்தால் அவருக்குத் தெரியாமல் அல்லது அவரின் அறிவுறுத்தல் இல்லாமலே குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது என்று புலனாகின்றது. அவ்வாறாயின் அந்த காலகட்டத்திலேயே அவ்வாறு ஏன் எவரும் அந்தத் தவறுக்கு வருத்தம் தெரிவிக்கவில்லை என்ற கேள்வி எழவே செய்கின்றது. எதுவானாலும் இவ்வளவு காலம்கடந்த பின்னரர்கிலும் அது தவறான செயல் என்பதை முன்னாள் ஜனாதிபதி பகிரங்கமாக ஏற்றுக் கொண்டிருப்பது கவனத்துக்குரியது.

விமானப்படையினர் தவறுதலான இலக்கின் மீது தாக்குதல் நடத்தியிருப்பதாகவும் அம்மையார் கூறியுள்ளார் என்றாலும் தாக்குதலுக்குரிய இடம் சரியானது தானா என்று உறுதிப்படுத்திக் கொள்ளாமல் அந்த விமானி தேவாலயத்தின் மீது குண்டு வீசினாரா? அல்லது இறக்கப் போகிறவர் யாராயிருந்தாலும் தமிழ்த் தரப்பினர்தானே என்று பேரின சிந்தனையில் குண்டை வீசினாரா? அதுவும் இல்லையென்றால் ஜனாதிபதியைத்தவிர்த்து வேறு யாரும் ஓர் உயர் அதிகாரி அவ்வாறான கட்டளையைப்பிறப்பித்திருந்தாரா? இவைகள் பற்றிய விவரங்கள் ஒரு பகிரங்க் விசாரணை நடந்தாலே தெரியவரும்.


சந்திரிகா அம்மையாருக்குப் பிறகு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையை ஏற்று ஜனாதிபதியாக வந்தவர் தான் மகிந்த ராஜபக்ச.

அவரது காலத்தில் நடந்து முடிந்த போரின் இறுதிக் கால கட்டத்தில் இடம் பெற்ற அட்டூழியங்கள், போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் குறித்து இப்பொழுது சர்வதேச சமூகம் விசாரணை ஒன்றை நடத்தி உண்மைகளைக் கண்டறியும் படியும் சம்பந்தப்பட்டவர்களை பொறுப்புக் கூறச் செய்யும்படியும் வற்புறுத்துகின்றது.

தமிழ்த்தரப்பினரதும் சர்வதேசத்தினதும் இடையறாத முயற்சியின் விளைவாக இன்று விசாரணை ஒன்றுக்கான ஏற்பாடுகள் நடைபெறவிருப்பதை அறிகிறோம். அது எவ்வளவு விரைவாக நடந்து முடிகின்றதோ அந்த அளவுக்கே தமிழ்மக்கள் திருப்தி கொள்வார்கள். மகிந்தவை பதவியிலிருந்து அகற்றி சிறிசேன - ரணில் இணைப்பாட்சிக்கு வித்திட்ட தமிழ்மக்களின் எதிர்பார்ப்பை அரசு புரிந்துகொள்ளவேண்டும்.

# சத்தியமான உழைப்பினால் மட்டுமே சாத்தியமாகும் தேசியமட்டம்

கே.எஸ்.சிவஞானராஜா



அஹிம்சா மூர்த்தி மகாத்மா காந்தியின் தாரக மந்திரம் சத்தியம் ஆகும். கல்வி கற்றதிலிருந்து இறுதிவரை சத்தியத்தை இலட்சியமாகக் கொண்டதனால், இந்தியா என்னும் தேசத்திற்கு அப்பாலும் இஸ்ரேல் வரைக்கும் உன்னத தலைவராகப் போற்றப்படுகின்றார். அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா, இலங்கை போன்ற நாடுகளில் காந்திக்கு உயர்ந்த கௌரவம் அளிக்கப்பட்டுச் சிலைகளை வடித்திருக் கிறார்கள். இந்தத்தகுதிநிலையினை ஒவ்வொரு மனிதனும் அடைய வேண்டுமாயின், சத்தியம் சாத்தியமாக வேண்டும். சாத்தியமானதுகடமையில்தொனிக்க வேண்டும். நிர்வாகத்தில் மிளிர வேண்டும். ஆன்மிகத்தில் மலர வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகக் கல்வியில் வெற்றி பெற வேண்டும். வளரும் பயிரில் சத்தியத்தை உரமாக இடுவோமாக இருந்தால், நாடானது ஆன்மிக வயல்களாக நிலைத்து, நிரந்தரமான வீடுபேற்றினை அறுவடையாக அள்ளித்தரும். ஒவ்வொரு மதமும் மனிதன் மனிதனாக வாழவேண்டுமென்றே சதா போதிக்கின்றது. உலகமும் அதையே விரும்புகின்றது. ஆதலால் எல்லாவற்றுக்கும் அடிப்படையான சத்தியம், நேர்மை, நீதி, நியாயம், கடமை, கண் ணியம், கட்டுப்பாடு, சிக்கனம், பயபக்தி, கீழ்ப்பணிவு யாவுமே ஒன்றுதிரண்டு மனிதர்களிடம் குடிகொள்ளுமாக இருந்தால் அவர்கள் தேசிய நிலையில் வைத்துப் போற்றப்படுவார்கள். நீதியும், நிதியும் பிழைக்குமாக இருந்தால், இறைவனாலும் காப்பாற்ற முடியாமல் போய்விடும். அண்மையில், கிளிநொச்சி மாவட்டத்தில் வரலாறு படைத்த ஒரு நிகழ்வு இலங்கை எனும் தேசியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கல்வியைப் பொறுத்தமட்டில் இலங்கையின் சகல வலயங்களும் ஏதோ ஒரு வகையில் சாதனை செய்துள்ளமை பாராட்டப்படவேண்டியதொன்றாகும். அதேபோலவிளையாட்டுத் துறையிலும் வடமாகாணம் பல சாதனைகளைச் சாதித்துள்ளது. யாவற்றுக்கும் மூல காரணமாகச் சத்தியமான கடின உழைப்பே பிரதானமாகிறது.

### சாதனை

அண்மையில், 2015 தமிழ் மொழித்தினப் போட்டிகளின் அடிப்படையிலே கவின் தமிழ் நூலின் தரவாக, நாட்டிய நாடகம் (ஆடல் கதை) என்றுமில்லாதவாறு தேசியமட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளமையானது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். கலை மலிந்து பொலியும் யாழ்ப்பாணமானது பற்பல போட்டிகளில் வருடந்தோறும் தேசிய மட்டத்தில் பல முதலிடங்களைப் பெற்று வரலாறுபடைத்து வரும் இந்தநாளில் கிளிநொச்சி மாவட்டமும் நடனத்துறை சார்ந்த இரண்டு குழு நிகழ்ச்சிகளில் முதலிடங்களைப் பெற்றிருப்பது இறைவனின் கிருபா கடாட்சமாகும். அதிலும் நாட்டிய நாடகமானது மிகவும் காத்திரமானதே. கலைகளிலே மிகவும் பெறுமதியானது நடனக் கலையாகும். இடது பாதம் தூக்கி ஆடும் நடராஜனடி பணிவாயே என்று இயம்பப்படும் வாக்கிலிருந்து அதன் மகத்துவத்தை யாமறியலாம். சுருதி, லயம், பாவம், சாகித்தியம், அபிநயம், கற்பனை, அலங்காரம், உடை, நடை, பாவனை, நேரம், மேடை, பின்னணி, குரு - சிஷ்ய இணைப்பு, அர்ப்பணிப்பு, அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொருளாதாரம் என யாவும் ஒருங்கு சேர்ந்துஎல்லாவற்றுக்கும் மேலாக இறைவனின் ஆசீர்வாதமும் கிடைக்கப் பெற்றாலே ஒரு நிகழ்ச்சியின் வெற்றி சாத்தியமாகும். இங்கு சத்தியமாவது கடவுளாகும். கடின உழைப்பும் கடவுளாகும். நிதியும் கடவுளே நீதியும் கடவுளே. இங்கு சகலதும் பூரணநம்பிக்கையோடு இயக்கம்பெற்றமையால்கடினஉழைப்பானது தேசியம் வரை

> "தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்குப் பயணிக்கும் ஆசிரியைகளான நடன, சங்கீத, ஆசிரியர் களும், நாட்டிய நாடகப் போட்டியாளர்கள் பன்னிரு வரும், பார்வதி சமேத நடராஜப் பெருமானையும், கலைமகளையும் வணங்கி சத்தியப்பிரமாணம் செய்தனர்."

## வாசகர் திருமுகம்







வென்றிருக்கிறது. கிளிநொச்சிமாவட்டம்
கிளிநொச்சி கண்டாவளை மகாவித்தியாலயம்,
கிளிநொச்சி மகாவித்தியாலயம்,
கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை
கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்
கிளிநொச்சி மகா வித்தியாலயம்
ஆகிய ஐந்து பாடசாலைகளும் முறையே, கட்டுரை வரைதல், இலக் கணப் போட்டி, பேச்சு, நடனம் குழு - 01, நாட்டிய நாடகம் எனும் ஐந்து நிகழ்ச்சி களிலும் தேசிய நிலையை யடைந்துள்ளமையைப் பாராட்டும் அதேவேளை, குழு நடனம் ஒன்றிலும்நாட்டிய நாடகத்திலும் முதலிடங்களைப் பெற்றுள்ளம்ம சும் மாவல்ல ஒரு பெருஞ்சாதனையாகும். பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும். அதன் பெறுமதியை யாழ்ப்பாணம் புரிகிறது.

**கிளிநொச்சி**

போர்ச் சூழலினால் பாதிக்கப்பட்ட இடங்களில் இதுவும் ஒன்றாகும். முற்றாக துவம்சம் செய்யப்பட்ட வன்னியின் தலைநகரம் என்று கூடச் சொல்ல முடியும். இத்தகைய பின்னணியில் வீடு தொடக்கம் ஏடுதொடக்கும் - பள்ளி வரை - பையப் பைய, மெள்ள மெள்ள, புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வீதிகள், விளக்குகள் எனப் பரிகாரம் செய்யப்பட்டு ரோக நிவாரண வைத்திய மனைகள் விஸ்தரிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து

ஆசிரியப்பரிமாற்றம் நேர்த்தியாக இடம்பெற்றதன் பிரகாரம்நாட்டிய நாடகம் மற்றும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளும் வெற்றிவாகை சூடியதெனலாம். தமிழ் மொழித்தினப்போட்டிகளில் காத்திரமான

> அண்மையில், 2015 தமிழ் மொழித்தினம் போட்டிகளின் அடிப் படையிலே கவின் தமிழ் நூலின் தர வாக, நாட்டிய நாட கம் (ஆடல் கதை) என்றுமில்லாதவாறு தேசியமட்டத்தில் முத லிடத்தைப் பெற்றுள் ளமையானது ஒரு வரலாற்றுச் சாத னையாகும்.

நிகழ்ச்சியாக நாட்டிய நாடகம் அவதானிக்கப்படுகிறது. அந்த நிகழ்ச்சியானது முதலிடம் பெறுவதற்காக அந்தப் பாடசாலை மேற்கொண்ட கடின உழைப்பு எவ்வாறான தென்பதை நோக்குவது நமக்குப்படிப்பினையாக அமையும் .

பாடசாலை நிர்வாகமானது, ஆசிரியர்களையும், மாணவர்களின்திறமையையும் இனங்கண்டது. தமிழ்மொழித்தின சுற்றறிக்கையைத் தெளிவாகப்பலமுறை வாசித்து புரிந்து கொண்டது. பாஞ்சாலி சபத வரலாற்றினை அக்கு வேறு ஆணி வேறாகப் பதிவு செய்தது. அதிபர், தமிழ் - நடன - சங்கீத ஆசிரியர்களோடு வெளிப் படையாகக் கலந்துரையாடி நாட்டிய நாடகத்தினையும் ஒரு நிகழ்ச்சியாகத் தெரிவு செய்து ஆகவேண்டிய செலவு விவரத்தினைப் பட்டியலிட்டார். ஆம்! அதிபரிடமிருந்து செலவுக்கான சம்மதம் கிடைத்தது. ஒரு இலட்சத்தைத் தாண்டுகின்ற நிலையிலிருந்த போதும் பெற்றோர்களின் பூரண ஆதரவு கிடைத்தது. நடன ஆசிரியரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இசையாசிரியரும், பங்குபற்றும் மாணவர்களுமாக ஒரு கூட்டுப் பொறுப்பு உருவாகியது. நடனமும், இசையும் ஒன்றித்தால் பிறகென்ன? சொல்லவா வேண்டும்.

**சத்தியப்பிரமாணம்**

தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்குப் பயணிக்கும் ஆசிரியைகளான நடன, சங்கீத ஆசிரியர்களும், நாட்டிய நாடகப் போட்டியாளர்கள் பன்னிருவரும், பார்வதி சமேத நடராஜப் பெருமானையும், கலைமகளையும் வணங்கி சத்தியப்பிரமாணம் செய்தனர். அதாவது:- நாட்டிய நாடகப் போட்டியில் பங்கு பற்றும் யாம் மிகுந்த பய பக்தியோடு, பாடசாலைக்கும், இந்தப் பிராந்தியத்திற்கும் பெருமை தேடித்தருவதோடு மட்டுமன்றி, அதற்காக பின்னேர வகுப்புப் பயிற்சிகளுக்கும் மிகவும் ஒழுக்க சீலர்களாக சமுகமளிப்போம் என்று இத்தால் உறுதியளிக்கிறோம் என்ற சத்தியமே இப் போட்டியினது அபார வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் காரணமாக அமைந்த தெனலாம். இது ஒரு நல்ல முன்னுதாரணமாகும். வாழ்க்கையும் அதுதானே!

கஜானி - சிவராசா - பணிவுடைய, டிஷாந்தி யோகராசா - பக்தியுடைய, பிருத்திகா சத்தியநாதன் - பரிவுடைய, சர்மினிஜெயசீலன் - பயபக்தியுடைய, தமிழ்நிலா கனகரத்தினம் - பௌர்ணமியான, லதுஷாதவராசா - பல்லவியாக, ஐஸ்வகி கந்தசாமி - அனுபல்லவியாக, மெர்லின் சிரோசா ஞானதாசன் - சரணமாக, மதுரிகா பரமேஸ்வரன் - கீர்த்தியாக, கீர்த்தனா குமார் - ஜயமாக, கருணிகா உதயகுமார் - சத்தியமாக, காயத்திரி பாலேந் திரன் - நித்தியமாக

ஆகிய பன்னிருவரும் சோராமல் கொள்ளாமல் அதீத பயிற்சிகளைக் கையகப்படுத்தியமையால், ஆசிரியர்களும் குடும்பசுகங்களை, பிரயாண கஷ்டங்களை, ஆன சாப்பாடுகளை, உடல் வருத்தங்களை தியாகஞ் செய்து தான் தேசிய மட்டத்துக்கு உயர்த்திச் சென்றனர். இதே போலவே குழு நடனம் ஒன்றும் போற்றுதல் செய்யப்பட வேண்டும். இந்தப் பிள்ளைகள் உயர் தரப் பரீட்சையிலும் திறமையோடு சித்தி பெற்று பல்கலைக்கழகத்தினை அலங்கரிப்பார்கள் என்பது சாத்தியமாகும். சத்தியமான உழைப்பு தோல்வி போவதில்லையே.

**நிறைவு**

2015 ஆம் ஆண்டுதேசியமட்டத்தில் நடைபெற்ற தமிழ்மொழித்தினப்போட்டியில் வடமாகாணம் முப்பத்து மூன்று இடங்களை பெற்றுள்ளது. சுமார் நூறு மாணவர்களும், சம்பந்தப்பட்ட இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளும் மிகுந்த பிரயத்தனமும், விடாமுயற்சியும் எடுத்து தம்மைத் தகுதியுள்ளதாக்கியமை உண்மையிலேயே அதியுச்சமாகப் பாராட்டப்படவேண்டியது ஒன்றாகும். உதயனும் பரிசு பெற்ற நிகழ்ச்சிகளை உரியவாறு பிரசுரித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். வடமாகாண கல்வித்திணைக்களம் இவர்களனைவரையும் ஒன்று கூட்டி அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது காலத்தின் தேவைப்பாடாகும்.

இது சாத்தியமாகுமா? சாத்தியமானால் 2016 இல் ஐம்பது இடங்களைப் பெறுவது சத்தியமே!

## பட்டாசு கலாசாரமும் தமிழர்களும்

அம்மைஅப்பனே. ஐயகோ எமது கலாசாரத்தில் பட்டாசு கொளுத்துவது என்பது ஏன் எதற்காக என்ன நோக்கத்திற்காக, இதன் தாற்பரியம் என்ன போன்ற காரணங்கள் தெரியாமலேகொளுத்தித் தள்ளுகிறார்கள். மரண ஊர்வலத்திலும் பட்டாசு. தீவுப்பகுதிகளில் சில குறிப்பிட்ட பகுதிகளில் திருமண வீட்டில் மாப்பிள்ளை அழைத்து வரும் போது பட்டாசு. நத்தார் கொண்டாட்டத்திலும் பட்டாசு. புது வருடத்திலும் பட்டாசு. தைத்திரு நாளிலும் பட் டாசு. சித்திரைப் புத்தாண்டிலும் பட்டாசு. இப்படியே செல்கிறோம். கடந்த 14.01.2016 அன்று இரவு 8மணி இருக்கும். நான் அளவெட்டிப் பகுதியிலிருந்து கொடிகாமம் நோக்கி மோட்டார் வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தேன் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலடியில் சில இளவட்டங்கள் வாகனங்களைக் கண்டதும் வாணம் விட்டு அதாவது வீதிக்குக் குறுக்காக வாணத்தை விடுகின்றனர். சரி இது தான் போச்சு என்றால் கொடிகாமம் சந்தியில் சில இளசுகள் பருத்தித்துறை வீதியில் நின்று கொண்டுநாற்சந்தியில் வெடிகளைக் கொளுத்திப் போடுகின்றனர். அப்போது நான் சடுதியாக பிரேக் போட்டதால் என் மீது வர இருந்த ஆபத்திலிருந்து தப்பித்துக்கொண்டேன். ஆகவேவெடி ஆபத்தானதுவும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய ஒரு பொருளுமாகும். தைத்திருநாளை தைப்பொங்கலை வரவேற்பதற்கு வெடி கொளுத்தினால் தான் தை பிறக்கும் என்று கூறப்பட வில்லை. அதை ஆக்க பூர்வமாகச் சிந்தித்துதிருமுறைகளையோ சிவ புராணங்களையோ பாடலாம் அல்லது சேமக்கலம், மங்கல வாத்தியம் போன்ற தெய்வீக இசைக்கருவிகளை இசைக்கலாம். இறைவனை மகிழ் விக்கக் கூடிய இது போன்ற கைங்கரியங்களை விடுத்து ஒருவரைத் திடுக்கிட வைத்து இன்னல்படுத்தி, இம்சைக்குள்ளாக்கி, மனதைப்புண்படுத்தி அடுத்தவரின் துன்பத்தில் தான் தை பிறக்கும், பிறக்க வேண்டும் என்றால் யாரும் அதை எளிதில் விரும்ப மாட்டார்கள் என நினைக்கிறேன். ஆகவே இனிவரும் காலங்களிலாவது இன்றைய இளைஞர்கள் நாளைய (எதிர் கால சிற்பிகள்) நன்கு சிந்தித்து நடப்பார்கள் என்று கூறி, பிள்ளைகளைப் பெற்றோர், ஆசிரியர்கள் இது போன்ற தீய காரியங்கட்கு உட்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் என் போன்றவர்கள், பெண்கள், நோயாளிகள், நலிவுற்றோருக்கும் இது பாதிப்பை உண்டு பண்ணும். நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்.

**சிவஸ்ரீ.இ.ஸ்ரீதரசிவாச்சாரியார்**
பெரியந்தாப் முத்துமாரியம்மன் ஆலய உற்சவகால குரு, சரசாலை வடக்கு சாவகச்சேரி.

## சகல கலா வல்லபம்

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் என அபிராமி அந்தாதி66ஆம் பாடல் தெளிவுபடுத்துகின்றது. வீரம், செல்வம், கல்வி என பராசக்தி வழிபாடு.

எமது சிறார்களின் ஆரம்பக் கல்வி ஆண்டு5 வரை, இடைநிலைக் கல்வி ஆண்டு 11 வரை, உயர் கல்வி ஆண்டு13 வரை என கல்வி மரம் செழித்து வளர்கின்றது. யாவற்றிற்கும் வீரம், செல்வம். அடித்தளம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் உடல் நல விருத்தி, வசதியான வாழ்வு என்பன இருப்பின் மட்டுமே கல்வியில் ஊக்கம் பெற முடியும். உடற்பயிற்சி விளையாட்டுக்களை எமது சிறார்களுக்குப் பயிற்றுவித்தல் கடமை. நெடு நீர் மறவி மடிதுயில் நான்கும் கெடு நீரார் காமக்கலன்குறள்

சோர்வற்ற, சுறுசுறுப்பைச் சிறார்களிடம் ஏற்படுத்த பெற்றோர்கள் கண்காணித்திடல் அவசியம். வசதியான வாழ்விற்கு பெற்றோரின் ஊதியம், முயற்சி முக்கியம். ஆண்டு 5 புலமைப் பரீட்சை சித்தியெய்தியோர் மட்டும் அரங்கேற்றிச் சேவையாற்றுவது தவறு. சிறந்தவர்கள் திறமையானவர்கள் என வடிகட்டி பிரபல பாடசாலைகளில் அனுமதி. இத்தகையோர் சிறு குழுவினரே. மற்ற சிறார்களின் நிலையை சிறிது சிந்திப்பது கடமை. அவர்களிடமும் பிரகாசிப்பவர் உண்டு என்பதே வரலாறு. எனவே தரப்படுத்தல் அவசி யமா? வெற்றிக் கனிகளுக்கு மட்டும் பிரபலங்களில் வரவேற்பா? இலவசக் கல்வி, சம வாய்ப்பு என்பதை நினைவில் நிறுத்தி யாபேருக்கும் சகல கலா வல்ல பத்தை ஊட்ட மறு பரிசீலனை செய்தல் எம்முன்னுள்ள பனி . உள்ள வண்ணம் அறியும் அறிவு யாபோருக்கும் சமவாய்ப்பு.

**விமலினி புலோலி.**

## அசண்டையீனம்

மன்னார் நகரிலுள்ள கல்விவலயத்தில் தூர இடங்களிலிருந்து செல்லும் ஆசிரியர்கள் தமது கடமையை நிறைவேற்றுவது மிகவும் கடினமான விடயமாகவுள்ளது. நிர்வாகப் பிரிவிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது கடமை நேரத்தில் தமக்கான இடங்களில் இருப்பதில்லை. ஏறத்தாழ 30கீ.மீ தூரத்திற்கு அப்பால் இருந்து தமது வலயத்தில் செய்ய வேண்டிய கடமைகள்ளை மேற்கொள்ள தமது பாடசாலைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களைச் சந்திக்கச் சென்றால் அவர்கள் அசண்டையீனமான பதிலை வழங்குகிறார்கள். பாடசாலைகளிலே பி.ப 2மணிவரை படிப்பித்துவிட்டுச் சென்றால் அவர்களுக்குரிய பதில்களை தராது விடுவார்கள். பி.ப2.30மணிக்குப் பின்னர்தான் சந்திக்கலாம் என்று எழுதிப் போடப்பட்டிருக்கும். நாம் அந்த நேரம் சென்றால் அவர்கள் தங்கள் பிள்ளைகளை ஏற்றி இறக்குவது, தொலைபேசியில் அரட்டை என தமது வேலைகளைச் செய்வார்கள். தமது அவசர வேலைகளை இன்று செய்து விடலாம் என வரும் ஆசிரி யர்கள் சோகத்துடன் செல்வது தான் மிச்சம். இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் மாகாணக்கல்வி அமைச்சும் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் இவ்வாறான நிலைமை தொடரத்தான் போகிறது. ஏற்கனவே வேறு மாவட்டத்திலிருந்து வந்து வேலை செய்பவர்கள் ஒரு முறை வலையத்திற்கு வர ஏறத்தாழ 2மணித்தியாலம் செல வழிக்கிறார்கள். இவ்வாறான நிலைமை தொடராது தடுப்பது மாகாணக்கல்வித் திணைக்களத்தின் கடமை.

**பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள்.**

## மிகவும் கடினமான பாதையில் சிரிய அரசியல் தீர்வு முயற்சிகள்

சிரியாவிலும் ஈராக்கிலும் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளின் பலமான கோட்டைகளை நிர்மூலமாக்கும் முயற்சியில் மேற்கு நாடுகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. அதேசமயம், சிரியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் முயற்சிகளும் தீவிரமடைந்துள்ளன.

சமீபத்தில் சண்டைகளின்போது ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் தமது இஸ்லாமிய தேசப் பரப்பளவில் கால்வாசிப் பங்கை இழந்து விட்டனர். அவர்களை முற்றாகத் தோற்கடிப்பதன் மூலமே சிரியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அர்த்தமுள்ளதாக அமையும். அரசியல் தீர்வுக்கான பேச்சுகளை எதிர்வரும் திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பிக்கமுடியும் என்பதில் சிரியாவுக்கான ஐ.நாவின் விசேட பிரதிநிதி ஸ்ரபான் டி மிஸ்துரா நம்பிக்கை வெளியிட்டுள்ளார். ஆனால், பேச்சுகளில் சிரியா அரசுத் தரப்பில் யார் கலந்துகொள்வது என்பது முடிவு செய்யப்படவில்லை. எதிரணி தரப்பில் யார் கலந்துகொள்வது என்பதிலும் இணக்கம் ஏற்படவில்லை. இழுபறி நீடிக்கிறது. இதனால் போர் அழிவுகள் அதிகரிக்கலாம். ஜனாதிபதி பார் அல்அஸாத்துக்கு எதிரான பிரதான கிளர்ச்சிக்குழு ஒன்றின் தலைவர் மொஹமட் அலவ்ஸ் என்பவர் எதிரணி சார்பாக பேச்சுகளில் கலந்துகொள்ள சவூதி அரேபியா ஆதரவு தெரிவிக்கிறது. ஆனால், எதிரணி சார்பாக வேறு கிளர்ச்சிக் குழுக்கள் கலந்துகொள்ள முக்கியமாக ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளுக்கு எதிரான இரண்டாவது பலமான அமைப்பான குர்திஷ் போராளிகள் கலந்துகொள்ள மொஹமட் அலவ்ஸ் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்.




தற்பொழுது இரண்டு முக்கிய பிரச்சினைகள் உள்ளன. ஒன்று எதிரணி சார்பாக யார் கலந்துகொள்வது என்பது. அர்த்தமுள்ள அரசியல் தீர்வு காணமுடியுமா என்பது மற்றைய பிரச்சினை. ஐ.நா. தலைமையின் கீழ் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுகளில் கலந்துகொள்ளும் நாடுகளில் ரஷ்யாவும் ஈரானும் ஜனாதிபதி பார் அல்அஸாத்துக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றன. சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தில் ரஷ்யா தலையீடு செய்ததற்கான முக்கிய நோக்கமே அஸாத்தைப் பாதுகாப்பதுதான். அஸாத்துக்கு ஆதரவாக ஈரானும் உள்ளது.

ஆனால், அஸாத் இல்லாத ஒரு சிரியாவையே அமெரிக்கா தலைமையிலான நேசநாடுகளும் சவூதி அரேபியா போன்ற நாடுகளும் எதிர்பார்க்கின்றன. இந்த யுத்தம் முதலில் அஸாத்தைப் பதவி கவிழ்ப்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டது. ரஷ்யாவின் சிறிய கடற்படைத்தளம் (தற்பொழுது விஸ்தரிக்கப்பட்டுவிட்டது.) இருந்ததால் சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தில் ஆரம்பத்தில் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் மிகவும் அவதானமாகவே செயற்பட்டுவந்தன.

எனினும், ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் இஸ்லாமிய தேசத்தைப் பிரகடனப்படுத்தி சிரியாவில் பல பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தபோது முதலில் சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படைகள் வான் தாக்குதல் மூலம் தலையிட்டன. பின்பு ரஷ்யாவும் வான் தாக்குதல்களை ஆரம்பித்தது. ரஷ்யா, ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளின் இலக்குகளை மட்டுமன்றி, சிரியாவின் அரச படைகளுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்களின் இலக்குகளையும் தாக்கியது. ரஷ்யாவின் தலையீட்டால் ஜனாதிபதி அஸாத்தின் அதிகாரம் பலப்படும் நிலைமை ஏற்பட்டதால் சமாதானப் பேச்சுகளுக்கு அமெரிக்கா சார்பு நாடுகள் இறங்கிவரும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆகவே, சமாதானப் பேச்சுகளில் கலந்துகொள்ளும் ரஷ்யா மற்றும் மேற்கு நாடுகளினதும் சவூதியினதும் ஈரானினதும் நோக்கங்கள் வெவ்வேறாக இருப்பதால் பேச்சுகள் மிகவும் கடினமானவையாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிரியாவில் நியாயமான தேர்தல் ஒன்றை நடத்தி மக்கள் தமது தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்ய வாய்ப்பளிப்பதன் மூலம் அரசியல் தீர்வு ஓரளவு சாத்தியமாகலாம்.

# சைவ மக்களினால் சிறப்பாக போற்றப்படும் தைப்பூசம்



எஸ்.ரி.குமரன்

சைவ மக்களால் சிறப்பாக அனுட்டிக்கப்படும் விரத நாளாக தைப்பூச விரதம் அமைகின்றது. தை மாதத்திலே இடம் பெறும் பூச நட்சத்திர தினமன்று தைப்பூச விரதம் அனுட்டிக்கப்படுகின்றது. பூசம் என்பது பஞ்சாங்கம் குறிப்பிடும் 27 நட்சத்திரங்களில் எட்டாவதாக விளங்குகின்றது. தை மாதத்தில் வரும் பூசம் என்பதினால் தைப்பூசம் என அழைக்கப்படுகின்றது. இந் நாளினை புண்ணிய நாளாக இந்துக்கள் போற்றுகின்றார்கள்

தைப்பூச நன்னாளானது பெரும்பாலும் பௌர்ணமியுடன் கூடிய நாளாக இருக்கும். தேவர்களின் குருவாக விளங்கும் பிருகஸ்பதி பூச நட்சத்திரத்தின் அதிபதியாக விளங்குகின்றார். அவர் அறிவின் தேவதையாகவும் இருப்பதனால் தைப்பூசத் தினத்தில் விரதமிருந்து அவரை வணங்கும் போது அருள் எமக்குக் கிடைக்கின்றது.

தைப்பூச தினமானது நடராஜப் பெருமான், அம்பிகை, முருகன் ஆகியோருக்கு உகந்த நாளாகவும் போற்றப்படுகின்றது. இந் நாளானது சிவசக்தி ஐக்கியத்தினை காட்டும் திருநாளாகவும் போற்றப்படுகின்றது. சிறப்பாக முருகப்பெருமானுக்குரிய விசேடமான நாளாகவும் விளங்குகின்றது. தைப்பூசத் திருநாளானது உலக சிருஷ்டியின் ஆரம்ப நாள் எனவும் பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய இருவரும் காணும்படி நடராஜப் பெருமான் சிவ தாண்டவம் ஆடிய நாளாகவும் வாயு வருணன் அக்கினி ஆகிய தேவர்களும் சிவபெருமானின் அதீத சக்தியை உணர்ந்த நாளாகவும் குறிப்பிடப் படுகின்றது.

> “சிறப்புக்குரிய தைப்பூச நன்னாளிலே விரதம் அனுட்டிப்பதன் ஊடாக இம்மை மறுமை இன்பங்களினை பெற்று உய்யலாம். எனக் குறிப்பிடப்படுகின்றது.”

தைப்பூசத் திருநாளிலே எம் பெருமானாகிய நடராஜப்பெருமான் சிவகாமி சுந்தரி அம்மையோடு ஆனந்த நடனமாடுவதாக புராணங்கள் கூறுகின்றன. கனகசபையாகிய சிதம்பரத்திலே ஆனந்த நடனம் புரியும் தில்லைக் கூத்தன் நடராஜப்பெரு மானை நினைத்து சைவ சமயிகள் தைப்பூசத்திருநாளில் விரதமிருப்பார்கள்.

தைப்பூச நாளின் சிறப்புப் பற்றி ஆறுமுகநாவலர் குறிப்பிடுகின்றபோது சிவனார் கனகசபையான ஞானசபையிலே உமையம்மையுடன் ஆனந்தத் தாண்டவம் செய்த இத்தைப்பூச திருநாளிலே அன்று வியாழக்கிழமையும் கூடிவரின் அச் சித்தயோக தினத்திலே ஆயிரம் தோள்களையுடைய வானசுரன் குடமுழா ஒலிக்க ஆயிரம் முகமுடைய் பானு கம்பர் கீத ஒலியம் நாதமெழுப்ப ஞானசபைதன்னில் சிவபெருமான் உமையம்மையுடன் ஆனந்த நிருத்தம் செய்தருளினார் எனக் குறிப்பிடு கின்றார்.

தைப்பூச நன்னாளின் சிறப்புப் பற்றி திருஞான சம்பந்தப் பெருமான் தனது தேவாரப் பாடலில் குறிப்பிடும் போது.

“மைப்பூசும் ஒண்கண் மட நல்லார் மாமயிலைக்
கைப்பூசும் நிற்றான் பாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒன்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்”

எனக் குறிப்பிடுகின்றார்.

இத்தகு சிறப்புக்குரிய தைப்பூச நன்னாளிலே விரதம் அனுட்டிப்பதன் ஊடாக இம்மை மறுமை இன்பங்களினை பெற்று உய்யலாம் எனக் குறிப்பிடப்படுகின்றது. இவ் விரதமானது அனுட்டிக்கப்படுகின்ற முறைமையை நோக்கும் போது அதிகாலை துயில் எழும்பி புனித நீராடி ஆசாரத்தடன் ஆலய தரிசனம் செய்தல் வேண்டும். காலை உணவை விடுத்து நண்பகல் வேளையில் புது நெல்லரிசிச் சாதம் உட்கொள்ள வேண்டும். இரவு வேளையில் பலகாரம் போன்ற உணவுகளை உண்ணலாம்.

இந்த நன்னாளில் புது நெல்லெடுத்து எம்பெருமானுக்கு பிரசாதம் செய்து நிவேதித்தல் இந்நாளுக்குரிய சிறப்பம்சமாகும் இந் நிகழ்வினை எமது ஆன்றோர்கள் புதிரெடுத்தல், புதிருண்ணல் என்று அழைப்பார்கள்.

தைப்பூச நன்னாளிலே விரதமனுட்டித்து புண்ணிய நதிகளிலே நீராடினால் பாவம் நீங்கி மிகுந்த நற்பயன் கிட்டும் என்பார்கள். தைப்பூச நாளிலே அத்தினத்தினை விசேட நாளாகக் கொண்டு ஏடு தொடக்கல், புதிரெடுத்தல், புதிதுண்ணல், பெண் குழந்தைகளுக்குக் காது குத்துதல், மூக்குக் குத்துதல் போன்ற நற்காரியங்களில் ஈடுபடுகின்றார்கள்.

இத் தைப்பூச தினமானது எமது பிரதேசத்து முருகன் ஆலயங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றமை சிறப்பம்சமாகும். இத்தினத்திலே விரதமிருந்து எம் பெருமானாகிய இறை பரம்பொருளினை வணங்கி வாழ்வின் சுகங்களைப் பெற்றுக் கொள்வோமாக.

சைவப்புலவர் சைவசித்தாந்தபண்டிதர்,
உபசெயலாளர், அகில இலங்கை
சைவப்புலவர் சங்கம்.

சூரியகாந்தி



# தலைமைகளும் தமிழர்களும்

ம.கணபதிப்பிள்ளை
அச்சுவேலி

தமிழ்மொழியில் பலசொற்றொடர்கள் இருக்கின்றன. அந்தத் தொடர்கள் ஒவ்வொன்றும் பட்டறிவால் ஏற்பட்ட அனுபவஉண்மைகளைத்தத்துவங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. அவற்றுள் ஒன்று அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பதாகும். இஃது ஒரு தலைமைத்துவத்தின் முக்கியத்தை அதனது பெறுமதியை அதனது வழி நடத்தலை புடம்போட்டுக் காட்டுகின்றன.

இலங்கை ஒரு சிங்கள நாடு; இந்த நாட்டில் மற்றைய இனங்களும் வாழலாம் என்பது சிங்களத் தலைமைகளின் உளக்கிடக்கையாகும். மனித உரிமை, மனித நீதி என்ற ஆயுதங்களை உலகம் கையில் எடுத்ததாலேயே சிங்களத் தலைமைகளுள் சிலர் சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிப் பேசுகின்றார்கள். அரசு மீதுள்ள உலகத்தின் பிடி சிறுபான்மையினமான எங்களுக்குக் கிடைத்த அரிய பெரிய வாய்ப்பாகும். எமது ஒற்றுமையின் உறுதிப்பாட்டைத் தக்க வைப்பதன் மூலம் இழந்த உரிமைகளை மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுத்து எதிர்காலச் சந்ததியின் கையில் ஒப்படைக்க இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களாகிய நாம் கொண்ட உறுதிப்பாட்டில் இருந்தும் சிறிதேனும் நம்பிக்கையைத் தளர விடக்கூடாது. கூட்டமைப்பில் நம்பிக்கை வைப்பதா? அல்லது பேரவையின் நம்பிக்கை கொள்வதா? என்று அங்கலாய்க்க வேண்டாம். காலம் கனிந்துவிட்டது. அறுபதாண்டுப் பிரச்சினைகளின் மூலம் கண்டறியப்பட்டுவிட்டது. சிறுபான்மையினரின் முக்கியத்துவமும் பெரும்பான்மையோரால் உணரப்பட்டுவிட்டது. எங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு இன்றேல் நல்லாட்சியும் இல்லை. இலங்கையில் அமைதியும்இல்லை என்பது வெள்ளிடைமலை என்பது உறுதியாச்சு.

இலங்கை சுதந்திரம் அடைந்த கையோடு, தோன்றிய தலைமைத்துவத்தின் கையில் நாமிருக்கிறோம். சிங்களத் தலைமைத்துவம் சுதந்திரம் அடைந்த கையோடு தமிழர்களை ஒடுக்கும் வேலைத்திட்டங்களில் இறங்கிவிட்ட வேளையிலேயே வேலைத்திட்டங்களை அவ்வப்போது சுட்டிக்காட்டி எதிர்த்தும் தடுத்தும் குரல் கொடுத்தும் போராடியும் அடியுதைபட்டும் சிறையிலிருந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டும் இன்றுவரை கொண்ட இலட்சியப் பாதையில் தடம் பதித்து வீறுநடைபோடும் தலைமைத்துவம் இன்றையது. இன்றைய தலைமுறையினர் கடந்த கால வரலாற்றைத் திரும்பிப் பார்க்க வேண்டும்; அறிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் இன்றையதலைமைத்துவத்தின்பெருமையும்அருமையும் தெரியவரும்.

பிரிந்தும் பிளவுபட்டும் இருந்துவந்த வடகிழக்கை ஓரணியாக்கிய தலைமைத்துவம் எது?

பெரும்பான்மை வீதத்தைக் கொண்ட சிங்களத் தலைமைத்துவத்தை ஒரு குழுமத்தைச் சேர்ந்த சிறுபான்மையினத்தவர்களாகிய நாம் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதும் நிலைநாட்டுவதும் சிரமத்தின் மேல் சிரமம் என்பதைத் தமிழ் மக்களாகிய நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒன்றுபட்டு ஓரணியாய் நின்றால்தான் எதையும் சாதிக்கலாம் என்பதையும் அறிய வேண்டும்.

இன்று ஏற்பட்டுள்ள ஒற்றுமையைக் கட்டிக்காக்க வேண்டும். அதுவே எமது பெரிய பொறுப்பு ஆகும்.

இலங்கையின் அரசியல் போக்கையும் செயற்பாடுகளைப் பற்றியும் உலகம் நன்கறிந்து விட்டது. சிங்களத் தலைமைகள் எங்களை ஏமாற்றினார்கள், போக்குக் காட்டினார்கள் அதைப்போல் அவர்களால் உலகத்தை ஏமாற்ற முடியாது. இலங்கை அரசின் நீதிக்கு மாறான ஜனநாயகத்துக்கு மாறான செயற்பாடுகளின் ஆவணங்கள் உலகத்தின் கையில் இருக்கின்றது. அதை மறுக்கவோ மறைக்கவோ இலங்கை அரசால் முடியாது.

போர்க்குற்ற விசாரணை வேண்டும்;பொறுப்புக்கூறவேண்டும்என்ற உலகத்தின் கடும்பிடி இலங்கை அரசின் விடாப்பிடியான வேண்டுகோள்களுக்கும் உறுதிமொழிகளுக்கும் அமைவாகதளர்த்தப்பட்டிருக்கின்றது என்பதுவே உண்மையாகும்.

> எமது ஒற்றுமையின் உறுதிப்பாட்டைத் தக்க வைப்பதன் மூலம் இழந்த உரிமைகளை மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுத்து எதிர் காலச் சந்ததியின் கையில் ஒப்படைக்க இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உலகஅதிகாரிகள்அடிக்கடிஇலங்கை வருகிறார்கள். எங்கள் தலைமைகளோடு பேசுகிறார்கள். அரசோடு ஒத்துப் போங்கள், உங்களது துன்பதுயரங்களை நாமறிவோம். என்று கூறிவிட்டுச் செல்கின்றார்கள்- இதனது உள்பொருள் என்ன? பின்னணியில் நாம் இருக்கிறோம்; கவனித்துக் கொள்வோம் என்பதே!

இலங்கை அரசின் போக்கிலே அதிருப்தியடைந்த வல்லாதிக்க நாடுகள் அதனைத் தம் வழிக்குக் கொண்டு வரவே போர்க் குற்ற விசாரணையை உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டி வலுவடையச் செய்தது.

இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மற்றும் வல்லாதிக்க நாடுகளின் நோக்கத்தை இலகுவாக்கி விட்டது. இன்றைய நிலையில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உலக நாடுகளுக்கு ஏற்பட்டு விட்டது. அதற்கான இராஜதந்திர காய் நகர்த்தலில் அது ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் காய் நகர்த்தலுக்கமையக் கூட்டமைப்பும் தமது இலக்கை அடைய காய்களை நகர்த்த வேண்டியிருக்கிறது.

இந்த இராஜதந்திர நகர்வுகளைப் புரிந்து கொள்ளாத கூட்டமைப்புக்கு எதிரான அணியினர் கூட்டமைப்பைப் பார்த்து நையாண்டி செய்கின்றனர். அவர்களிடம் திட்டம் எதுவுமில்லை. எதை வைத்து ஏதைப் பேச இருக்கிறார்கள் என்றெல்லாம் கிண்டல் செய்கிறார்கள். 1958 ஆம் ஆண்டு தொடக்கம் எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு எது? என்று சிங்களத்தலைமைகளுடன் நேரடியாகப் பேசப்பட்ட எல்லாம் ஆவணப்படுத்தப் பட்டுள்ளனவே. சந்திரிகா அம்மையார் காலத்தில் நீலன் திருச்செல்வத்தால் தயாரிக்கப்பட்ட வரைவைப் பற்றி அன்றும் புகழ்ந்தும் பாராட்டியும் பேசப்பட்டதே!

சில விடயங்களைப் பகிரங்கப்படுத்தக்கூடாது. அப்படிப் பகிரங்கப்படுத்தி வியாக்கியானம் கொடுக்கப்போய் அந்த வியாக்கியாணங்களைக் கையில் எடுத்த இனவாதிகள் அதைக்கொண்டு சிங்களச் சமூகத்தை அணிதிரட்டிப் பண்டாசெல்வா உடன்படிக்கையைச் சீரழித்த வரலாற்றை இந்த அணியினர் அறியாததேனோ?

1948 ஆம் ஆண்டு தொடக்கம் மாறி மாறி ஆட்சிப் பீடமேறிய சிங்கள அரசுகளுக்கு ஒத்தாசை புரிந்து வரும் தமிழ்த் தலைமைகள் மரபு இற்றைநாள் வரை தொடர்கதையாய் இருக்கின்றதே!

இஃது தமிழினத்தின் சாபக்கேடா! அல்லது விதியா?

உரிமைக்குக் குரல் கொடுக்கும் இந்த வேளையில் அதற்காகத் தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டிருக்கும் நேரத்திலே எதிர்தலைமையொன்று தமிழினத்துக்கு அவசியம்தானா? அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்ட கதையாக எம்மினத்தின் தலைவிதி அமைவதா?

தமிழினமே! சிந்தைகொள்மின்



> மக்கள் தமது உறவுகள் இருக்கிறார்களா? இல்லையா? என்று தெரியாத நிலையில் அவர்களுக்காக அலைந்து கொண்டிருந்த போது விசாரணைக்கு வந்த ஆணைக் குழுவினர் மரண அத்தாட்சிக் கடிதம் தரப்படும் எனக் கூறி அவர்களை அதிர்ச்சிக் குள்ளாக்கியதுடன் ஆத்திரப் படவும் வைத்துள்ளனர்.

# காணாமற் போனவர்கள் குறித்து என்ன சொல்லப் போகிறார்கள்?

வந்தியத்தேவர்

போர் முடிவடைந்த பின்னரும் தமிழ் மக்களின் மீதான அரசினதும் படையினரதும் அராஜக நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே இருந்தது. போராளிக்குழுக்களில் இருந்தவர்கள் என்றில்லாமல் தாங்கள் விரும்பியபடி, விரும்பிய நேரங்களில் குடியிருப்புக்களின் கதவைத்தட்டி தமிழ் மக்களை குறிப்பாக தமிழ் இளைஞர், யுவதிகளை விசாரணை என்ற பெயரில் படையினர் அழைத்துச் சென்று இன்று வரை அவர்கள் மீளவும் திரும்பாதவர்களாகிக் காணாமற் போனவர்கள் என்ற பதத்துக்கு உள்ளாகி விட்டனர். அத்துடன் வீடுகளுக்கு வந்து பெற்றோர்கள் உறவினர்களிடம் விசாரித்துவிட்டு விடுகிறோம் என்று சொல்லி அவர்களுக்கு முன்னால் இராணுவத்தினரால் அழைத்துச்செல்லப்பட்டவர்கள் கூட இன்று பெற்றோர், உறவினர்களால் தேடப்படுபவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். தொலைந்து போன தங்கள் உறவுகளைத்தேடாத சொந்தங்கள் என்று இன்று இங்கு எந்த ஒரு தமிழ்க் குடும்பமும் இல்லை எனக் கூறுமளவுக்கு ஏகப்பட்ட தமிழர்கள் காணாமற் போயுள்ளனர். அத்துடன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் மதிநுட்பம் மிகுந்த வெள்ளை வான் கடத்தலில் மாயமாகி விட்டவர்கள் என வேறு கணிசமான தமிழர்கள் உளர். இவர்களை எல்லாம் கண்டுபிடித்து மீட்டுத்தருமாறு தமிழ் மக்கள் நெடுநாளாகப் போராட்டங்களையும், கோரிக்கைகளையும் அரசு தலைவரிடமும் அதிகாரிகளிடமும் விடுத்து இருந்தும் கூட அரசு அதற்குச் செவிசாய்ப்பதாக இல்லை. இதுகுறித்து மக்களின் நெருக்குதல்களால் சினமடைந்த அரசு வேறு வழிஇன்றி காணாமற் போனோர் குறித்த விசாரணைக் குழுவை நியமித்து கண்துடைப்பு விசாரணைகளையும் முன்னெடுத்து வந்துள்ளது.

எனினும் அவர்கள் கண்டுபிடிக்க முடியாத காணாமற்போனவர்களாகி விட்டனர். இன்று வரை தொலைந்து போன உறவுகளைத் திருப்பித் தரும்படி மக்கள் வலியுறுத்தியே வந்து கொண்டிருக்கின்றனர். காணாமற் போனோர் தொடர்பாக போலிக்கு ஓர் ஆணைக்குழுவை அமைத்து விசாரணை என்ற பெயரில் ஒருசில கேள்விகளைச் சாட்சியம் அளித்தவர்களிடம் கேட்டுவிட்டு சர்வதேசத்துக்கும் தன்னை ஒரு நீதியான அரசாகக் காட்டும் வெளிச் சத்தையே போட்டுக் கொண்டிருந்தது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட போராட்டம், கடை அடைப்பு என்று மக்களால் நடத்தப்படும்போது அவர்களுக்காகப் பரிந்து பேசுவதும் பின்னர் அந்த விடயத்தை முழுமையாக மறந்து விடுவதுமாகவே இருந்து வந்துள்ளனர். மக்கள் தமது உறவுகள் இருக்கிறார்களா? இல்லையா? என்று தெரியாத நிலையில் அவர்களுக்காக அலைந்து கொண்டிருந்த போதுவிசாரணைக்குவந்த ஆணைக் குழுவினர் மரண அத்தாட்சிக் கடிதம் தரப்படும் எனக் கூறி அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன் ஆத்திரப் படவும் வைத்துள்ளனர்.

காணாமற் போனவர்கள் விடயம் தொடர்பாக நல்லாட்சி எனக் கூறப்படும் மைத்திரி - ரணில் கூட்டு அரசும் மக்களின் எதிர்பார்ப்புக் குறித்துக் கைவிரித்த நிலையிலேயே இருந்துள்ளது. அரசின் இந்த நிலைப்பாட்டுக்கு ஒத்து ஊதுபவர்களாகவே தமிழ் அரசியல் வாதிகளும் மௌனம் சாதித்து வந்தனர். நுணலும் தன் வாயால்கெடும்என்பதைப் போலயாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேசியப் பொங்கல் விழாவில் காணாமற் போனவர்கள் உயிருடன் இல்லை. இறந்து விட்டார்கள் என்ற உண்மையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாய்தடுமாறிக் கொட்டிவிட்டார்.

இதனால் தமது உறவினர்களைக் கொன்றது யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது. விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டவர்கள் கொலைக்கு உள்ளாயினர் என்பதால் அதனைச்செய்தது யார்? முன்னைய அரசுத்தலைமைகளா? அல்லது படையினரா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் பலமாக எழுந்துள்ளது. இது விடயத்தில் மௌனம் காட்டிய தமிழ்ப்பிரதிநிதிகளுக்கு பிரதமரின் உழறல் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதால் அவர்கள் இப்போது இராணுவத்தினரிடம் உறவினர்களால் நேரடியாகக் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று கேள்வி எழுப்பி உள்ளனர்.


இராணுவத்தினரிடம் பலர் நேரடியாகவே கையளிக்கப்பட்டுள்ளனர். அதற்கான அத்தாட்சிகளும் அவர்களிடம் உண்டு. இது குறித்து காணாமற்போனோருக்கான விசாரணைகள் குறித்த ஆணைக்குழுவிலும் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். பிரதமர் வெளியிட்ட உண்மை குறித்து மக்களுக்கு அறியத்தர வேண்டியது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு குறிப்பாக அமைச்சர்களான விஜயகலா மகேஸ்வரனுக்கும் சுவாமிநாதனுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் உண்டு. வடக்கு மாகாண முதல்வர் என்பதுடன் பொங்கல் விழாவில் நேரடியாகக் கலந்து கொண்டுபழைய கோபதாபங்களை மறந்து பிரதமருடன் ஐக்கியமாகி விட்டதாகக் காட்டிக் கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும் உண்மையை வெளிக்கொணரும் விடயத்தில் பங்குண்டு. தமிழ் மக்களைக் கொன்றொழித்தது யார்? அரசா? அல்லது முன்னாள் பாதுகாப்புச் செயலாளரா? அல்லது படையினரா? அல்லதுமூன்றுபகுதியினருமேஇணைந்து இடம்பெற்றதா? என்பதை பொது மக்களுக்குத் தெரியப்படுத்துவார்களா? அன்றேல் காணாமற்போனோருக்கான விசாரணை ஆணைக்குழு கேட்டுக் கொண்டது போன்று மரணச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சமாதானம் சொல்லப் போகிறார்களா? உரியவர்களுக்கான தண்டனைகள் வழங்கக் கோருவதுடன் கணிசமான நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தப் போகிறார்களா? என்ன சொல்லப்போகிறார்கள்?

# ஐயர் கடைத் தோசை

மிருசுவில் தமிழ்த்தாசன்

மாலை நேரத்து வியாபாரம் வழமை போல் நன்றாகக் களைகட்டியிருந்தது. ஐயர் கடையின் தோசைப் பிரியர்களும் அன்றாட வாடிக்கையாளர்களும் நீயோ நானோ எனப் போட்டிபோட்டுஐயரின் கடையை ஈக்களாக மொய்த்துக்கொண்டிருந்தனர். இன்று மட்டுமல்ல எப்போதுமே இங்கே இப்படித்தான். இத்தனை காலமாய் மனதில் தேக்கி வைத்திருந்த ஆசையொன்று இன்றுதான் நிறைவேறப் போகின்றது என்பதில் மட்டில்லாத மகிழ்ச்சி எனக்கு. எட உப்பிடியொரு தோசையை நான் வாழ்க்கையிலை சாப்பிட்டதேயில்லை. என்ன ருசி! என்ன வாசம்! தோசை மட்டுமே! அதுக்குத் தோதான பொரிச்ச மிளகாய்ச் சம்பல், பருப்பு, தக்காளி எல்லாம் சேர்த்த அருமையான சாம்பார். மூண்டு தோசையும் ஓர் உளுந்து வடையும் நூறு ரூபா தானே! ஒரு நாளைக்குச் சாப்பிட்டுப் பாரெடாப்பா! அப்பதான் உனக்கு ஐயர் கடைத் தோசையைப் பற்றி விளங்கும். அன்றொரு நாள் அரிசிக்கடை அம்பலவாணி இப்படிப் புழுகித் தள்ளினான். அவன் சாப்பிட்டால் சாப்பிட்டு விட்டுப் போகவேண்டியதுதானே! அதை வந்து என்னிடம் புழுகி சும்மாவிருந்த எனக்கும் ஐயர் கடைத் தோசையில் ஒரு ஆசையை உண்டாக்கிவிட்டான். நூறு ரூபா அவனுக்கு ஒரு சிறிய தொகையாக இருக்கலாம். ஆனால் எனக்கு...! அன்றாடம் கூலி வேலை செய்து எனது பெரிய குடும்பத்தைக் காப்பாற்றும் ஒரு தினக் கூலிக்கு நூறு ரூபா ஒன்றும் சாதாரணமானதல்ல. எனக்கும் தெரியும் ஐயர் கடைத் தோசையைப் பற்றி ஊரவர்கள் அனைவரும் புகழ்ந்து பேசுவதை. இருந்தும் அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாது என் பாட்டுக்கு இருந்த எனக்கு அரிசிக் கடை அம்பலவாணியின் புழுகு ஒரு வித ஆசையையும் அலங்கலாய்ப்பையும் ஏற்படுத்தி விட்டது என்பது உண்மையே! பரமானந்த ஐயர், குலத்தில் ஒரு பிராமணனாக இருந்தாலும் அவரது குலத் தொழிலான பூசை செய்வதில் அவருக்கு ஆசை கிடையாது. அவருடைய ஆசை எல்லாம் தோசை வியாபாரத்தின் மீதே! ஊரிலே தனது வீட்டுக்கருகில் ஒரு சிறிய உணவகத்தை அமைத்துத் தோசை யுடன், இட்லி, உப்புமா, பூரி, வடை என்று வகை வகையான சிற்றுண்டிகளைத் தயாரித்து விற்பனை செய்து வந்தார். எத்தனை வகை வகையான உணவு வகைகளிருந்தாலும் அவருடைய தோசைக்கே பெரும் மவுசு உண்டாகி யிருந்தது. பொதுவாக எல்லோருமே தோசைக்கடை என்றே அழைப்பர் அவரின் உணவகத்தை. நீண்ட நாள்களாக வேலை ஒன்றும் கிடைக்காது நாயாகப் பேயாக அலைந்து திரிந்த எனக்கு இன்றுதான் உருப்படியாக ஒரு கூலி வேலை கிடைத்திருந்தது. சங்கக்கடைச் சண்முகத்தாரின் புண்ணியத்தால் ஓர் ஆயிரம் ரூபாத்தாளைக் கைப்பற்றிக் கொண்ட நான், வீட்டுக்குத் தேவையான அரிசி மரக்கறி போன்ற முக்கியமான பொருள்களெல்லாவற்றையும் வாங்கியாயிற்று. எல்லாம் திருப்தி. அப்போது தான் கவனித்தேன். என்றுமில்லாதவாறு ஒரு நூறு ரூபா நோட்டு சட்டைப் பையில் மீதியாகக் காணப்பட்டது. புதுமையோ புதுமை! ஐயர் கடைத்தோசையின் நினைவு வந்துவிட வெற்றி நடைபோட்டு இங்கே வந்து விட்டேன். இன்றுதான் அந்தத் தோசையைத் தின்று அனுபவிப்பதற்கு எனக்கும் திருவருள் பாலித்திருக்கின்றது. அந்த நூறு ரூபாவும் பத்திரமாகச் சட்டைப் பையிலிருக்கின்றதா என்று எதற்கும் எனது சட்டைப் பையைத் தட்டிப் பார்த்தேன். நல்ல வேளை அதை யாருமே தட்டிக்கொண்டு போய்விடவில்லை. சந்தோசம். அப்படியென்றால் தோசைக்கு ஒருவித தடங்கல்களும் உண்டாகப் போவதில்லை. அந்தப் பெரிய நெரிசல் கூட்டத் தில் எனக்கும் ஒருவாறு இருக்கையொன்று கிடைத்துத் தான் விட்டது. தோசைக்கு ஓடர் கொடுத்து விட்டேன். ஆனால் அது என்னுடைய கையில் கிடைக்க எப்படியும் பத்து நிமிடங்களாவது ஆகும். அதையும் அந்த ஐயர் கடைச் சிப்பந்தி சொல்லி விட்டுக் காணாமற் போய்விட்டான். பக்கத்து மேசையிலிருப்பவர்கள் தோசையைப் பிய்த்துச் சாம்பாரில் தொட்டுச் சம்பலையும் தடவிச் சுவைத்துக் கொண்டிருந்தனர். அவர்களையும் தோசையையும் மாறி மாறி அங்கலாய்ப்புடன் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு ஆசையை அடக்க முடியவில்லை. என்னையுமறியாது இரண்டு சொட்டு எச்சில் கீழே வீழ்ந்து தெறித்தது. நல்லவேளை! எவருமே பார்த்திருக்கவில்லை. பார்த்திருந்தால் நான் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் தோசையையும் தின்னவிடாது என்னை ஓடஓட விரட்டியிருப்பார்கள். எப்படியோ எனது மேசைக்கு வந்து விட்டது தோசை. பளிச்சென்ற வெள்ளித் தட்டில் தோசைகள். அதற்கு மேல் ஓர் அழகான வடை. தட்டை ஆவலுடன் எடுத்து முதலில் தோசைகளை எண்ணிக் கணக்குச் சரிபார்த்துக் கொண்டேன். அம்பலவாணி சொன்னதுபோல் மூன்றும் சரியாகக் காணப்பட்டன. ஐயர் ஒருவித ஜில்மாலும் செய்யாது நூறு ரூபாவுக்குரிய மூன்று தோசைகளையும் வடையையும் தந்து விட்டார். இனிக் காசு கொடுப்பது என் கடமை. கோதுமைமாத் தோசையாக இருந்தாலும் மிக மென்மையாக மல்லிகைப் பூப்போல இதமாக விருந்தது. தோசையின் வாசனையுடன் போட்டி போட்டுச் சம்பலும் சாம்பாரும் எழுந்து நின்று வீராப்புப் பேசின. தோசையைப் பிய்த்து மளமளவெனச் சாப்பிட்டு முடித்துவிட்டுக் காசு கொடுப்பதற்குச் சட்டைப் பைக்குள் கையை வைத்துத் துளாவி அதை வெளியில் எடுத்தேன். நூறு ரூபா கொடுக்க வேண்டும். அது ஏற்கனவே தெரிந்த சங்கதிதான். அது தான் கணக்காக நூறு ரூபாவுடன் வந்திருந்தேன். இதென்னடா இது! நூறு ரூபா எப்பிடி இருபதாய் மாறினது! சட்டைப் பொக்கெற்றில் நூறுதானே கிடந்தது. இப்ப இருபது தானே கிடக்குது! என்ன நடந்தது! காசு துலையவுமில்லை. அப்படியே இருக்குது. அப்ப என்ன மந்திரமோ தந்திரமோ! ஓகோ! இருபது ரூபாவும் நூறு ரூபாவும் கிட்டத்தட்ட ஒரேமாதிரித்தான். நான்தான் கோதாரி! இருபதை நூறு எண்டு பிழையாய் விளங்கிப்போட்டன். இப்ப என்ன செய்யுறது..! கடவுளே ஏய் காசை எடப்பா! மூக்குமுட்டச் சாப்பிட்டிட்டு என்ன பேய்க்காட்டுறாய்.ஐயர் இப்படி மூர்க்கமாகக் கதைப்பார் என்று நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை. கடையிலி ருந்தவர்களனைவரும் என்னை ஏளனமாகப் பார்த்தார்கள். ஐயர் சுடு சாம்பார் போலக் கொதித்துக் கொண்டிருந்தார். ஏய்! காசைச் சரியாய்ப்பாராமல் ஏனப்பா சாப்பிட்டனி! இப்ப என்ன செய்யப்போறாய்! விறகும் கொத்த வேண்டாம். காஸ் அடுப்பிலை தான் சமைக்கிறனாங்கள். உளுந் தரைக்கவும் தேவையில்லை. கிறைன் டரிலைதான் அரைக்கிறம். பேய்க் கதையை விட்டிட்டுக் காசை எடு! மீண்டும் ஐயர் என்னைப் பயமுறுத்திக் கொண்டிருக்க சாப்பிட்ட தோசை கணப்பொழுதில் சீரணமாகி விட்டது. கடையில் நின்றவர்களைவிட வீதியில் போவோர் வருவோர் எல்லோருமாக வந்து நின்று என்னை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். சற்றுமுன் நான் ஐயரின் தோசையைப் பிய்த்துத் தின்றேன். இப்போது அதே கடையில் வெட்கம் என்னைப் பிய்த்துத் தின்று கொண்டிருந்தது. சே! ஐயர் சொல்லுறதும் சரிதானே! பொக்கெற்றுக்கை கிடந்த காசை வெளியிலை எடுத்து வடிவாய்ப் பார்த்திட்டுச் சாப்பிட்டிருந்தால் இப்ப இப்படியொரு அவமானம் வந்திருக்காதே! பொக்கெற்றிலை வைச்சுப் பாக்க அந்தப் புதுநோட்டு சரியாய் நூறு ரூபா மாதிரித்தானே கிடந்தது. ஆர் நினைச்சது இப்பிடியொரு பரிசுகேடு வருமெண்டு.. மனதுக்குள் அழுதேன். வாய் விட்டழ வெட்கம் தடுத்தது. வாயில் வந்தவைகளை எல்லாம் வார்த்தைகளாக்கிச் சன்னதமாடிக் கொண்டிருந்தார் ஐயர். எனக்கிருந்த கொஞ்ச மரியாதையும் என்னை விட்டுப் பறந்தோடிக் கொண்டிருந்தது.கடவுளே முருகா! நான் என்ன ஏமாத்துக்காரனே! இருபதை நூறெண்டு நினைச்சிட்டன். வேறை என்ன! உந்தப் பாழ்பட்ட ஐயர் இதைப் பெரிசுபடுத்தாமல் என்னை விட்டிருந்தாரெண்டால் நாளைக்கோ நாளையண்டைக்கோ அந்த எண்பதையும் நான் கொண்டு வந்து குடுப்பன்தானே! ஊருக்கை இருக்கிற என்னை இப்படி நம்பாமல் மரியாதை கெடுத்துக் கொண்டிருக்குதே இந்த மனிசன் முருகா! பாரய்யா! என்ரை நிலைமையை. ஒரு வாய் தோசைக்கு ஆசைப்பட்டு இப்பிடியொரு கேவலமாய்ப் போய்விட்டனே! முருகா! வடிவேலா! முருகனை நினைத்து மனம் நொந்து கொண்டிருக்க எங்கேயிருந்து வந்தானோ என்னுடைய நண்பன் பாலவடிவேல். இவனும் முருகனின் பெயருக்குச் சொந்தக்காரன்தான். முருகக் கடவுள் தான் இந்தப்

(29 ஆம் பக்கம் பார்க்க)



“ஏய்! காசைச் சரியாய்ப் பாராமல் ஏனப்பா சாப்பிட்டனி! இப்ப என்ன செய்யப் போறாய்! விறகும்-கொத்த வேண்டாம். காஸ் அடுப்பிலை தான் சமைக்கிறனாங்கள். உளுந் தரைக்கவும் தேவையில்லை. கிறைன் டரிலைதான் அரைக்கிறம். பேய்க் கதையை விட்டிட்டுக் காசை எடு! மீண்டும் ஐயர் என்னைப் பயமுறுத்திக் கொண்டிருக்க சாப்பிட்ட தோசை கணப்பொழுதில் சீரணமாகி விட்டது. சற்றுமுன் நான் ஐயரின் தோசையைப் பிய்த்துத் தின்றேன். இப்போது அதே கடையில் வெட்கம் என்னைப் பிய்த்துத் தின்று கொண்டிருந்தது.”



# செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும் 15

# பத்திரிகைச் சுதந்திரம் முன்பு இருந்தவாறு!

ரம்யன்

முன்னைய அரசு பதவியிலிருந்த காலத்தில் பத்திரிகைச்சுதந்திரம் எவ்வாறு இருந்தது என்பது பற்றி அறிய வேண்டுமானால் பத்திரிகையாளர்கள் மீதும் பத்திரிகை நிறுவனங்க்ள் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், கொலைச் சம்பவங்கள் குறித்த வழக்குகளின் எண்ணிக் கையைக் கவனித்தால் புரிந்து கொள்ளலாம். எனவே அந்தக்காலத்தில் அரசு துறைப் பத்திரிகைகள் எவ்வாறு செயற் பட்டிருக்கும் என்பதையும் ஊகித்துக்கொள் ளலாம்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் வந்து கலந்து கொண்டிருந்த பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ச காலத்தில் ஊடகங்கள் செயற்பட்டவிதம் குறித்துக் கருத்தொன்றை வெளியிட்டிருந்தார். அரசமைப்புத்திருத்தம் அல்லது புதிய அரசமைப்புத் தொடர்பான முயற்சிகளில் இப்போதைய அரசு எடுத்துவரும் முயற்சிகளை இப்போது கண்டிப்பவர்கள் அந்தக்காலத்தில் குறிப்பாக 18 ஆவது அரசமைப்புத்திருத்தம் கொண்டு வரப்பட்ட போது எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதைக் குத்தலாகக் குறிப்பிடுவதாகவே அவர் கருத்து அமைந்திருந்தது. அதுபற்றி கட்டுரையாளர் ரங்க ஜயசூரிய ஆங்கிலப்பத்திரிகை ஒன்றில் எழுதியுள்ளார். அதன் சில முக்கிய பகுதிகள் வரு மாறு:-

> தகவல் அறியும் உரிமையை மக்களுக்கு வழங்குவதற்கான சட்ட வரைவொன்றை இப்போதைய அரசு விரைவில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பது வரவேற்கத் தக்கது.




ராஜபக்ச ஆட்சியின் போது ஊடகங்களின் செயற்பாட்டைப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க கண்டித்திருக்கிறார். இன்னொரு வகையில் சொல்வதானால், வன்புணர்வில் பாதிக்கப்பட்டவரைக் குறை கூறுவது போல் இருந்தது அது. 18 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்ட நேரத்தில் பொருள்களை வாங்குவதற்காக ஊடகங்கள் கடைகளுக்குச் சென்றிருந்தன என்று கிண்டலாகக் கண்டித்த பிரதமர் அரசமைப்புக்கான செயற்பாடுகளை ஊடகங்கள் கெடுத்து விட முயலக்கூடாது என்றும் குறிப்பிட்டிருந்தார். 18 ஆவது திருத்தத்தை, அரசு சார்ந்தவைகளை விட்டால் ஏனைய ஊடகங்கள் ஆதரித்திருந்தன என்பதற்கு அதிகமான ஆதாரம் கிடையாது. ஒரு வேளை அதிக வாசகர்களைக்கொண்ட சிங்கள ஊடகங்கள் இன்னும் சற்று அதிகமான எதிர்ப்பைக் காட்டியிருக்க முடியும். அவ்வாறு செய்திருந்தால் இன்னும் சில அல்லது அதிக பத்திரிகையாளர்கள் வெள்ளை வான் கடத்தலுக்கு உள்ளாகி இருப்பார்கள்.



அந்தக்காலத்தில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித்தலைவராக இருந்து அனுபவித்த பாதுகாப்பு வசதிகள் பத்திரிகையாளர்களுக்கு இருக்கவில்லை. அச்சுறுத்தல்கள், கடத்தப்படுதல், அரசுத் தூண்டுதலில் மேற்பதவிகளில் இருந்து தூக்கப்படுதல் போன்ற நிலைமைகளில் இருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கவில்லை. ராஜபக்ச அடிக்கடி பத்திரிகை ஆசிரியர்களை அழைத்து காலை உணவாக சுவையான அப்பங்களைப்பகிர்ந்து கொண்டு உறவாடி இருந்தாலும், இவை இனிப்புப் பூசப்பட்ட ஆனால் எந்நேரத்திலும் ஆபத்தை விளைவிக்கும்படியான நிகழ்வுகளாகவே இருந்துள்ளன. பத்திரிகைக் கருத்துக்களை ராஜபக்ச ஓரளவு சகித்துக்கொள்ளும் தன்மையைக்கொண்டிருந்தார்.தம்மை விமர்சிக்கும் படியும் நிருபர்களிடம் அவர் கூறியதுண்டு. ஆனால், அவருடைய இளைய சகோதரர் கோத்தபாயவும் ராஜபக்சவின் முதற்குடும்பமும் அப்படியானவர்களாய் இருக்கவில்லை.

பொத்தல ஜயந்த - உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் முன்னாள் தலைவரின் பாதுகாப்புவிடயங்கள் குறித்து பத்திரிகையாளர்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிக்கொண்டிருந்த வேளையிலேயே அவர் கடத்தப்பட்டிருந்தார். ராஜபக்சவுக்கே விடயங்கள் சரியாகத் தெரியாமல் இருந்தன. முன்னைய அரசைக் கண்டிப்பதில் துணிச்சல் காட்டிய பத்திரிகையாளர்கள் தடுக்கப்பட்டார்கள். இவை சில சமயம் பத்திரிகை ஆசிரியர்களாலேயே மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் ஆட்சியாளர்களால் விலைக்கு வாங்கப்பட்டிருந்தனர். அந்த வழிமுறையைப் பின்பற்ற மறுத்தவர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளானார்கள். சிலர் தமது ஊடக சொத்துக்களை விற்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டார்கள்.

இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவராய் இருந்த விக்கிரம சிங்கவினால் பத்திரிகையாளர்களைப் பாதுகாக்க அதிகமாக ஏதும் செய்யக்கூடியதாய் இருக்கவில்லை.

ஆட்சியை பத்திரிகையாளர்கள் தான் கவிழ்க்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். அது அவர் குற்றமல்ல. மக்களால் தெரிவு செய்யப்பட்ட சர்வாதிகாரம் ஒன்று சகல விடயங்களிலும் வியாபித்து நிலை கொண்டிருந்ததன் விளைவு அது.

இந்த நிலைமையில்தான் ஆட்சியில் இருந்து விலகி ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட சிறிசேன முன்வந்தார். அவரே கூறியிருப்பது போல, தமது மற்றும் தம் குடும்ப உறுப்பினர்களின் உயிர்களையும் இதற்காக அவர் பணயம் வைத்திருந்தார்.

விக்கிரம சிங்க உண்மையில் ஊடக சுதந்திரம் பற்றி அக்கறை கொண்டிருந்தால் அரச ஊடகங்களில் இருந்து தொடங்கி எவ்வளவோ பணிகளை முன்னெடுக்க முடியும். அரசு சொந்தமாக அல்லது தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களை பி.பி.சி. போன்று ஒரு தன்னாட்சிக் கட்டமைப்புக்குள் கொண்டுவந்து சுதந்திரமாக இயங்கவைக்க முடியும். அரச ஊடகங்கள் ஆட்சியில் இருப்பவர்களின் தயவிலேயே செயற்பட்டு வந்துள்ளன.

சந்திரிகா குமார துங்கவின் ஆட்சியின் போது ஜே.வி.பியினர் சமர்ப்பித்த ஐந்து சுதந்திர ஆணைக்குழுக்கள் தொடர்பாக அவர்கள் முன்வைத்த ஆலோசனைகளை அந்த அரசு ஏற்றுக்கொண்டிருந்தது. ஆனால் சுதந்திர ஊடக ஆணைக்குழு தொடர்பான ஆலோசனையை நிராகரித்துவிட்டார்கள். அவ்வாறான பிரச்சினை ராஜபக்சவினருக்கு ஏற்படவில்லை. தகவலறியும் சட்டமுன் வரைவை அவர்கள் தோற்கடித்தார்கள். உலகில் அவ்வாறான ஒரு காரியத்தைச் செய்த முதல் அரசாக அவர்கள் நிலை பெற்றார்கள். பிரதமர் விக்கிரம சிங்க தாம் ஓர் அரசியல் மிதவாதிபோல் காட்டிக் கொள்கிறவராய் இருப்பதால் உண்மையிலேயே மிதவாத விழுமியங்களின்படி நடந்து கொள்கிறார் என்பதை வெளிப்படுத்த வேண்டும். இதற்கான ஒரு வழிமுறை என்னவென்றால் அரச ஊடகங்கள் இப்போது உழன்று கொண்டிருக்கும் அழுகல் நிலையிலிருந்து அவைகளை விடுவிக்க வேண்டும். சுதந்திர ஊடகத்துறைக்கு இலகுவான முறையில் அமைப்பு ரீதியிலான கட்டமைப்பை அந்த வகையில் உருவாக்க வேண்டும்.

# கை மேல் பயன் கிடைத்தது !

அரசன் ஒருவன் சகுனங்களில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர். அரண்மனைச் சோதிடர் இந்த நம்பிக்கையின் மேல் குளிர் காய்ந்து கொண்டிருந் தார். ஒரு நாள் 'அரசே, அதிகாலை எழுந்தவுடன் இரண்டு காக்கைகளை ஒன்றாகப் பார்த்தால் நாள் சிறக்கும்' என்று அரசனுக்கு நம்பிக்கை ஊட்டினார்.


மன்னன் சேவகனை அழைத்தான். காலையில் எங்காவது இரண்டு காக்கைகள் தென்பட்டால் உடனே தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான்.

அதன் பின் தினமும் பொழுது விடியும் முன்பே சேவகன் தெருவில் அலையத் தொடங்கி விடுவான்.

ஒரு நாள் அரண்மனைக்குப் பக்கத்துத் தெருவில் இரண்டு காக்கைகள் ஒன்றாக அமர்ந்திருப்பதைக் கண்டான். அடடா! நல்ல சகுனம், இன்று மன்னர் நமக்கு நிச்சயம் பதவி உயர்வு கொடுப்பார் என்று மகிழ்ச்சி மிகுதியுடன் மூச்சிரைக்க ஓடி வந்து மன்னரிடம் விவரத்தைச் சொன்னான்.

இதைக் கேட்டு துள்ளி எழுந்த மன்னன் சேவகனுடன் அந்த இடத்துக்கு ஓடினான். அதற்குள் ஒரு காக்காம் பறந்து போய் போய் விட்டது.

மன்னனுக்கு மூக்கின் மேல் கோபம் வந்து விட்டது. தளபதியை அழைத்து 'ந்தப் பொறுப் பற்ற சேவகனுக்குப் பத்து கசையடி கொடு' ன்று உத்தரவிட்டான்.



சேவகன் சிரிக்க ஆரம்பித்து விட்டான். "இடுக்கண் வருங்கால் நகுக' ' என்று படித்துப் புரிந்து வைத்திருந்தவன் போலும். மன்னனுக்கு ஆத்திரம் இன்னமும் அதிகமானது."நீ சிரித்ததற்கு சரியான காரணம் சொல்லாவிட்டால் இன்னமும் பத்து கசையடி" என்று உறுமினான்.

சேவகன் சொன்னான். "மகா மன்னரே. இன்று நான் மட்டும்தான் அதிகாலையில் இரட்டைக் காக்கைகளைப் பார்த்தேன். கை மேல் பயன் கிடைத்து விட்டது அல்லவா?" என்றான்.

மன்னருக்கு சுருக்கென்று ஏதோ உரைத்தது. சோதிடர் கூட முழி பிதுங்கி அப்படியே நின்று விட்டார்.

## வீட்டு விலங்குகள்

எங்கள் வீட்டுக் காவலன்!
எனக்கு நல்ல நண்பன்!
நாய்தான் அந்தச் சேவகன்!
வாழ் நாள் எல்லாம் உழைப்பவன்!

புல்லைத் தின்னும் பசுமாடு
பாலைக் கொடுக்கும் அன்போடு!
வேளை தவறாமல் வழிபடு
அதுவே நமது பண்பாடு!

எங்கள் வீட்டு பூனைக்குட்டி
எங்கும் சுற்றும் படுசுட்டி!
எலிகள் அதுக்கு வெல்லக்கட்டி!
எங்கள் கவலைகள் போச்சு எட்டி!

வீட்டில் வளருது வெள்ளாடு!
காட்டில் மேயுது பசியோடு!
காந்திக்குப் பிடித்தது ஆட்டுப்பாலு
ஆட்டுக்கு நீயும் அன்பைக் காட்டு!

வண்டி இழுக்கும் எருது
உண்டி கொடுக்கும் உழுது
தொண்டு புரியும் எருது
கண்டு நீயும் பழகு!

இவைகள் வீட்டு விலங்குகளே!
குறைகள் இல்லா செல்வங்களே!
அன்பை அவற்றிடம் காட்டுங்களேன்!
அவனியில் வாழும் மனிதர்களே!

## பொன்மொழிகள்

1. ஆரோக்கியம் உள்ளவனுக்கு நம்பிக்கை இருக்கும். நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாம் இருக்கும் - ஹால்டேன்
2. நம்பிக்கையே மனிதனுக்கு நேரும் எல்லா நோய்களுக்கும் ஒரே மலிவான மருந்து - கௌலி
3. நம்பிக்கை பயத்தைப் போக்கும் ஒரு சாதனம் - வில்லியம் ஜேம்ஸ்
4. ஒவ்வொரு தடவையும் விழுவது மீண்டும் எழுவதற்கே என்று நம்புங்கள் - ஷேக்ஸ்பியர்
5. பணத்தின் மீது நம்பிக்கை வைக்காதே. நம்பிக்கை மீது உன் பணத்தை வை - ஹேராம்ஸ்
6. நம்பிக்கையை பிறர் தர முடியாது. அது உள்ளத்திலேயே உற்பத்தி ஆக வேண்டும் -காந்தியடிகள்
7. நம்பிக்கை இழந்தவன் பிணத்துக்கு ஒப்பாவான் - வைட் டியர்
8. நம்பிக்கை என்பது ஒரு நாளில் உதிர்ந்து விடும் பூவாக இருந்துவிடக்கூடாது. மேலும் மேலும் மலரை உருவாக்கும் செடியாக இருக்க வேண்டும் - அரிஸ்டாட்டில்
9. நம்பிக்கைதான் ஏழையை வாழ வைக்கும் - சாணக்கியர்
10. நம்பிக்கை எண்ணற்ற எதிரிகளையும் வென்று விடும் - லாங்ஃபெல்லோ
11. சமுதாயம் என்பது மனிதர்களின் ஒற்றுமைதான் - ரூசோ
12. சிறிய வேலைகளில் அலட்சியம் காட்டுவதால்தான் நாம் பெரிய தவறுகளைச் செய்யக் கற்றுக்கொள்கிறோம். - மதாம் நெக்கேர்
13. இந்தச் சிக்கல் கடினமானது என்று சொல்லாதீர்கள். கடினமாக இல்லாவிட்டால் அது சிக்கலே இல்லை - ஃபோஷ்

## விடுகதைகள்

1. முச்சந்தியில் நிற்கும் மூன்று வண்ணக்காரன் யார்?
2. மாமியாரும் மருமகளும் உருண்டு உருண்டு விளையாடுகிறார்கள்... யார் இவர்கள்?
3. குண்டு சட்டிக்குள் முத்தும் முத்தும் குதித்துக் கூத்தாட வெள்ளையர்கள் புறப்பட...?
4. சின்னப் பெட்டிக்குள் வசிப்பவன், வெளியே வந்தவனை சீண்டினால் பிரகாசிப்பான்!
5. இவனும் அவனைப் போலத்தான்... சின்னப் பெட்டிக்குள்தான் வாழ்கிறான். ஆனால் உலகமெல்லாம் காட்டுவான் ?
6. ஏறுவான், இறங்குவான் பயிர் செழிக்க உதவுவான்...
7. இரண்டு பேர் முன்னாடி போக, இரண்டு பேர் பின்னாடி வர... பயணம் போக உதவும். இது என்ன?
8. வெப்பத்துக்கு அஞ்சாதவன், தான் சாகாமல் உள்ளே உள்ளதை ருசிக்க வைப்பான். இவன் யார்?
9. அவ்வளவு சீக்கிரம் வர மாட்டான். வந்தால் சீக்கிரம் போக மாட்டான். இவன் யார்?

விடைகள்:

| | | |
|---|---|---|
| 1. சிக்னல் விளக்கு | 2. அம்மி, குழவி | 3. நுரை, சோறு |
| 4. தீக்குச்சி | 5. இன்டர்நெட் | 6. ஏற்றம் |
| 7. மாடுகள் பூட்டிய வண்டி | 8. சோற்றுப் பானை | 9. மழை |

## வரலாற்றில் இன்றைய தினம்

1679 – இரண்டாம் சார்ள்ஸ் மன்னர் இங்கிலாந்து நாடாளுமன்றத்தைக் கலைத்தார்.
1857 – தென் ஆசியாவிலேயே முதன்மையான முழு அளவிலான கல்கத்தா பல்கலைக்கழகம் முறையாகத் தொடங்கப்பட்டது.
1924 – பாஸிஸ்ட் அல்லாத தொழிற் சங்கங்களுக்கு பெனிற்றோ முசோலினி அனுமதி மறுப்பு.
1925 – லோங் தீவுக்கு மேலாக விமானத்தில் பறந்தவாறு சூரியக் கிரகணம் சலனப் படமாக பதியப்பட்டது.
1927 – அல்பிரட் ஹிச்கொக் இயக்கிய முதற்திரைப் படமான பிளாஸர் கார்டன் இங்கிலாந்தில் திரையிடப்பட்டது.
1935 – தகரத்தில் அடைக்கப்பட்ட பியர் அமெரிக்க குருகெர் புரூவிங் நிறுவனத்தால் சந்தைக்கு விடப்பட்டது.
1939 – சிலி நிலநடுக்கத்தில் 30ஆயிரம் பேர் சாவு.
1941 – பிரித்தானியப் படைகள் அபிஸின்னியாக்குள் புகுந்தன.
1943 – ஜேர்மன் படையினரை சாகும் வரை போராடு மாறு ஹிட்லர் பணிப்பு.
1943 – ஒஸ்விச் – பிர்கெனோவில் யூத நோயாளர்கள் தாதிகள், மருத்துவர்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டனர்.
1960 – பிரான்ஸ் ஜனாதிபதி டீஹோலுக்கு எதிராக அல்ஜீரியா எழுச்சி.
1969 – லண்டன் பொருளாதாரக் கல்லூரியைச் சுற்றி இரும்புத் தடுப்பு அமைப்பதற்கு மாணவர்கள் எதிர்ப்பு.
1989 – வாய் மூலமான பாலியல் தொடர்பின் மூலம் எயிட்ஸ் பரவலடைவது முதன் முதலாக அறிக்கையிடப்பட்டது.
1993 – போலந்து நாட்டின் ஜோன் ஹெவெலியஸ் கப்பல் மூழ்கி 52 பேர் சாவு.

## ஒரு தந்தையின் கடிதம்

ஒரு தந்தை தன் மகனைத் துவக்கப் பள்ளியில் சேர்த்தார். அவர் தன் மகனுக்கு அறிவுரை சொல்லவில்லை. பள்ளி ஆசிரியருக்கு அவர் எழுதிய கடிதங்களின் சில பகுதிகள்!

தோல்வியை ஏற்றுக்கொள்ளவும், வெற்றியைக் கொண்டாடவும் என் மகனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

பொறாமையிலிருந்து அவன் விலகியே இருக்கட்டும்.

வானப்பறவைகள், தேனீக்கள், சூரியன், பசுமையான செடிகள், மலர்கள் இவற்றை ரசிக்க அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

பிறரை ஏமாற்றுவதை விட, தோற்பது கண்ணியம் என்று அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

சுய சிந்தனையில் நம்பிக்கை கொள்ளச் சொல்லுங்கள்.

மென்மையானவர்களிடம் மென்மையாகவும், உறுதியானவர்களிடம் உறுதியாகவும் நடந்து கொள்ளக் கற்றுக் கொடுங்கள்.

குற்றம் குறை கூறுபவர்களை அவன் அலட்சியப்படுத்தட்டும்.

அளவுக்கு அதிகமாய் இனிமையாகப் பேசுபவர்களிடம் அவன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தன் மனதுக்கு சரி என்று தோன்றுவதை அவன் துணிந்து நின்று போராடி நிறைவேற்ற அவனைப் பழக்குங்கள்.

இதை எழுதிய தந்தை ஆப்ரஹாம் லிங்கன்



# பெண்களின் முன்னேற்றத்துக்கு எது தேவை?

பெண்களுக்கு தன்னம்பிக்கை தான் முதல் தேவை. நமது வாழ்க்கை நமது கையில் தான் இருக்கிறது என்பதை பெண்கள் உணர வேண்டும். பிரச் சினைகளை கண்டு மனம் துவண்டு விடாமல், அதிலிருந்து வெளிவரும் வழியை பற்றி சிந்திக்க வேண்டும். வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள் பெண்களை வலிமைப்படுத்தும்.

சிக்கலில் இருந்து விடுபடுவதன் மூலம் புதிய அனுபவத்தை பெறுவோம். அந்த அனுபவம் தான் நம்மை வழி நடத்தும். அதுதான் வாழ்க்கையில் வெற்றி பெறச் செய்யும். அண்மைக்காலமாக பெண்கள் விழிப்புணர்வு பற்றிய செய்திகளே, தொலைக்காட்சிகளில் பெருமளவு ஒளி பரப்பாகின்றன. அவை பெண்களின் முன்னேற்றத்துக்கு தேவையானவை. பெண்கள் தங்களுடைய பிரச்சினைகளை தீர்க்க சட்டத்தையும், காவல் துறையையும் நாட, அவர்களுக்கு விழிப்புணர்வு மிக அவசியம்.

ஒவ்வொரு வெற்றிபெற்ற பெண்ணுக்கு பின்னாலும், ஒரு பெரிய போராட்டம் இருக்கும். அந்தப் போராட்டத்தில் பெண்களுக்கு ஆதரவு தெரிவிக்காதவர்கள் கூட, அந்தப் பெண் வெற்றியடைந்ததும் அதில் தங்களுக்கு பங்கு இருப்பதுஹிபால் காட்டிக்கொள்ள போட்டிபோடுவார்கள். அரசு முதலில் பெண்களுக்கு போதுமான அளவு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளுக்கு, கடுமையான தண்டனை வழங்க வேண்டும்.

பெண் கல்வியுடன், தற்காப்பு கலையையும் கற்றுக்கொடுக்க வேண்டும். பல இடங்களில் பெண்களுக்கு சுதந்திரமே இல்லை. ஆனால் சில இடங்களில் இருக்கும் சுதந்திரத்தையும் பெண்கள் வீணடித்து முகம் சுழிக்க வைத்து விடுகின்றனர்.

குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்ள இயலாத வியங்கள் அனைத்துமே, வழங்கப்பட்ட சுதந்திரத்தை சிதைப்பதாகவே அமையும். பெண்கள் ஒரு நபரின் தோற்றத்தை மட்டும் பார்க்காமல், அவருடைய சமூக பொறுப்பு, பெண்களை பற்றிய உயர்ந்த எண்ணம், சுயமரியாதை, கடமையுணர்வு போன்றவைகளை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, பொருத்தமானவரை திருமணம் செய்து கொண்டால் திருமணத்தின் பாதுகாப்பை உணரலாம்.

# பெண்களே முடிவு உங்கள் கைகளில்...

பெண்கள் முழு சுதந்திரம் அடைந்து விட்டனர். நவநாகரிகமாய், யாருக்கும் அடங்காமல் தான் தோன்றித்தனமாய் உலா வருகின்றனர். முக்கியமாய் வீட்டு ஆண்களுக்கு அடங்குவதில்லை என, பல புரட்சிகரமான கருத்துகளை பதிவு செய்வதை பலரும் வழக்கமாக வைத்துள்ளனர். இது வசதி படைத்த, நவநாக ரிக வர்க்கத்து வீட்டுப் பெண்களுக்கு வேண்டுமானால் பொருந்தலாம்;.

நமது சமூக அமைப்பு, ஒரு பெண் சுதந்திரமாய் முடிவெடுக்க அனுமதிக்கிறதா? என்பதில் தான் சமூகத்தின் வளர்ச்சியே அடங்கியிருக்கிறது என்பது ஒத்துக்கொள்ள வேண்டிய உண்மை.

பெண்ணின் துணிவும், தெளிவான முடிவெடுக்கும் திறனும், வளரும் பருவத்திலேயே ஏற்படுத்த வேண்டுமல்லவா? அது தாய், தந்தையின் பொறுப்பு என்பதை உணர வேண்டும்.

அந்த அளவுக்குக் கல்வி அறிவைக் கொடுக்க வேண்டும். படித்து, தனதுவாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் தீர்மானிக்கும் திறமையை, அனைத்துப் பெண்களுமே வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான சமூக சூழ்நிலையை உருவாக்கி தருவது நமது கடமை இல்லையா?

பெண்ணுக்கு இளமையில், காவல் தந்தை, பருவத்தில் கணவன், முதுமையில் பிள்ளைகள் என்று விதி வகுத்து பெண்ணின் சுதந்திரத்துக்கு அளவு கோள் வைத்தது நமது முன்னோர் தான். திருமணமான பின் உடை, உணவு, உறக்கம், ஓய்வு, பொழுதுபோக்கு, பக்தி என, எல்லாமே தன் கணவர் வீட்டாரின் விருப்பப்படியே, ஒரு பெண் வாழ்வை அமைத்துக் கொள்கிறாள்.

ஆழ்மனதில் தனது வாழ்வின் சகல முடிவுகளையும் தானே எடுக்க விரும்புகிறாள். ஆனால், சமூகமோ சகல முடிவுகளையும், அவள் மீது திணிக்கிறது. அப்படி திணித்து அதன்படி வாழவேண்டிய தருணங்களில் எல்லாம், அழகான பெண் கொடூரமான சூனியக்காரி போல் ஆகிவிடுகிறாள்.

ஒருவருக்கொருவர் அன்பு சார்ந்து வாழ்வது, யாரும் யாருக்கும் அடிமை இல்லை என்ற புரிந்துணர்வுடன் உறவு கொள்வது, ஆணும், பெண்ணும் சகல தளங்களிலும், சமம் என்ற எண்ணத்துடன் அடக்குமுறையில்லாத சமூக அமைப்பை தீர்மானிப்பது தான் நாம் நாகரிகமாய் வாழ ஒரே வழி.

பெண்களும், பாரதி சொன்ன புதுமைப் பெண்ணை தவறாகவே உருவகப் படுத்திக் கொண்டுள்ளனர். ஆணை வெற்றி கொண்டு அலட்சியப்படுத்துவதோ, அரைகுறை ஆடைகளில் உலா வருவதோ, அற்ப காரணங்களுக்காக விவாகரத்து வாங்குவதோ, முதியவர்களான பெற்றோரை பராமரிக்காமல் விட்டுவிடுவதோ, திருமணமோ வேண்டாம் என்று தனித்து நிற்பதோ அல்ல!

யாருக்கும் அடிமையாய் இராதே... என்கிற நெஞ்சுறுதியைப் பழகிக் கொள்வதே இதற்கான தீர்வாகும். நம்முடைய உலகம் வெளியில் இல்லை. நம்மால் முடியும் என்று நினைத்தால், நாம் செய்ய முடியாதது எதுவுமே கிடையாது. பெரும்பாலானவர்கள் முடங்கிப் போவதற்குக் காரணம், அவர்களுடைய குணம் தான். அவர்களின் உலகத்தை, அவர்களே அவர்கள் பார்வையில், மனதில் சிறியதாக சுருக்கி வைத்திருப்பது தான்.

இந்த உலகம் மிகப்பிரமாண்டமாய், அனைத்து வசதிவாய்ப்புகளையும், வைத்துக் கொண்டு காத்திருக்கிறது. துணிவுடன், நம்பிக்கையுடன் ஒவ்வொரு காரியத்தையும், தெரிவு செய்து செய்ய வாய்ப்பளிக்கிறது. சரியான வழிகளில் முயலுங்கள். வெற்றி நமதே!

# விழித்தெழு பெண்ணே!

கருவிலே உருவம் கொடுத்து
கண்ணிலே வெளிச்சம் கொடுத்து
சிந்திக்க அறிவை கொடுத்து
சிறந்த எண்ணங்கள் கொடுத்து
காதலெனும் உணர்வையும் கொடுத்தான்
இறைவன்.

இதழ்களில் தேன்தடவி,
இனித்திட பேசி,
கண்களால் வலை வீசி,
காம வெறி கொண்டு,
பெண்களின் புனிதம் மறந்து,
துரோகமுட்களால் துவம்சம் செய்கிறான்
மனிதன்.....

மலரென்று வர்ணித்து பெண்ணே உனை
மௌனமாக்கி விட்டான்......
அழகியென்று சொல்லி உனை
அழவைத்து விட்டான்....
உயிரே என்றழைத்து உனை
உருக வைத்துவிட்டான்....

விண்ணில் சிரித்திடும்
நட்சத்திரங்கள் கூட
மண்ணுக்கு வந்துவிடும் இந்த
பெண்மையின் மென்மையறியா
மூடர்களை தண்டிக்க.....
பெண்ணே நீ
மேதையா இல்லை பேதையா.....
நீ சிந்திக்க வேண்டிய நேரமிது. ...

சிதறும் சிந்தனைகளை ஒன்றாக்கு
சிகரம் நோக்கிய உன் பயணத்துக்காக ...
மனதின் எண்ணங்களை வலுப்படுத்து
மனிதமிருகங்களிடமிருந்து விடுதலை பெற.

உன் மீதே நீ நம்பிக்கை கொள்....
உருகி உருகி எவன்
உயிர் விடத் துடித்தாலும்
கருணை கொள்ளாதே.....
சுதந்திரமாய் முடிவெடு
சோர்ந்திடாமல் போராடு...
சுடர்விடும் ஒளியாய் பிரகாசித்திடு



# அண்ணனும் நோக்கினன் அவளும்...



எஸ்.தர்மலிங்கம்,
சாவகச்சேரி

அண்ணனும் நோக்கினன் அவளும் நோக்கினள் என பாலகாண்ட கம்பராமாயண அடிகளைச் சொல்லி செல்லையா பண்டிதர் நயம்பட அவருக்கே உரித்தான பாணியில் உயர்தர வகுப்பு மாணவருக்கு இலக்கிய பாடம் நடத்துகின்றார். பண்டிதர் கற்பிக்கும் மெதடிஸ்த மின் பாடசாலையில் அவரை மிஞ்சிய தமிழோ, சைவப் பாடமோ நடத்தும் ஆசிரியர்கள் இல்லையென்றே கூறலாம்.

பண்டிதர் வடமராட்சி மண்ணைச் சேர்ந்தவர். ஆசிரியராகப் படித்து பட்டம் பெற்ற அனுபவம் உடையவர். அவரிடம் தமிழும், சைவமும் படிப்பதற்கு எல்லோருக்கும் ஆவல். அவர் தனது 35 வருடகால சேவையில் சட்டம்பியராக, வாத்தியாராக, நல்லாசிரியராகக் கற்பித்த அனுபவம் கொண்டவர். அவர் கணீரென்ற குரலில் இலக்கியச் சுவையுடன் நயம்படக் கல்வி கற்பிற்பதே தனிச்சிறப்பு.

அவருக்குப் புரிந்தளவு அந்த இலக்கிய நயம் மாணவர்களுக்குப் புரிந்திருக்குமோ என்பது சந்தேகம்தான். அவர் இலக்கியம் கற்பிக்கும் உயர்தர வகுப்பில் அரைவாசி மாணவர்களாகவும் மிகுதி அரைவாசியோ மாணவிகளாகவும் எல்லாமாக 30 பேர் கல்வி கற்கிறார்கள். அண்ணனும் நோக்கினன் அவளும் நோக்கினள்... என்ற பாடல் வரியினூடாகப் பண்டிதர் ரசித்த இலக்கியத்தை எவ்வளவு தூரம் மாணவர்கள் பற்றிக் கொண்டார்கள் என்பது பண்டிதருக்குத்தான் புரியும்.

பண்டிதர் சுமாரான உயரமானவர். அதற்கேற்ற பருமன். மாநிறம். எந்தவேளையிலும் பாடசாலைக்கு வரும்பொழுது வெள்ளை நஷனல், வேட்டி. அதற்கேற்ப மடிப்புக் கலையாத சால்வை. நெற்றியில் திருநீறும் சந்தனப் பொட்டும். காது வாட்டாக நரைத்த தலைமயிர். பாடசாலையில் மாத்திரமல்லாது வெளியிடங்களிலும் மிகவும் பெயர் போனவர். அவர் வெளிக்கிட்டால் குஞ்சு குருமனில் இருந்து பெரியவர்கள் வரை குசலம் விசாரிப்பார்கள். பண்டிதர் தனது பாடத்தின்போது ஹாசியத் துணுக்குகளை இடைக்கிடை சிந்தாமல் இருப்பதில்லை. அவரின் துணுக்குகளில் சிலேடை கலந்து உதிர்ப்பதே தனிப்பாங்காகும்.

ரமணன் அவருடைய மாணவர்களில் ஒருவன். உயர்தர வகுப்பிலேயே அவனைக் கிண்டல் செய்ய வாத்தியார் தவறமாட்டார். இருந்தால்போல் எவரும் எதிர்பாராமல் 'நீ எவரையாவது நோக்கியதுண்டா?' என்று பண்டிதர் வினாவினார். 'இதை ஏன் கேக்கிறியள் சேர்? இந்தக் காலம் இது சகஜம்தானே' என்று ஹாசியமாகப் பதிலளித்தான். வகுப்பிலேயே கொல்... என்ற சிரிப்பொலி அடங்க வெகுநேரமானது.

'நீ எவரை எண்டாலும் நோக்கினால் உன்னுடைய குடும்பப் பொறுப்பை மறந்த பிள்ளையாகப் போகிறியே' என்று விசனத்துடன் கூறினார் வாத்தியார். நீண்டகாலம் பண்டிதருக்கு ரமணனின் குடும்பத்தை நன்கு தெரியும். வசதிகள் அற்ற குடும்பம். எனவேதான் அவன் நோக்குப் பற்றி அவர் அக்கறைப்பட்டார்.

அவனது குக்கிராமமானது பாடசாலையில் இருந்து கிட்டத்தட்ட 600 மீற்றர் வடக்குப் பக்கமாக அமைந்திருந்தது. ஒரு சாந்தமான செழிப்பான வயல் சூழ்ந்த, வனப்புமிக்க இடம். கிராமத்தை ஊடறுத்து குண்டும் குழியுமான கிரவல் றோட்டு மேலும் வடக்கு நோக்கிச் சென்று பிரதான வீதியுடன் இணைகிறது. இந்தக் கிரவல் பாதையில் தெற்குப் புறமாக ஒரு சிறிய வீடு. 3 பெண் பிள்ளைகள், ஓர் ஆண்பிள்ளை கொண்ட குடும்பத்தில் ரமணன்தான் மூத்த பிள்ளை. அவன் தந்தை ராமு அன்றாடக் கூலி. ராமு இல்லாவிட்டால் குடும்பப் பாரம் ரமணனின் தலையில்தான்.

இந்தப் பின்விளைவை எல்லாம் தெரிந்தமையாலோ ரமணனைப் பார்த்து இப்படிக் கேட்டார் வாத்தியார். ரமணனுக்கு 17–18 வயதுக்கும் நல்ல முறுக்கேறிய உடல். சுமாரான உயரம். பொது நிறம். ஆண்களுக்கே உரித்தான ஒரு தனியழகு. பண்டிதரின் இலக்கிய நயம் 'அண்ணனும் நோக்கினன் அவளும் நோக்கினள்' என்ற அந்த வரிசை அவன் மனதிலே ஆழமாகப் பதிந்துதான் விட்டது. அவனது வாய் தன்னையறியாமலே அந்த வரியை அடிக்கடி முணுமுணுத்துக்கொண்டிருக்கும்.

பிரதான காப்பெற் வீதியை இணைக்கும்

பள்ளந்தாழ்வு
கிராமத்தைச் சூழ்ந்துள்ள வயல்
நிலங்கள் எல்லாம்
மேட்டூர்காரருக்கே சொந்தம்.
பள்ளந்தாழ்வுக் கிராமத் தவரே
அந்த வயல் நிலங்களில்
வேலை செய்யும் நாளாந்தக்
கூலிகள். இதனால் மேட்டுக்
கிராமத்தவர் எல்லாவிதச்
செயற்பாட்டிலும்
'கொத்தடிமைகள்' போலவே
அவர்களை நடத்திக்
கொண்டார்கள்.

பள்ளந்தாழ்வு கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் கிரவல் றோட் மேலும் நீண்டு வடக்குப் பக்கமாகச் சென்று மற்றோர் கிராமமான மேட்டுக் கிராமத்தை வந்தடைகின்றது. மேட்டூர் கிராமம் வளர்ச்சியடைந்த கிராமம். அது ரமணின் கிராமம் போன்று வளர்ச்சியடையாத, ஒதுக்கப்பட்ட மக்களின் கிராமம் போன்றது அல்ல. எல்லா வழியிலும் செழிமை குன்றாத கிராமம். அதன் மேற்குப் பக்கம் பனந்தோப்பும் கிஞ்ஞாலச் செடியும் நிரம்பிய பற்றைக் காடு ஆள்களை மிரட்டும்.

ஏனைய பகுதிகள் கல்வீடுகளால் சூழப்பட்டிருந்தன. வசதிக்குக் குறைவில்லாதவர்களாக இருந்தார்கள் அனைவரும். இங்கிருந்து மெதடிஸ் மின் பாடசாலைக்கு அண்ணளவாக 700 மீற்றர் வரும். மேட்டூர் கிராமத்து மாணவர்கள் அந்தப் பாடசாலைக்குச் செல்ல வேண்டுமென்றால் பள்ளந்தாழ்வுக் கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் கிரவல் றோட்டாலேயே செல்லலாம். பள்ளந்தாழ்வு கிராமத்தைச் சூழ்ந்துள்ள வயல் நிலங்கள் எல்லாம் மேட்டூர்காரருக்கே சொந்தம். பள்ளந்தாழ்வுக் கிராமத்தவரே அந்த வயல் நிலங்களில் வேலை செய்யும் நாளாந்தக் கூலிகள். இதனால் மேட்டுக்கிராமத்தவர் எல்லாவிதச் செயற்பாட்டிலும் 'கொத்தடிமைகள்' போலவே அவர்களை நடத்திக் கொண்டார்கள்.

பள்ளந்தாழ்வுக் கிரவல் பாதை பிரதான வீதியைச் சந்திக்கும் இடத்தின் இடப்பக்கமாக பிரதான வீதியை நோக்கி ஒரு பதனீர்ச்சாலை. இதேபோல் மேட்டூர் செல்லும் கிரவல் பாதையில் வலக்கைப் புறமாகப் பிரதான வீதியை பார்த்தபடி ஒரு தேநீர்க்கடை.

பள்ளந்தாழ்வு மக்கள் தங்கள் கிராமப் பக்கம் உள்ள தேநீர்க் கடைக்குச் செல்லுவர். மேட்டூர் மக்கள் தங்கள் பக்கம் இருக்கும் தேநீர்க் கடைக்குச் செல்வதும் தொன்று தொட்டு வழக்கம்.

அன்றொருநாள் பிரதான வீதியூடாக நெடுந்தூரப் பயணம் செய்து இழைத்த ஒருவன் தேநீர் அருந்தும் முகமாக பள்ளந்தாழ்வுப் பக்கம் உள்ள தேநீர்க் கடைக்குள் புகுந்தான். கடைக்காரன், கேட்ட சிற்றுண்டிகளை பரிமாறிவிட்டு 'தம்பி இந்தக் கிராமத்துக்குப் புதுசோ' என்றார்.

'ஓம் ஓம்! நான் இப்பதான் இங்காலை வந்திருக்கிறன்.'

'யாரப் பாக்கவேணும்.'

'நான் கிளிநொச்சிக் கச்சேரியில் வேலை செய்கின்ற இராசையாவைச் சந்திக்க வேணும். மேட்டூர் என்று சொன்னவர். வீடு எவடத்தை?'

அதற்குக் கடைக்காரன் மேட்டூருக்குச் செல்கின்ற கிரவல் றோட்டைச் சுட்டிக்காட்டி, 'இந்த றோட்டு வழியே 200 மீற்றர் அளவில் சென்றால் கிழக்குப் பக்கமாக ஒரு மண் ஒழுங்கை. அந்த ஒழுங்கையில் மூன்றாவது கல்வீடு. என்றார்.

அத்தோடு அவசர அவசரமாகத் தலையிலே கைவைத்துக் கொண்ட கடைக்காரன், 'சிவசிவா! அங்க போய்ச் சொல்லிப்போடாதேயுங்கோ, இங்கதான் தேநீர் குடிச்சது எண்டு.'

வந்தவ புதியவனுக்கு வியப்பாக இருந்தது. இந்தக் காலத்திலும் இப்படியா என்று. 'தம்பி இதை ஏன் கேக்கிறியள். எங்கடை கிராமத்திலை அங்கால இங்கால தண்ணி வெண்ணி குடிக்கிறதுமில்லை, அன்னியோன்னியமாகப் பழகிறதும் இல்லை. தட்டுத்தடுமாறி எங்கட பக்கத்திலயிருந்து யாராவது பெண் எடுத்தால் தலை உருளும்' கடைக்காரர் வரலாறு சொன்னார்.

இராசையா குடும்பம் மேட்டூரில்தான் பல காலமாக வசிக்கிறது. இராசையா கிளிநொச்சிக் கச்சேரியில் ஒரு பதவி நிலை உத்தியோகத்தர். மனைவி, 2 பெண் பிள்ளைகள். மூத்தவள் வள்ளிக்கொடி. மெதடிஸ் மின் பாடசாலையில் ரமணனின் வகுப்பில்தான் படிக்கிறாள். மெலிந்த உடல், பொதுநிறம், சுமாரான அழகு. தேவதை என்று சொல்லமுடியா விட்டாலும் கவர்ச்சியானவள். அவள் கண்களைப் பார்த்தால் ஈர்க்கப்படாத ஆண் இருக்க முடியாது. பள்ளந்தாழ்வை ஊடறுத்துத்தான் அவள் நாளாந்தம் பாடசாலைக்குச் செல்ல வேண்டும்.

அண்ணனும் நோக்கினன் அவளும் நோக்கினள் என்ற பண்டிதரின் நயப்புரை ரமணனின் காதில் ரீங்காரிக்க ஆரம்பித்தது முதல் வள்ளிக்கொடியின் நடவடிக்கைகளை தீவிரமாகக் கவனிக்க ஆரம்பித்தான். வள்ளிக்கொடியை வகுப்பிலே கண்களால் ஒரு துளாவல். பாடசாலைக்கு வரும்போதும் செல்லும்போதும் பார்வையால் ஒரு விழுங்கல்.

(28ஆம் பக்கம் பார்க்க)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

(27ஆம் பக்க தொடர்ச்சி)

அவன் தன்னைக் கண்களால் பருகுவது வள்ளிக் கொடிக்கும் தெரிந்தே இருந்தது. இணக்கம் அசைவுகளில் தெரிந்தது. அவன் தன்னைக் கவனிக்காதபோது அவனைப் பார்ப்பாள். அண்ணலும் நோக்கி அவளும் நோக்க சந்தர்ப்பத்தை மட்டும் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை.
இருவருக்கும் தங்கள் நிலையும் தங்கள் கிராமங்களின் நிலையும் தெளிவாகவே தெரியும். ஆனால் அன்புக்கும் உண்டோ அடைக்கும்தாழ்? உள்ளே பொங்கிப் பெருக்கெடுக்கும் காதல் அலையில் இருவரும் அள்ளுண்டு போயிருந்தனர். இப்படி யாகச் சில மாதங்கள் கடந்தன. உயர்தர வகுப்புச் சோதனையும் நெருங்கி வந்தது.
ஒரு நாள் மாலை நேரம் வள்ளிக்கொடியும் தங்கையும் கிரவல் றோட்டு வழியாகச் சைக்கிளில் சென்று கொண்டிருக்கையில் எதிரே சைக்கிளில் வந்த ரமணன் அவர்களுடைய சைக்கிளை விலத்திச் செல்கையில் அவனை வள்ளிக் கொடி கடைக்கண்ணால் பார்க்கையில் அவளது சைக்கிள் தங்கையின் சைக்கிளுடன் கொளுவுப் பட்டு இடறி இருவருமே விழுந்துபோனார்கள். விழுந்ததில் அடிபட்டதைக் கவனிப்பதைவிட போய்க் கொண்டிருந்தவனை கண்களால் விழுங்கும் தனது தமக்கையின் பார்வையிலேயே அவள் உள்ளத்தின் ஓடும் நரம்பை நாடி பிடித்துவிட்டாள் தங்கை. ஊகித்த வாய் சும்மா கிடக்குமா? வீட்டை போனதும் போகாததுமாக வள்ளிக்கொடி அப்பால் செல்ல தனது தாயின் காதிலே ஊதி வைத்தாள்.
இவளுடைய கதையைக் கேட்ட மாத்திரத்திலேயே வள்ளிக் கொடியின் தாய் அதிர்ச்சியில் உறைந்தாள். இதனால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமானவை என்பது இரு வீட்டாருக்கும் உள்ள பிரச்சினையல்லாது இரண்டு கிராமமுமே இரண்டு பட்டுப் போர்க்கொடி தூக்கும் என்பது அவளுக்கு நன்கு தெரியும். இராசையர் கிளிநொச்சி பஸ்சிலே வேர்த்து விறுவிறுக்க வீடு அடைந்ததும் அடையாததுமாக வழமையாகத் தேநீர் கொண்டுஉபசரிப்பவள், அவர்தன்னுடையஉடுப்புக்களைக் களைய முந்தியே விசயத்தை ஓதி வைத்தாள். கேட்டவுடனேயே அவருக்குக் கடும் ரென்சன். ஒரே மனப் போராட்டம். கட்டிய மனக்கோட்டையெல்லாம் உடைந்து

# அண்ணனும் நோக்கினன் அவளும்...

சுக்கு நூறாகியது போல் பிரமை. அன்றிரவு சரியாகவும் நித்திரை கொள்ளவில்லை. அவர் ஊர் உலகம் அடிபட்டவர். அவர் தனது மனப்போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தாற் போல் இதற்கு விடை கண்டார். சொந்த ஊர் வீடு வாசல்கள் எல்லாம் விட்டுவிட்டு கொழும்புக்கு மாற்றல் எடுப்பது என்று தீர்மானித்துவிட்டார். பல வருடங் கள் கிளிநொச்சிக் கச்சேரியில் கடமையாற்றிய படியால் மாற்றம் எடுப்பதில் சிக்கல் இருக்கவில்லை. கொழும்பு இறைவரித் திணைக்களத்துக்கு மாற்றம் கிடைத்தது.
வள்ளிக்கொடியின் நிலை தர்மசங்கடமாகியது. ரமணனை நினைத்து அவள் உருகினாள். தன்னுடைய உள்ளக்கிடக்கையை அவனிடம் கூறாதது குறித்து வருத்தப்பட்டாள். எனினும் எந்தளவிலேனும் தனது மனத்தாக்கலைக் காட்டிக்கொள்ளாது தனது தாய் தந்தையுடன் கொழும்புக்கு புதுச் சூழ்நிலையிலும் புது வாழ்வை ஆரம்பித்தாள்.
அவள்போனதும்ரமணனின்வாழ்வில்இருள்சூழ்ந்துகொண்டது. தந்தை எதிர்பாராத விதமாக மாரடைப்பினால் காலமானார். குடும்பச்சுமை முழுவதையும் அவனே தூக்கவேண்டியவனானான். பள்ளிக்கூடக்காதல்படலைமட்டும்தான்என்று எண்ணிக் கொண்டு நாள்களைக் கடத்தத் தொடங்கினான்.
ஒன்றல்ல இரண்டல்ல கிட்டத்தட்ட 50 வருடங்கள் ஓடிவிட்டன. ரமணன் முதுமையை எட்டிவிட்டான். கொழும்புக் குப் போய்க் காட்டினால்தான் சரிவரும் என்று யாழ்ப்பாணத்து மருத்துவர்கள் கைவிரித்துவிட்டார்கள். வேறு வழியின்றி கொழும்புக்குப் புறப்பட்டான். துணைக்கு வர யாரும் இருக்கவில்லை. சகோதரிகள் மணம் முடித்துவிட்டார்கள். அண்ணனைப் பார்ப்பதற்கு இப்போதெல்லாம் அவர்களுக்கு நேரம் போதவில்லை. மருகப் பிள்ளைகளோ பல சோலிக்காரர்கள். அவர்களுக்கு மாமனுடன் செல்லவேண்டும் என்பது தேவையே இல்லை. ரயிலில் தனிமை அவனைக் கொன்றது. வாழ்க்கை கசந்துபோய் வெகு நாள்களாகிவிட்டது. வேண்டாவெறுப்பாக கொழும்பு தனியார் வைத்தியசாலையில் 4 நாள்கள் தங்கியிருந்து அந்த டெஸ்ட், இந்த டெஸ்ட் எல்லாம் எடுத்தான். கைநிறையக் குளிகைகளை அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். கோட்டையில் இருந்து மீண்டும் ஊர் திரும்ப வேண்டும். அதே ரயில் 3ஆம் வகுப்பு. ஒரு மூலையில் அமர்ந்து கொண்டான்.
கோட்டை ரயில் நிலையம் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. சரியான நேரத்துக்கு 3 நிமிடங்கள் தாமதமாக ரயில் புறப்பட்டது. அதுவரை வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவன். பார்வையை உள்ளிளுத்துக் கொண்டான். கண்கள் சக பயணிகளை மேய்ந்தன. 5 வரிசை தள்ளி எதிரேயிருந்த சீற்றின் மேலாகத் தெரிந்த தலை திடீரென அவன் நாடி நரம்புகளை எல்லாம் சிலிர்க்கச் செய்தது. மனது அலை பாய்ந்தது. அவளாக இருக்குமோ?ஆர்வம் ருத்திர தாண்டவமாடியது. வயது திடீரென 50 வருடங்கள் இறங்கியது. நரம்புகள் முறுக் கேறிக்கொண்டன. எழுந்துபோ என்று இதயம் வாய் வரை வந்து அதட்டிற்று. நாணமும் வயதும் இழுத்துப் பிடித்து நிறுத்தின. முயன்று பார்த்தாயிற்று. இனி முடியாது. எழுந்தான். ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டான். தள்ளாட்டத்தை நிதானப்படுத்த ஒவ்வொரு இருக்கை விளிம்பாகப் பிடித்துக் கொண்டே அவளை நோக்கி முன்னேறினான். அவள்தான். அவளேதான். 50 வருடங்கள் போனாலும் மறக்கமுடியாத அவளே தான். இன்று நினைக்கையிலும் மனதை மயக்கி ஊனை உருக்கும் அவளே தான். ஜன்னல் வழியாக வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். தள்ளாட்டத்தை நிதானப்படுத்தவதற்காக நிற்பதுபோலப் பாசாங்கு செய்துகொண்டே நிற்கிறான். ஒரு தடவை, ஒரே ஒரு தடவை அவள் திரும்பிப் பார்க்கமாட்டாளா என்று பாழாப் போன மனது ஏங்கித் தவிக்கிறது. அந்த இருதயத்தின் துடிப்பு அவளுக்குக் கேட்டிருக்குமோ. அவள் திரும்புகிறாள். தலை நிமிர்கிறது. பிறை வடிவ நெற்றி, கருத்த அடர்த்தியான கண் இமைகள், அந்த வட்டக் கரு விழிகள். அவள் அவனைப் பார்க்கிறாள். அவனும் அவளையேதான் பார்க்கிறான். அண்ணலும் நோக்கினன்; அவளும் நோக்கினள், செல்லையாப் பண்டிதர் மனதுக்குள் வகுப்பெடுக்கிறார். அவன் பிடி நழுவுகிறது.....

## சொற்சிலம்பம் - போட்டி இல: 404

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | ■ | 5 | 6 |
| | ■ | 7 | | | 8 | | |
| 9 | 10 | | ■ | 11 | | | ■ |
| 12 | | ■ | 13 | | | ■ | 14 |
| | ■ | 15 | | | ■ | 16 | |
| ■ | 17 | | | ■ | 18 | ■ | |
| 19 | | | ■ | 20 | | 21 | |
| 22 | | | | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர்:..........................................
பூரணமான தபால் விலாசம்: ..........................................
..........................................
கையொப்பம்:..........................................

**இடமிருந்து வலம்**

1. தமிழன்னைக்குக் காப்பாக அணி செய்வது
5. எந்நேரமும்
7. குடும்பத்தில் கடைசியை இப்படி அழைப்பார்
9. ஒரு நோய் மூட்டுக்களில் வரும்
11. இதுவும் ஒரு நோய்
12. சிறிய பொதி
13. அதரம்
15. சமிபாட்டு உறுப்பு
16. மழைகாலம்
17. சமுத்திரம்
19. பெண்களின் குணங்களில் இதுவும் ஒன்று
20. தோழன்
22. யானைக்கு சிறப்பு உறுப்பு இது
23. ஒரு தானிய வகை

**மேலிருந்து கீழ்**

1. பாண்டவர்கள் அனுபவித்தது.
2. வேள்வி
3. தானை
4. தடக்கிப் பேசுதல்
5. உடுப்பு
6. சவரம் செய்யாவிட்டல் வளர்ந்து விடும்
8. தண்டனை
10. நிலம்
16. தேகம்
14. மூத்த தாய்
15. நுளம்பின் வாழ்க்கைப் பருவத்தின் ஆரம்ப காலம்
16. பெரிய
17. ஒரு வாத்தியக் கருவி
18. பெண் அல்ல
19. போதை தருவது
20. சிரி
21. இடம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வது டன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 402இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**
(1)அட்டகாசம் (6)மாலதி (7)அது (8) தாமிரம் (10)கதிரை (11) தினம் (12)குருதி (13)தீரும் (15) மகேசன் (17) புசல் (19) திடும் (21)கல (22)பாதுகாவலன்

**மேலிருந்து கீழ்**
(1)அந்தாதி (2)டமாரம் (3)காலம் (4)சதி (5)மதுரை (6)அதிதி (9) மினக்கேடு (10)கரும்பு (12) குரு (13) தீன் (14)வில்லன் (15) மதில் (16) சம்பா (18)சகல (20)சகா

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 402 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
பெ.செல்லக்குட்டி,
1ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

**2 ஆம் பரிசு**
ரா.உஷாந்தினி,
"சாருஜா" சிவன் கோவில் வீதி,
புத்தூர்.

**3 ஆம் பரிசு**
கந்தையா தனபாலசிங்கம்,
1 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

**4 ஆம் பரிசு**
கி.மாலதி,
உப தபாலகம்,
ஏழாலை.

**5 ஆம் பரிசு**
திருமதி ச.பாலசுந்தரம்
இல. 130/11 இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

இ.அர்ச்சனா,
இந்துக் கல்லூரி வீதி,
மானிப்பாய்

சி.பரிமளகாந்தன்,
இல. 422 (614) காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

கு.நிஷாந்,
தரம் - 11,
யா.நெடு.சைவப்பிரகாச வித்தி,
நெடுந்தீவு.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.404
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்.
(03.02.2016 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.404இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 07.02.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 402 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

## அறிமுகப்படுத்துகிறோம் 5

# ஓசிக் கலைஞர் ஓமப்பொடி!



வாசகர்களே! என்ன? ஓசிக் கலைஞரின் பெயரைப் பார்த்ததுமே, ஒரு பிடி பிடிக்கலாம் என்பது போல் வயிற்றையும் தடவிக் கொடுத்து, நாவால் உறிஞ்சி, மூக்கால் மோப்பம் பிடிக்கிறீர்கள்!

நீங்கள் நினைத்துக் கொண்டது போல் நானொன்றும் உணவொன்றின் பெயரை எழுதவில்லையே! அது ஒரு நபரின் நாமம் தான். ஓமப்பொடி என்று அவருக்குப் பெயர் வந்ததே அலாதியான கதை!

இவர் ஊரிலுல்ள சைவ வேஹாட்டல்களுக்கு அடிக்கடி பயணம் மேற்கொள்வார். அப்பொழுதே தயாரித்துக் கொணர்ந்து அலுமாரியில் வைக்கப்பட்டிருக்கும் ஓமப்பொடியில் சிறிதளவை வாங்குபவர் போன்று எடுத்து வாயில் போட்டு சுவைத்துக் கொண்டே இப்படியும் வேறு கூறுவார். தம்பி காசு கொடுத்து வாங்கிச் சாப்பிடும் போதில் இல்லாத ஒரு சுவை சும்மா எடுத்து வாயில் போட்டு கொண்டாலே ஏற்படுகிறது என்பாரே பார்க்கலாம்.

இவ்வொரே காரணத்தால்தான் இவருக்கு ஓமப்பொடி எனும் நறுமணம் வீசும் சுவைப் பொருளின் பெயர் ஏற்பட்டது. ஓமப்பொடி ஒன்றுக்கே இந்த தந்துரோபாயத்தைப் பிரயோகிக்கிறாரென்றால் ஓசிக்கலைஞர் என்ற பட்டம் வேறு தோன்றியிருக்காதல்லவா?

எனவே இவருடைய ஓசிப்பழக்கம் ஊரிலெல்லாம் பரந்த புகழ்பெற்றுவிட்ட ஒன்று. ஓமப்பொடி தொடக்கம் ஓசிப் பொடி வரையில் இவரை அறியாதார் எவருமே இருக்க மாட்டினம்.

எங்கேயாவது ஓசிக்கலைஞர் ஓமப்பொடி நிற்கின்றாரா எனச் சுற்றுமுற்றும் பார்வையைச் செலுத்திக் கொண்டே எனது பொடிப் பட்டையை எடுக்கிறேன். ஒரு தடவை ஒரு பக்கத் துவாரத்தை அழுத்திக்குர்..ர் இழுத்தேன். எங்கேயோ ஒட்டி நின்று பார்த்து விட்டு வந்தவர் ஒரே பாய்ச்சலில் வந்து கேட்டுக் கேள்வி இல்லாமல் பொடிப்பட்டையுள் விரல்களை விட்டெடுத்து குர்..ர் மூக்குள்ளே ஓசிப்பொடியைத் திணிக்கிறாரே பாருங்கள்.

என்ன தம்பி நானுந்தான் .. கடைகளிலை பொடிப்பட்டை வாங்கி இருக்கிறன்... என்னதான் இருந்தாலும் உம்முடைய மூக்குப் பொடிக்கு தனிச்சிறப்பு இருக்கு .. அதாலை மூக்கரிக்கும் போதெல்லாம் உம்மைத் தேட வேண்டிக்கிடக்குப் பாரும் .. எடுத்த பொடிக்கு நன்றி தெரிவித்தது போன்று மேலும் அப்படி ஓசிப்பெடி எடுப்பதற்காகவும் அச்சவாரம் இடுகிறார் அவர். என்ன சொல்கிறே அவர் சட்சாத் ஓசிக் கலைஞர் ஆச்சே.

வேறுமொரு கட்டத்தைப் பாருங்கள் சினிமா ஒண்டு பார்க்கலாமெண்டு வீதியில் அவசர அவசரமாக விரைந்து கொண்டிருந்தேன். ஒரு குரல் கூப்பிட்டதை உணர்ந்து திரும்பிப் பார்த்தேன். அழைத்த நபரைப் பார்த்து அதிர்ந்தே போனேன். அது வேறு யாருமில்லை ஓசிக் கலைஞர் ஓமப்பொடி தான். எங்கே நான் போகும் காரியத்தை அறிந்து என் பின்னால் தொற்றிக் கொள்ளப் போகிறாரோ? எனும் ஏக்கம் என்னுள் தோன்றி அசந்தே விட்டேன்.

என்ன தம்பி ஆளைக் காணக் கிடைக்குதில்லை.... எங்கை அவசரமாய் போறீர்...?

அப்படி ஒண்டுமில்லை சும்மா தெரியாதே இப்பிடி மழுப்பிச் சமாளித்தன்.

அப்படியே எங்கை சிகரெட் இருந்தால் ஒண்டு குடுமன். தொழிலைத் தொடங்கினார். ஒருவகையாக ஆறுதல் பிறந்தது.

சிகரட் ஒன்றை உருவிக் கொடுத்து விட்டுத் தப்பினேன் பிழைத்தேனென்று நழுவினேன்.

இப்படி எல்லாத்தையும் ஓசியில் தேடும் கலைஞருக்கு எவ்வித சொத்துச் சுகங்களும் கிடையாதென எண்ணி விடாதீர்கள். அவரிடம் தான் சக்குப் பிடிச்ச காசு பணமெல்லாம் கிடக்கிறது. மனிதர் ஒரு வெள்ளிக் காசைக் கூடத் தொட மாட்டார்.பெரிய கனவான்கள் வரிசையிலும் அவரைச் சேர்த்துக் கொள்ளும் அளவிற்கு பண அந்தஸத்து உண்டு. அவ்விதம் எண்ணி நாடகக் கோஷ்டியினர் இவரிடம் எப்படியும் டிக்கட் வித்து விடலாமெனச் சென்றிருந்தனர்.

ஊரிலையுள்ள பெரிய மனிதரெண்டு என்னையும் மதிச்சு வந்திருக்கிறியள் என்னால இயண்ட உதவியளை உங்களுக்குச் செய்யிறன். ஆனால் டிக்கட் எடுத்துத் தான் நாடகம் பார்த்தனெண்டால் ஊர் மதிக்குமோ, மற்றப் பெரிய மனிசருக்கு அழைப்பு விட்டது போலை எனக்கு கொம்பிளிமன்ஸ் குடுத்தியளெண்டாலெல்லோ சரி.

ஓசிக் கலைஞர் சொல்லி முடித்தது தான்தாமதம் நாடகக் குழுவில் வந்திருந்தவர்களின் முகங்களில் ஈயாடவில்லை. அத்தகைய வடிகட்டிய ஓசிப் பிறப்பே ஓமப்பொடி.

இதென்ன பெரிய விசயம், சினிமா பார்ப்பதே ஓசியில் தானே. அதெப்படி எண்டால் சினிமாக் கொட்டகை மனேச்சர்மாரை கையில் போட்டுக் கொண்டதால் புத்தம் புதிய சினிமாக்களையும் ஓசியாய் முதல் தடவை பார்த்து விடும் பேறு இவருக்கு உண்டு. ஓமப்பொடி கூட எம்.ஜி.ஆர் சிவாஜி வைத்து ஓசியில் சண்டையில் குதித்தும் கொள்வார்.

எவ்விதமேனும் ஓசிக் கலையை வளர்த்த ஒப்பற்ற கலைஞர் இவர். எனவே நாம் தக்க முறையில் கௌரவம் செய்ய வேண்டும் எண்டதும் நீங்கள் வேறு விதத்தில் எண்ணி விடக் கூடாது.

புது வழிக் கலைகள் அபரிமிதமாக வளர்ந்து வருகின்றன. அவ் வகையில் ஓசிக் கலையை எம்மிடையே வளர்த்துக் கொண்டிருக்கும் இவருக்கு பட்டங்கள் சூட்டி பொன்னாடைகள் அணிவித்துக் கௌரவிப்பது எமது கடமையல்லவோ?

இப்பேற்பட்ட பட்டமளிப்பும், பொன்னாடை போர்த்தலும் அவருக்கு ஓசியில் தானே கிடைக்கிறது. எனவே அதிலவர் மிகவும் விருப்புடையவராக இருப்பாரென்பதில் சந்தேகம் வேண்டாம். அடுத்த வாரம் உங்கள் முன்பாக மிருதங்க வித்துவான் திருமங்களம் நிறுத்தப்பட ஆயத்தம் செய்கிறார் சந்திப்போமா?

கலாபூசணம் பகிடிப் பரமர்.

**ஓமப்பொடி எனும் நறுமணம் வீசும் சுவைப் பொருளின் பெயர் ஏற்பட்டது. ஓமப்பொடி ஒன்றுக்கே இந்த தந்துரோபாயத்தைப் பிரயோகிக்கிறாரென்றால் ஓசிக்கலைஞர் என்ற பட்டம் வேறு தோன்றியிருக்காதல்லவா?**

# (ஐயர் கடைத் தோசை)

(23 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாலவடிவேலனை என்னிடம் அனுப்பி யிருந்தாரோ என்றொரு சந்தேகம்எனக்கு. கடையில் நின்று என்னை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களையெல்லாம் தள்ளி ஒதுக்கியபடி உள்ளே நுழைந்தான் பாலவடிவேலு.ஐயா! என்ன பிரச்சினை! இப்ப சிவராசன் எவ்வளவு காசு தரவேணும். நூறு ரூபாதோனே! இந்தாரும் பிடியுமந்தக் காசை முகத்தில் வீசியது போன்று கோபத்துடன் எறிந்தான். ஐயரின் உடல் பயத்தால் நடுங்கத் தொடங்கியது. பாலவடிவேல் ஊரிலே ஒரு மாதிரியானவன். குடிகாரனாக இருந்தாலும் நேர்மையானவன். நியாயம் தெரிந்தவன். அநீதியைக் கண்டால் எந்தக் கொம்பனையும் விட்டுவிட மாட்டான். துணிச்சலாக நியாயத்தைத் தட்டிக் கேட்பான். ஒன்றும் முடியாதவிடத்து அவர்களின் கையைக் காலை முறித்து விடுவான். இதை நன்கறிந்த ஐயரின் நெஞ்சு திக்திக்கென அடிப்பதற்குக் காரணமிதுதான்.

ஐயா! இப்பத்தையில் இருபது ரூபாவும் நூறு ரூபாவும் பாக்கிறதுக்கு வித்தியாசமில்லாமலேயிருக்கும் எண்டது உங்களுக்குத் தெரியாதே! வடிவாய்க் கையிலை எடுத்து ஆறதலாய்ப் பார்த்தால்தான் அது இருபதோ நூறோ எண்டு விளங்கும். அவசரத்திலை நூறை இருபதெண்டும் இருபதை நூறெண்டும்மாறிக்குடுக்கிறது வாங்கிறது எல்லாம் ஒரு சாதாரண வியம். உங்களுக்கு நினைவிருக்குதே ஐயா! அண்டைக்கு ஒருநாள் இருவதெண்டு எனக்கு நூறு ரூபா தந்ததை மறந்து போனியளே! நான் வியத்தைச் சொல்லித் திருப்பித் தந்தனான் எல்லே! சொல்லுங்கோ! நான் சொல்லுறது சரியோ! பொய்யோ!

கொண்டார். அது மட்டுமில்லை ஐயா. இப்ப எனக்கு நடந்தது தெரியுமே! சந்தையிலை சாமான் வாங்கினதுக்கு மிச்சம் தரயுக்கை இருபதெண்டு நூறைத்தந்திட்டாங்கள். நானுமிப்பதான் பாத்தன். அது இருபதில்லை. நூறு. இஞ்சார்! பொய்யெண்டால்ப் பாருங்கோ. முந்தின காலத்துக் காசுகளைப் பார்த்த உடனை பிடிச்சுப் போடலாம். இப்பத்தையிற் காசுகள் அப்பிடியே!

பாலவடிவேலு!ஏன்! ஐநூறு ரூபா நோட்டைப்பார். ஏனப்பா கனக்கக் கதைப்பான். ஐயாயிரம் ரூபா தாளைப் பாருங்கோ. எத்தினை அப்பாவிச் சனங்கள் ஏமாத்துப்பட்டிருக்குங்கள். சும்மா கிடந்த காசைப் புதுப்பிளானிலை அச்சடிக்க வெளிக்கிட்டு இப்ப காசின்ரை பெறுமதியையே கண்டு பிடிக்கேலாமற் கிடக்குது. கிடந்தது மாதிரி விட்டி ருக்கலாம். ஐயர் கடையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பாலசிங்கம் வாத்தியார் பாலவடிவேலுவுக்குப் பக்க வாத்தியம் வாசித்தார். நாட்டிலை செய்ய வேண்டிய எத்தினை வேலையளிருக்க அதை விட்டிட்டுச் சும்மா கிடந்த காசை அச்சடிக்க வெளிக்கிட்டு... சே... சனங்களுக்கு எத்தினை பிரச்சினையள்! குழப் பங்கள்!

இப்போது ஐயரும் தனது வாயால் ஒப்புக்கொண்டு விட்டார். நிலைமை ஓரளவுக்குச் சுமுகமாகிக் கொள்ள நானும் அக்கடையை விட்டு மெல்ல மெல்ல எஸ்கேப் ஆகிவிடுகின்றேன். ஐயர் கடைத்தோசை! தின்னத் தின்ன ஆசை! திண்டு முடியப் பூசை என்ற நிலைக் காளாகியிருப்பேன் நல்ல வேளை! பாலவடிவேலுவின் புண்ணியத்தால் நான் பூசை வாங்காது தப்பிக்கொண்டேன். அதுமட்டுமில்லை ஐயர் கடைத் தோசையால் எங்களுடைய காசைப் பற்றிய ஒரு சிறிய குழப்பமும் தீர்ந்து தெளிவு பிறந்து விட்டது என்று நினைக்கின்றேன்.

# இந்த வாரம் 24.01.2016 முதல் 30.01.2016 வரை உங்களுக்கு எப்படி?

## மேடம்

சுக்கிரன், கேது, சந்திரன் அதிகளவு நன்மை தருவர். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். உறவினர்களின் உதவி கிடைக்கும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். நற்பெயரும், புகழும் தேடி வரும். புத்திரர் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். மனைவி இணக்கமுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழித்து, இலாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு கூடுதல் சலுகை கிடைக்கும். பெண்கள் தாராள பணச்செலவில், குடும்பத் தேவை நிறைவேற்றுவர். மாணவர்கள் விரும்பிய பொருள்களைப், பெற்றோரிடம் கேட்டு வாங்குவர். சனீஸ்வரரை வழிபாடு, சங்கடம் தீர்க்கும்.

## இடபம்

குரு, செவ்வாய், புதன் அனுகூல அமர்வில் உள்ளனர். செயல்களில் நேர்மை வெளிப்படும். உடன்பிறந்தவருக்கு உதவுவீர்கள். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், வருமானமும் கூடும். வீட்டுத் தேவைக்காகப் பணக்கடன் செலுத்துவீர்கள். புத்திரர், உங்கள் சொல்லை மதித்து நடப்பர். அக்கம் பக்கத்தவர் அன்பு பாராட்டுவர். மனைவியின் நற்செயல்களை முழுமனதுடன் பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி, வளர்ச்சிப் பாதையில் நடைபோடுவீர்கள். பெண்கள், உறவினர் குடும்பத்தில் மங்கள நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள், அக்கறையுடன் படித்து, அதிக மதிப்பெண் பெறுவர். விநாயகர் வழிபாடு, வினை தீர்க்கும்.

## மிதுனம்

ராகு, சனீஸ்வரர், சந்திரன் மட்டுமே நன்மை தருவர். செயல்களில் மனப்பூர்வமாக ஈடுபடுவதால் மட்டுமே, உரிய பயன் கிடைக்கும். எதிர்பார்த்த உதவி தாமதமின்றிக் கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர் மனதில், ஆன்மிக எண்ணம் வளரும். நேரத்துக்கு உணவு உண்பதால், உடல் ஆரோக்கியம் பெறும். ஆடம்பரச் செலவு தவிர்க்கவும். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, புதியவர்களின் ஆதரவு துணை நிற்கும். குடும்ப நலன் சிறக்க, அக்கறையுடன் செயல் புரிவர். மாணவர்கள் சாகச விளையாட்டுகளில் ஈடு படக் கூடாது. லட்சுமி வழிபாடு, செல்வ வளம் தரும்.

## கடகம்

சுக்கிரன், புதன் அனுகூல பயன் தருவர். செயல்களில் மனிதாபிமானமும், நேர்த்தியும் உருவாகும். உடன் பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். பூர்வ சொத்தில் மூலம் வருமானம் கிடைக்க வாய்ப்புண்டு. பணக்கடன் செலுத்துவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு கண்டு பெருமிதம் கொள்வீர்கள். அக்கம் பக்கத்தவர் நல் அன்பு பாராட்டுவர். பகைவர் தொந்தரவு குறையும். மனைவியின் நற்செயல்களை முழுமனதுடன் பாராட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இடையூறு விலகி, வளர்ச்சிப் பாதையில் நடைபோடுவீர்கள். பெண்கள், உறவினர்களுக்கு உதவி செய்து மகிழ்வர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து அதிக மதிப்பெண் பெறுவர். லட்சுமி நரசிம்மரை வழிபடுவது நல்லது.

## சிங்கம்

குரு, செவ்வாய், சுக்கிரன், சூரியனால் நன்மை உண்டாகும். மனதின் உற்சாகம் செயலில் வெளிப்படும். நண்பர், உறவினரின் பாராட்டுக் கிடைக்கும். குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும். பொது விவகாரங்களில் அமைதி காக்கவும். வெளியூர் பயணங்கள் இனிய அனுபவம் தரும். புத்திரரின் ஆர்வம் மிகுந்த செயல் நிறைவேற உதவுவீர்கள். எதிரி சொந்த சிரமங்களால் விலக நேரிடும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி படிப்படி யாக உருவாகும். பணியாளர், கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்று ஆதாயம் காண்பர். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்புடன் கலை பயில்வதிலும் ஆர்வம் காட்டுவர். சிவன் வழிபாடு, சகல நன்மை தரும்.

## கன்னி

சுக்கிரன், சனி, புதன், கேது அளப்பரிய நன்மை தருவர். தர்ம கர்ம அதிபதி கிரகங்கள் அனுகூலமான இடத்தில் உள்ளதால், செயல்கள் சிறப்பாக அமையும். பணவரவு அதிகரிக்கும். புதிய வீடு வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர், உங்கள் சொல் கேட்டு நடப்பர். பணம் கொடுக்கல், வாங்கலில் இருந்த தாமதம் விலகும். மனைவி, உங்களின் நல்ல குணம் உணர்ந்து பாசம் கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து, உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், பொறுப்புணர்வுடன் செயற்படுவர். பெண்களுக்கு ஆடை ஆபரணச்சேர்க்கை உண்டு. மாணவர்கள் நன்றாக பாராட்டு பெறுவர். முருகன் வழிபாடு, நம்பிக்கை வளர்க்கும்.

## துலாம்

ராகு, சுக்கிரன், சந்திரன் அனுகூல பயன் தரும் அமர்வில் உள்ளனர். கருணை நிறைந்த மனதுடன், நண்பர், உறவினர் கேட்ட உதவியை வழங்குவீர்கள். வெகுநாள் திட்டமிட்ட பணி, இஷ்ட தெய்வ அருளால் நிறைவேறும். வாழ்வியல் நடைமுறையை இன்னும் சிறப்பாக அமைத்துக் கொள்வீர்கள். மனதில் தைரியம் வளரும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகனப் பயணம் எளிதாகும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். மனைவி, உங்கள் எண்ணங்களுக்கு ஏற்ப நடந்து கொள்வார். பெண்கள் குடும்ப நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுவர். மாணவர்கள் முயற்சியுடன் படித்து முன்னேற்றம் காண்பர். அம்பிகை வழிபாடு, மகிழ்ச்சி தரும்.

## விருச்சிகம்

சுக்கிரன், குரு, சந்திரன் ஓரளவு நன்மை தருவர். அன்புக்கு உரியவரின் ஆலோசனை, உங்களை நல்வழிப்படுத்தும். பணம் கொடுக்கல், வாங்கலில் நிதானம் வேண்டும். வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் செயல்பாடு கண்டு பெருமை கொள்வீர்கள். சத்தான உணவும், சீரான ஓய்வும் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும். பகைவரை இனம் கண்டு விலகுவது நல்லது. மனைவியின் குறையை பெரிதுபடுத்தி பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப்படும். பெண்கள், நகை பாதுகாப்பில், உரிய கவனம் பின்பற்றவும். மாணவர்கள், நண்பர்களிடம் நெருங்கிப் பழக வேண்டாம். துர்க்கை வழிபாடு, தைரியம் வளர்க்கும்.

## தனுசு

சுக்கிரன் செவ்வாய் கேது நன்மை தருவர். ஆரோக்கியம் மேம்படும். அன்றாடப் பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். பேச்சில் ஆன்மிகக் கருத்து மிகுந்திருக்கும். உறவினர்களுடன் சந்திப்பால் மகிழ்ச்சி ஏற்படும். வாகன பயன்பாட்டால் இனிய அனுபவம் உண்டாகும். பிள்ளைகள் அறிவார்ந்த செயலால் பெருமை தேடித்தருவர். கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். தொழில் வியாபாரம் கூடு தல் உழைப்பால் வளர்ச்சி பெறும். பணியாளர் பணியிடத்தின் சூழல் உணர்ந்து பணிபுரியவும். பெண்கள் குடும்ப உறுப்பினர்களின் நல் அன்பை பெறுவர்; மாணவர்கள் படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர். தட்சிணாமூர்த்தி வழிபாடு மங்கள வாழ்வு தரும்.

## மகரம்

குரு, சனி, சுக்கிரன் அதிகளவில் நன்மை தருவர். புதிய யுக்தியுடன் பணிகளைத் தொடங்குவீர்கள். அன்றாட வாழ்வில், இனிய அனுபவம் காண்பீர்கள். வாகனப் பயன்பாடு அதிகரிக்கும். புத்திரர், உங்கள் வழிகாட்டுதலை ஏற்று பின்பற்றுவர். உறவினர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். ஆரோக்கியம் பலம் பெறும்.. மனைவியின் செயல்களில் சிறு குளறுபடி வரலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். நண்பர் கேட்ட பண உதவியை தாராளமாக வழங்குவீர்கள். பணியாளர் நிர்வாகத்தின் சட்டதிட்டம் உணர்ந்து செயற்படுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் சிறப்பிடம் பெறுவர். சாஸ்தா வழிபாடு, இடர் நீக்கும்.

## கும்பம்

புதன், சந்திரனால் நன்மை உண்டு. எதிர்பார்த்த நன்மை வர தாமதமாகலாம். உடன்பிறந்தவரின் கருத்தை விமர்சிக்க வேண்டாம். மன அமைதியை பாதுகாக்கவும். புத்திரர் சில விடயங்களில் பிடிவாதத்துடன் செயற்படுவர். பணக்கடன் பெற வேண்டாம். மனைவி பெருந்தன்மை குணத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணியிலக்கை முடிக்க, அதிக அவகாசம் தேவைப்படும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும். பெண்கள் வீட்டுச்செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவது நல்லது. ஆஞ்சநேயர் வழிபாடு, நன்மையைத் தரும்.

## மீனம்

குரு, சுக்கிரன், புதன், சூரியன் ஆதாய பயன் தருவர். மனதில் உத்வேகமும், செயல்களில் வசீகரமும் ஏற்படும். பணிகளைத் திட்டமிட்டு செயலாற்றுவீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். பணவரவு சீராகும். எதிரியால் இருந்த தொந்தரவு குறையும். புத்திரரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். எதிர்கால தேவை கருதி சேமிக்கவும் செய்வீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனைவி சிறு விடயங்களிலும் அக்கறை கொள்வார். இலாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள், பணிகளை விரைந்துநிறைவேற்றிநற்பெயர்பெறுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர். மாரியம்மன் வழிபாடு, நன்மை தரும்.

# புதுக்கட்சி சு.கவுக்கு சவாலாகுமா? சு.கவின் பிளவுக்குக் காரணம் யார்?



எம்.ஐ.முபாறக்

தன் வினை தன்னைச் சுடும் என்ற பழமொழியை நாம் அறிவோம். அந்தப் பழமொழியின் செயல் வடிவத்தை இன்று நாம் இன்றைய இலங்கை அரசியல் அரங்கில் பார்த்துக் கொண்டு இருக்கின்றோம்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. ஜனாதிபதி போன்று உயர் பதவியில் இருப்பவரே அந்தக் கட்சியின் தலைவராக இருக்க முடியும் என்ற அந்தக் கட்சியின் யாப்புக்கு அமைவாக மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

நாட்டிலும் சுமுகமான ஆட்சி மாற்றம்.சுதந்திரக் கட்சிக்குள்ளும் நல்லதொரு தலைமைத்துவ மாற்றம் என்ற ஒரு நிலை தோன்றியது. ஆனால், ஓரிரு நாள்களில் அந்த நிலைமையைக் குழப்பும் சதிகள் அரங்கேற்றப்பட்டன.

இவற்றுக்குப் பல காரணங்கள் இருந்தன. ஜனாதிபதியாகவும் சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் மைத்திரி நியமிக்கப்பட்டமையை சுதந்திரக் கட்சியில் உள்ள சிலரும் அக்கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் உள்ள சிலரும் விரும்பவில்லை.

இவர்கள் கொள்கை ரீதியாக மைத்திரியை எதிர்க்கவில்லை. மைத்திரியின் தலைமையின் கீழ் அரசியல் சுகபோகங்களை அனுபவிக்க முடியாது; ஊழல், மோசடிகளில் ஈடுபட முடியாது; குறுக்கு வழியில் அரசியல் செய்ய முடியாது என்பதால்தான் அவர்கள் மைத்திரியை வெறுத்து மகிந்தவை ஆதரித்தனர்.

மகிந்த ஜனாதிபதித் தேர்தலில் கவிழ்ந்ததும் மைத்திரியும் ரணிலும் ஐக்கிய தேசியக் கட்சியையும் சுதந்திரக் கட்சியையும் இணைத்து இடைக்கால அரசு ஒன்றை நிறுவினர். அந்த அரசின் செயற்பாடுகள் ஊழல்வாதிகளுக்கு எதிரானதாக இருந்தன.

இந்த ஆட்சி தமக்கு ஒத்துவராது என்பதை அவர்கள் உணர்ந்தனர். மகிந்தவின் ஆட்சியில் அவர்கள் எவ்வாறு அரசியல் சுகபோகங்களை அனுபவித்தார்கள், அவர்கள் நினைத்ததைச் செய்யும் அளவுக்கு மகிந்த எவ்வாறு இடங்கொடுத்திருந்தார் என்பதை எண்ணிப் பார்த்த இவர்கள் மகிந்த இல்லாமல் தங்க ளால் அரசியல் செய்ய முடியாது என்பதை உணர்ந்தனர்.

இதனால், மகிந்தவை அழைத்து வந்து சுதந்திரக் கட்சியில் இணைத்து ஆட்சியைக் கைப்பற்றுதல் இல்லாவிட்டால் சுதந்திரக் கட்சியைப் பலவீனப்படுத்தி வேறு அணியாக – வேறு கட்சியாக செயற்படுதல் என்று முடிவெடுத்தனர்.

இந்த முடிவை எடுத்து முன்னின்று உழைத்தவர்கள் சுதந்திரக் கட்சியின் பங்காளிக் கட்சியினர்தான். அவர்களுள் முக்கியமாக விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, தினேஷ் குணவர்த்தன மற்றும் வாசுதேவா நாணயகார போன்ற சுதந்திரக் கட்சி சாராதவர்களாவர்.

நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்தவை இறக்கி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு அவர்கள் திட்டம் தீட்டினர். சுதந்திரக் கட்சியில் போட்டியிட மகிந்தவுக்கு மைத்திரி அனுமதி வழங்கியபோதும், பிரதமர் பதவி அவருக்கு வழங்கப்படமாட்டாது என மைத்திரி அறிவித்ததால் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலின் பின் நாடாளுமன்றில் தனி அணியாக செயற்படத் தொடங்கினர்.

சுதந்திரக் கட்சிக்குள் இருந்துகொண்டு மகிந்தவாலும் அவரது சகாக்களாலும் எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்த அந்த அணி, ஒரு புதிய கட்சியை உருவாக்கி அதன் ஊடாக எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கு முடிவெடுத்துள்ளது.

புதிய கட்சியின் உருவாக்கம் சுதந்திரக் கட்சியைப் பாதிக்கும் என்பதால் சுதந்திரக் கட்சியின் பிளவைத் தடுப்பதற்கும் கட்டி எழுப்புவதற்கும் மைத்திரி காய் நகர்த்தத் தொடங்கியுள்ளார். அது தொடர்பில் முடிவெடுப்பதற்காக சுதந்திரக் கட்சியின் மத்திய குழு அடுத்த வாரம் கூடுகின்றது.

புதிய கட்சியின் உருவாக்கம் உண்மையில் சுதந்திரக் கட்சியைப் பாதிக்குமா? இந்தக் கட்சியை உருவாக்கப் போகின்றவர்கள் யார்? போன்ற விடயங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து மகிந்த அணி சற்றுப் பலமாகத்தான் இருந்தது. ஆனால், நாடாளுமன்றத் தேர்தலை அடுத்து அந்த அணி பலவீமடைந்துள்ளதைக் காணலாம். வரவு – செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு இதற்கு சிறந்த ஆதாரமாகும்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின் நிலையான ஆட்சி ஒன்று மைத்தி – ரணில் தலைமையில் உருவானதால் மகிந்தவின் பக்கம் இருந்த பலர் மீண்டும் மைத்திரி தலைமையிலான சுதந்திரக் கட்சிக்குத் திரும்பி விட்டனர். தொடர்ந்து காய்நகர்த்தினால் மீதமுள்ள சுதந்திரக்கட்சி உறுப்பினர்களையும் இழுத்து விடலாம்.

ஆனால், இழுக்கப்பட முடியாதவர்களாக இருப்பவர்கள் சுதந்திரக் கட்சி சாராத விமல், உதயகம்மன்பில, வாசுதேவ நாணயக்கார மற்றும் தினேஷ் குணவர்த்தன போன்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிகள்தான்.

ஆகவே, மகிந்தவுடன் ஒட்டி இருக்கும் இவர்கள்தான் சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்துவதில் முன்நின்று உழைக்கின்றனர். புதுக் கட்சியை உருவாக்குவதற்கு முயற்சிப்பவர்கள் இவர்கள் தான்.

சுதந்திரக் கட்சி சாராத இவர்களால் உருவாக்கப்படப் போகும் கட்சியை சுதந்திரக் கட்சியின் மாற்றுக் கட்சியாக – சுதந்திரக் கட்சிக்கு சவால் விடும் கட்சியாகப் பார்க்க முடியுமா என்ற கேள்வி இங்கு எழுகின்றது. இந்தக் கட்சியால் சுதந்திரக் கட்சியின் செல்வாக்கைப் பறிக்க முடியுமா, சுதந்திரக் கட்சிக்குள் பெரும் பிளவை ஏற்படுத்த முடியுமா என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

புதுக் கட்சியை சுதந்திரக் கட்சியின் மாற்றுக் கட்சியாகக் காட்டுவதற்கு இவர்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு அடையாளம் மகிந்ததான். இல்லா விட்டால் எந்தத் தேர்தலிலும் ஓர் ஆசனத்தைக் கூட இந்தக் கட்சியால் பெறமுடியாமல் போகும்.

இருந்தாலும், ஆரம்பத்தில் இருந்த மகிந்தவின் மக்கள் செல்வாக்கு ஜனாதிபதித் தேர்தலில் இருந்து மெல்ல மெல்ல குறைந்து கொண்டே போகின்றது. அது நாடாளுமன்றத் தேர்தலில் மேலும் நிரூபிக்கப்பட்டது. அவரது செல்வாக்கு மேலும் சரிவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளனவே தவிர அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் எவையும் இப்போதைக்கு இல்லை.

இந்தநிலையில், புதிய கட்சி உருவானால் அது சுதந்திரக் கட்சிக்கு சவாலாக இருக்குமா என்ற கேள்வி எழுகின்றது. இருப்பினும், சுதந்திரக் கட்சிக்கு ஓரளவேனும் வீழ்ச்சி ஏற்படும் என்பதை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.


சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்த முற்படுபவர்கள் அக்கட்சிக்கு வெளியில் இருப்பவர்கள்தான் என்பதால் அவர்களுடன் இருக்கும் ஒரு சில சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை கட்சிக்குள் மீள இழுப்பதற்கான வேலைகளை மைத்திரி வெற்றிகரமாக செய்து முடிப்பாரேயானால், சுதந்திரக் கட்சி சாராதவர்களால் உருவாக்கப்படும் புதிய கட்சி பற்றி ஜனாதிபதி அலட்டிக்கொள்ளத் தேவை இல்லை.

> இந்த ஆட்சி தமக்கு ஒத்துவராது என்பதை அவர்கள் உணர்ந்தனர். மஹிந்தவின் ஆட்சியில் அவர்கள் எவ்வாறு அரசியல் சுகபோகங் களை அனுபவித்தார்கள். அவர்கள் நினைத்ததைச் செய்யும் அளவுக்கு மகிந்த எவ்வாறு இடங் கொடுத்திருந்தார் என்பதை எண்ணிப் பார்த்த இவர்கள் மகிந்த இல்லாமல் தங்களால் அரசியல் செய்ய முடியாது என்பதை உணர்ந்தனர்.

# முகப்பொலிவை கூட்டும் சந்தனம்

பெண்கள் தங்கள் சருமத்தின் அழகைப் பராமரிப்பதற்கு பல கிறீம்களை உபயோகிப்பதால் தோல் வறண்டு, ஒவ்வாமை போன்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இயற்கைப் பொருள்களை வைத்து செய்யப்படும் மருத்துவம் நல்ல தீர்வைத் தந்திருக்கிறது. மேலும் சருமத்தில் ஏற்படும் பிரச்சினைகளை எளிதில் நீக்க வல்லது.

**தக்காளி:**
சந்தனப் பொடியில் தக்காளியை அரைத்து கலந்து, வேண்டுமெனில் சிறிது முல்தானி மெட்டியையும் சேர்த்து கலந்து, முகத்துக்குப் பேஸ் பேக் போடலாம்.





**எலுமிச்சை சாறு:**
எலுமிச்சை சாற்றுடன் சந்தனப் பொடியை சேர்த்து கலந்து, முகத்துக்கு பேஸ் மாஸ்க் போட்டால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்குவதோடு, பருக்கள் வராமலும் இருக்கும்.

**தயிர்:**
தயிர் ஒரு சிறந்த கிளின்சர் என்று சொல்லலாம். எனவே அந்த தயிரை சந்தனப் பொடியில் சேர்த்துக் கலந்து, முகத்துக்கு மாஸ்க் போட்டால், சருமம் மென்மையாவதோடு, வெள்ளையாகும்.



**முட்டை மற்றும் தேன்:**
மற்றொரு சந்தன பேஸ் பேக் தான் இது. இதற்கு முட்டையை நன்கு அடித்து, தேன் மற்றும் சந்தனப் பொடியைச் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி ஊற வைத்து கழுவினால், சருமத்தில் உள்ள சுருக்கங்கள் நீங்கி, அழுக்குகள் அனைத்தும் வெளியேறி, சருமம் அழகாக இளமையுடன் காணப்படும்.





# கருமை நீங்க...

பொதுவாக பலரும் கவலை கொள்ளும் விடயங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது கருமை நிறப் பிரச்சினை. இதற்கு சில எளிய வழிமுறைகளைப் பின்பற்றினால் நிவாரணம் நிச்சயம்.
உதாரணமாக முதலில் கடலை மா, சிறிது தயிறு, சந்தனப் பவுடர் 2 சிட்டிகை ஆகியவற்றை கலந்து கழுத்துப் பகுதியில் தடவவும், உலர்ந்த பிறகு கழுவவும்.
எலுமிச்சை சாறு அல்லது தயிர் ஏதோ ஒன்றை கருமை படர்ந்த இடத்தில் சுற்றி தடவவும், உலர்ந்த பிறகு கழுவவும், இதைத் தொடர்ந்து செய்து வந்தால் நிவாரணம் நிச்சயம்.

# சுறாப்புட்டு

**தேவையானவை:**

சுறா - அரை கிலோ
வெங்காயம் அல்லது சாம்பார் வெங்காயம் - 300 கிராம் (பொடியாக நறுக்கியது)
மஞ்சள்தூள் - அரைக்கரண்டி
பூண்டு - ஒரு கைப்பிடி (உரித்து பொடியாக நறுக்கியது)
இஞ்சி - ஒரு பெரிய அளவு (பொடியாக நறுக்கியது)
பச்சை மிளகாய் - 6 (பொடியாக நறுக்கியது)
மிளகு - 2 டீஸ்பூன் (தூள் செய்து கொள்ளவும்)
கறிவேப்பிலை - தேவையான அளவு
உப்பு, எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை:**
சுறாவைக் கொதிக்கும் நீரில் 10 நிமிடம் போட்டு வைத்தால், தோலை எளிதில் உரித்து விடலாம்.
பிறகு சுறாவை சுத்தம் செய்து மஞ்சள் தூள், உப்புச் சேர்த்து வேக விடவும். சுறா வெந்ததும் ஆற வைத்து முள் நீக்கி உதிரி உதிரியாக செய்து கொள்ளவும்.
ஒரு சட்டியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் நறுக்கிய வெங்காயம் சேர்த்து தாளிக்கவும். பிறகு பச்சை மிளகாய், பொடியாக நறுக்கிய இஞ்சி, பூண்டு, இவற்றை ஒன்றன் பின் ஒன்றாகப் போட்டு வதக்கவும்.
நன்கு வதங்கியவுடன் உதிர்த்த சுறாவைச் சேர்த்துக் கிளறி போதுமான அளவு மிளகுதூள், உப்பு சேர்த்து. சுறா வெந்து உதிரி உதிரியாக முட்டைப் பொரியல் போல் வந்ததும் மேலே பொடியாக நறுக்கிய கறிவேப்பிலையைத் தூவி இறக்கி விடவும். இப்போது சுறாப் புட்டு தயார்.



# சருமத்தின் வறட்டுத் தன்மையை போக்க

அன்னாசிப் பழத்தை நன்றாக அரைத்து வறண்ட பகுதிகளில் தடவி 15 அல்லது 20 நிமிடங்கள் ஊற விட வேண்டும்.
பின்னர் அதைக் கழுவி, வாசலின்கள் அல்லது ஈரப்பதம் கொடுக்கும் கிறீமைத் தடவலாம். இதனால் உடலில் இயற்கையாகவே வேலை செய்யும் நொதியங்களைத் தட்டி எழுப்பலாம். இதனால் வறட்டுத் தன்மை குறையும்.

# தலைக்கு மருதாணி

முதலில் மருதாணியை தலைல்யில் தேய்த்து ஊற வைத்த பிறகு ஷம்போ போடுவது தவறு. ஏனெனில் மருதாணி ஒரு கன்டினர், ஆகவே மருதாணிக்குப் பிறகு ஷம்போ பயன்படுத்துவது சிறந்ததல்ல. எனவே, முதல் நாள் ஷம்போ போட்டு குளித்து முடியை நன்கு காய வைத்துக் கொள்ளவும்.
அடுத்த நாள் தலைக்கு மருதாணி போட்டு ஊற வைத்துவிட்டு வெறுமனே அலசி விடலாம்.



ஆசாத்

# பகிஷ்கரிப்புக்களும் பயன்பாடுகளும்

உலகில் எத்தனையோ பகிஷ்கரிப்புப் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. ஒரு சில பெரும் போராட்டங்களாக விரிவடைந்து பல சாதனைகளை ஈட்டியுள்ளன. இன்னும் சிலவோ சிறு சலசலப்பை ஏற்படுத்தி விட்டு, பத்திரிகைச் செய்திகளுக்குள் தங்கள் சாதனைகளைக் சுருக்கிக் கொண்டு காலப்போக்கில் மறக்கப்பட்டு விடுகின்றன.

அதிகாரம் கொண்ட ஒரு தரப்பினரால் ஒரு தீர்மானமோ, திட்டமோ முன்வைக்கப்படும்போது அதை ஏற்றுக்கொள்ளாத இன்னுமொரு சாரார் காட்டும் எதிர்ப்பின் ஒரு வடிவமாகவே பகிஷ்கரிப்புப் போராட்டமாக வெளிப்படுகின்றது. அது மக்கள் மயப்பட்டு விரிவடையும்போது சில ஆரோக்கியமான பலாபலன்களை ஈட்டுகின்றது. மக்கள் மயப்படுத்தப்படாமல் ஒரு குறுகிய வட்டத்தினின் நிராகரிப்புக்குள் அடங்கிவிடும் போராட்டங்கள் அர்த்தமிழந்து பயன்பாடுகள் எவையையும் எட்ட முடியாமற் போய்விடுகின்றன.

முதன் முதலாக (BoyCot) என அழைக்கப்படும் பகிஷ்கரிப்புப் போராட்டம் அயர்லாந்து மக்களாலேயே முன்வைக்கப்பட்டது. பிரித்தானிய வல்லரசின் ஆட்சியதிகாரத்துக்கு எதிரான பகிஷ்கரிப்புப் போராட்டம் நாடு பரந்த அளவில் விரிவடைந்தது. அதை முறியடிக்க பிரிட்டன் படைகளும் பிரித்தானிய சிறைகளிலிருந்த பயங்கரக் குற்றவாளிகளும் இறக்கப்பட்டு கொடிய வன்முறைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இறுதியில் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பித்த ஐரிஸ் மக்களின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்று தமது தாயகத்தை விடுவித்தது.

இவ்வாறே அமெரிக்காவில் பேருந்துகளில் நிலவிய நிறப்பாகுபாடு தொடர்பான ஒடுக்குமுறைக்கு எதிராக கறுப்பின மக்கள் பேருந்துகளைப் பகிஷ்கரிக்கும் போராட்டத்தை நடத்தினர். ஒரு பெண்ணின் தலைமையில் ஒரு மாநிலத்தில் தொடங்கிய இந்தப் போராட்டம் நாடு முழுவதும் பரந்து அவர்களை வெற்றி பெற வைத்தது. இந்தியாவில் மகாத்மா காந்தி தலைமையில் இடம்பெற்ற அந்நியத்துணிகள் பகிஷ்கரிப்புப் போராட்டம் நாடு முழுவதும் பெரும் மக்கள் எழுச்சியாக விரிவடைந்து பிரித்தானிய அரசையே அதிரவைத்தது. இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் புதிய வேகத்துடன் இந்தப் பகிஷ் கரிப்புப் போராட்டம் முன்தள்ளியது.

இலங்கையிலும் இப்படி ஒரு சாதனை 1953 ஆம் ஆண்டு இடம்பெற்றது. ஒரு கொத்து 25 சதமாக விற்கப்பட்ட பங்கீட்டு அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து இடது சாரிகளின் தலைமையிலான தொழிற் சங்கங்களால் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அது நாடுமுழுவதும் பரவி கடை அடைப்புகள், ஆர்ப்பாட்டங்கள் எனவேகம்பெற்றது. போக்குவரத்து சேவைகள் உட்பட சகலதும் நிறுத்தப்பட்டு முழு நாடும் ஸ்தம்பித நிலையை அடைந்தது. அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு அமைச்சரவைக் கூட்டத்தை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடத்த முடியாமல் துறைமுகத்தில் நின்ற பிரித்தானியப் போர்க்கப்பல் ஒன்றிலேயே நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டதுடன் அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்க தனது பதவியிலிருந்து விலகினார். முன்னாள் இராணுவ அதிகாரியான சேர். ஜோன் கொத்தலாவல மார்ஜல் முலா என்ற, கண்டவுடன் சுடும் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அந்தப் போராட்டத்தை முறியடித்தார். எனினும் 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. தமிழ் மக்கள் நடத்திய அரச நிர்வாகத்தையே முடக்கும் புறக்கணிப்புப் போராட்டம் சத்தியாக்கிரமாக முனைப்புப்பெற்றுபெரும் மக்கள் போராட்டமாக வெடித்தது. வடக்கு, கிழக்கில் உள்ள கச்சேரிகள் இயங்கமுடியாத நிலை உருவானது. முழுத் தமிழினமுமே எழுச்சிபெற்ற ஒரு மகத்தான போராட்டமாக இது அமைந்ததுடன் ஒவ்வொரு தமிழனின் நெஞ்சிலும் இன விடுதலை உணர்வை கொழுந்து விட்டெரியச் செய்வதில் மகத்தான சாதனை படைத்தது.

> **உலகில் எத்தனையோ பகிஷ்கரிப்புப் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. ஒரு சில பெரும் போராட்டங்களாக விரிவடைந்து பல சாதனைகளை ஈட்டியுள்ளன. இன்னும் சிலவோ சிறு சல சலப்பை ஏற்படுத்தி விட்டு. பத்திரிகைச் செய்திகளுக்குள் தங்கள் சாதனைகளைக் சுருக்கிக் கொண்டு காலப் போக்கில் மறக்கப்பட்டு விடுகின்றன.**

இப்படியாக பல பகிஷ்கரிப்புப் போராட்டங்கள் உடனடியாக இல்லாவிட்டாலும் அவை மக்கள் மயப்பட்டு விரிவடையும்போது ஆரோக்கியமான பலாபயன்களை வழங்கியுள்ளன. எனினும் சரி யான கொள்கை, பொருத்தமான காலம் என்பனவற்றைக் கணக்கெடுக்காமல் நடத்தப்படும் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் எவ்வித பயனுமின்றி தோல்வியில் முடிவடைவதுண்டு. சில சமயங்களில் எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தி விடுவதுண்டு.

2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலைப் பகிஷ் கரிக்கும்படி விடுதலைப்புலிகள் தமிழ் மக்களைக் கோரினர். இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஒன் றுக்கொன்று சளைத்தது அல்ல என்பதால் தமிழ் மக்களும் அதை முழுமையாக ஏற்றுக்கொண்ட னர். அதன் பயன் தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள, முஸ்லிம் மக் களும் ஒரு கொடிய சர்வாதிகார ஆட்சிக்குள் தவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தமிழ் மக்கள் முகம்கொடுத்த பேரழிவுகள் சொல்லித்தான் தெரிய வேண்டு மென்பதில்லை.

தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் தேவை என்ற நிலையில் தமிழ்க் காங்கிரஸ் இந்து பல்கலைக்கழகம் என்றும் தமிழரசுக் கட்சியினர் தமிழ்ப் பல்கலைக்கழகம் எனவும் மோதிக்கொண்டு தமிழ் மக்களுக்கான பல்கலைக் கழகம் அமைக்கப்படுவதை10 பேர் அடையாள மானியம் ஒதுக்கப்படுவதற்குள் தடுத்து வைத்தனர். 1970இல் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா யாழ்ப்பாணப் பலக்லைக்கழகத்தை அமைக்க முடிவெடுத்திருந்தார். வெவ்வேறு காரணங்கள் கூறப்பட்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. பல தமிழ்ப் பேராசிரியர்கள் உபவேந்தர் பதவியையே ஏற்க மறுத்துப் பகிஷ்கரித்தனர். இந்த நிலையில் தினகரன் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த கைலாசபதி உபவேந்தராக நியமிக்கப்பட்டு சிறிமாவோ பண்டாரநாயக்காவால் யாழ். பல்கலைக்கழகம் திறந்து வைக்கப்பட்டது. அன்று கூடத்தமிழரசுக் கட்சியினர் சிறிமாவோவின் வருகைக்கு எதிராகக் கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவித்தமையை நாம் மறந்து விடமுடியாது. அன்று அந்தப் பகிஷ்கரிப்பு வெற்றி பெற்றிருந்தால் வடக்குக்கு ஒரு பல்கலைக்கழகமே இல்லாமல் போயிருக்கும். இப்படியான ஒரு ஆபத்து 2015 ஆம் ஆண்டிலும் ஏற்பட இருந்தது. அதாவது ஜனவரி 8 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி ஒரு சில அரசியல் சக்திகளால் அறைகூவல் விடுக்கப்பட்டது. ஆனால் தமிழ் மக்கள் பகிஷ்கரிப்பையே பகிஷ்கரித்து விட்டு மைத்திரிபால சிறிசேனவுக்கு அமோகமான முறையில் ஆதரவு வழங்கினர். அதன் காரணமாக ஒரு கொடிய இனவாத சர்வாதிகார ஆட்சி தூக்கி வீசப்பட்டு, ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. தமிழ் மக்கள் அரைவேக்காட்டு அரசியலை ஏற்றுக் கொண்டுதேர்தலைப்பகிஷ்கரித்திருந்தால் இப்போதும் மகிந்தவின் கொடூர ஆட்சி நிலவியிருக்கும். இப்படியான ஒரு நிலையில் தான் வடக்கில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் கலந்துகொள்ளவிருந்த பொங்கல்விழாவைத் தமிழ்மக்கள்பகிஷ்கரிக்க வேண்டுமெனத் தமிழ் அரசியல் கைதிகள் கோரியிருந்தனர்.

அவர்களின் கோரிக்கை நியாயமானது. எத்தனையோ போராட்டங்களை நடத்தியும் அவர்கள் எத்தனையோ வருடங்களாக நியாயமற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். புதிய அரசிலும் அவர்கள் இருமுறை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தியும் அவர்களுக்கு விமோசனம் கிட்டவில்லை. எனவே, தங்களுக்காகத் தமிழ்மக்கள் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என எதிர்பார்ப்பதில் நியாயமில்லை எனக் கூறிவிடமுடியாது.

அந்த வகையில் வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தலைமையில் சிலர் கறுப்புக் கொடிப்போராட்டம் மூலம் இரு நாள்கள் முன்பாகவே தமது எதிர்ப்பை வெளியிட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரில் மாவை சேனாதிராசாவைத் தவிர வேறு எவரும் கலந்து கொள்ளவில்லை. அவரும் வலி.வடக்கு மக்களின் குடியேற்றம் பற்றிப் பிரதமருடன் பேசவே அங்கு வந்ததாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால் இந்தப் பகிஷ்கரிப்பின் மூலம்கிடைக்கக்கூடியபலாபயன் என்ன என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. உயிரைப் பணயம் வைத்து தமிழ் அரசியல் கைதிகள் நடத்திய உணவு தவிர்ப்புப் போராட்டத்தின்போதே வாக்குறுதிகளை வழங்கி அதை நிறுத்தி விட்டு இன்றுவரை வெவ்வேறு சாட்டுக்களைச் சொல்லி அவற்றை நிறைவேற்றாத அரசு பகிஷ்கரிப்புக்கோ, கறுத்தக் கொடிப் போராட்டத்துக்கோ மசிந்து கொடுத்து விடுமா? அரசுடன் ஒரு மென்போக்கு அரசியலை மேற்கொண்டு வரும் ஒரு தமிழ்த் தலைமை கொடுக்கக்கூடிய அரசியல் அழுத்தங்களை விட பகிஷ்கரிப்பால் எதையாவது சாதித்துவிடமுடியுமா? அரசியல் கைதிகளின் விடுதலை தள்ளிப் போவதற்கு கைதிகளின் சட்டத்தரணிகளே காரணம் என அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தமை பற்றிய உண்மையை மேடையில் வைத்தே எவராவது அம்பலப் படுத்தினார்களா?

எனவேஎவ்வித பயனுமற்ற சிறு சலசலப்பைக் கூட ஏற்படுத்த முடியாத பகிஷ்கரிப்பாகவே இது பயன் கண்டுள்ளது.

அதேவேளையில் இந்தப் பொங்கல் விழாவில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்துகொண்டார். ஏற்கனவே அவருக்கும் பிரதமருக்குமிடையே மோதல்கள் இடம்பெற்றதும், கசப்புணர்வு நிலவியதும் உண்மை. எனினும் அவர் அந்த விழாவில் கலந்து கொண்டார். அங்கு அவர் மேடையிலேயே பகிரங்கமாக மீள்குடியேற்றம், அரசியல் கைதிகள் விவகாரம், காணாமற்போனோர் பிரச்சினை, வடக்கில் நிலவும் அதீத இராணுவப் பிரசன்னம் போன்ற விடயங்களில் எவ்வித விட்டுக் கொடுப்புமின்றி தமிழ் மக்களின் தேவைகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தினார். மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு மத்திய அரசு போடும் முட்டுக்கட்டைகளைச் சுட்டிக்காட்டினார். இவற்றுக்கெல்லாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மக்கள் முன்பு பதிலளிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தட்டிக் கழிக்க முடியாமல் சில வாக்குறுதிகளை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. காணாமற்போனோரில் தங்கள் பட்டியலில் இல்லாதவர்கள் உயிருடன் இருப்பதற்கு சாத்தியமில்லையென அவர் வெளியிட்ட கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அது பல கேள்விகளை எழுப்பவும் அந்தப் பிரச்சினையை அடுத்த கட்டத்துக்கு முன்னெடுக்கவும் ஒரு வலுவான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அதன் அடிப்படையில் மனித உரிமை அமைப்புக்களும், தமிழ் மக்களும் பல மனித குல விரோத நடவடிக்கைகளை இனம் காணக் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அதேவேளையில் பிரதமர் வாக்களித்ததன் அடிப்படையில் குறைந்தபட்ச நடவடிக்கைகளையாவது மேற்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்பட்டுள் ளது.

முதலமைச்சர் பொங்கல் விழாவைப் பகிஷ்கரித்திருந்தால் நல்லாட்சியில் தமிழ் மக்களுக்கு தேனும்பாலும் ஓடவிடப்படுகிறது எனச் சில கண்துடைப்புக்களைப் பட்டியலிட்டு விட்டுப் போயிருப்பார்கள்.

பகிஷ்கரிப்பு என்பது மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒரு ஜனநாயகம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அது இடம், காலம், சந்தர்ப்பம் போன்ற விடயங்களையும் சரியாகக் கணக்கெடுத்து தந்திரோபாய அடிப்படையில் கையாளப்படும் போது பயனுள்ள பலாபலன் களை விளைவிக்கும். ஆனால் அது தவறான முறையில் கையாளப்படும்போது எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தி விடும் அபாயம் உண்டு.





முன்னைய ஒப்பந்தத்தின் கீழ் அணு குண்டுச் சோதனைகளுக்கான உலைகளை மூடுவதற்கு ஈரான் அணுவுலைகளில் சிமெந்துக் கலவை கொண்டு நிரப்புவதற்கு தொடங்கியிருந்த வேளையில் அமெரிக்காவின் புதிய பொருளாதாரத்தடைகள் அறிவிக்கப்பட்டன.

# ஈரானின் ஏவுகணைச் சோதனை; அதிருப்தியில் அமெரிக்க நிர்வாகம்

## சில தடைகளைத் தொடர்ந்து நீடிக்கத்தீர்மானம்

ரெங்கன்

ஈரான் சர்வதேசத்துடன் செய்து கொண்ட அணு ஆய்வு தவிர்ப்பு ஒப்பந்தத்தை அந்நாடு செயற்படுத்த ஆரம்பித்ததைத் தொடர்ந்து அதன் மீதான பொருளாதாரத் தடைகளை சர்வதேச நாடுகள் கைவிடத் தொடங்கியிருக்கின்றன. இருந்த போதிலும் ஈரான் தொலைத்தூர ஏவுகணைச் சோதனைகளை (பாலிஸ்டிக் மிசைல் ரெஸ்றஸ்) நடத்தியிருப்பது பெரும் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது. அதனால் ஈரான் மீது புதிய பொருளாதாரத்தடைகள் சிலவற்றை அமெரிக்கா விதித்திருக்கின்றது.

முன்னைய ஒப்பந்தத்தின் கீழ் அணு குண்டுச் சோதனைகளுக்கான உலைகளை மூடுவதற்கு ஈரான் அணுவுலைகளில் சிமெந்துக் கலவை கொண்டு நிரப்புவதற்கு தொடங்கியிருந்த வேளையில் அமெரிக்காவின் புதிய பொருளாதாரத்தடைகள் அறிவிக்கப்பட்டன.

ஈரானின் தொலைத் தூர ஏவுகணைச் சோதனை குறித்து அமெரிக்காவும் சர்வதேச நாடுகளும் அதிருப்தி அடைந்திருந்தன. ஈரானின் ஏவுகணைச் சோதனையானது, அவைகள் மூலம் வெகு தூரத்தில் உள்ள ஈரானின் எதிரி நாடுகளின் இலக்கு நோக்கி அணுகுண்டுகளை வீசும் சாத்தியம் இருப்பதே இந்த அச்சத்துக்குக் காரணம். குறிப்பாக இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் தீராத பகைமை இருந்து வருகின்றது. இஸ்ரேல் என்ற நாடே பூமியில் இருக்கலா காது என்பது ஈரான் தலைவர்களின் கொள்கையாக இருந்து வந்துள்ளது. இந்த நிலையில்தான் ஈரான் ஏவுகணைச் சோதனை நடத்தியதை அமெரிக்காவும் சர்வதேசமும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றன.

ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் நீக்கியதைத் தொடர்ந்து அமெரிக்கா ஈரான் மீதான வேறு 11தடைகளை விதித்தது. அத்துடன் அமெரிக்க வங்கிக் கணக்குகளைப்பயன்படுத்தி ஈரானின் ஏவுகணைத்திட்டத்துக்கு உதவும் தனிப்பட்டவர்களின் தொடர் புகளையும் தடை செய்தது.

பயங்கரவாதம் மற்றும் நிதித்துறை புலனாய்வுகளுக்கான அமெரிக்கப் பதில் கீழ் நிலைச் செயலாளர் அடாம் ஜே.ஸீபின் விடுத்த ஓர் ஊடக அறிக்கையில் ஈரானின் கண்டம் விட்டு கண்டம் பாயும் வெகுதூர (பாலிஸ்டிக் மிசைல் புரோக்கிராம்) ஏவுகணைத்திட்டமானது பிராந்திய மற்றும் உலகப்பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது. அதனால் சர்வதேச பொருளாதாரத் தடைக்கான ஒரு விடயமாகவே அது தொடர்ந்து இருந்து வரும் - என்றார்.

அமெரிக்க திறைசேரியின் வெளிநாட்டுச்சொத்துக்கள் கட்டுப்பாட்டு பிரிவு கூறுகையில்; ஐக்கிய அரபுக்குடியரசில் இருந்து செயற்படும் மப்ரூகா வர்த்தக நிறுவனத்தின் சொத்துக்களும் முடக்கப்படுகின்றன. இந்த நிறுவனம் ஈரானின் ஏவுகணைத்திட்டத்துக்கு ஓரளவு பங்களிப்புச் செய்து வந்துள்ளது. இதேபோன்று ஈரானின் திட்டங்களுக்கு உதவி வரும் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களின் சொத்துக்களும் முடக்கப்படும். குறித்த நிறுவனங்கள் 2015 ஆம் ஆண்டு ஈரான் நடத்தியுள்ள ஏவுகணைச் சோதனைகளை மேற்பார்வை செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் கைதிகள் பரிமாற்றம் தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்றுவந்ததால் பொருளாதாரத் தடைகளை மீண்டும் கொண்டு வருவது தாமதமானதாகக் கூறப்படுகின்றது.

### ஈரானின் கடும் கண்டனம்

பொருளாதாரத்தடைகளை அமெரிக்கா ஈரானின் தொலை தூர ஏவுகணைப் பரிசோதனை தொடர்பாக விதித்திருப்பது சட்டத்துக்கு மாறான செயல். ஏனென்றால் அமெரிக்கா மத்திய கிழக்குக்கான ஆயுத விற்பனையைத் தொடர்ந்து செய்து வருகின்றது என்று ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்காவின் செயற்பாட்டின் தார்மீக ரீதியிலோ சட்டபூர்வமாகவோநியாயம் கிடையாது என்று ஈரான் குற்றஞ்சாட்டியது. இந்தப் பிராந்தியத்திற்கு அமெரிக்கா பல 10 பில்லியன் பெறுமதியான ஆயுதங்களை வருடந்தோறும் விற்று வருகின்றது. இந்த ஆயுதங்கள் பலஸ்தீன, லெபனானிய மற்றும் சமீபகாலத்தில் ஜேர்மனிய குடி மக்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டு போர்க்குற்றம் புரிவதற்கு பயன்படுத்தப்படுகின்றன என்று ஈரான் கூறியுள்ளது.

அணு ஆயுத ஒப்பந்தம் மற்றும் சிறைக்கைதிகள் விடுதலையானமை அதிபர் ஒபாமாவின் இராஜதந்திரத்துக்கான வெற்றியாகக் கருதப்படுகின்றது. ஈரான் உடனான அணு ஆயுத ஒப்பந்தம் ஆனது இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகள் அனைத்துக்குமே தீர்வாக அமையாவிட்டாலும் இராணுவ் மோதல்களை விட கடுமையான இராஜதந்திர அணுகு முறையே பயனளிக்கும் என்ற அவரது கொள்கை வெற்றி பெற்றிருக்கிறது.

ஈரானுடனான அணு ஆய்வு தவிர்ப்பு ஒப்பந்தமானது அமெரிக்கா, சீனா, ரஷ்யா, ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நடந்துள்ள வாதப் பிரதிவாதங்களின் பின்னர் உருவாக்கப்பட்டதாகும். ஈரானுடன் அணு ஆயுத ஒப்பந்தமானது அந்த நாட்டின் மீதான சர்வதேச பொருளாதாரத்தடைகளை நீக்குவதற்கு வழி செய்திருந்த போதிலும் ஏவுகணைதயாரித்தல் மற்றும் பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிப்பது போன்றவை தொடர்பாக அமெரிக்கா ஒருதலைப் பட்சமாக விதித்த தடைகள் நீடிக்கவே செய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் நடைமுறைக்குவந்த தினத்துக்கு அடுத்தநாள் ஈரானில் சிறைவைக்கப்பட்டிருந்த அமெரிக்கக் கைதிகளின் குழு ஒன்று விடுவிக்கப்பட்டு அமெரிக்கா வந்து சேர்ந்தனர். அதே சமயம் அமெரிக்காவில் சிறைவைக்கப்பட்டிருந்த ஈரானியர்களும் விடுவிக்கப்பட்டனர்.

ஈரானின் தொலைத் தூர ஏவுகணை சோதனை குறித்து அமெரிக்காவும் சர்வதேச நாடுகளும் அதிருப்தி அடைந்திருந்தன. ஈரானின் ஏவுகணைச் சோதனையானது , அவைகள் மூலம் வெகு தூரத்தில் உள்ள ஈரானின் எதிரி நாடு களின் இலக்கு நோக்கி அணுகுண்டுகளை வீசும் சாத்தியம் இருப்பதே இந்த அச்சத்துக்குக் காரணம்.





# தக்கவைக்கப்படவேண்டிய முன்னிலை!

ஸ்டோ ஸ்வாமி

கடந்த 19ஆம் 20ஆம் திகதிகளில் நடந்தேறிய யாழ். பல்கலைக்கழக 31ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவுக்கான வாசல் வரவேற்பு வளைவு அலங்காரம் வழமையான பாரம்பரியத்திலிருந்து வேறுபட்டிருந்தது மட்டுமல்லாமல் சற்று குழப்பத்திற்குரியதாகவும் இருந்தது. குழாய் போன்ற அமைப்பு ஒன்றினூடாக பட்டத்தைச் சுட்டும் வகையான பட்டதாரித் தொப்பிகள் (squre academic caps) மறுபுறத்தில் வந்து குவிந்து சிதறுவது போன்ற தோற்றப்பாட்டினைப் புலப்படுத்தும் வகையில் வரவேற்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. க.பொ.த. (உ/த) பரீட்சையில் தடைதாண்டி மூன்றோ, நான்கோ அல்லது ஐந்தோ வருடங்களை பல்கலைக்கழகத்தினுள் செலவிட்டு பட்டதாரியாக சான்றுப்படுத்தும் நாளில், அங்கே அமைக்கப்பட்டிருந்த இத்தகையதோர் அலங்காரம், பட்டதாரிகள் பற்றிய அல்லது பட்டம் பெறுதல் பற்றிய நேர்நிலை (Positive) சிந்தனையைத் தோற்றுவித்ததா என்பது விவாதத்திற்குரியது.

அதே 19ஆம் திகதியன்று கொழும்பிலிருந்து வெளியாகும் 'சிலோன் ருடே' எனப்படும் ஆங்கிலத் தினசரி தனது பிரதான செய்தித்தலைப்பைப் பின்வருமாறு பிரசுரித்திருந்தது.

'UNI QUALIFIERS HIGHEST FROM JAFFNA'.

இதற்கு மேலதிகமாக, அதே பத்திரிகை கடந்த வியாழக்கிழமைதனது ஆசிரியர்தலையங்கத்திலும் அதே விடயத்தையே மேலும் சில வரலாற்று தடயங்களையும் விடயங்களையும் தூசு தட்டி உள்ளடக்கித் தீட்டியிருந்தது.

2015ஆம்ஆண்டுகல்விப்பொதுத்தராதரப்பத்திர உயர்தரப்பரீட்சைக்குத்தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோரில் மாவட்ட ரீதியாக அதிக சதவீதத்தை இம்முறை யாழ். மாவட்டம் கொண்டிருக்கிறது. இதன்படி யாழ். மாவட்டத்திலிருந்து 2015ம் ஆண்டில் 7346 மாணவர்கள் க.பொ.த பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். இவர்களிலிருந்து 4872 பேர் பல்கலைக்கழகத்துக்கான அனுமதிக்குத்தகுதியுடையவர்களாகியிருக்கிறார்கள். அதாவது பரீட்சைக்கு தோற்றியோரில் 66.32 வீதமானோர் பல்கலைக்கு நுழைவதற்கான தராதரத்தைக் கொண்டிருப்பதுடன் இந்தச் சதவீதமே இம்முறை இலங்கையில் உள்ள மாவட்டங்களிலே உயர்வான பெறுபேற்று மட்டமாகவும் அமைந்திருக்கிறது. இது மாத்திரமன்றி, விஞ்ஞானத் துறையில் மேல் மாகாணமும் வர்த்தகத்துறையில் சப்ரகமுவ மாகாணமும் கலைத்துறையில் ஊவா மாகாணமும் முன்னணிபெறுபேற்றைப் பெற்றிருக்க வடக்கு மாகாணம் கணிதத் துறையில் முதலிடத்தை பெற்றுக்கொண்டுள்ளது. அண்மையில் வெளிவந்திருந்த உயர்தரப் பரீட்சை முடிவுகளை அடுத்து பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ள பகுப்பாய்வுத் தகவல்களை வைத்து இந்த விடயம் பகிரங்கத்துக்கு வந்திருக்கிறது.

## புலமைப்பரிசில் பரீட்சை அடைவிலும் முன்னிலைதான்!

உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்று உயர்வைப் போலவே 2015ஆம் ஆண்டு ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளிலும் விளையும் பயிரை முளையிலே நிரூபித்திருக்கிறார்கள் வடமாகாண சின்னஞ்சிறுசுகள். 2015ஆம் வருடதரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் வெட்டுப் புள்ளிக்கு மேலதிகமான புள்ளிகளைப் பெற்றவர்கள் வீதத்திலும் முதன்மை நிலையை தக்கவைத்திருக்கிறார்கள் அவர்கள். இதன்படி, வடமாகாணத்திலிருந்து 18871மாணவர்கள் மேற்படி பரீட்சைக்குத் தோற்றியிருக்க, அவர்களிலிருந்து 2148 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேலான புள்ளியைப் பெற்றிருக்கிறார்கள். இது 11.38 சதவீதமாகும். இலங்கையின் மாகாணங்களுக்கிடையே இதுவே அதி உயர்வான பெறுபேறு ஆகும். இதற்கு அடுத்தபடியாக 10.64 வீதத்தினைக் கொண்டு சப்ரகமுவ மாகாணமும் அதற்கடுத்த படியாக 10.51 வீதத்துடன் வடமேல் மாகாணமும் வரிசைப்படுத்தப்படுகின்றது.

2014 உ/த பரீட்சை முடிவுப் பகுப்பாய்வுகளின் பிரகாரம், வடமாகாணம் 61.71வீத பெறுதியுடன் இரண்டாம் இடத்திலும் 2013 இல் புதிய பாடத்திட்ட பரீட்சை முடிவுகளின் பிரகாரம் 62.23 வீத பெறுதியுடன் முதலிடத்திலும் காணப்பட்டது. ஆனால், 2012 இல், புதிய பாடத்திட்டப்படி 61.12 வீத அடைவுடன் 7ஆம் இடத்திலும் பழைய பாடத்திட்டப்படி 48.38 பெறுதியுடன் கடைசி இடமான 9ஆம் இடத்திலும் வடமாகாணம் வரிசைப்படுத்தப்பட்டிருந்தது.

உச்சமான போர் நடந்த காலத்திலும், மின்சார வசதியற்ற காலப்பகுதிகளிலும், ஊரடங்கு மற்றும் பொருளாதாரத்தடை உள்ளிட்ட தொல்லைகள் நிலவிய பொழுதுகளிலும் தொய்வின்றிப் பரீட்சைகள் நடந்தன. மட்டுமன்றி நாட்டின் ஏனைய பாகங்களுக்கு எத்தகைய கணிப்பீட்டுமுறை பின்பற்றப்பட்டதோ அதே அளவீடுகளே வடக்கு உள்ளிட்ட பிரதேசங்களிலும் பின்பற்றப்பட்டன.

## ஞாபகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல்!

இனமுரண்பாடுகள் ஆயுதவழிப்போராட்டத்துக்கு இட்டுச்சென்றதற்கான காரணங்களை பட்டியற்படுத்த முனைவோர் சில தசாப்தங்களுக்கு முன்னர் திணிக்கப்பட்ட தரப்படுத்தல் முறைமையை முதன்மைக்காரணிகளுக்குள் பட்டியலிடுவர். தமிழர் பலர் உயர்கல்விக்காக பல்கலைக்கழகங்களுக்கு நுழைவதைத் தடுப்பதற்காகவே தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டது என்றே இன்று வரையும் நம்பப்படுகிறது. அத்தகைய தரப்படுத்தல் திட்டத்தின் அறிமுகமே இளைஞர் பலரிடம் கிளர்ச்சி உணர்வைத் தூண்டியிருந்தது.

## இளமாணிப்பட்டம் வரையான இலவசக்கல்வி!

இலங்கையைப் பொறுத்தவரை இலவசக்கல்வியின் வரப்பிரசாதம் இளமாணிப்பட்டக்கற்கை வரை கிடைக்கின்ற அதேவேளை பல்கலைக்குள் நுழைவதற்கு பெரிய போட்டித்தன்மை நிலவுவதும் நோக்கத்தக்கது. இவ்வாண்டில் பல்கலைக்கழகத்திற்கு நுழையும் மாணவர்களின் எண்ணிக்கையை மேலும் 10 வீதத்தால் அதிகரிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

## வடக்கின் கல்வி நிலை

தெற்கிலிருந்து வடக்கிற்கு கல்வி கற்க பலர் வருகை தந்த வரலாறுகளையும் நூறாண்டுகளைத் தாண்டி கல்வியளிக்கும் கல்விக்கூடங்களையும் கொண்டமைந்தது வடக்கு. தெற்காசியாவிலேயே பெண்கள் தங்கிப் படிப்பதற்கான வசதியுடன் நிறுவப்பட்ட முதலாவது பாடசாலை கூட யாழ்ப்பாணத்திலேதான் இருக்கின்றது. அது அமைக்கப்பட்டது 1824இல். அண்மைக் கால போரியல் அனர்த்தங்களினால் பெறுபேற்று அடைவு மட்டங்கள் தாழ்நிலைக்குச் சென்றும் கல்விப்பணியாளர்கள் வெளியேறியும் வீழ்ச்சிகண்டுவந்திருந்தாலும், அண்மைய முன்னேற்றங்கள் மகிழ்ச்சிக்குரியதாகவே இருக்கின்றன. குறிப்பாக தமது பிரதேசத்திலிருந்து பணியாற்றி பெறுபேற்று அடைவு மட்ட எழுச்சிகளுக்கு வழிவகுக்கும் ஆசிரியப் பெருந்தகைகள் பாராட்டுக்குரியவர்கள்.

*எண்சாணுடம்பினுக்குச் சென்னி சிறந்திடும்*
*என்றே உரைப்பது போல*
*பொன் சேரிலங்கை சிரமெனவே வரும்*
*புண்ணியமோங்கிடும் யாழ்ப்பாணம்*

என்று தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடிய வரிகளுக்கொப்ப, உடலுக்குத் தலை எவ்வளவு பிரதானமோ அதற்கு நிகரான முக்கியத்துவத்தினை இலங்கையின் தலைப் பிரதேசமான யாழ்ப்பாணம் கொண்டிருக்கிறது. அந்த முக்கியத்துவத்தை நமது பெறுபேறுகள் நிரூபித்து நிற்கட்டும்!

தெற்கிலிருந்து வடக்கிற்கு கல்வி கற்க பலர் வருகை தந்த வரலாறுகளையும் நூறாண்டுகளைத் தாண்டி கல்வியளிக்கும் கல்விக்கூடங்களையும் கொண்டமைந்தது வடக்கு. தெற்காசியாவிலேயே பெண்கள் தங்கிப் படிப்பதற்கான வசதியுடன் நிறுவப்பட்ட முதலாவது பாடசாலை கூட யாழ்ப்பாணத்திலேதான் இருக்கின்றது. அது அமைக்கப்பட்டது 1824இல். அண்மைக் கால போரியல் அனர்த்தங்களினால் பெறுபேற்று அடைவு மட்டங்கள் தாழ்நிலைக்குச் சென்றும் கல்விப் பணியாளர்கள் வெளியேறியும் வீழ்ச்சி கண்டு வந்திருந்தாலும், அண்மைய முன்னேற்றங்கள் மகிழ்ச்சிக்குரியதாகவே இருக்கின்றன.



# சர்வதேச ரெனிஸ் உலகில் அதிர்ச்சி கொடுத்துள்ள 2016

### சூதாட்ட விவகாரங்கள்

கிரிக்கெட், கால்பந்து, ஹொக்கி போன்று அல்லாது சர்ச்சைகள் மிகவும் குறைந்த விளையாட்டாக இதுவரைகாலமும் கருதப்பட்டு வந்ததுதான் ரென்னிஸ். ஆனால் இந்தக் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் தவிடுபொடியாக்கி சர்ச்சை என்றாலே ரென்னிஸ்தான் என்று புரட்டிப் போட்டுள்ளது நடப்பு வருடம். இதைத்தவிர நடைபெற்றுவரும் சர்வதேச அந்தஸ்துப் பெற்ற ஆஸ்திரேலியாத் தொடரில் நிகழ்ந்துள்ள சில அதிர்ச்சித் தோல்விகளும் ரென்னிஸ் உலகைத் திரும்பிப் பார்க்க வைத்துள்ள மற்றொரு பிரதான காரணமாக அமைந்துள்ளது.

ரென்னிஸில் இதுவரை காலமும் இருக்கும் ஒரே பிரச்சனைக்குரிய விடயம் ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது பாதியில் விலகுதலும், குறித்த நேரத்துக்கு ஆடுகளத்துக்கு சமுகம் தராதமையும்தான். கிரிக்கெட், கால்பந்து, ஹொக்கி போன்று ஊக்கமருந்துப் பயன்பாடுகளும், ஆட்ட நிர்ணயச்சூதாட்டங்களும் ரென்னிஸில் இடம்பெறுவதில்லை. இந்தக் கருத்துக்கள் கடந்த வருடத்துடன் வழக்கொழிந்துவிட்டன. சர்வதேச செய்தி நிறுவனங்கள் சில 2000ஆம் ஆண்டிலிருந்து இந்த வருடம் வரை பலதடவைகள் ரென்னிஸ் வீரவீராங்கனைகள் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவித்து செய்தி வெளியிட்டிருந்தன. அந்தச் செய்திகளில் தரப்படுத்தலில் முதல் 50 இடங்களுக்குள் உள்ள வீரவீராங்கனைகளே அவ்வாறு சூதாட்டத்தில் ஈடுபட்டதாகவும், பழைமை மிகுந்த விம்பிள்டன் தொடரில் கூட இதுவரை மூன்று ஆட்டங்களில் சூதாட்டம் நடைபெற்றமைக்கான சான்றுகள் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

எல்லா விளையாட்டு அமைப்புக்களையும் போல சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் ஆரம்பத்தில் இந்தக் செய்தியை மறுத்திருந்தாலும் தற்பொழுது ஏற்கும் நிலையில் உள்ளது. இதற்குக் காரணம் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரரான ஜோகோவிக்கின் வாக்குமூலம்தான். 2007ஆம் ஆண்டு ரென்னிஸ் தொடருக்காக ஜோகோவிக் ரஷ்யா சென்றிருந்தபொழுது, அவரை அணுகிய சூதாட்டத் தரகர் ஒருவர் இந்த ஆட்டத்தில் தோல்வியடையுமாறும் அதற்காகப் பெரும்தொகைப் பணத்தைத் தரத் தயாராக இருந்ததாகவும், தான் அவரை எச்சரித்து அனுப்பியதாகவும் குறிப்பிட்டிருந்தார். ஜோகோவிக்கின் இந்தக் கருத்தையடுத்து பிரச்சனையை முழுவதுமாக நிராகரிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது ரென்னிஸ் சம்மேளனம். மட்டுமல்லாமல் முன்னணி வீரர்களும் வீராங்கனைகளும் சூதாட்டத்தில் ஈடுபட்டவர்களது விவரங்களைப் பகிரங்கப்படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். வீட்டுக்குவீடு வாசற்படி என்பதைப்போல அனைத்து விளையாட்டுக்களிலும் இருக்கும் பிரச்சனைகள் ரென்னிஸிலும் இருக்கத்தான் செய்கின்றன.

### அதிர்ச்சித் தோல்விகள்

ரென்னிஸ் உலகத்திற்கு அனைவரதும் கவனமும் திரும்ப மற்றுமொரு காரணமாகியுள்ளது நடைபெற்றுவரும் ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர்தான். நடப்பு வருடத்தின் முதலாவது சர்வதேச அந்தஸ்துப் பெற்ற தொடரான இது, மெல்பேர்ண் நகரில் நடைபெற்று வருகிறது. கடந்த வருடத்தில் ஒரு சர்வதேச கிண்ணத்தையும் வெல்லாத நடால் இந்த வருடத்திலாவது வெற்றிகளைக் குவிப்பார் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கையில் குறித்த தொடரின் முதல் சுற்றுடனேயே நடையைக் கட்டினார். முதல் சுற்றுடன் நடால் வெளியேறுவது இது இரண்டாவது முறை. 2009ஆம் ஆண்டின் பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் ஏற்கனவே ஒருமுறை முதல் சுற்றுடன் வெளியேறியிருந்தார். ஆண்கள் பிரிவில் நடால் அதிர்ச்சி கொடுக்க பெண்கள் பிரிவில் வீனஸ் வில்லியம்ஸ் முதல் சுற்றுடன் வீழ்ந்தார். கிவித்தோவா, கேலப் இருவரும் இரண்டாம் சுற்றுக்களுடன் வெளியேறினர். மொத்தத்தில் இந்த வருடத்தின் ரென்னிஸ் தொடர் அதிர்ச்சிகரமான வகையிலும், பல்வேறுபட்ட திருப்பங்களுடனும் ஆரம்பித்துள்ளது என்றால் மிகையாகாது.

# மீண்டும் மிரட்ட வருவேன்

## இது ஸ்ரெயினின் எச்சரிக்கை

ஓர் அணியின் தோல்விகளை வைத்து சில தனிப்பட்ட வீரர்களின் எதிர்காலமும் அவ்வப்பொழுது எழுதப்படுவதுண்டு. அந்த வரிசையில் தென்னாபிரிக்காவின் தொடர் தோல்விகளை வைத்து ஸ்ரெயின் காலம் நெருங்கிவிட்டது. அவர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விடைபெறப்போகிறார் என்று விமர்சிக்கப்பட்டது. இந்த விமர்சனங்களுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைத்து, தான் கிரிக்கெட்டில் இருந்து விடைபெறும் காலம் மிகத் தொலைவில் உண்டு என்று குறிப்பிட்டுள்ளார் ஸ்ரெயின்.

கடந்த வருடம் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை பறிகொடுத்ததன் பின்னர் சொந்த மண்ணில் தற்பொழுது நடைபெற்றுவரும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரிலும் தென்னாபிரிக்காவின் தோல்விப் பாதை மீட்சி அடைவதாக இல்லை. அந்த அணிக்கு அடிமேல் அடியாக விழுந்து கொண்டிருக்கிறது. தென்னாபிரிக்காவின் தோல்விகளையடுத்து விமர்சிக்கப்பட்டவர்களில் முக்கியமானவர் ஸ்ரெயின். மோசமாக பெறுபேற்றிற்காக அவர் விமர்சிக்கப்படவில்லை. மாறாக மோசமான உடற்தகுதிக்காகவே ஸ்ரெயின் விமர்சிக்கப்பட்டார். இந்தியாவுக்கு எதிரான தொடரில் காயம் காரணமாக ஓய்வில் இருந்த ஸ்ரெயின் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் களமிறங்கினார். முதல் டெஸ்ட்டிலேயே மீண்டும் அவருக்கு காயம் ஏற்பட்டது. இதனால் எஞ்சிய ஆட்டங்களில் இருந்து விலகிய அவர் தற்பொழுதுநடைபெற்றுவரும் இறுதி டெஸ்ட்டில் இருந்தும் விலகியுள்ளார். இந்த ஆட்டத்தையும் சேர்த்து இறுதியாக தென்னாபிரிக்காவிளையாடிய 8 டெஸ்ட் ஆட்டங்களில் 6 ஆட்டங்களில் ஸ்ரெயின் களமிறங்கவில்லை.



இதனால் ஸ்ரெயினின் காலம் முடிவுக்கு வருகிறது. அவர் விரைவில் ஓய்வுபெறவுள்ளார் என்றவாறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இவற்றை மறுத்து, கருத்துத் தெரிவித்துள்ள ஸ்ரெயின் எனது காலம் முடியவில்லை. எனக்கு என்று ஏராளமான ஆண்டுகளும், ஆட்டங்களும், பந்துப்பரிமாற்றங்களும் எஞ்சியுள்ளன. அனுபவ வீரராக இளம் வீரர்களை வழிநடத்தி பலமிக்க தென்னாபிரிக்காவை உருவாக்கிய பின்பே ஓய்வு குறித்து பரிசீலிப்பேன் என்று தெரிவித்துள்ளார். இதன்மூலம் அடுத்த சில வருடங்களுக்குத் தான் ஓய்வுபெறப் போவதில்லை என்பதை குறிப்பிட்டுள்ளார் ஸ்ரெயின். இது ஸ்ரெயின் மூலம் கிடைக்கப்பட்ட ஒரு செய்தி மட்டுமல்ல; மாறாக எச்சரிக்கை. ஸ்ரெயினின் வேகம் குறையவில்லை. தென்னாபிரிக்காவின் பந்துவீச்சுப் பலம் முடங்கவில்லை.




# கருணைக்கிழங்கு மிக்ஸர்

**தேவையானவை:**

கருணைக்கிழங்கு கால் கிலோ
அவல் - 100 கிராம்
கறிவேப்பிலை, உப்பு, மஞ்சள் தூள்
மிளகாய்த் தூள் - தேவைக்கேற்ப
வேர்க்கடலை - 50 கிராம்

**செய்முறை:**

கிழங்கைத் தோல் உரித்து, சீவி தண்ணீரில் நன்கு அலசிக்கொள்ளவும். கிழங்கு, அவல் மற்றும் வேர்க்கடலை, கறிவேப்பிலையை எண்ணெயில் பொரித்துக் கொள்ளவும். அந்தக் கலவையில் உப்பு, மஞ்சள்தூள் மற்றும் மிளகாய்த் தூள் சேர்த்து நன்கு கலக்கவும்.




## செல்பி ஸ்டிக்

புளூரூத் வலையமைப்புள்ள செல்பி ஸ்டிக் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இந்த செல்பி ஸ்டிக் மூலம் ஸூம் செய்ய முடியும், படம் எடுக்க முடியும். இந்த சாதனம் 1000முதல் 1200 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | வவுனியா | முல்லைத்தீவு | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 600 | 800 | 600 |
| நண்டு | 250 | 500 | 400 | 400 | 400 | 250 | – |
| கணவாய் | 600 | 500 | 500 | 600 | 600 | 700 | – |
| பாரை | 450 | 400 | 400 | 600 | 600 | 600 | – |
| சுறா | 300 | 500 | 600 | 700 | 700 | 600 | – |
| சீலா | 250 | 400 | 400 | 500 | 450 | 400 | 400 |
| விளை | 500 | 450 | 400 | 500 | 500 | 600 | 400 |
| முரல் | 250 | 350 | 300 | 400 | 400 | 300 | – |
| கும்பிளா | 300 | 300 | 300 | 400 | 450 | 400 | 250 |
| கிழாக்கன் | 400 | 800 | – | – | 400 | – | – |
| ஓரா | 300 | 300 | 250 | 300 | 350 | 200 | 350 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 250 | 200 | 300 |
| நகரை | 150 | 300 | 200 | 200 | 300 | – | 300 |
| சூடை | 130 | 150 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 200 | 200 | 100 | 300 | 350 | 300 | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 300 | 200 | 150 |
| மதனம் | 250 | 250 | 180 | 400 | 250 | 300 | 250 |
| கொய் | 100 | 150 | 200 | 100 | 120 | 100 | – |
| பாலை | 100 | 200 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 150 | 150 | 200 | 300 | 300 | 300 | 250 |

# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 60 | 80 | 60 | 40 | 40 | 40 |
| கத்தரி | 200 | 150 | 150 | 160 | 100 | 150 | 150 | 150 |
| கரட் | 200 | 180 | 130–300 | 160 | 200–300 | 300 | 150 | 350 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 180 | 140 | 160 | 160 | 160 | 160 | 150 | 200 |
| பாகல் | 180 | 160 | 150 | 140 | 140 | 200 | 100 | 150 |
| கருணைக்கிழங்கு | 70 | 70 | 80 | 70 | 60–80 | 120 | 60 | 70 |
| பெ.வெங்காயம் | 90 | 70 | 80 | 80 | 60 | 90 | 50 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 70–120 | 120 | 100 | 120 | 100 | 80 |
| பூசணி | 60 | 50 | 50 | 70 | 70 | 80 | 45 | 60 |
| தக்காளி | 70 | 70 | 70 | 80 | 80 | 80 | 60 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 70 | 40 | 50 | 40 |
| கீரை | 30 | 30 | 40 | 20 | 20 | 50 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20 | 40 | 15 | 12 |
| பச்சை மிளகாய் | 350 | 350 | 350 | 300 | 320 | 400 | 300 | 300-350 |
| புடோல் | 100 | 80 | 80 | 80 | 80 | 120 | 50 | 80 |
| கோவா | 100 | 130 | 100 | 120 | 120 | 120 | 100 | 120 |
| வெண்டி | 150 | 100 | 120 | 100 | 140 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 180 | 140 | 180 | 160 | 200 | 250 | 140 | 270 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 | 120 | 120 | 160 | 90 | 120 |
| தேங்காய் | 50 | 38–40 | 50 | 40–50 | 50 | 40 | 30–37 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 | 60–70 | 60 | 60 | 50 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 130 | 80–100 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 250 | 280 | 250 | 280 | 400 | 200 | 200 | 200 |
| இராசவள்ளி | 120 | 220 | 160 | 100 | 180 | 160 | 100 | 100 |

# சமையலறைக் குறிப்புக்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

- வீட்டிலேயே கேக் செய்யும் போது, பேகிங் ஓவன் தட்டில் சரியாக எண்ணெய் அல்லது நெய் தடவியிருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்பே பேக் செய்யத் தொடங்குங்கள்.
- தேங்காயை சரிபாதியாக உடைக்க தண்ணீரில் நனைத்து பின்னர் உடைக்க வேண்டும்.
- இனிப்புக்கள் தயாரிக்கும் போது சீனிக்குப் பதில் வெல்லம் அல்லது தேன் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தினால் சுவை கூடுதலாக இருக்கும்.
- வெங்காயம் வதக்கும் போது சிறிதளவு சீனி சேர்த்தால் எளிதில் வதங்கி விடும்.
- ஊறுகாய் தயாரிக்கும் போது கைகளைப் பயன்படுத்தக் கூடாது மரத்தினால் ஆன கரண்டிகளையே பயன்படுத்துங்கள்.
- வெங்காயத்தைத் தோலோடு குளிர்ந்த நீரில் போட்டு பின்னர் நறுக்கினால் கண்களில் கண்ணீர் வராது.
- பச்சை மிளகாய் ஒரு மாத காலத்துக்கு மேலாக கெடாமல் இருக்க ஒரு காகிதக் கவரில் சிறிய துளையிட்டு பச்சை மிளகாய்களை அதில் போட்டு குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும்.
- ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு அதில் ஒரு தேக் கரண்டி உப்பைக் கலக்கவும். பிறகு இதில் முட்டையை போடவும் முட்டை மூழ்கினால் அது புதிய முட்டை. மிதந்தால் பழைய முட்டை.
- இஞ்சி, பூண்டு, சட்னி தயாரிக்க இரண்டையும் 2க்கு மூன்று என்ற விகிதத்தில் சேர்க்க வேண்டும். இஞ்சியைக் குறைவாகப் பயன்படுத்தினால் பண்டம் ருசியாக இருக்கும்.
- காய்ந்த பழங்களைப் பராமரிக்க அதை வைத்திருக்கும் பாத்திரத்தில் 2-3 கராம்புகளைப் போட்டு வைத்தால் நீண்ட நாள்களுக்கு ருசிகெடாமல் இருக்கும்.
- தண்ணீரில் சிறிதளவு வினிகரைச் சேர்த்தால் விரிசல் விழுந்த முட்டையைக் கூட சமைக்கலாம்.
- முட்டைக்கோசை சமைக்கும் போது ஒரு துண்டு இஞ்சியை யும்சேர்த்து சமைத்தால் அதன் மணம் மாறாமல் இருக்கும்.
- உருளைக் கிழங்குகளை பிளாஸ்டிக் கவர்களில் போட்டு வைக்கக் கூடாது. ஏனெனில் அதிலுள்ள ஈரத் தன்மையால் கிழங்கு அழுகி விடும் வாய்ப்பு இருக்கிறது.

**நாளை**

தை-11
திங்கட்கிழமை 25.01.2016
திதி: பிரதமை மு.ப.08.24
நட்சத்திரம்: ஆயிலியம் மு.இ.10.52
ராகுகாலம்: 08.06-09.36 வரை
சுபநேரம்: 12.36-02.06 வரை

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மற்றவரிடம் குடும்ப விடயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பாதுகாப்புக் குறைவான இடத்துக்குச் செல்ல வேண்டாம். உறவினர்களால் உதவி கிடைக்கப் பெறுவீர்கள்.

**இடபம்:** உறவினர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு மறையும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் வரும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் கடைபிடிப்பர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** திட்டமிட்ட செயல் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் கவனம் செலுத்துவர். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**கடகம்:** எதிர்பார்ப்பு நிறைவேற வாய்ப்புண்டு. தொழில், வியாபார விடயமாக வெளியூர் செல்வீர்கள். உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். பிள்ளைகளின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** நண்பர்களின் மத்தியில் செல்வாக்குப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தடை விலகும். இலாபம் உயரும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். மாணவர்கள் கண்ணும், கருத்துமாகப் படிப்பர்.

**கன்னி:** கொடுத்த வாக்கை நிறைவேற்றி நற்பெயர் காத்திடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். உடல்நலனில் கவனம் செலுத்துவீர்கள்.

**துலாம்:** இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். தொழில், வியாபார விடயமாக வெளியூர் செல்ல நேரிடும். இலாபம் கூடும். அக்கம் பக்கத்தினரிடம் செல்வாக்கு அதிகரிக்கும். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**விருச்சிகம்:** நடைமுறை வாழ்வு சுமுகமாக அமைந்திடும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பெண்கள் தாய் வீட்டாரின் அன்பைப் பெறுவர். உறவினருடன் சுற்றுலா சென்று வரத் திட்டமிடுவீர்கள்.

**தனுசு:** அறிமுகம் இல்லாதவரிடம் பழக வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். வீடு, வாகன வகையில் பராமரிப்புச் செலவு ஏற்படும். தாயின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தி தரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். உறவினர் வருகையால் குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**கும்பம்:** சுறுசுறுப்புடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் உயரும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர். எதிர்பார்த்த சுபசெய்தி வீடு தேடி வரும்.

**மீனம்:** மதிநுட்பமுடன் செயல்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பிள்ளைகளின் செயல்பாடு கண்டு மகிழ்வீர்கள். அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

உரையாடலில் மூன்று முறைக்கு மேல் 'ம்' என பதில் வந்தால் கம்முனு இருப்பதே நல்லது..




பேஸ் புக்கில் பிடித்தவை...

தாஜ்மகாலை காதலின் சின்னம் என்றும் கூறுபவர்களே... கொஞ்சம் இதை படிங்க



ஷாஜகானின் 7 மனைவிகளில் நாலாவது மனைவிதான் இந்த மும்தாஜ்..
ஷாஜகான் மும்தாஜை கல்யாணம் செய்வதற்காகவே மும்தாஜின் கணவனைக் கொன்றது யாருக்காவது தெரியுமா...
மும்தாஜ் 14 ஆம் பிரசவத்தின் போது தான் உயிர் இழந்தார்....
மும்தாஜ் இறந்த பிறகு மும்தாஜின் தங்கையை மணந்தார் ஷாஜகான்
"காதல்" எங்கயா இருக்கு இங்க...
என்ன கொடுமை, ஆனா வரலாறு முக்கியம்.

தாடி வச்சவனையெல்லாம் love failure' னு நினைக்காதீங்க டா!!



love failure' க்கு எல்லாம் தாடி முளைக்காது. ஆம்பளையா இருந்தாலே தாடி முளைக்கும்!



# கர்ணனாக பிருத்விராஜ்

பிருத்விராஜ் நடிப்பில் அடுத்தடுத்து நான்கு மலையாளப் படங்கள் ஹிட்டாகி உள்ளன. சமீபத்தில் வெளியான "பாவடை" படமும் சூப்பர் ஹிட்டாக ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் பிருத்விராஜ் நடித்த "என்னுநின்டெ மொய்தீன்" படத்தின் இயக்குநர் ஆர்.எஸ்.விமல், கர்ணனின் கதையைப் படமாக எடுக்க உள்ளார். இதில் கர்ணனாகப் பிருத்விராஜ் நடிக்கிறார். இதுபற்றி பிருத்விராஜ் கூறும்போது, "உலகிலேயே மிகப்பெரிய ஹீரோவாக கர்ணனைத்தான் கருதுகிறேன். அந்த மாபெரும் வீரனின் பாத் திரத்தில்; நடிக்க வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவு. இப்போது அது நனவாகி உள்ளது" என்றார்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | 5 | 6 |
| | 6 | | 8 | | 4 | 1 | | |
| 7 | | | 6 | | | | | |
| | | | 9 | 4 | | | | 5 |
| | | | 2 | | | 8 | | |
| 8 | | | | 3 | 1 | | | |
| | | | | | 6 | | | 1 |
| | | 2 | 7 | | 9 | | 6 | |
| 3 | 9 | | | | | | | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 8 | 1 | 2 | 7 | 5 | 6 | 4 |
| 4 | 1 | 7 | 6 | 3 | 5 | 9 | 2 | 8 |
| 6 | 2 | 5 | 9 | 4 | 8 | 3 | 1 | 7 |
| 9 | 7 | 6 | 3 | 8 | 2 | 4 | 5 | 1 |
| 5 | 8 | 1 | 4 | 7 | 6 | 2 | 3 | 9 |
| 2 | 4 | 3 | 5 | 9 | 1 | 8 | 7 | 6 |
| 1 | 5 | 9 | 8 | 6 | 3 | 7 | 4 | 2 |
| 7 | 6 | 4 | 2 | 5 | 9 | 1 | 8 | 3 |
| 8 | 3 | 2 | 7 | 1 | 4 | 6 | 9 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.
2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

இன்பமோ துன்பமோ ஒவ்வொரு நாளும் பலவேறான அனுபவங்கள் கிடைப்பதற்காகவே வாழ்க்கையின் தோளில் கை போட்டு அருகில் அழைத்து வாழத் தோன்றுகிறது.

திண்ணை இல்லாமல் வீடு கட்ட துவங்கிய போதே முதியோர்களுக்கு இடமில்லை என்று உறுதி செய்யப்பட்டு விட்டது.

# கடவுளுக்கே கடிதம்

அமெரிக்கச் சிறுவன் ஒருவனுக்கு பயங்கர பணக் கஷ்டம். அவனுக்கு 50 டொலர் பணம் தேவைப்பட்டது. கடவுளிடம் வெகு நாளாக வேண்டிப் பார்த்தான். ஒன்றும் வேலைக்கு ஆகவில்லை. கடைசியாக பணம் தர வேண்டி கடவுளுக்கு ஒரு கடிதம் எழுதினான். உறையின் மேல் கடவுள், அமெரிக்கா என்று எழுதி தபாலில் சேர்த்து விட்டான். தபால் அதிகாரிகள் இந்தக் கடிதத்தைப் பார்த்து ஆச்சரியப் பட்டார்கள்.
அந்த கடிதத்தை, ஒரு விளையாட்டாக வெள்ளை மாளிகைக்கு அனுப்பி வைத்தார்கள். ஒபாமாவுக்கு ஒரே ஆச்சரியம். "சரி.. இந்தப் பையனுக்கு உதவுவோம். ஆனால் ஒரு சிறு பையனுக்கு '50 டொலர் பணம் அதிகம். எனவே 20 டொலர் மட்டும் அனுப்புவோம்" என்று அனுப்பி வைத்தார். பணம் கிடைத்தவுடன் பையனுக்கு குஷி தாளவில்லை.
நன்றி தெரிவித்து கடவுளுக்கு ஒரு கடிதம் எழுதினான். "ரொம்ப நன்றி கடவுளே.. நான் கேட்ட மாதிரி பணம் அனுப்பி வச்சுட்டீங்க..ஆனாலும்.. நீங்க அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மூலமாக பணம் அனுப்புவதை நான் தெரிஞ்சுக்கிட்டேன்.. தயவு செய்து இனிமேல் அப்படி அனுப்பாதீங்க.. நீங்க அனுப்பின காசில் பாதியை அந்த ஒபாமா திருடிட்டான்.!!!. எனவே எனக்கு நேரடியாக அனுப்புங்கள்" என்று எழுதி அனுப்பிவிட்டான்.

# பேர்த்தியை துஷ்பிரயோகம் செய்த தாத்தா கைதாவார்

பதுளை,ஜன.24

பதுளை ஹாலிஎல பகுதியில் தனது பேர்த்தியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 71 வயதான தாத்தா (தாயின் தந்தை) ஒருவரைக் கைது செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொகவந்தலாவைப் பகுதியைச் சேர்ந்த சம்மந்தப்பட்ட சிறுமியின் தாய் தனது குடும்பச் சூழ்நிலை காரணமாக ஒன்றரை வருடத்துக்கு முன்பு வெளிநாடு செல்லும்போது, தனது அப்பாவிடம் சிறுமியை ஒப்படைத்து விட்டுச் சென்றுள்ளார்.

சந்தேக நபரான 71 வயதுடைய முதியவர், தனது பாதுகாப்பில் வைத்திருந்த 11 வயதான தனது பேர்த்தியை சுமார் ஒன்றரை வருடங்கள் பதுளை ஹாலிஎல உடுவர பகுதியிலுள்ள தனது வீட்டில் வைத்து துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

ஒன்றரை வருடத்தின் பின் சுகயீனம் காரணமாக நாடு திரும்பிய குறித்த தாய் தனது பிள்ளை இருக்கும் இடத்துக்குச் சென்றுள்ளார்.

அங்கு பிள்ளையின் நடவடிக்கையில் சில மாற்றங்கள் காணப்பட்டதால் அதிர்ச்சியடைந்த தாய் தனது பிள்ளையை அழைத்து கொண்டு தனது சொந்த ஊரான பொகவந்தலாவைப் பிரதேசத்துக்கு வந்துள்ளார்.

தனது மகளில் மாற்றங்கள் இருப்பதைக் கண்டுகொண்ட தாய், மகளிடம் கேட்டபோது, பிள்ளை எதுவும் கூறவில்லை. இதனையடுத்து தாய் பொகவந்தலாவை வைத்தியசாலையில் சிறுமியைச் சேர்த்தபோது வைத்தியரிடம், குறித்த சிறுமி தாத்தா தனக்குச் செய்தவற்றைக் கூறியுள்ளார்.

இதனையடுத்து, சிறுமியின் தாய் பொகவந்தலாவைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் சிறுமிக்கு பொகவந்தலாவை வைத்தியசாலையில் வைத்தியப் பரிசோதனை மேற்கொண்ட போது, சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை உறுதியாகியிருப்பதாக வைத்திய அதிகாரி ஏ.எஸ்.கே. ஜெயசூரிய தெரிவித்தார்.

இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பாக சகல ஆவணங்களையும் சேகரித்துள்ளதாகவும், சம்மந்தப்பட்ட சந்தேக நபரான 71 வயது தாத்தாவைக் கைது செய்வதற்காக ஹாலிஎல பொலிஸ் நிலையத்துக்கு ஆவணங்களை ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொகவந்தலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(த-ஐ)

## கிற்றார் இசை திருவிழா

இலங்கை கிற்றார் சங்கத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட கிற்றார் இசைத் திருவிழா நிகழ்வுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் கிற்றார் இசையின் பலவடிவங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை கிற்றார் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ற-ஐ-ரி5)

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 . 08 . 1978



உதிர்வு 09 . 02 . 2012

**அமரர் பாலசுப்பிரமணியம் சுகந்தன்**

திதி: அபரபக்க பிரதமை

ஆண்டுகள் நான்கு ஓடிப் போனது
ஆறாத துயர் மட்டும் இன்றும் ஓய்ந்ததில்லை
மாறாத பந்தமும் நீங்காத நினைவுகளும்
அலை கொண்டு போனாலும்
நீ எங்களோடு தான் வாழ்ந்திடுவாய்
வருடங்கள் பலவானாலும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 . 02 . 1953



மறைவு 24 . 01 . 2012

**அமரர் கனகசபை விஜயரெத்தினம் (ஞானம்)**

( உரிமையாளர் ஞானம் பெயின்ற், கண்ணன் பெயின்ற் )

நான்கு ஆண்டுகள் நிறைந்து மறைந்து விட்டன
நம்பவே முடியவில்லை இது நிஜம் என்று - ஒரு
கணப் பொழுதில் இறைவன் அணைத்துக் கொண்டதின்
அர்த்தம் புரியாமல் தவிக்கின்றோம் நேசமுடன் எமை வளர்த்து
நேர்வழியில் வாழ வழி காட்டி
கண்ணின் இமைபோல எமைக்காத்த எங்கள் அப்பாவே !
நினைவுகள் மட்டும் நிறையவே தந்து
நிதர்சனமாய் சென்று விட்டீர்கள் !
உங்கள் கனவுகள் யாவும் நிறைவேறும் - நீங்கள்
என்றென்றும் இறைவனடியில்
அமைதியாய் இளைப்பாற இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

(67932) (14,15)

விஜய் மகால்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 08 . 02 . 1927



மறைவு 25 . 12 . 2015

கடந்த 25.12.2015 வெள்ளிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் ஆறுமுகம் இராசா**

(காரைநகர் தியாகராசா ம.ம.வித்தியாலய முன்னாள் கனிஷ்ட அதிபர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலையில் 22.01.2016 வெள்ளிக்கிழமை நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிய அன்புள்ளங்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து தொலைபேசியூடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலி உரைகளை நிகழ்த்தியோருக்கும் மலர் வளையம் சாத்தியோருக்கும் இறுதிக் கிரியைகளின் போது சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், அன்னார் நோய் வாய்ப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலை 9 ஆம் விடுதியில் சிகிச்சை பெற்றபோது உதவிய வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மூளாய் தெற்கு, சுழிபுரம்.

(c.28745)(13.15)

குடும்பத்தினர்.

---

## நிஜமொன்று நிழலாகி ஓராண்டு ஆனது

**அமரர் வனித்தா கெங்காதரன்**



அன்னை மடியில்
12.06.1974

ஆண்டவன் அடியில்
05.02.2015

ஆண்டு ஒன்று ஆகிவிட்டது அம்மா
ஆனால் ஆறுதில்லை எம் மனம்
வேண்டுதல் செய்கின்றோம் அம்மா
வேறு வழியின்றி
சோறு அள்ளி உண்கின்றோம் அம்மா
வேகின்றது எம்மனம்
ஆறுதல் கூற யாரும் இல்லை அம்மா
அவலப்படுகின்றோம்

உங்களின் பிரிவு பெரு நெரிவாய் இருக்கின்றது அம்மா
காலை எழுந்து நீர் வாசலில் நிற்பது
கண்ணுக்குள் நிற்கின்றது அம்மா
கனவுகள் பல கண்டோம்
நினைவுகள் பல எண்ணினோம்
ஆனால் எல்லாம் கற்பனையாகி நிற்கிறது அம்மா

"அம்மா" என்று அழைத்த வாயால்
"ஐயோ" என அலற விதி வந்ததோ எமக்கு அம்மா
பொய்யோ உங்கள் சாவு புரிய முடியவில்லை எம்மால்
ஆண்டுத் திவசத்துக்கு ஆள்களைக் கூட்டும்
காலமாச்சு அம்மா

உருகி மனம் வெந்து அழுகின்றோம்
உங்கள் உருவம் எங்கள் மனதை விட்டகலாது அம்மா

(68240)(11,எ)

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவன் கோயிலடி,
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# வரலாற்றுத் தவறுகளை களைவதாகவே தீர்வு

## அதற்குத் தமிழர்கள் உதவ வேண்டும் என்கிறார் சந்திரிகா



நேர்காணல்: அருண் ஆரோக்கியநாதர்

> நான் பதவிக்கு வந்த ஆரம்பகாலத்தில் சிங்கள மக்கள்மத்தியில்பிரான்ஸ் நிறுவனமொன்றை அழைத்து வந்து கருத் துக்கணிப்பொன்றை நடத்தியிருந்தேன். அதில் 23வீத மான மக்களே அதிகாரப் பகிர் விற்கு ஆதரவாக வாக்களித்தி ருந்தனர். ஆனால் எமது சுது நெலும் திட்டத்தை முன்னெடுத்து மீண்டும் இரு வருடகாலத்தில் அதே நிறுவனத்தைக் கொண்டு வந்து கருத்துக்கணிப்பு நடத்தி யபோது அதிகாரப் பகிர்விற்கு 68 வீதமான சிங்கள மக் கள் ஆத ரவை வெளிப் படுத்தியிருந்தனர்.

ஒற்றையாட்சியோ வேறேதும் ஆட் சியோ பெயர் முக்கியமல்ல. மாறாக தமிழ், முஸ்லிம்,சிங்களம் ஆகிய அனை த்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதான போதுமானதும் நடை முறை யில் செயற்படுத்தக்கூடியதுமான தீர் வைக் கொடுப்பதே முக்கியமான தாகும். மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய வகையில் வரலாற்றில் இடம் பெற்ற தவறுகளைக் களைவதாக . தமது தீர்வு அமைந்திருக்கும் என முன்னாள் ஜனா திபதி சந்திரிகா பண்டார நாயக்க குமார துங்க தெரிவிக்கின்றார்.

கடும்போக்காளர்கள் இன்னமும் இந்த நாட்டில் மிகச் சிறிய சிறுபான்மைத் தரப் பினராகவே இருக்கின்றனர்.என்ன செய்யவேண்டும் என்பதை பெரும்பான் மையினர்தீர்மானிக்கமுனைவார்களாக இருப்பின் கடும்போக்காளரான சிறு பான்மையினர் குறித்து அலட்டிக் கொள் ளத்தேவையில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

'உதயனு'க்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலின் போதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். அவரது முழுமையான நேர்காணல் பின்வரு மாறு:-

**கேள்வி:**- உங்களிடம் முற்று முழுதான அதிகாரம் இருந்த காலப்பகுதிக்கும் தற்போதைய காலப்பகுதிக்கும் எத்த கைய வேறுபாட்டைக் காண்கின்றீர் கள்?

பதில்:-ஐக்கிய தேசிக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து பணியாற் றுவதே தற்போதைய நிலையில் பெரும் வித்தியாசமாகக் காணப்படுகின்றது. சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத் தும் இரு பிரதான கட்சிகளும் இணைந்து பணியாற்றுவது இலங்கையின் வரலாற் றிலேயே முதற்தடவையாகும். நான் இதனைச் செய்ய முற்பட்டபோது ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ச்சியாக எதிர்ப்பைக் காட்டியது. மூன்றில் இரண்டு பெரும் பான்மையை வெற்றிகொள்வதற்கு எனக்கு ஏழு வாக்குகளே இறுதியில் தேவையாக இருந்தது.

கேள்வி: நீங்கள் நல்லிணக்கத்துடன் தொடர்புடைய அமைப்புக்கு தலைமை தாங்குகின்றீர்கள். எதற்காக இதனைத் தேர்ந்தெடுத்தீர்கள் ?உங்கள் அமைப் பின் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கும் இலக்கு என்ன?

**பதில்:** நின்று நிலைக்கக்கூடிய சமா தானத்தை உருவாக்குவதற்கு உதவும் வகையில் இலங்கையிலுள்ள வித்தியா சமான மக்களுக்கிடையே நல்லிணக் கத்தை ஏற்படுத்துவது எப்போதுமே என் னுடைய பேரார்வமாக இருந்தது.இந்த நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக் கத்தையும் நிலைநாட்டுவதற்காக அதி கமான நேரப்பகுதியைச் செலவழித்தி ருந்தது மட்டுமன்றி ஏறத்தாழ நான் கொல்லப்படும் நிலையையும் எதிர் கொண்டிருந்தேன்.நான் அரசியல் யாப்பை முன்ன கர்த்த நடவடிக்கை மேற் கொண்டிருந்த வேளையிலேயே விடுதலைப்புலிகள் குண்டுத்தாக்குதல் நடத்தியிருந்தனர்.

கேள்வி: தற்போது நீங்கள் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற் குமான அலுவலகத்தின் மூலம் ஏதேனும் பணிகளை ஆரம்பித்துச் செயற்படுத் துகின்றீர்களா?

**பதில்:** நாம் பத்து பெரும் திட்டங்கள் அடங்கிய வரைவைத்தயாரித்துள்ளோம் முதலாவது திட்டத்தை தைப்பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாணத்தில் ஆரம் பித்திருந்தோம்.பிரதமர் பங்கேற்றது தேசிய வைபவம் அதுவல்ல. மாறாக சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூ ரியிலே முதலாவது திட்டத்தை நாம் ஆரம்பித்திருந்தோம். தைப்பொங் கலைக் கொண் டாடுவதற்காக சிங்களம் முஸ்லிம் மற்றும் தமிழ் சிறார்களை அங்கே ஒன்றாக அழைத்துவந்தி ருந்தோம். அதன் பிறகு களுத்தறையில் ஒரு நிகழ்ச்சியை நடத்தியிருந்தோம். இந்த மாத முடிவு வரையில் இதுபோன்று 37 நிகழ்ச்சிகளை நடத்த வுள்ளோம். ஒவ்வொரு நாளும் நான் அந்த நிகழ்ச் சிகளில் பங்கேற்பதற்காக சென்று வரு கின்றேன்.ஏனையவர்களில் உள்ள வேற்றுமைகளைப் புரிந்து கொண்டு செயற்படுவதற்கும் பாராட்டு வதற்கும் வழிசமைக்கும் வகையில் வித்தியாச மான இனங்கள் மதங்களைச் சேர்ந்த வர்களை ஒன்றாக அழைத்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்கின்றோம். ஏனையவர்களின் வைபவங்களைப் பார்த்து சிரித்துக் கேலிசெய்வதை விடுத்து அதைப் பார்த்து பாராட்டுவதற் கும் தமக்குரியதாக ஏற்றுக்கொள்வ தற்கும் இதன் மூலம் சிறார்கள் பழக்கப் படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப் பாக உள்ளது.

**கேள்வி:** நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் சுதுநெலும் போன்ற திட்டங் களை நீங்கள் முன்னெடுத்தாலும் கடும் போக்காளர்கள் குறைந்த பட்ச நேரத்தி லேயே அனைத்தையும் சீரழித்துவிடக் கூடிய தரப்பினராய் இருப்பதை கடந்த கால வரலாறு எடுத்துணர்த்துகின்றது. இதுபோன்ற தரப்பினரை எதிர்கொள் வதற்கான திட்டங்களேதும் உங்களிடம் இருக்கின்றதா?

**பதில்:** கடும்போக்காளர்கள் இன்னமும் இந்த நாட்டில் மிகச் சிறிய சிறுபான்மைத் தரப்பினராகவே இருக்கின்றனர்.என்ன செய்யவேண்டும் என்பதை பெரும்பான் மையினர்தீர்மானிக்கமுனைவார்களாக இருப்பின் கடும்போக்காளரான சிறு பான்மையினர் குறித்து அலட்டிக்கொள் ளத் தேவையில்லை.அவர்கள் முக்கிய மற்றவர்கள்.தமிழ்த்தரப்பில் விடுதலைப் புலிகளே கடும்போக்காளர்களாக திகழ்ந் தனர். ஆனால் கடும்போக்கற்றவர்க ளைப் படுகொலைசெய்ததன் மூலமாக அவர்கள் பெரும்பான்மையான வர்க ளாக மாற்றம் கண்டனர்.ஜனநாயக அர சியல் வாதிகளை அவர்கள் படு கொலை செய்தனர். வன்முறைகளுக்கு எதிராகக் குரல்கொடுத்த பொதுமக்களை அவர் கள் படுகொலைசெய்தனர். அந்த வகை யில் அவர்கள் ஆதிக்கம் செலுத்தினர். ஜனநாயக அரசியல் வாதிகளை அவர் கள் படுகொலைசெய்தனர். வன்முறை களுக்கு எதிராகக் குரல்கொடுத்த பொது மக்களை அவர்கள் படுகொலை செய்த னர். அந்தவகையில் அவர்கள் ஆதிக்கம் செலுத்தினர். அதிர்ஷ்டவசமாக சிங் களத்தரப்பில் அவ்வாறான நிலை காணப்படவில்லை. தற்போது தமிழர் முஸ்லிம்த்ரப்பிலும்கடும்போக்காளர்கள் மிக மிகக் குறைவானவர்களாவே உள்ள னர்.

என்னுடைய காலப்பகுதியில் அரசியல மைப்பைநாடாளுமன்றத்தில் நிறைவேற் றிக்கொள்ள முடியாமைக்கு கடும்போக் காளர்கள் காரணமாக இருக்கவில்லை. அப்போது ஜாதிக ஹெல உறுமய கிடை யாது. பொதுபலசேனா கிடையாது. ஜே.வி பிக்கு நாடாளுமன்றத்தில் ஒரு உறுப்பினர் மாத்திரமே இருந்தார்.இத னால் அவர்கள் எதிர்ப்பைக் காண்பிக் கும் அளவிற்கு பலம்பெற்றிருக்க வில்லை.

நான் பதவிக்கு வந்த ஆரம்பகாலத்தில் சிங்கள மக்கள் மத்தியில் பிரான்ஸ் நிறு வனமொன்றை அழைத்துவந்து கருத் துக்கணிப்பொன்றை நடத்தியிருந்தேன். அதில் 23வீதமான மக்களே அதிகாரப் பகிர்விற்கு ஆதரவாக வாக்களித்திருந்த னர். ஆனால் எமது சுதுநெலும் திட் டத்தை முன்னெடுத்து மீண்டும் இரு வருடகாலத்தில் அதே நிறுவனத்தைக் கொண்டுவந்து கருத்துக்கணிப்பு நடத்தி யபோது அதிகாரப் பகிர்விற்கு 68 வீத மான சிங்கள மக்கள் ஆதரவை வெளிப் படுத்தியிருந்தனர். சிங்கள மக்கள் மத்தி யில் பணியாற்றியவள் என்றவகையில் சிங் கள மக்கள் இனவாதிகள் அல்லர் என் பதை நான் நன்கறிவேன். வாக்கு களைப் பெறுவதற்காக சிங்கள மக்களிடம் உண் மையைக் கூறுவதற்கு சிங்களத் தலை வர்கள் தவறியமையே அவர் கள் ஆதர வை வெளிப்படுத்தாமைக் கானகாரண மாக இருந்தது. தமிழ் முஸ்லிம்மக்களுக் கும் உரிமைகள் வழங்கப்படவேண்டும் என சிங்களம க்கள் மத்தியில் தேர்தல் பிரசாரத்தி ன்போது தெரிவித்த ஒரே தலை வர் நான் தான். 15 மாத காலப்பகுதியில் நான் ம ாகாணசபைத் தேர்தல்,பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் ஆகிய மூன்று தேர்தல்களையும் எதிர் நோக்கி ஒவ்வொரு தட வையிலும் வரலா றுகாணாத வகையில் அமோக ஆதர வுடன் வெற்றிபெற்றிருந் தேன்.மக்களுக் கு உண்மையை எடுத்து விளக்கினால் அவர்கள் புரிந்துகொள்வர்.

நாம் சிறுபான்மையினரான கடும் போக் காளர்கள் குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. அப்போது ஐக்கிய தேசியக்கட்சி எம்மோடு ஒத்துழைக்கவில் லை. தமிழர் விடுதலைக்கூட்டணி எம் மோடு பணியாற்றிக்கொண்டிருந்தது. கூட்டணியின் தலைவர்களிலொருவ ரான நீலன் திருச்செல்வம் அரசியல் யாப்பை தயாரித்த குழுவில் ஒரு அங் கத்தவராக இடம்பெற்றிருந்தார். அத னால் தான் பிரபாகரன் அவரைக் கொன் றொழித்திருந்தார்.

இறுதியில் எங்களுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கு ஏழு வாக்குகளே அவசியமாக இருந்தன. ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்க மறுத்திருந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் எட்டு வாக்குகள் இருந்தன. ஆனால் அவர்க ளும் ஆதரவளிக்கவில்லை.

என்னுடைய அரசியல்யாப்பு வரைபா னது இந்த நாட்டில் நீங்கள் (தமிழ் மக் கள்) பெற்றுக்கொள்ளக்கூடிய ஏதேனும் தீர்விலும் பார்க்க மிகவும் அதிகமான அதிகாரப்பகிர்வை கொண்டமைந்திருந் தது. யுத்தம் நடைபெற்றுக் கொண்டி ருந்தபோது அத்தகையதொரு தீர்வை

முன்வைப்பதற்கான துணிவு என்னிடமிருந்தது.தற்போது பிரபாகரன் இல்லாத நிலையிலும் போர் நிறைவுபெற்றுவிட்ட நிலையிலும் தமிழ் மக்கள் அதுபோன்று அதிகமானதைப் பெற்றுக்கொள்ளப்போவதில்லை. ஆனால் அவர்கள் தம் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தானவர்கள்.

**கேள்வி:** விடுதலைப்புலிகள் பலம்மிக்கவர்களாக இருந்த சந்தர்ப்பத்தில் நீங்கள் முன்வைத்திருந்த அரசியல்தீர்வு ஒற்றையாட்சியைத் தாண்டியதாக பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற வகையில் அதிகளவான அதிகாரப்பகிர்வைக்கொண்டதாக அமைந்திருந்தது. தற்போது பிரதமர் உட்பட அரசியல்வாதிகள் பலரும் விடுக்கின்ற அறிக்கைகள் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வுகாணப்படும் என்பதாகக் கோடிட்டுக்காட்டுகின்றன. அண்மையில் இடம்பெற்ற நினைவுரை நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ண காந்தி இந்தநாட்டின் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால். தற்போதைய சாபக் கேடான ஒற்றையாட்சி அரசியல்யாப்பிலிருந்துமேம்பட்டதாகசமஷ்டி அம்சங்களைத்தாங்கியதாக புதிய அரசியல்யாப்பு உருவாக்கப்படவேண்டும் என்று கருத்து வெளியிட்டிருந்தார். இதுபற்றி உங்களுடைய நிலைப்பாடு என்ன?

**பதில்:** வார்த்தைகள் முக்கியமற்றவை. நான் அப்போது முன்மொழிந்தது சமஷ்டி ஆட்சி முறைக்கு மிகவும் அண்மித்த ஒரு தீர்வாக அமைந்திருந்தது. நாம் அதனை (Union of regions)பிராந்தியங்களின் ஒன்றியம் என அழைத்திருந்தோம். ஒற்றையாட்சியோ சமஷ்டியோ வேறேதும் ஆட்சியோ பெயர் முக்கியமல்ல. தமிழ் முஸ்லிம் சிங்களம் ஆகிய அனைத்து மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதான போதுமானதும் நடைமுறையில் செயற்படுத்தக்கூடியதுமான தீர்வைக் கொடுப்பதே முக்கியமானதாகும். ராஜ பக்சவும் அவரது மடையர்களும் வார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு தொங்கிக் கொண்டிருக்கின்றனர். வார்த்தைகள் முக்கியமற்றவை.

**கேள்வி:** நீங்கள் முன்னர் உங்களது காலத்தில் முன்மொழிந்த அதிமேம்பட்ட தீர்வை இப்போது வழங்கப்போவதில்லை என்கிறீர்கள். அப்படியானால் அதிகபட்சத் தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் தமிழர்கள் ஆயுதமேந்திப் போராட வேண்டுமா?

**பதில்:** அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்காகத் தனியான அலகுகள் இருக்குமிடத்தில் அந்தளவு தூரத்துக்குப் (பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற பெயரில் முன்மொழியப் பட்ட தீர்வு யோசனை போன்று) பயணிக்க வேண்டியதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஏனையவர்களும் கூறியிருக்கின்றனர்.

**கேள்வி:** தமிழர்கள் தொடர்ச்சியான முறையில் தமது தீர்வுக்கான அபிலாசையாக இணைந்த வடக்கு கிழக்கில் உயர்ந்த பட்ச அதிகாரப் பகிர்வை வலியுறுத்திவந் துள்ளனர். புதிய அரசியலமைப்பு மூல மாக வழங்க உத்தேசிக்கப்படும் தீர்வில் தமிழர்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கக்கூடிய ஏற்பாடுகள் இடம்பெறுமா? இதிலிருந்து எதனை எதிர்பார்க்கமுடி யும்?

பதில்: தமிழ் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்குநன்மையளிக்கக்கூடியவகையில் நாம் வழங்குவது அமைந்திருக்கும். வரலாற்றில் இடம்பெற்ற தவறுகளைக் களைவதாக எமது தீர்வு அமைந்திருக்கும்.

**கேள்வி:** உங்களது தந்தை பண்டாரநாயக்கவும் தமிழர் தலைவர் செல்வநாயகமும் இணைந்து பண்டா-செல்வா ஒப்பந்தத்தையும் தொடர்ந்து டட்லி-செல்வா ஒப்பந்தம் என பல ஒப்பந்தங்கள், கடந்து வந்த காலப்பகுதியில் கைச்சாத்திடப்பட்டிருந்தன. ஆனால் அவை ஏதும் முறையே நடைமுறைப்படுத்தப்படாமல் வரலாற்றின் குப்பைக்கூடைக்குள் தூக்கிவீசப்பட்டது. முன்வைக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் உத்தேசத் தீர்வானது நின்று நிலைக்கக்கூடியதாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதை உங்களது அரசு எவ்வாறு உறுதிப்படுத்தப்போகின்றது?

**பதில்:** அந்தக் காலப் பகுதியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி செய்ய நினைக்கின்ற விடயங்களுக்கு ஐக்கிய தேசியக்கட்சி எதிர்பைக் காண்பித்தது.ஐக்கிய தேசியக்கட்சி செய்ய முனைபவற்றுக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி எதிர்ப்பைக் காண்பித்தது. தற்போது அரசின் பாகங்களாக இரு கட்சிகளும் ஒன்றாகவுள்ளன.தற்போது தமிழ் முஸ்லிம் கட்சிகள் அரசுடன் இணைந்து செயற்படுகின்றன. ஜாதிக ஹெல உறுமயவும் அரசுடன் இணைந்துள்ளது. அந்த வகையில் இதனை (தீர்விற்கான அரசியல்யாப்பை)நிறைவேற்றிக் கொள்வதற்கு முன்னரெப்போதும் காணப்படாத சந்தர்ப்பம் தற்போது காணப்படுகின்றதென நான் நம்புகின்றேன்.இதற்குத் தமிழ் மக்கள் எமக்கு உதவ வேண்டும்.

**கேள்வி:** உங்களுடைய அலுவலகத்தினால் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கான கால வரையறையேதும் உள்ளதா?

**பதில்:** நல்லிணக்கமென்பது பல ஆண்டாண்டுகாலமாக முன்னெடுக்கப்படவேண்டியது. எம்மிடம் மூன்றாண்டுத்திட்டங்கள் உள்ளன, ஐந்தாண்டுத்திட்டங்கள் உள்ளன. அவை முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியவை. மக்களின் மனங்களையும் இதயங்களையும் மாற்றியமைப்பதே எமது பணியாகும். அதற்குப் பலவருட காலமெடுக்கும். தற்போது திட்டங்களை ஆரம்பித்திருக்கின்றோம். இன்னும் சில வருடங்களில் நிலைமைகள் மாற்றமடைந்துவிடும் என எண்ணுகின்றோம். அரசியல்யாப்புமாற்றம்என்பது முற்றிலும் தனித்துவமான விடயமாகும். நானும் அதிலே பங்கெடுத்திருக்கின்றேன். அதுவொரு அரசியல் நடைமுறை, அதனை அரசு விரைந்துசெயற்படுத்தவேண் டும். நாம் தற்போது அனைத்துத்தரப்பினருடனும் கலந்தாராய்ந்து வருகின்றோம். எது தற்போது சாத்தியமானது என்பதை நாம் ஆராய்ந்துகொண்டிருக் கின்றோம்.

**கேள்வி:** இந்த அரசு பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் குறிப்பாக முன்னாள் போராளிகள்,விதவைகள் தொடர்பில் போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. வெறுமனே கண்துடைப்பிற்காக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இன்னமும் பல விடயங்கள் செய்யப்படவில்லை என குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுவது பற்றி என்ன கூறவிரும்புகின்றீர்கள்?

பதில்: இந்த அரசு உண்மையில் கடந்த ஓகஸ்ட் 17 ஆம் திகதிக்குப் பின்னரே திட்டங்களை முன்னெடுக்கும் ஆற்றலைப் பெற்றதென்பதை நீங்கள் முதலில் நினைவில் கொள்ளவேண்டும். அதற்கு முதல் மகிந்தவின் தரப்பினரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இணைந்துகொண்டு நாங்கள் முன்வைக்கும் திட்டங்களை முன்னெடுக்கமுடியாத வகையில் தடுத்துக்கொண்டிருந்தனர். தேர்தலின் பின்னர் புதிய அரசு அமைக்கப்பட்டு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதன் பின்னர் செப்ரெம்பர் முதலாம் திகதி முதலே அரசு திட்டங்களை முன்னெடுப்பது சாத்தியமானது. அதிலிருந்து பார்க்கும் போது எத்தனை மாதங்கள் நான்கரை மாதங்களே. அந்தவகையில் பல வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அனைத்தையும் பூர்த்திசெய்து விட முடியாது.நாங்கள்திட்டங்களைவடிவமைத்துள்ளோம். அதற்கான நிதியையும் அடையாளங்கண்டு கொண்டுள்ளோம். தற்போது திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம். வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் கிழக்கிலுள்ள மூன்று மாவட்டங்களிலும் எமது அலுவலகத்தினால் பல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒருங்கிணைத்து முன்செல்லப்படவுள்ளன. இதற்காக பல பில்லியன்ரூபாய்கள் எமக்குக் கிடைக்கவுள்ளன.

**கேள்வி:** ஆட்சிமாற்றத்தின் தூண்களில் ஒருவராக நீங்கள் இருக்கின்றீர்கள். இந்த ஆட்சியில் முன்னெடுக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் திருப்தியடைகின்றீர்களா?

**பதில்:** பொதுவாக ஆம். (திருப்திகொண்டுள்ளேன்). நாம் மக்களுக்கு நல்லாட்சியை வழங்குவதாக வாக்களித்திருந்தோம். நல்லாட்சி என்பது பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது. ஜனநாயகத்தை மீள நிலைநாட்டுதல் அதில் ஒரு அம்சமாகும். அது நடந்தேறியுள்ளது. மக்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதும் சாத்தியமாகியுள்ளது.மேலும் சுதந்திரத்தை வழங்கவும் ஜனநாயக முன்னேற்றங்களைக் காண்பதற்காகவும் சுயாதீனக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.இதுவும் நல்லாட்சியை வலுப்படுத்தும். நல்லாட்சியின் மற்றுமொரு அம்சமாக ஊழல் மோசடிக்கு எதிரான நடவடிக்கை அமைந்துள்ளது. குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனைவழங்குதல் மற்றும் எதிர்காலத்தில் ஊழல் மோசடிகள் இடம் பெறாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் ஆகியன இதில் அடங்குகின்றன. இந்த அரசு விசாரணைகளை மேற்கொண்டுவருகின் றது. அதனைப் பூர்த்தி செய்யும் தறுவாயில் உள்ளது. எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே வடிவமைக் கப்பட்டுவிட்டன. பிரதமர் இதனை அமைச் சரவைக்குச் சமர்ப்பித்துள்ளார். விரைவில் இது நடைமுறைக்கிடப்படும் .


**கேள்வி:** தென் பகுதியிலுள்ள அரசியல் தலைவர்கள் மறுதலித்துக்கொண்டிருந்த போது சனல் 4 காணொலிகள் தொடர்பில் கவலையை வெளிப்படுத்திய விரல்விட்டெண்ணக்கூடிய தென் பகுதியைச்சேர்ந்த தலைவராக நீங்கள் விளங்குகின்றீர்கள். நீதியரசர் பாலகிட்ணர் நினைவுப்பேருரையை ஆற்றும்போது நீங்கள் சனல் 4 தொடர்பாகக் கவலைவெளியிட்டதுடன் இலங்கையரென்ற வகையில் வெட்கித் தலைகுனிகின்றேன் எனவும் கூறியிருந்தீர்கள். இறுதிப் போர் தொடர்பான உண்மைகளைக் கண்டறிவதற்கும் பொறுப்புக் கூறலுக்கும் இந்த அரசு எத்தகைய முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றது?

**பதில்:** இந்த விடயத்திற்கு அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படுகின்றது.

ஜனாதிபதி பிரதமர் வெளிவிவகார அமைச்சர் என முக்கியமான தலைவர்கள் உள்ள உயர் மட்டக்குழுவொன்று உள்ளது. இதில் நானும் இடம்பெற்றிருக்கின்றேன்.இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் விடயத்தைக் கையா ளும் வகையில் உண்மை மற்றும் பொறுப் புக்கூறல் தொடர்பில் இக்குழு நான்கு முனைத்திட்டத்தை வடிவமைத்துள்ளது.இந்தவகையான கட்டமைப்புக்களை இன்று ஏற்படுத்தி விட்டு நாளையே அதனை நடைமுறைப்படுத்தி விடமுடியாது. இவை மிகவும் சிக்கல் வாய்ந்த விடயங்களாகும். இந்த விடயத்தில் கட்டமைப்புக்கள் ஏற்கனவே வடிவமைக்கப்பட்டு விட்டன. இதுபற்றி நாம் அதிகமாகப் பேசுவதில்லை. ஏனெனில் கடும் போக்காளர்கள் காட்டுக் கூச்சலிடத் தொடங்கி விடுவார்கள்.

**கேள்வி:** 1995 ஆம்ஆண்டுஉங்களுடைய ஆட்சிக் காலத்தின் போது நவாலித் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட விமானத்தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். கடந்த காலத்தில் இடம்பெற்ற இதுபோன்ற சம்பவங்களுக்கு எப்படியாகப் பொறுப்புக்கூறப்போகின்றீர்கள்?

**பதில்:** போரின்போது நவாலி மட்டுமன்றி மேலும் பல சம்பவங்கள் இடம்பெற்றன. போரின்போது நிறைய விடயங்கள் இடம்பெறுவதுண்டு.பதவியிலுள்ள அரசு அதற்கான பொறுப்புக்களை ஏற்க வேண்டும். இந்தச் சம்பவம் (நவாலி தேவாலயத்தின் மீதான விமானத்தாக்குதல்) தொடர்பாக அறியத்தந்தவேளையில் நான் பாதுகாப்புக்கவுன்சில் கூட்டமொன்றில் பங்குபற்றிக்கொண்டிருந்தேன்.உண்மை யில் நான் இராணுத்தரப்பினரையும் விமானப்படையினரையும் நோக்கி உரத்துக் கத்தினேன்.அது ஒரு தவறு.சிறிய முகாம் போன்று விடுதலைப்புலிகள் ஒன்றுகூடுமிடத்தின் மீது குண்டுத்தாக்குதல் நடத்துவதாக அவர்கள் எண்ணியிருந்தனர். அதற்கருகில் அப்படியொன்று இருந்தது. ஆனால் அவர்கள் தமது இலக்கைத் தவறவிட்டு தேவாலயத்தின் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியிருந்தனர்.அது எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. என்ன இடம்பெற்றிருந்தாலும் விமானப்படை



இராணுவம்,அரசு அதற்குப் பொறுப்புக்கூறவேண்டும்.

**கேள்வி:** இந்த அரசுக்கு வாக்களித்த போது தமிழ் மக்கள் பல எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருந்தனர். அவற்றில் குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை,காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை பற்றிய உண்மைகளை வெளிக்கொண்டுவருதல், காணிகளை விடுவித்தல் போன்றவை முக்கிய இடம் பிடித்திருந்தன. அரசானது அடையாளத்திற்காக சிலரை விடுவித்துள்ளது. சில தொகுதிக் காணிகளை விடுவித் துள்ளது. ஆனால் காணிகளில் பெரும்பாலானவை இன்னமும் விடுவிக்கப்பட வில்லை. இதுபற்றிய உங்கள் பதில் என்ன?

**பதில்:** இது விடயத்தில் திங்களன்று (18) இராணுவத்தினருடன் நான் தொடர்பு கொண்டு வினவியிருந்தேன். இராணுவத்தினர் வசம் யாழ்.குடாநாட்டில் 11700 ஏக்கர் காணித்துண்டுகள் இருந்தன.இதில் 7000 ஏக்கர்களை இதுவரையில் அவர்கள் மீளவும் உரியவர்களிடம் திரும்பக் கையளித்துள்ளனர்.ஜனாதிபதியால் அண்மையில் 700 ஏக்கர்கள் விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டமையே விடுவிக்கப்பட்ட கடைசித்தொகுதிக்காணிகளாகும்.தற்போதைய நிலையில் இராணுவத்தினர் வசம் 4600 முதல் 4700 ஏக்கர் காணிகளே உள்ளன. இது பாதுகாப்புக் காரணங்களுக்கு அவசியமானதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதிலும் 700 ஏக்கர் வரையான காணிகளை விடுவிக்க முடியும் என தகவல் தரப்பட்டுள்ளது. அப்படிப் பார்க்கையில் 11700 ஏக்கர்களில் இருந்து 4000 ஏக்கர்களாக இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் பரப்பளவு குறைந்துள்ளது.

கேள்வி: கருணா பிள்ளையான் போன்றவர்கள் வெளியில் இருக்கையில் இன்னமும் விடுவிக்கப்படாமலுள்ள அரசியல் கைதிகள் பற்றி?

**பதில்:** கருணா,பிள்ளையானை விடுவித்தது எமது தவறல்ல. மகிந்தவே அதனைச் செய்திருந்தார்.குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாமல் சிறையிலடைத்துவைக்கப் பட்டிருந்தவர்களில் சிலர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்னமும் சிலர் விடுவிக்கப்படவுள்ளனர். இதனைத் தவிர நூற்றுக்கும் குறைவான இன்னுமொரு தொகுதிக்கைதிகள் உள்ளனர். இவர்களுக்கு எதிராகப் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. சாட்சியங்களுடன் நிரூபிக்கப் படக்கூடியதாக இந்தக்குற்றச்சாட்டுக்கள் உள்ளன.அந்தக் கைதிகளை விடுவிக்க முடியும் என நான் நினைக்கவில்லை.எந்த வழக்குகளும் இல்லாமல் இருப்பவர்களை விடுவிக்கமுடியும். போர்க்குற்றங்களுக்காக இராணுவத்தினர் தண்டிக்கப்பட வேண்டும் என தமிழ் மக்களான நீங்கள் கேட்கின்றீர்கள் . அப்படியானால், பிரபாகரனின் படையினர் ஏன் போர்க்குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படக்கூடாது எனக் கேட்கின்றேன்.மக்களைக் கொன்றமைக்காகவே அவர்கள் சிறைகளில் உள்ளனர். இராணுவத்தினரை மாத்திரம் ஏன் தண்டிக்க வேண்டும். ஏன் பிரபாகரனின் படையினர் தண்டிக்கப்படக் கூடாது.

# நூல் வெளியீட்டு விழா நாளை

முல்லைத்தீவு,ஜன.24
முல்லைத்தீவில் பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்கு இலகுவாக கற்றுக் கொடுக்கக்கூடிய வகையிலான 'தாயன்பு' எனும் நூல் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்களில் ஒருவரான திருமதி சூரியா ஜெயராஜாவால் எழுதப்பட்ட குறித்த நூல் வள்ளுவர்புரம் செல்லமுத்து வெளியீட்டகத்தால் அதனுடைய தலைவர் யோ. புரட்சியின் தலைமையில் வெளியிடப்படவுள்ளது. (ற-ஜ-21)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பங்கிராசம்மா அந்தோனிப்பிள்ளை

இறப்பு
22 . 01 . 2016



பிறப்பு
26 . 04 . 1925

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிட மாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பங்கிராசம்மா அந்தோனிப்பிள்ளை 22.01.2016 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப் பிள்ளையின் அன்பு மனைவியும்,மேரி அஞ்சலா, பவுலீனா, பெலிஸ்ரஸ் (வர்த்தகத் திணைக்களம்), ஸ்பிரித்தம்மா, யேசுமலர் (S.P.H.M. வேலணை), ஜெனற் கிளசிற்றஸ் (ஆசிரியர் - யா/புனித சாள்ஸ்- ம.வி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற யோகராஜா முருகேசு, செல்வராசா, கதிர்காமநாதன், ராஜசூரியர், அன்ரன் விமலதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், யொய்சி - சுரேந்திரன் (தெல்லிப்பழை வைத்தியசாலை), நித்தியா-செல்வகுமார் (பிரதேச செயலகம்- தெல்லிப் பழை), மெரினா - பிரதீப் (H.N.B -வவுனியா), மயூரன் (T.O மட்டக்களப்பு), யாழினி - நிஷாந்தன் (ஆசிரியை - வாழைச்சேனை), பாமினி (பிரதேச செயலகம் - அம்பாறை), தமிழினி (கல்வியியற் கல்லூரி), நிசோதயன் (E.Learning), அஸ்வினி - கோபிநாத் (ஆசிரியர்- சா/இந்துக்கல்லூரி), துஷிகரன் (கொமர்ஷியல் கிறடிற்), தருக்சனா (விவசாயபீடம்), சுபேந்திரன், கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பைரவி, சுஜிந்தன், சுஜீபன், வைஷ்ணவி, தட்சாந், கரோலின், கிறிஸ்ரினா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய்.


தகவல்:
**குடும்பத்தினர்.**

(68274)(11,15,18)

தொடர்பு:- 077 150 3370

### வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்

(ஓய்வு பெற்ற முகாமையாளர் அச்சுவேலி ப.நோ.கூ. சங்க கிளை)



வரணி, இடைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் தம்பாலை அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பூபாலசிங்கம் 22.01.2016 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் செல்வநாயகி தம்பதிகளின் மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை நடராசா மற்றும் தவமணி காலஞ்சென்ற மல்லிகாமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகேஸ்வரன்(ஜேர்மனி), கிரகராணி (ஜேர்மனி), குணேஸ்வரன்(நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ரதினி(சுவிஸ்), சூரியகுமார்(பிரான்ஸ்), சசிகுமார் (லண்டன்), யாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பகீரதன்(சுவிஸ்), தர்சினி (பிரான்ஸ்), நிறஞ்சினி(லண்டன்), கஜேன்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் சபீசன் (சுவிஸ்), சர்வினி(சுவிஸ்), அக்ஷயன் (பிரான்ஸ்), யதுமிலன் (லண்டன்), ஜெனனி (லண்டன்), லதுஷா, பானுஜன், கனிஷ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (25.01.2016) திங்கட் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தம்பாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள வும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**தம்பாலை, அச்சுவேலி.**

# யாழ். பல்கலை பட்டமளிப்பு சிறப்பாக நடந்து முடிந்தது

*பேராசிரியர் பத்மநாதன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 24
யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்தது என்று தெரிவித்தார் யாழ்.பல்கலைக் கழகத்தின் வேந்தர் பேராசிரியர் பத்மநாதன்.
உதயனின் நேற்றைய 10 ஆம் பக்கத்தில், பல்கலைக் கழகத்தின் வேந்தர் பேராசிரியர் பத்மநாதன் தெரிவித்தாக வெளியான செய்தியில், பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்களை நாட்டை விட்டு வெளியேற்றும் முயற்சியில் ஓர் முகவர் கூட்டம் இயங்குகின்றது. இந்தக் கூட்டத்தை வெளிநாடுகளில் வாழும் கும்பல்கள் கையாள்கின்றன என்று தெரிவித்தாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் வெளிநாடுகளில் வாழும் சிலர் என்றே தான் குறிப்பிட்டிருந்தேன் என்றும் பேராசிரியர் பத்மநாதன் தெரிவித்தார்.
அதே போன்று, யாழ்.பல்கலைக் கழகத்தில் வேந்தர் நடத்த வேண்டிய பட்டமளிப்பு விழாவைத் துணைவேந்தர்நடத்துகின்றார் என்ற வார்த்தையைத் தான் பிரயோகிக்கவில்லை என்றும் பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிட்டார். இந்த ஆண்டு பட்டமளிப்பு விழா மிகச் சிறப்பாக இடம் பெற்றது என்றும் அவர் தெரிவித்தார். (ற-5)

## ஓட்டோ, சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

வலி.வடக்கு, ஜன.24
அதிகாலையில் பாண் கொண்டு சென்ற ஓட்டோவும் பாண் கொண்டு சென்ற சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.
தெல்லிப்பழை துர்க்காபுரம் எட்டாம் கட்டையில் நேற்று அதிகாலை 5 மணியளவில் இந்த விபத்து எற்பட்டுள்ளது.
காங்கேசன்துறை வீதி வழியாக தெல்லிப்பழை நோக்கிச் சென்ற ஓட்டோவும் எட்டாம் கட்டை ஒழுங்கையால் வந்த பாண் விற்பனை செய்யும் சைக்கிளும் மோதியதில் ஓட்டோ தடம் புரண்டதுடன் கண்ணாடிகளும் உடைந்து சேதம் அடைந்துள்ளன. (ற-ஜ-86)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சோமசுந்தரம்



கொக்குவில் மேற்கு கொக்குவில் நீதிராசா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சோமசுந்தரம் நேற்று (23.01.2016) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் யோகராசாவின் (சின்னக்குமார்) அன்பு தந்தையும் ராகினியின் மாமனாரும் விஜயரத்தினம் காலஞ்சென்றவர்களான நீதிராசா , இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் அன்னரத்தினம், கண்மணி நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் உமேஸ், இந்துஜா, கோசலா ஆகியோரின் அன்புப் போரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நீதிராசா வீதி,**
**கொக்குவில் மேற்கு.**

தகவல்:
**சோ.யோகராசா(மகன்)**

## விழிப்புணர்வு கருத்தரங்குகள்

சாவகச்சேரி, ஜன.24
வேள்ட் விஷன் நிறுவனத்தால் சாவகச்சேரி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதார வசதிகள் மற்றும் குடி தண்ணீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஆறு கிராமங்களில் சுகாதார வசதிகள் மற்றும் குடி தண்ணீர் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் கடந்த புதன்கிழமை தொடக்கம் நடத்தப்பட்டு வருகின்றன.
தனங்களப்பு, மட்டுவில் கிழக்கு, சரசாலை தெற்கு, கரம்பைக்குறிச்சி, நாவற்காடு, வரணி- இயற்றாலை ஆகிய கிராமங்களில் வேள்ட் விஷன் நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் சுகாதார வசதிகள் மற்றும் குடி தண்ணீர் வழங்கல் மேம்பாட்டு செயற்றிட்டங்கள் தொடர்பாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சேவையாளர்கள் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கிவருகின்றனர்.
நீர் வழங்கல் திட்டத்தில் குடி தண்ணீர் சேமித்தல் போன்ற விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை கிராமங்களில் உள்ள பொது அமைப்புகளின் மண்டபங்களில் நடத்தி வருகின்றனர். (ற-ஜ-9)

## மூத்த பிரஜைகள் பேரவை அரச அதிபரிடம் 4 அம்ச கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.24
யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத் துள்ளது.
அந்தக் கடிதத்தில் பேரவைக்கான கூட்டங்களை நடத்துவதற்கு இடம் ஒதுக்குதல், நிரந்தர அலுவலகம், நிரந்தரக் கட்டடத்தை அமைத்திட அரச காணி ஒன்றைப் பெற்றுத் தரல், தனியார் வீடுகளில் உள்ள பேரவைக்கான தளபாடங்களைப் பாதுகாப்பதற்கு அலுவலகத் தேவை உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-50)





மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் 99ஆவது பிறந்தநாள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பண்டத்தரிப்பில் இடம்பெற்றது. பண்டத்தரிப்பு எம்.ஜி.ஆர் முன்னேற்றக்கழகத்தின் தலைவர் செல்வராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர்களான க.சிவாஜிலிங்கம் மற்றும் பா.கஜதீபன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். வீணா கான குருபீட தலைவர் சபா.வாசுதேவக்குருக்கள் கலந்துகொண்டு ஆசியுரையை வழங்கினார். (ஐ-86)




தேசிய கலை இலக்கியப் பேரவையினால் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட உழவர் விழாவில் வடலியடைப்பு கலைவாணி கலை மன்றத்தினரின் கிராமியப் பாடல் உட்பட பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ஐ)






வயாவிளான் மத்திய கல்லூரியின் 70 ஆம் ஆண்டு ஸ்தாபக தினமும், பரிசளிப்பு விழாவும் கடந்த வாரம் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களையும், வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் செ.சந்திரராஜா மங்கல விளக்கேற்றுவதையும், கல்லூரியில் பல்வேறு உயர்மட்ட செயற்பாடுகள் காரணமாக 'வயவன் நட்சத்திரம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மாணவர்களாக ர.அகிலன், இ.பானுஜா ஆகியோரையும், கலை நிகழ்வுகளையும் காணலாம். (ஐ)




மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி. ஆரின் 99ஆவது பிறந்த தினைத்தை முன்னிட்டு பாசையூரில் அமைத்துள்ள திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் இ.ஆனல்ட், எம்.ஜி.ஆரின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்ததைத் தொடர்ந்து முதியோரைக் கௌரவிக்கும் முகமாக உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. (ஐ-23)




வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தனது நிதியிலிருந்து தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்திட்டத்தில் நாவற்குழி, வரணி, மந்துவில், கோயிற்குடியிருப்பு ஆகிய இடங்களில் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார். (ஐ-9)



உலகசுகாதாரதினத்தைமுன்னிட்டுநடத்தப்பட்ட சித்திரப்போட்டியில் கோண்டாவில் இந்துக் கல்லூரியில் தரம் 10 மாணவன் ர.அனித்ஜன் மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு முதலமைச்சரினால் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ஐ-4)



தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற கால்கோள் விழா. (ஐ-108)



நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் பாடசாலைக்கென வழங்கப்பெற்ற தளபாடங்களை கையேற்கும் வைபவம் நடைபெற்றது. (ஐ)



வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் இடம் பெற்ற கால்கோல்விழா. (ஐ-108)





செரண்டிப் நிறுவனத்தின் அனுசரணையில் ஏழாலை தமிழ்ப்பொதுப்பணிமன்றத்தில் இடம் பெற்ற தையல்பயிற்சியை முடித்த மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் ஏழாலை தமிழ்ப் பொதுப்பணிமன்றத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் செரண்டிப் நிறுவன யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.கந்தசாமி தம்பதியினர் ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர். (ஐ-86)



வல்வை மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற கால்கோள்விழா. (ஐ-108)



பண்டாரிகுளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தந்தை செல்வா பாலர் பாடசாலையில் அண்மையில் சிரமதானப் பணிகள் இடம் பெற்றன. (ஐ-402)



பருத்தித்துறை, புலோலி, காந்தியூர் கல்விநிலையப் பரிசளிப்பு விழா அண்மையில் காந்தியூரில் இடம்பெற்றது. நிலையத்தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாணசபை உறுப்பினர்களான க.சிவாஜிலிங்கம், வே.சிவயோகன், அ.பரஞ்சோதி, க.தர்மலிங்கம், கே.சயந்தன், பா.கஜதீபன் மற்றும் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் பொ.குகதாஸ் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (ஐ)



தேசிய ரீதியில் அரச அலுவலகங்களுக்கிடையில் தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. பிரதேச செயலர் எஸ்.சிவசிறி , பிரதேச செயலக உதவித் திட்ட பணிப்பாளர் எஸ் .சுபசெல்வன் ஆகியோர் விருதுகளைப் பெற்றுள்ளனர். இந் நிகழ்வு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. (ஜ-109)





சுன்னாகம் சபாபதிப் பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப் புல - வலுவிழந்தோர் வாழ்வகத்தில் கலாநிதி அன்னலட்சுமிசின்னத் தம்பி உதயநாளும் பரிசுத்தினமும் கடந்த வாரம் நடைபெற்றது.



சுன்னாகம், மயிலணி சைவ மகா வித்தியாலய இல்ல விளையாட்டுவிழா அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக்கல்விப்பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரன், மற்றும் பாடசாலையின் பழையமாணவரான ஆஸ்திரேலியாவைச்சேர்ந்த பொ.ஸ்ரீரஞ்சன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ)



மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது. பாடசாலை அதிபர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் கலந்து கொண்டார். (ஜ-9)



காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற பட்டிப்பொங்கல் நிகழ்வுகள். (ஜ-250)



காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் தரம்-1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவும் பொங்கல் விழாவும் கடந்த வியாழக்கிழமை பாடசாலை அதிபர் க.நேத்திரானந்தன் தலைமையில் நடைபெற்றது. (ஜ-250)



பொங்கல் திருநாளை முன்னிட்டு இள வாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத் தின் ஏற்பாட்டில், பொங்கல் விழாவும் போரினால் பாதிக்கப்பட்டு அங்கவீன மான சிறுவர்களுக்கு கற்றல் உபகரண வழங்கும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு குமுளமுனை ப் பகுதியில் இடம்பெற்றது. இதன் போது ரூபா 25 ஆயிரம் பெறுமதியான கற்றல் உப கரணங் கள் வழங்கப்பட்டதுடன், மாற்றுத் திறனாளிச் சிறுவர்களின் கலை நிகழ்வு களும் இடம்பெற்றன. (ஜ

திருமதி சதானந்தி நந்தகுமார்

# பெண்களைத் துன்புறுத்தும் புற்றுநோய்கள்

மனித சமுதாயத்தைப் பெரிதும் பாதித்துப் பல லட்சக் கணக்கான மக்கள் இறப்பதற்குக் காரணமான கொடிய நோய்கள் இரண்டு. அவை யாவன, எயிட்ஸ்மற்றும்புற்றுநோயாகும். மனித சமுதாயத்துக்குச் சவாலாக இருக்கும் புற்றுநோய் பற்றிய ஆராய்ச்சிகள் உலகின் பல பகுதிகளிலும் தொடர்ந்து நிகழ்கின்றன. இந்த ஆராய்ச்சிகளின் பயனாகப் புற்றுநோய் சிகிச்சையில் ஒரு வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நோய் குறித்து மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு அதிநவீன பரிசோதனை முறைகள் மற்றும் சிகிச்சை முறையில் ஏற்பட்டுள்ள புதியமுறைகள் முன்னேற்றங்களால் இது சாத்தியமானது. எனினும், பெரும்பாலான மக்களிடையே புற்றுநோய் ஒரு குணப்படுத்த முடியாத நோய் என்ற கருத்து நிலவுகிறது. இந்த நோயைப் பற்றி முழுவிவரமும் அறிந்து கொண்டால் இது குறித்து விழிப்புணர்வு ஏற்படும். புற்றுநோய் என்பது உடலில் உள்ள கலங்களின் கட்டுப்பாடற்ற அபரிமிதமான அல்லது அதீத வளர்ச்சியாகும். புற்றுநோய் கட்டிகளாகவும் இருக்கலாம் அல்லது ஆறாத புண்களாகவும் இருக்கலாம்.

புற்றுநோயில் பல வகைகள் உண்டு. தலை முதல் கால் வரை எந்தப் பாகத்தையும் தாக்கலாம். இருப்பினும் தலை மற்றும் கழுத்துப் பகுதியிலும் உணவுக் கால்வாயிலும், குருதியிலும், சுவாசப்பையிலும் வரும் புற்றுநோய் ஆண், பெண் இருபாலாரையும் கர்ப்பப்பை, சூலகம், மார்பகங்களில் ஏற்படும் புற்றுநோய் பெண்களையும் அதிகமாகத் தாக்குகின்றது. இதன் பொதுவான அபாய அறிகுறிகளாவன:

1. நாள்பட்ட ஆறாத புண்
2. மார்பகம் அல்லது வேறு உறுப்புக்களில் வலியுள்ள அல்லது வலியற்ற கட்டி
3. உடலின் எப்பாகத்திலாவது நிறம் அல்லது உருவமாற்றம்
4. நாள்பட்ட இருமல் அல்லது குரல் மாற்றம்
5. உணவு உண்ணுதலில் தடை
6. உடலில் எந்தப் பகுதியிலாவது நீர் அல்லது இரத்தக் கசிவு
7. சிறுநீர், மலம் கழித்தல் போன்ற வழக்கங்களில் மாற்றம் போன்றவை அமையலாம் அல்லது ஏற்படலாம்.

இதுஎந்தவயதினரையும்தாக்கக்கூடியது. புற்றுநோய் ஒரு தொற்றுநோயல்ல. பெரும்பாலும் நாம் கடைப்பிடிக்கும் வாழ்க்கை முறையும் பழக்க வழக்கங்களுமே நோய் ஏற்படக் காரணமாகின்றன. உதாரணமாக புகையிலை, புகைப்பிடித்தல், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு உண்ணும் பழக்கமுள்ளவர்களுக்கு புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம்.



சிலவகைப்புற்றுநோய்பரம்பரையாகவும் வருவதுண்டு. பெற்றோரில் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ இருந்தால் குழந்தைகளுக்கு இந்த நோய்வரும் வாய்ப்புக்கள் அதிகம். புற்றுநோய் தொடக்க நிலையில் ஒருவரைப் பார்த்த உடனேயே அவர் புற்றுநோயாளி என்று கூறமுடியாது. முற்றிய நிலையில் ஏற்படும் சிலகுறிகளை வைத்து மட்டுமே அடையாளம் காணமுடியும். எனவே அவ்வப்போது பரிசோதனை செய்து கொள்வது ஒன்றுதான் புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் வழியாகும்.

புற்றுநோய் ஏற்படக் குறிப்பிட்ட எந்தவொரு வகை உணவும் காரணம்என்று இதுவரை அறியப்படவில்லை. எனினும் நார்ச்சத்து அதிகமுள்ள பச்சைக் காய்கறிகள், பழங்களை அதிகளவில் சேர்த்துக் கொண்டால் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புக்கள் குறையும்.




நோயின் தொடக்க நிலையில் வலி அல்லது நோ இருக்காது. என்பு நரம்புகளில் பரவும்போது மட்டுமே வலி ஏற்படும். குருதிப்போக்கு இருந்தால் மருத்துவ ஆலோசனைப்படி சிகிச்சை பெறுவது அவசியம். சரியான முறையில் உரிய சிகிச்சை செய்தால் புற்றுநோயாளியும் மற்றவர்கள் போல இயல்பாக வாழமுடியும். ஆரம்ப நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு உரிய சிகிச்சை அளித்தால் 80-90 வீதமான நோய்களை முற்றாகக் குணப்படுத்த முடியும்.

பெண்களுக்கு (Pap smear) சோதனை மூலம் கருப்பை வாய்ப் புற்றுநோய் கண்டறியப்பட்டால் அறுவைச் சிகிச்சை, கதிரியக்க சிகிச்சை மூலம் முற்றாகக் குணப்படுத்த முடியும். புற்றுநோய்க்கு ஒழுங்காகச் சிகிச்சை பெற்றுக் குணமடைந்த ஒருவருக்கு ஐந்து ஆண்டுகள் வரை புற்றுநோய் பாதிப்பு ஏற்படாமல் இருந்தால் அவருக்கு மீண்டும் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு மிகமிகக் குறைவு. எனினும் சிலவகைப் புற்றுநோய் 10-20 ஆண்டுகளுக்குப் பின்பு மீண்டும் வரவாய்ப்புண்டு. எனவே, முற்றிலும் குணமடைந்தாலும் இரு ஆண்டுகளுக்கு ஒருமுறைபரிசோதனை செய்தல் அவசியமாகும்.

## கருப்பை வாய்ப்புற்றுநோய்

போதியளவு விழிப்புணர்வு இல்லாதது, இளம் வயதில் திருமணம் செய்து பலமுறை கர்ப்பம் தரிப்பது, கருத்தடை மாத்திரை அதிகளவு உபயோகித்தல், பல ஆண்களுடன் உறவு கொள்ளல், பிறப்புறுப்புக்களை சுத்தமாக வைக்காத காரணங்களால் இந்த நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம். இதன் அறிகுறிகளாக, மாதவிடாயின்போது அதிக குருதி வெளியேறல், மாதவிடாய்க் காலப்பகுதியில் குருதி வெளியேறல், உடலுறவின் முன்பு, உடலுறவின்போது குருதி கசிதல் என்பன அமையலாம். இதனை ஆரம்பத்திலறிய எளிய பரிசோதனையாகிய (Pap smear) செய்யலாம். முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் ஆண்டுக்கு ஒரு தடவை இந்தப் பரிசோதனை செய்தல் நன்று. சிகிச்சையாக கதிரியக்க சிகிச்சை அளிக்கப்படும். நோய் நிலைக்கேற்ப அளவு, காலம் என்பன மாறுபடும். மார்பகப் புற்றுநோய் என்பது வெறும் புற்றுநோய் மட்டுமல்ல. அது பெண்மை சம்பந்தப்பட்டதாகவும் பாலியல் சம்பந்தப்பட்டதாகவும் உடல் அழகுடன் சம்பந்தப்பட்டதாகவும் இருப்பதால் அது பெரும் துன்பத்தோடு மன உளைச்சலையும் கொடுக்கக்கூடிய நோயாகும். இது மார்பகத்தில் ஒரு சிறுகட்டியாக ஆரம்பித்து சிறிது சிறிதாக வளர்ந்து மார்பகத்தோல், முலைக்காம்புகளிடையே பரவுகின்றது. நேரடியாக உட்புறமாக வளர்ந்து, மார்பகத்தின் பின்புறம் உள்ள தசைகளில் பரவுகிறது. அது தவிர நிணநீர் வழியாக அக்குளிடையே பரவி பல நிணநீர் முடிச்சுக்களுள் பரவுகின்றது. அத்துடன் குருதியூடாக உடலில் பல பாகங்களுக்கும் பரவலாம். பல ஆய்வுகள் மூலம் இது ஏற்பட மிக [illegible]புடையவர்களாகக் கருதப்படுவோர்:

1. கருத்தடை மாத்திரை அதிகளவு உட்கொள்ளும் பெண்கள்
2. குழந்தை இல்லாத பெண்கள்
3. தாய்ப்பாலூட்டாதோர்
4. சிறுவயதில் பூப்படைந்தோர்
5. மிகத்தாமதமாக மாதவிடாய் நிற்பவர்கள்
6. குடும்பத்தில் தாய், சகோதரி புற்றுநோயால் பாதிக்கப்பட்டோர்.
7. மது அருந்தும் பெண்கள்
8. கொழுப்புணவு அதிகம் உண்போர்
9. அசைவ உணவு உண்போர்

**இதன் அறிகுறிகளாக அமைவன:**

1. மார்பகக் கட்டி
2. முலைக்காம்பு வெடிப்பு
3. மார்பகத்தில் வீக்கம், வலி, நீர்/இரத்தம் வடிதல் அல்லது கசிதல்
4. மார்பு பெருத்து இரு மார்பகங்களும் வெவ்வேறு நிலையில் இருத்தல்

முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் வருடம் ஒருமுறையாவது மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனையும் மாதம் ஒரு தடவை சுயமார்புப் பரிசோதனையும் செய்தல் அவசியமாகும். இதன் சிகிச்சையாகக் கதிரியக்க சிகிச்சை, அறுவை மருத்துவ சிகிச்சை செய்யப்படும்.




பொதுவாகப் புற்றுநோய்க்கு மூன்று வகைச் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

1. கதிரியக்க சிகிச்சை,
2. அறுவைச் சிகிச்சை,
3. மருத்துவ சிகிச்சை

புற்றுநோயாளிகளில் 80 வீதமான நோயாளிகளுக்குக் கதிரியக்க சிகிச்சை தேவைப்படுகின்றது. இது முதன்மைச் சிகிச்சைகளுடன் சேர்த்து நோயின் தன்மை அது பரவியிருக்கும் நிலைக்கு ஏற்ப அளிக்கப்படும்.

பத்துக்கும் மேற்பட்ட புற்றுநோய்கள் நம் நாட்டில் காணப்பட்டாலும் பெண்களை அதிகம் துன்புறுத்துவது கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் ஆகியனவாகும். இருபாலாரையும் அதிகம் தாக்கக்கூடியது வாய்ப்புற்றுநோயாகும். இந்த மூன்று வகைப் புற்றுநோய்களும் மிகக் கொடிய உயிர்கொல்லிகள் என்றாலும் ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் குணப்படுத்தக் கூடியவையே.

எனவே, இந்தப் புற்றுநோய் பற்றிய அபரிமிதமான விழிப்புணர்வே எம்மக்களை இந்தக் கொடிய நோயிலிருந்து விடுவிக்க இலகுவான வழியாகும்.

தாதியப் போதனாசிரியர்,
யாழ். தாதியர் கல்லூரி.

## வீட்டுப் பிளாற்

(பிளாற்) இடிந்து வீழ்ந்ததில் தொழிலாளி ஒருவர் அதனுள் நசிந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இடம் பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கோபாலகிருஸ்ணன் மயூரன் (வயது 30) என்பவரே உயிரிழந்தார். அவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:- வலி.வடக்குப் பகுதியில் பட்டிக்கடவை,மாவிட்டபுரம் தெற்குப் பகுதியில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் மீளக் குடியமரும் நோக்கில் அங்கு முன்னர் வசித்த குடும்பஸ்தர் சென்றுள்ளார். அங்கு சேதமடைந்துள்ள தனது வீட்டைத் தொழிலாளர்கள் மூலமாகப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். அதன்போது வீட்டின் முன்பகுதி இடிந்து வீழ்ந்துள்ளது.

அதனுள் எதிர்பாராத விதமாகச் சிக்கிக் கொண்ட தொழிலாளியே சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இது தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் விசாரணை மேற் கொண்டனர். மல்லாகம் நீதிவான் முன்னிலையில் சடலம்மீட்கப்பட்டுஉடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டுள்ளது.

(த-4-101)

## ஹெரோயி

அவர்கள் கைது செய்யப்பட்டுப் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட் டனர். கடற்படையினர் அவர்களைச் சந்தேகத்தின் பேரில் சோதனையிட்ட போதே இருவரும் ஹெரோயின்போதைப் பொருளை வைத்திருந்தமை கண்டறியப்பட்டதாகவும் பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இளவாலை சேந்தாங்குளத்தைச் சேர்ந்த மத்தியால் குலசூரியராஜா, கொழும்பு மாளிகாவத்தையைச் சேர்ந்த சமிந்த விக்கிரமராட்சி ஆகியோரே கைது செய்யப்பட்டனர். முதலாவது நபரிடமிருந்து 59 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயினும் மிகுதி இரண்டாவது நபரிடமிருந் தும் கைப்பற்றப் பட்ட தாகப் பொலிஸார் தெரிவித்தனர். கடல் மார்க்கமாக குறித்த போதைப் பொருள் எடுத்து வரப்பட்டிருக்கலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அவற்றைக்குடா நாடு உள்ளிட்ட வடக்கில் விற்பனை செய்யவும் அவர்கள் திட்டமிட்டிருந்ததாகவும் ஆரம்ப விசாரணையில்தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவர்கள் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர் என்று பொலிஸாரால் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-4-107)


# காணவில்லை



நல்லூர் சட்டநாதர்
கோயிலடியைச் சேர்ந்த
**கந்தையா**
**இராசரத்தினம்**
(பொன்னண்ணை)
என்பவரை நேற்று (23.01.2016) சனிக்கிழமை முதல் காணவில்லை.
**இவரை கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.**
**077 8610 280**
**077 4897 320**

# நினைவேந்திநிற்கும் முதலாண்டு — நினைவேந்திநிற்கும் நான்காண்டு



திகழொளியாய் 30.03.1936 — புகழொளியாய் 04.02.2015
அமரர்
கலாபூஷணம் கலாவிநோதன்
**நாகலிங்கம் கணபதிப்பிள்ளை**
(சின்னமணி வில்லிசைப்புலவர்)



திகழொளியாய் 27.05.1935 — புகழொளியாய் 26.12.2011
அமரர்
**திருமதி கணபதிப்பிள்ளை அன்னமுத்து**
(புஸ்பராணி)
(ஓய்வுநிலை ஆசிரியை - அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை)

(திதி : தைப்பூசம் 24.01.2016)
பாதம் கண்ணெற்றி பணி தொடர்வோம் உம் நினைவில்......

கலையகம் அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# திருமதி மேரிராணி ஜெயராஜா (மணி)



வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி மேரிராணி ஜெயராஜா (மணி) நேற்று (23.01.2016) சனிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற றோமான் இமனுவல் சிறில் ஜெய ராஜாவின் (இலங்கை வங்கி) அன்பு மனைவியு ம், சுபாசினி (வன்னி விளாங்குளம் அ.த.க. பாடசாலை), தர்மேந்திரா (ஜேர்மனி), தனேந்திரா, யுவனேந்திரா (டுபாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், S.B. அருமை நாயகம் (கனடா), S.X குல நாயகம், காலஞ்சென்ற மேரி அமலோற்பவநாயகி (கிளி), S.V தனிநாயகம் (ஆஸ்தி ரேலியா),மேரிநிர்மலா (ஆசிரியை, வல்வை றோ.க.த.க. பாட சாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பராஜா, டொறத்தி, அருட்தந்தை நேசராஜா, ரட்ண ராஜா (பிரான்ஸ்), அணற் (நியூசி லாந்து), புஸ்பராணி (கனடா), தேவஜோதி, அன்ரனி ஜெய நாதன் (பிரதி அவைத்தலைவர், வடக்கு மாகாணசபை), Dr. சுசிலா (ஆஸ்தி ரேலியா), அருச்சுனா ஆகியோரின் மைத்துனியும், செபஸ்ரியன், லலிதா (இந்தியா), மதி (லண்டன்) ஆகியோரின் மாமியும், வேஜி, அனி, ஷாம் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

தகவல்:
S.X.குலநாயகம் (சகோதரன்)
திருமதி சுபாசினி (மகள்)

## கண்ணீர் அஞ்சலி



யாழ் செட்டித்தெரு மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியை திருமதி வசந்தமலர் பிரபாகரன் அவர்களின் அன்புத் தாயார்
அமரர் திருமதி
**சிதம்பரம்(சரஸ்வதி) இரத்தினம்**
20.01.2016 காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது பாடசாலை சமூகத்தின் சார்பில் கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/ செட்டித்தெரு மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை,
கில்னர்லேன், யாழ்ப்பாணம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
மாலினி
யோகேஸ்வரன்



கடந்த 25.12.2015 வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி மாலினி யோகேஸ்வரன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அகிலாண்டேஸ்வரி அருளகத்தில் (கோவிற்குளம் சிவன் கோயில்) நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரில் சமுகம் அளித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும், மலர் வளையம் தந்துதவிய அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி ச.யசோதராதேவி
தென் இலுப்பைக் குளம் வீதி,
34/35, 2ஆம் ஒழுங்கை
கோயில் புதுக்குளம்,
வவுனியா. 077 605 2203

(66603)

**குடும்பத்தினர்.**

உ
சிவமயம்

# அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 25.12.2015 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர்
**செல்லமுத்து குஞ்சுமணி**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குப்பிளான் தெற்கு,
குப்பிளான்.
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 . 07 . 1923
உதிர்வு 05 . 02 . 2015



அமரர் **கார்த்திகேசு நடராசலிங்கம்**

பண்பின் இலக்கணமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு நல்வழி காட்டியாய் வாழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் பாச நினைவுகள் என்றும் எம் மனதை விட்டகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பாளின் பாதாரவிந்தங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

கார்த்திகேசு வீதி ,
மீசாலை மேற்கு, மீசாலை.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்



### வேலுப்பிள்ளை அழகுசுந்தரம்

இணுவில் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், தாவடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அழகுசுந்தரம் 22.01.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் சந்திரவதனி, கௌரி (டென்மார்க்) ஆகியோரின் தந்தையும் ஸ்ரீரங்கநாதன், விஜயதாஸ்(டென்மார்க்) ஆகியோரின் மாமனாரும் சுதர்சிகா, தசியாண், நிவேதா, அயின், சுமி ஆகியோரின் அன்புப் பேரனும் கிருஷ்ணசாமி, காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் தங்கச்சியம்மா, பொற்கொடி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், கதிரவேலு மற்றும் நீலசுலோசனா, விமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.
T.P: 077 2478 705

தகவல்:
வே. கிருஷ்ணசாமி
(அண்ணா)

### கந்தையா தங்கராசா

(ஓய்வு நிலை தபால் உதத்தியோகத்தர்)



நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தங்கராசா நேற்று (22.01.201 6) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி கந்தையா மற்றும் இலட்சுமிபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னக்குட்டி மற்றும் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், நல்லம்மாவின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற விமலேஸ்வரன் மற்றும் விமலேஸ்வரி (லண்டன்), விமலினி (டென்மார்க்), விமலராஜ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தக்ஷாயினி, ராதாகிருஸ்ணன், சுபநாதன், றஜித்தா ஆகியோரின் அன்பு மாமனும், திருமதி குமாரசாமி, பொன்னம்மா, யோகராசா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, சுப்பிரமணியம், குமாரசாமி மற்றும் கந்தசாமி, இராச ம்மா ஆகியோரின் மைத்துனரும், தர்சன், கிருசிகன், வைஸ் ணவன், தனுசன், தனுசியா, அக்ஸ்சன், கிஷோத், சஜன், சர்வின் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2016) திங்கட்கிழமை நண்பகல் 12.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
077 3280712
021 205 7507

தகவல்:
குடும்பத்தினர்.


## அமெரிக்க

பட்டுள்ளதாவது:-
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் சர்வதேச தகவல் திட்டப் பிரிவின் இணைப்பாளரான மகொன் பிலிப்ஸ் என்ற அதிகாரியே இலங்கைக்கு குறுகிய காலப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.
இன்று அல்லது நாளை அதிகாலையில் கொழும்பு வந்து சேருவார் என்று எதிர்பார்க்கப்படும் இவர், இலங்கை அரச உயர்மட்டத்துடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.
இதேவேளை, இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் அமெரிக்காவின் அண்மைய நிகழ்ச்சி நிரலுக்கமைய, அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் கொழும்புக்கு அடிக்கடி பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ)


## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் மேற்பார்வை குடும்பநல உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி யேசுமலர் ராஜசூரியர் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **பங்கராசம்மா அந்தோனிப்பிள்ளை**

அவர்களின் பிரிவினால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்,
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை-
வேலணை

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சங்கரப்பிள்ளை பரமேஸ்வரி



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை பரமேஸ் வரி நேற்று (23.01.2016) சனிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்தியர் குணரத்தினம் சங்கரப்பிள்ளையின் (வல்வெட்டி பள்ளிய வத்தை பரியாரியார்) அன்பு மனைவியும், திருமதி கோகிலா தேவி-திருநடராசா (கனடா), திருச்சிற்றம்பலம் (ஆஸ்திரேலியா), திருமதிசெல்வலக்குமி - செல்வானந்தம் (கனடா), விக்னேஸ்வரமூர்த்தி (கனடா), ஆகியோரின் அன் புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளுவன் சந்தி,
சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்.
திருமதி கோகிலாதேவி-திருநடராசா

### தர்மலிங்கம் கணேசலிங்கம்

(கமநலசேவை நிலைய உத்தியோகத்தர்)



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் கணேசலிங்கம் 22.01.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் - தங்கமுத்து தம்பதிகளின் ஏக புதல்வனும் கோண்டாவில் காலஞ்சென்ற இராசையா - இலட்சுமி தம்பதியரின் மருமகனும் தயாநிதியின் அன்புக் கணவரும் கவிவர்ணன், தமிழினி, டிலானி, ரதிவர்ணன், காலஞ்சென்ற சசிவர்ணன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னா ரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக ளுக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1 ஆம் வட்டாரம்,
வேலணைகிழக்கு, வேலணை,

தகவல்:
குடும்பத்தினர்.


## இன்று கொழும்பு

பில் ஆராய்வதற்காக, ஜப்பானின் போர்க்குற்ற விசாரணை நீதிபதியான மோட்டு நுகுசி இலங்கைக்கு இன்று வருகை தரவுள்ளார்.
ஜெனிவாத் தீர்மானத்துக்கு அமைவாக, போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்கும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.
இதற்கு உதவும் நோக்கிலேயே, ஜப்பான் தனது சிறப்புப் பிரதிநிதியை இன்று கொழும்புக்கு அனுப்பிவைக்கவுள்ளது.
இலங்கைக்குப் பயணம் செய்யும் இவர், பிரதமர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளார்.
இந்தப் பேச்சுக்களின்போது, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, விசாரணைப் பொறிமுறையை எவ்வாறு உருவாக்குவது என்பது தொடர்பில் ஆராயப்படவுள்ளது.
நடைமுறைச் சாத்தியமான திட்டத்தை எவ்வாறு உருவாக்குவது - அதனை எவ்வாறு - எப்படி நடைமுறைப்படுவது என்பது தொடர்பில் இதன் போது விசேட கவனம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-வ-5)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சண்முகநாதன் A.M.N.P.P.T

(ஓய்வுநிலை சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர், மலேசியா)



வயாவிளான் ஸ்ரீ தம்பையா தரும்பணி தலைவர், கோலா லம்பூர்மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா சண்முகநாதன் கடந்த (21.01.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- மகேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா தம்பதிகளின் (கட்டப்பிராய்) மருமகனும், ரதிதேவியின் அன் புக் கணவரும், பரமேஸ்வரி, பத்மநாதன், சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வைத்திய கலாநிதி ஜோதி, சிரேஷ்ட சட்டவாளர் அசோக் கந்தையாவின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (மலேசியா), செல்ல ப்பா (மலேசியா), நடராசா (ஓய்வு நிலை ஆசிரியர், வயா விளான்) ஆகியோரின் பாசமிகு பெறா மகனும், வைத்திய கலாநிதி மனமோகன், சட்டத்தரணி ஹேமாவின் அன்பு மாமனும், சஞ்சய், அஸ்மிதா, ஈசன், உமேஷ், இஷா ஆரதி ஆகியோரின் பேர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.01.2016) வெள் ளிக்கிழமை கோலாலம்பூரில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No: I.Jalan 9/5,
Off Jalan Chanqqai 46000 Petaling
Jaya Selangor Malaysia,
00603 - 79544775

தகவல்: பெறாமகன்
தாயுமானவர் நிகேதன்
(ஆசிரிய ஆலாசகர்,
கிளிநொச்சி வலயம்)



### பிலிப் இம்மானுவேல் இன்பரூபன்

பெரியநாவற்குளத்தைப் பிறப்பிடமாகவும், சாவற்கட்டு, மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப் இம்மானுவேல் இன்பரூபன் அவர்கள் நேற்று (23.01.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பிலிப்-திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், யோசப்பினாவின் (ஜெசி) அன்புக் கணவரும், மெல்போன் (கனடா), றோசலின் (வைத்தியர்-சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வினோஜினி (ஆசிரியை), கீதன் (பொறியியலாளர்-சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு மாமனும், செகானி, ஜியானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (25.01.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவற்கட்டு,
மன்னார்.

தகவல்: குடும்பத்தினர்.
077 47 187 40

## புதியதொரு

தொப்புள் கொடி உறவுகளே! என்று கூறித் தனது உரையை ஆரம்பித்த கவிப் பேரரசு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மண்ணைத் தொட்டுவணங்குகிறேன். இந்த மண்ணைத் தொடுகிறபோது என்ன உணர்வு வந்தது என்பதை ஆயிரம் சொற்களில் எழுதிக்காட்ட முடியாது.

என் தமிழர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றேன். முள்ளிவாய்க்கால் பார்த்தேன், முல்லைத்தீவு பார்த்தேன், ஆனந்தபுரம் பார்த்தேன், புதுக்குடியிருப்பு பார்த்தேன், சாவகச்சேரி கடந்து வந்தேன், ஆனையிறவு பார்த்து வந்தேன். இவை எல்லாவற்றையும் பார்த்த என் நெஞ்சில் ஒரு பெரிய கல்வெட்டு மாதிரி சம்பவங்கள் விரிகின்றன. நடந்தவைகளைப் பற்றி பேசுவதற்கு நான் வரவில்லை. ஆனால் இந்த நிகழ்வுகள், இந்தச் சரித்திரக் குறிப்புக்கள், இந்த வாழ்வியல் இந்த வீரம், இந்தத் தியாகம், இவையெல்லாம் இந்த மண்ணில் பதியப்பட வேண்டும் என்ற வேட்கையை ஒரு படைப்பாளி என்ற வகையில் பெற்றிருக்கிறேன்.

ஆகவே தோழர்களே, தமிழர்களே, சகோதரர்களே என் தங்கை மார்களே, ஈழத்து மண்ணின் புண்ணிய புத்திரர்களே ஈழத்து மண்ணின் பெருங்கதையை ஒரு மகா காவியம் ஆக்குவதே வைரமுத்துவின் வாழ்நாள் திட்டம் என்பதை நான் இந்த மண்ணில் எழுதிக். கொள்ளவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். எழுதுவேன், என் விரல்கள் சம்மதிக்கும் வரை எழுதுவேன். தமிழ் எனக்குத் துணையிருக்கும் காலம் வரை எழுதுவேன். என் நெஞ்சில் ஈரம் இருக்கும் வரை தமிழர்களின் கண்ணீர் மாற்றப்படும் வரை எழுதிக்கொண்டு இருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது.

இந்த மண்ணில் புதிய நம்பிக்கையோடு நீங்கள் உங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மண்ணில் திருப்பித் தரமுடியாதவை நிறைய, திருப்பி தரமுடிந்தவை கொஞ்சம். உயிர்களை, புதைக்கப்பட்ட உடல்களை, இழந்து போன வாழ்க்கையை திருப்பித்தர முடியாது. ஆனால் நாம் பெறுவதெல்லாம் எம் முன்னோர்கள் விட்டுச் சென்ற நம்பிக்கையைத் திருப்பி பெறமுடியும் என்ற நம்பிக்கை உங்களிடத்தில் வர வேண்டும். அந்த நம்பிக்கை என்பது எங்கள் பிள்ளைகள் கல்வி பெறவேண்டும் எங்கள் யுவதிகள் கல்வி பெறவேண்டும், எங்கள் வாழ்வு உலகத்தோடு போட்டி போடக்கூடிய அறிவார்ந்த இனமாக வர வேண்டும். இன்னும் வாழ்க்கை இருக்கு என நம்ப வேண்டும் தோழர்களே.

எத்தனையோ கனவுகளோடு நான் இந்த மண்ணுக்கு வந்தேன். நண்பர்களுக்கு தெரியாமல் என் கண்களை அடிக்கடி துடைத்துக்கொண்டேன். முதல்முதலில் இன உணர்வோடு இந்தத் தியாக வரலாறு தெரிந்து கொண்டு இந்த மண்ணுக்கு வருகிற ஒருவன் அழாமல் திரும்ப முடியாது. இந்த மண்ணைத் தொட்டுப்பார்க்காமல் திரும்பமுடியாது. கைக்குட்டையில் கட்டிக்கொள்ளாமல் திரும்ப முடியாது. இந்த மண்ணைப் பார்த்துவணங்குகிறேன். பெரியோர்களை வாழ்த்துகிறேன். தமிழர்களுக்கு நம்பிக்கையை பெற்றுக் கொடுங்கள், கல்வி பெற்றுக் கொடுங்கள், காணிகளைப் பெற்றுக் கொடுங்கள், எங்கள் தமிழர்களுக்கு புதிய வாழ்க்கையைப் பெற்றுக் கொடுங்கள், அதற்கு நாங்களும் துணையிருப்போம் என்ற நம்பிகையை நான் உங்களுக்கு விதைக்கிறேன்- என்றார்.

தென்னிந்தியக் கவிஞரும் பாடசாலாசிரியருமான கவிப் பேரரசு வைரமுத்து உட்பட வடக்கு மாகாண அரசியல் தலைவர்கள் கலந்து கொண்ட மாபெரும் உழவர் பெருவிழா நேற்று முல்லைத்தீவில் கோலாகலமாக நடைபெற்றது.

முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்ற 2016 ஆம் ஆண்டுக்கான உழவர் பெருவிழா வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் மழைத் தூறல்களுக்கு மத்தியிலும் சிறப்பாக இடம்பெற்றது.

விருந்தினர் அழைப்புடன் ஆரம்பமான இந்த உழவர் பெருவிழா வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது 2015 ஆம் ஆண்டுக்கான மாவட்ட ரீதியில் சிறந்த சேதனப் பயிர்ச் செய்கையாளர்கள், வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கையாளர்கள், கால்நடைப்பண்ணையாளர்கள், கோழிப் பண்ணையார்கள் ஆகியோருக்கு விருதுகள் விருந்தினர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு தமிழர்களுடைய பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த விழாவில் தென்னிந்திய கவிஞர் வைரமுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், சி.சிறீதரன், சிவசக்தி ஆனந்தன், சிவமோகன், வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரன், வடக்கு மாகாண அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா, அமைச்சின் செயலாளர்கள், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன், அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-21-ரி7-102-10)

## புத்தூரில்

இது தொடர்பில் ஆராய விசேட குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகிறது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி மேற்கில் கைத்தொழிற் பேட்டைக்குத் தென்புறமாகவுள்ள குடியிருப்போடு இணைந்த தோட்டத்தில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இந்த நிலவெடிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் வீட்டின் சுவர்களும் வெடிப்புக்களுக்குள்ளாகியுள்ளன.

இது நில அதிர்வு என்றே பொதுமக்களால் கதைக்கப்படுகிறது. ஆனால், இது நில அதிர்வால் ஏற்பட்டதா என்பது தொடர்பில் உறுதியாக தெரிவிக்கமுடியவில்லை என்று யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

வல்லையில் அமைந்துள்ள இடர் முன்னறிவிப்பு நிலையத்தில் நில அதிர்வுகள் ஏற்பட்டதற்கான பதிவுகள் எதுவும் பதிவாகவில்லை. எனவே நில அதிர்வுதானா என்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எந்த ஆதாரமும் எம்மிடம் இல்லை என்று இடர் முகாமைத்துவப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலவெடிப்பு சம்மந்தமாக மக்கள் பீதியடையத் தேவையில்லை என்றும் இடர் முகாமைத்துவப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இது பற்றிய தகவல்கள் புவிச்சரிதவியல் மையம் மற்றும் தேசிய கட்டட ஆய்வு மையத்துக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

'கல் உடைவது போன்ற சத்தம் ஒன்று கேட்டது. பின்னர் எதனையும் கேட்கமுடியவில்லை. நாம் அதனைப் பொருட்படுத்தாமல் உறங்கச்சென்றுவிட்டோம். காலையில் எழுந்து பார்த்தபோதே தரைப் பகுதியை ஊடறுத்தவாறு வீடு வெடிப்புக்கு உள்ளாகி இருந்ததனை அவதானித்தேன்' என்று சுவர் வெடிப்புக்குள்ளான வீட்டு உரிமையாளரான தர்மசேகரம் சுப்பிரமணியம் (வயது 55) தெரிவித்தார். அதுமட்டுமன்றி தோட்டத்திலுள்ள பயிர்களையும் ஊடறுத்து நிலம் பிளவுபட்டிருப்பதை அவதானித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

இடர் ஏற்பட்ட நடுப்பகுதியை அண்மித்து 75 அடிக்கு மேல் அகழ்ந்தும் நன்னீர் அல்லாது சவரான நீராகக் காணப்பட்டதனால் பின்னர் அந்தக் கிணறு கைவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனையவற்றில் நன்னீர் தான் காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு பைக்கோ உள்ளிட்ட பெரிய இயந்திரங்கள் மூலமாகக் கல் அகழப்பட்டு நிலம் சீர் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அங்கு சென்ற இடர் முகாமைத்துவப் பிரிவினர் வெடிப்புக்களைப் பார்வையிட்டதுடன் இடர் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்குப் புவிச்சரிதவியல் மையம் மற்றும், தேசிய கட்டட ஆய்வு மையத்தையும் பணித்துள்ளனர். அந்த வீட்டினுள் செல்ல வேண்டாம் என்று அந்த வீட்டுக்காரருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரவியுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அவர் தெரிவித்ததாவது:

இது தொடர்பான தகவல்களை உடனடியாகக் கூறமுடியாது. நில அதிர்வு ஏற்பட்டதற்கான தகவல் ஆதாரங்கள் எவையும் பதிவு செய்யப்படவில்லை. எனவே புவிச்சரிதவியல் மையம் மற்றும், தேசிய கட்டட ஆய்வு மையத்தின் ஆய்வறிக்கைகளைக் கொண்டே உறுதியான தகவலை வழங்க முடியும் என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் புவியியற்றுறைப் பேராசிரியரும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளையுடன் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

குறித்த பகுதி மற்றும் அதனுடன் இணைந்த நவக்கிரிப் பகுதி சுண்ணக்கற் பிரதேசமாகும். சுண்ணக்கல் மழை நீரால் கரைக்கப்பட்டு இயல்பாகத் தோன்றிய நிலவுருவங்களே. நிலாவரை வற்றா நீரூற்று, உரும்பிராய் இடிகுண்டு என்பன அத்தகையதே.

மழைநீரால் சுண்ணக்கல் கரைக்கப்பட்டு நிலத்தின்கீழ் பள்ளங்கள் தோன்றும்போது இத்தகைய அதிர்வுகள், வெடிப்புகள் தோன்றுவதற்கு வாய்ப்புண்டு. இது சுண்ணக் கற்பாறை சார்ந்த நிலையில் ஏற்படக்கூடியது என்று அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், இது தொடர்பில் புவிச்சரிதவியல் ஆராய்ச்சி மையத்தினர் மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவினர் உள்ளிட்ட தரப்பினருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் இன்று யாழ். குடாநாட்டுக்கு வந்து ஆய்வு மேற்கொள்ளவுள்ளனர். அதன் பின்னரே இது தொடர்பில் உறுதியான தகவல்களை வழங்க முடியும் என்று யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தவிர, நிலவெடிப்புப் பாதிப்பை வடமாகாண ஆளுநர், ஆளுநரின் செயலாளர், மாவட்ட அரச அதிபர், மாவட்ட மேலதிக உதவி அரசஅதிபர், மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர், வடமாகாண விவசாயப் பணிப்பாளர், கோப்பாய் பிரதேசசெயலர் உள்ளிட்ட பலரும் அங்கு சென்று பார்வையிட்டனர். (த-4-ரி5-11-10)

## ஆஸி.

லது அதன் ஆதரவு அரசியல்வாதிகளுக்கோ தொடர்பிருக்கலாம் என்று தமிழக கியூப் பிரிவு பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கள்ளத் தோணி இயக்கும் கடத்தல்காரர்கள் பிடிபடும்போது, படகை விட்டுத் தப்புவதாடு நடுக் கடலில் தத்தளிப்போர், தங்கள் ஆவணங்களைக் கிழித்து கடலில் போட்டு விடுவதால், அவர்கள் அடையாளம் கூடத் தெரியாமல் உயிரிழக்கின்றனர் என்று கியூப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தவிர, பணம் சம்பாதிக்கும் நோக்கில், கள்ளத் தோணியில் ஆஸ்திரேலியா செல்லும் இலங்கைத் தமிழர்கள், நடுக்கடலில் கொத்துக் கொத்தாக உயிரிழக்கின்றனர் என்று சென்னையில் உள்ள ஆஸ்திரேலியத் தூதரகம் எச்சரித்துள்ளது.

இலங்கைத் தமிழர்கள் பலர், தமிழக முகாம்களில் இருந்து தப்பித்து, கடல் வழியாகக் கள்ளத் தோணியில், ஆஸ்திரேலியா செல்லும் சம்பவங்கள், பல ஆண்டுகளாக நடந்து வருகின்றன. இது குறித்து, கியூப் பிரிவுப் பொலிஸார் பல வழக்குகள் பதிவு செய்து, படகுகளை இயக்குவோரைக் கைது செய்கின்றனர்.

கரூர் மாவட்ட முகாமில் இருந்து வெளியேறி, நியூசிலாந்துக்கு கடல் வழியாக செல்லத் திட்டமிட்டு, திருச்சியில் கூடிய ஆறு பேரை, 'கியூ' பிரிவு பொலிஸார் கைது செய்தனர். இதில், ஜெயராஜ் என்பவர், இலங்கை தமிழர்களை நியூசிலாந்தில் கொண்டு போய் சேர்க்க, படகுக் கட்டணமாக, தலா ஒரு இலட்சம் இந்திய ரூபா வசூலித்தது தெரியவந்துள்ளது.

படகு செலுத்தத் தெரிந்த சில கடத்தல்காரர்கள், தமிழக முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்களை, ஆஸ்திரேலியாவுக்குப் படகில் அழைத்துச் செல்வதாக கூறி, இலட்சக்கணக்கில் பணம் பெறுகின்றனர்.

கள்ளத் தோணியில் வருவோரை, ஆஸ்திரேலியாவுக்கு அருகிலுள்ள கிறிஸ்மஸ் தீவில் விட்டு விட்டு, கடத்தல்காரர்கள் தப்பி விடுகின்றனர். இந்தத் தீவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் இடையே, ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் உள்ளது.

அந்த ஆழமான கடலில், அவர்களால் ஒரு அங்குலம் கூட நீந்தி வர முடியாது. அதனால், தீவில் அடைக்கலம் புகுந்தவர்கள் கடலில் நீந்த முயற்சித்து, கொத்து கொத்தாக உயிரிழக்கின்றனர். 2009 முதல், 2013 வரை, ஆயிரத்து 200 பேர் கடலில் மூழ்கி இறந்துள்ளனர். இந்த விவரம் தெரியாமல், இன்னும் கடல் வழியே சட்டவிரோதமாகப் பயணிக்கும் சம்பவங்கள் தொடர்கின்றன.

ஆஸ்திரேலியாவுக்குள் சட்ட விரோதமாக யாரும் நுழைய முடியாது. ஏற்கெனவே, ஐ.நா மூலமாக அகதிகளாக 30 ஆயிரம் பேருக்கு அடைக்கலம் தரப்பட்டது. தற்போது, இலங்கை, இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகள் வழியே, ஆஸ்திரேலியாவுக்கு கடல் மார்க்கமாக, இலங்கை தமிழர்கள் வருவதில்லை.

இந்தியாவில் இருந்து மட்டும் வர முயற்சிக்கின்றனர். கிறிஸ்மஸ் தீவைத் தாண்டி எந்தப் படகும் நுழைய முடியாத வகையில், எங்கள் பாதுகாப்புப் படையினர் பணியில் உள்ளனர் என்று அதிகாரிகளை மேற்கோள்காட்டி இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த-வ-4)

## எதிர்காலத்தில்

சனைகளையும் பெற்றுக் கொடுப்பதற்குச் செயற்படவுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ரக்கிஹிக்கோ நாகோ தெரிவித்தார்.

டாவோஸ் நகரில் இடம்பெறும் உலகப் பொருளாதார மாநாட்டின் இடைநடுவில் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, -ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஆகியோருக்கு இடையே பிரத்தியேக சந்திப்பொன்று இடம் பெற்றிருந்தது. இதன்போது இலங்கை யின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாகக் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டிருந்தன.

இதன்போது இலங்கைக்கு உதவிகளை வழங்குவது குறித்து நீண்ட மற்றும் விரிவான பேச்சுக்களை மேற்கொள்வதற்காக அடுத்த மாதத்தில் தாம் இலங்கைக்கு வருவதற்கு எண்ணியுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் தெரிவித்தார்.

இதன்போது, சுகாதார சேவைகளில் இலங்கை மேற்கொள்வதற்கு எண்ணியுள்ள மறுசீரமைப்புக்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெளிவுபடுத்தினார்.

இந்தத் துறைகள் சம்பந்தமான சமுதாயப் பார்வைகள் ஏற்கனவே சிறப்பான மட்டத்தில் காணப்படுவதால் இந்த மறுசீர மைப்புக்களின் ஊடாக அந்த சமுதாயப் பார்வைகளைப் பாராட்டப்படும் மட்டத்துக்கு உச்சப்படுத்த முடியும் என தலைவர் நாகோ நம்பிக்கை வெளியிட்டார்.

கடந்த காலகட்டத்தில் இலங்கை தாங்கிக் கொள்ள இயலாத அளவுக்கு கடன்களைப் பெற்றிருந்தமை கூட இங்கு அலசிப் பார்க்கப்பட்டது. உலகிலுள்ள பல்வேறு நாடுகள் மற்றும் வங்கிகளிடமிருந்து பெறப்பட்டுள்ள இந்தக் கடன் சுமையைத் தளர்த்திக் கொள்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் சம்பந்தமாக ஆராய்ந்து பார்ப்பதற்கும் இணக்கம் வெளிப்படுத்தப்பட்டது.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, சர்வதேச வர்த்தகங்கள் மற்றும் அபிவிருத்தி உபாயமார்க்கங்கள் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜெனிவாவிலுள்ள இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க, மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மற்றும் பிரதமரின் மேலதிக செயலாளர் சமன் அத்தாவுடஹெட்டி ஆகிய பிரமுகர்களும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். (த)



## வர்ணவீரவுக்குத் தடை

காலி சர்வதேச விளையாட்டரங்கின் முன்னாள் பராமரிப்பாளரான ஜயந்த வர்ணவீரவுக்கு மூன்று வருடங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது. மோசடிக்கெதிரான விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காமையின் காரணமாகவே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டிருந்த வர்ணவீர, இரண்டு தடவைகள் அவற்றில் கலந்துகொள்ளாமல் புறக்கணித்தார். அத்துடன் விசாரணைகளுக்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்கவும் அவர் தவறியிருந்தார். இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வர்ணவீரவுக்கு இரண்டு வருடங்கள் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தடை விதித்திருந்தது. இந்த நிலையிலேயே தனது தடை பற்றிய விவரத்தை சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது. (ம)


## மீண்டும் சிக்கலில் வீனஸ் வில்லியம்ஸ்



தோல்வியின் பின்னர் செய்தியாளர் சந்திப்பை புறக்கணித்தமையால் வீனஸ் வில்லியம்ஸுக்கு 5 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியரென்னிஸ்தொடர்மெல்பேர்ண் நகரில் நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் தரப்படுத்தலில் பத்தாவது இடத்திலுள்ள வீனஸ் வில்லியம்ஸ் குறித்த தொடரின் முதல் சுற்றிலேயே வெளி யேறினார். இதனையடுத்து, மேற்படி ஆட்டத் துக்கு பின்னரான கட்டாய ஊடகவியலாளர் சந்திப்பைத் தவிர்த்தமை காரணமாக அவருக்கு 5ஆயிரம் அமெரிக்க டொலர்கள் அபராதம் விதிக் கப்பட்டுள்ளது. கடந்த வருடம் பிரான்ஸின் ரென்னிஸ் தொடரில் தோல்வியடைந்த பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பை புறக்கணித்தமை காரணமாக, வீனஸுக்கு, 3ஆயிரம் அமெரிக்கடொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டிருந்தது. (ம)

# ஹசிம் அம்லா, ஸ்ரீபன் குக் சதம் தென்னாபிரிக்கா சிறந்த தொடக்கம்



தென்னாபிரிக்கா -இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் நான்காவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாம் நாளான நேற்றுமுன்தின முடிவில் முதலில் துடுப்பெடுத்தாடிவரும் தென்னாபிரிக்கா 329-5 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. எல்கருடன் ஆரம்ப வீரராக அறிமுகமானார் ஸ்ரீபன் குக். இணைப்பாட்டமாக 35 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் மொயின் அலியால் எல்கரின் இன்னிங்ஸ் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. குக்குடன் இணைந்தார் அம்லா. இணைப்பாட்டம் பலமாக அமைய சரிவில் இருந்து மீண்டது அந்த அணி. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்து சதத்தை நெருங்கிக் கொண்டிருந்தனர்.

டெஸ்ட்டிற்குஏற்றசராசரியில்ஸ்ரீபன் குக்சென்றுகொண்டிருந்தாலும் அம்லாவின் ஆட்டத்தில் மாற்றம் தெரிந்தது. ஒருநாள் பாணியில் விளையாடிக்கொண்டிருந்தார். சதத்தை எட்டுவதுக்கு அவருக்கு வெறும் 131 பந்துகள் மட்டுமே தேவைப்பட்டன. அறிமுக ஆட்டத்திலே சதத்தை எட்டினார் ஸ்ரீபன் குக்.

இணைப்பாட்டமாக 202 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் 109 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அம்லா. வில்லியர்ஸ் ஓர் ஓட்டத்தைத்தானும் பெறவில்லை. 115 ஓட்டங்களுடன் ஸ்ரீபனின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. டுமினியை எல்.பி.டபிள்யூ ஆக்கினார் மொயீன் அலி. நாள் முடிவில் தென்னாபிரிக்கா 329-5. பவுமா 32 ஓட்டங்களுடனும், டி கொக் 25 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக மொயின் அலி இரு இலக்குகளையும், ஸ்ரோக்ஸ், புரோட், வோக்ஸ் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

## கலைமகள், தோப்பு வாலிபர் அணிகளுக்கு அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 24

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத் தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த புதன்கிழமை இரவு 7மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா அணியை எதிர்த்து தோப்பு வாலிபர் அணி மோதிக் கொண்டது. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் தோப்பு வாலிபர் அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இரவு 8மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மல்லாகம் நியூவொரியர்ஸ் அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் அணி மோதிக் கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## பமிலியன்ஸுக்கு வெற்றி

யாழ்ப்பாணம். ஜன. 24

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம், ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்.இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து பமிலியன்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் பமிலியன்ஸ் அணி 41:33 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.(ம-23)




வயாவிளான் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் ஓர் கட்டமான பெண்களுக்கான சைக்கிளோட்டம் அண்மையில் நடைபெற்றது. (ம)

## கில்லறி அபாரம்

யாழ்ப்பாணம், ஜன. 24

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து மன்னார் கில்லறி அணி மோதிக் கொண்டது. இதில் மன்னார் கில்லறி அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## கே.ஸி.ஸி.ஸி. திரில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 24


ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் அணி கே.ஸி.ஸி.ஸி. அணி 69:64 என்ற புள்ளிகளின் அடிப்படையில் போராடி வெற்றி பெற்றது. (ம-23)

# இறுதி ஆட்டத்தில் ஆஸியை வீழ்த்தி வெள்ளையடிப்பைத் தவிர்த்தது இந்தியா

## 4:1 என தொடர் ஆஸ்திரேலியாவிடம்

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஐந்தாவதும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றிபெற்று வெள்ளையடிப்பில் இருந்து தப்பித்தது இந்தியா. 4:1 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா தொடரைக் கைப்பற்றியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. முதல்பந்துப்பரிமாற்றத்திலேயே வீழ்ந்தார் பின்ஞ். வழக்கம்போல் நிலைத்து நின்றார் வோர்ணர். சிமித், பெய்லி, மார்ஷ் மூவரும் பெரிதாக செயற்படவில்லை. முறையே 28 ஓட்டங்களுடனும் 6 ஓட்டங்களுடனும் 7 ஓட்டங்களுடனும் வீழ்ந்தனர். மொத்தத்தில் ஆஸியின் ஆரம்பம் ஏனைய ஆட்டங்களைப் போல சிறப்பாக அமையவில்லை. அறிமுகப்பந்துவீச்சாளரான பும்ராஜின் துல்லியமான வேகமும்இதற்குள்காரணம்.வோர்ணர் – மிச்செல்மார்ஷ் இணை ஆட்டத்தின் போக்கை இந்தியாவிடம் இருந்து எடுத்து வந்தது. சதம் கடந்தார் வோர்ணர்.ஆர்ப்பரிப்புக்களும் இருக்கத்தான் செய்தன. கன்னிச் சதத்தை எட்டினார் மிச்செல். 122 ஓட்டங்களுடன் வோர்ணர் ஆட்டமிழந்தார். பின்வரிசையில் ஓரிரு பவுண்டரிகள் பெறப்பட முடிவில் ஆஸ்திரேலியா 330 -7.பதிலுக்கு களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்பம் கச்சிதமாக அமைந்தது. ரோகித் – தவான் இருவரும் இணைந்து ஆஸியை மிரட்டினர். ஆளுக் கொரு அரைச்சதம் கடக்க இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. 78ஓட்டங்களுடன் (56 பந்துகளில்) ஆட்ட மிழந்தார் தவான். கோக்லி திருப்தியில்லை.பாண்டே ரோகித் சர்மா இணை, ஆட்டத்தில் இந்திய அணியின் தாக்கத்தை மீண் டும் தீவிரப்படுத்தியது. 99 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் ரோகித் சர்மா. வந்த வேகத்தில் அளவுக்கு அதிகமாக நிதானித்தார் டோனி. பெறப்பட வேண்டிய ஓட்டங்களை விட மீதமிருக்கும் பந்துகளின் எண்ணிக்கை சடுதியாய் குறைந்தன. இறுதி 3 பந்துப் பரிமாற்றத்தில் 36 ஓட்டங்கள் பெறப்பட வேண்டும் என்ற நிலைமை. டோனி சிக்சர் பவுண்டரிகளை அடுத்தடுத்து விளாசி ஆட்டமிழக்க சதத்தையும் பதிவு செய்துஆட்டத்தைவெற்றியுடன் முடித்தார் பாண்டே. ஆட்ட நாயகனாக பாண்டேயும். தொடராட்ட நாயகனாக ரோகித் சர்மாவும் தெரிவானார்கள். (ம)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம். ஜன. 24

*முல்லைத்தீவு கால்பந்தாட்டத் தொடர்*

முல்லைத்தீவு கால்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்களும் இறுதி ஆட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு பிரதேச சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளன. முதலாவது ஆட்டத்தில் முல்லைத்தீவுசென்.யூட் அணியை எதிர்த்து செல்வபுரம் சந்திரன் அணி மோதவுள்ளது. மு.ப 10 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியில்செம்மலைஉதயசூரியன் அணியைஎதிர்த்துஅலம்பில் இளந்தென்றல் அணி மோதவுள்ளது. காலை இடம்பெறும் அரையிறுதியாட்டங்களில் வெற்றிபெறும் அணிகள் மாலை இடம்பெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன.

*ஜொலிஸ்ரார் வி.கழகத் தொடர்*

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்.இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து பட்டபிளை அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்றலைட்ஸ் புளூஸ் அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

*உடற்கல்வி ஆசிரியர் சங்கத் தொடர்*

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் 7 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையி லான கால்பந்தாட்டத் தொட ரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதவுள்ளது. நிகழ்வுக்கு விருந்தினராக வடமாகாண பிரதி கல்விப் பணிப்பாளர் கே சத்தியபாலன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-23)

## காளியம்பாள் - உடுவில் சிந்து இறுதியில் இன்று பலப்பரீட்சை





யாழ்ப்பாணம், ஜன. 24

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் நடத்திய தாச்சித் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது. மாலை 4 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக .மைதானத்தில் இடம் பெறவுள்ள இந்த ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து அணி மோதவுள்ளது. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் தலைவர் செ.சண்முகலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ம-23)

## போராடி வென்றது விண்மீன்

யாழ்ப்பாணம், ஜன. 24

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான எவ்.ஏ. கிண்ணத்துக்கான மூன்றாம் சுற்று ஆட்டம் ஒன்று கடந்த வியாழக்கிழமை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. பலாலி விண்மீன் அணியை எதிர்த்து உடுத்துறை பாரதி அணி மோதிக் கொண்ட இந்த ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணியினரும் தலா ஓர் கோலைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதை கள் வரை ஆட்டம் இழுபறிப் பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் பலாலி விண்மீன் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## வளர்மதிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 24

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஐக்கிய விளையாட் டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த வியாழக்கிழமை இரவு 7மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் அணியை எதிர்த்து கைதடி வளர்மதி அணி மோதிக் கொண்டது. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் கைதடி வளர்மதி அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## இந்துவை வீழ்த்தியது மத்தி

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ். இந்துக்கல்லூரியின் 19வயதுப் பிரிவு அணியும் யாழ்.மத்திய கல்லூரியின் 19 வயதுப்பிரிவு அணியும் மோதிய நட்பு ரீதியிலான துடுப்பாட்டத் தொடரில் யாழ். இந்துக்கல்லூரி அணியை இன்னிங்ஸாலும் 114 ஓட்டங்களாலும் வீழ்த்தியது யாழ்.மத்திய கல்லூரி அணி.

யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக எம்.துவாரகன் 31 ஓட்டங்களையும், எஸ்.துவாரகன் 20 ஓட்டங்களையும், சிவலக்சன் 13 ஓட்டங்களையும்பெற்றனர். பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் தசோபன் 5 இலக்குகளையும், ஸ்ரீபன்ராஜ் 4 இலக்குகளையும், கிசோத் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்.மத்திய கல்லூரி சகல இலக்குளையும் இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாககிருபாகரன்63ஓட்டங்களையும், டினோசன் 59 ஓட்டங்களையும், கார்த்திபன் 51 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பில் எம்.துவாரகன் 4 இலக்குகளையும், சிவலக்சன் 3 இலக்குளையும், ஜெயநேசன் 2 இலக்குளையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக்கல்லூரி அணி 71 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறி கொடுத்தது. பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி சார்பில் ஸ்ரீபன்ரா7 இலக்குகளையும், தசோபன் 2 இலக்குகளையும், கதியோன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம-23)

## சென்.அன்ரனிஸ் அணி போராடி வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஜன. 24

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி மோதிக் கொண்டது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணியின்ரும் தலா இரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டன.

சமநிலைத் தவிர்ப்பில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# செரபோவா 600

சர்வதேச ரென்னிஸ் ஆட்டங்களில் தனது 600ஆவது வெற்றியைப் பதிவுசெய்துள்ளார் ரஷ்யாவின் மரிய செரபோவா. நடைபெற்றுவரும் ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றுத் தரப்படுத்தலில் 5ஆம் இடத்தில் உள்ள செரபோவாவை எதிர்த்து மோதினார் 103ஆவது இடத்தில் உள்ள அமெரிக்காவின் டேவிஸ். இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 6:1 என்று கைப்பற்றிய செரபோவா இரண்டாவது செற்றை 6:7 என்ற கணக்கில் போராடி இழந்தார். இதனால் வெற்றியாளரை தீர்மானிக்கும் செற்றாக மூன்றாவது செற் மாறியது. இந்த செற்றில் டேவிஸின் ஆதிக்கத்தை சிறிதும் அனுமதிக்காத செரபோவா 6:0 என்ற கணக்கில் கைப்பற்றி 2:1 என்ற செற்களின் அடிப்படையில்ஐந்தாவது சுற்றுக்கு முன்னேறினார். இந்த வெற்றி சர்வதேச ரென்னிஸ் ஆட்டங்களில் செரபோவாவின் 600 ஆவது வெற்றியாக அமைந்தமை சிறப்பம்சம். (ம)




## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர் கிளிநொச்சியில் அமைந் துள்ள மகா தேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்கள் காணப் படுகின்றன. அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கீழ்க் குறிப்பிட்ட பாடங்களில் பட்டத்தினைப் பூர்த்தி செய்த ஆண், பெண் பட்டதாரிகள் இருபாலாரும் தங்கள் விண்ணப்பங்களை 04.02.2016 க்கு முன்பதாக தபால் மூலமாகவோ அல்லது மின் னஞ்சல் மூலமாகவோ எமக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். பட்டதாரி அல்லாதோர் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

01. வரலாறு, புவியியல், குடியியல், விஞ்ஞானம், ஆங் கிலம் என்பவற்றுக்கு ஆசிரியர் தேவை.

குறிப்பு:★ நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்.
★ உணவு, தங்குமிடம், பராமரிப்புச்செலவு இல்லத்தினால் இலவசமாக வழங்கப்படும்.
★ சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

02. பராமரிப்பாளர்கள் (பெண்கள் மட்டும்)
குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பராமரிப்பாளர்கள் தேவை.

தகைமைகள்
1. க.பொ.த. சா/த தரத்திற்கு குறையாத கல்வித் தகைமை.
02. விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும் இல்லக்குழந்தைகளை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து சைவநெறி ஒழுக்கத்துக்கு அமைவாக வழிப்படுத்தும் ஆற்றல், தியாக சிந்தனை, சமூக அர்ப்பணிப்பு மிக்க உணர்வோடு இருத்தல் வேண்டும்.
குறிப்பு: ★ நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருத்தல் வேண்டும்.★ உணவு, தங்குமிடம், பராமரிப்புச்செலவு இல்லத்தினால் இலவசமாக வழங்கப்படும்.★ சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எந்தப் பதவிக்கான விண்ணப்பம் என்பதை தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:
தி. இராசநாயகம், தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி
மின்னஞ்சல் முகவரி rasa46@yahoo.com
தொலைபேசி 077 0504960,021 4923118

## கொள்வனவு
தொடர்பு 0773127498

ஊர்ச்சேவல் மட்டும் 1000/= மேல் கொள்வனவு செய்யப்படும். ஊர்ப்பேடு, ஊர்க்குஞ்சு, கல்பேட், வான்கோழி என்பன நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும்.
**தாசன் பாம்**
158/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## வாடகைக்கு வாகனம் தேவை

01.எமது நிறுவனத்தின் பொருள்களை யாழ்ப்பாணத்தில் விநியோக்க **Dimo Bata** (டிமோபட்டா) அல்லது **(Maxmio)** சிறிய லொறி வாடகைக்கு தேவை.
02. களஞ்சிய சாலையாக பயன்படுத்த சிறிய கடை அல்லது வீடு உரும்பிராய் கோண்டாவில் . இணுவில் மருதனார்மடம் அண்டிய பகுதியில் தேவை

N.S.Y Distributor
57/1 , Sri Saranakarary
Kalu bowilla
075 410 5230, 011 317 1594
Mobile: 076 852 4004

## காணி தேவை

கைதடியில் இருந்து பளை வரை உள்ள A9 வீதிக்கு மிகவும் சமீபமாக மேட்டு நிலமான வெற்றுக்காணி 5 பரப்பில் இருந்து 3 ஏக்கர் வரை தேவை. பூநகரி வீதியில் இருந்தாலும் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 539 3728

## விற்பனைக்கு 071 4620806

4 நாள்கள் மட்டும் பாவித்த புதிய HTC மொபைல் ( 820 G, சர்வதேசதரம்) 3 வருட உத்தரவாதத்துடனும், HP Laser Colour Printer உம், A/C வெளி இணைப்பு கொம்பிறசர் இரண்டும் விற்பனைக்கு உண்டு

## வேலையாள்கள் தேவை 0774623625

இன்று (24.01.2016) புதிதாய் ஆரம்பமாகவுள்ள DANUSKA Restaurant இற்கு வேலையாள்கள் தேவை.
1.ரொட்டி வேலை செய்பவர்கள்
2.சமையல் வேலை தெரிந்தவர்கள்,
பழக ஆர்வமுள்ளவர்கள்
3.சபளையர (Waiter)
தொடர்பு: திங்கள் காலை 9.00AM To 01.00 PM
**Danuska Restaurant**
(Near old police station), Ananikkoddai.

## English Language Adventure School

English Trainer Training (Teacher Training Programme) (500 hrs)
Spoken English (160 hrs) ➡ Diploma in English (240 hrs)
Spoken Sinhala (160 hrs) ➡ IELTS Lifeskills ➡ IELTS
New batches start on
➡ 23.01.2016 சனி 9.am, 1.30pm, 3.30 pm (Weekend batches)
➡ 25.01.2016 திங்கள் 9.am, 1.30pm, 3.30 pm (Week days batches)
ELAS Sir Pon Ramanathan Rd, Thirunelveli, Jaffna. (யாழ் பல்கலை எதிரில்)
Contact No - 076 697 3040, 021 221 2410

## Diploma in Advanced Microsoft Excel

* 75 Excel Functions
* Pivot Table
* What if Analysis
* Finance Excel
* 300 Practical Exercises
* Time Value of Money

## Diploma in Computerized Accounting

* Quick Book
* Tally
* 50 Finance Related Microsoft Excel Functions

அலுவலகங்களில் Microsoft Excel பயன்படுத்துபவர்கள் Excel தொடர்பான சகல பிரச்சினைகளுக்கும் எம்முடன் தொடர்புகொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: Student Success Centre
320, Main Street, Jaffna.
077 6169 470 - 077 008 0075 - 021 221 5569

## காணி விற்பனைக்கு

150/9, நெடுங்குளம் வீதி, அரியாலையில் அமைந்துள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு:- 077 670 9863**
இலக்கம் 125/4, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை.

## சாவகச்சேரியில் கடைத் தொகுதி வாடகைக்கு

இலக்கம் 74, A9 வீதியில் கல்லடி மூட்டுச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள "கமலாஸ் கடைத்தொகுதி" விரைவில் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: J. கிருபாகரன் 0777 049 402

## தேவை

மருதனார் மடம், சுன்னாகம், உடுவில், இணுவில் பகுதிகளில் அமைந்திருக்கக்கூடிய வீடொன்று உடனடியாக வாடகைக்குத் தேவை. குறைந்த பட்சம் நான்கு அறைகள் இருப்பது விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 117 2226

## மொழி வகுப்புகள்

திருமண பந்தத்தின் மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கு இலகுவாக சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய முறையில்
ஜேர்மன் Deutsch,
நெதர்லாந்து - Dutch,
ஆங்கிலம், French,
Italian வகுப்புகள் நடைபெறுகின்றன
விவேகானந்த அக்கடமி
221/1, மின்சாரநிலைய வீதி,
021 321 6928,077484 2464

## மணமகள் தேவை

யாழ்.இந்து 24.02.1982 ரேவதி முதலாம் பாதம் 2இல் செவ்வாய், கிரகபாவம் 14, உயரம் 5'7" முகாமைத்துவ உதவியாளராக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் மணமகனுக்கு முகாமைத்துவ உதவியாளர் / ஆசிரியை ஆகக் கடமை புரியும் மெல்லிய சிவப்பு நிறமான வலி.கிழக்கில் வசிக்கும் மணமகள் தேவை. வீடு இல்லாவிடினும் பரவாயில்லை தோஷம் குறைந்த செவ்வாய் ஆதலால் மணமகளுக்கு செவ்வாய் இல்லாவிட்டாலும் ஏற்றுக் கொள்ளப்படும்.
**077 879 3563**

## மரண அறிவித்தல்

திருமதி **வரதலெட்சுமி துரைராஜா**



யாழ்ப்பாணம், கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரதலெட்சுமி துரைராஜா நேற்று (23.01.2016) சனிக்கிழமை காலமானார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை நாவற்குழி ஊரியான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
581, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தகவல்: 077 610 3563 து.நாகேந்திரராஜா

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 19 . 11 . 1954



இறப்பு 04 . 02 . 2015

அமரர் **சின்னத்துரை விஜயமூர்த்தி**

ஆண்டவனடி சேர்ந்து ஆண்டொன்று போனாலும் நீர் எமக்கு வேண்டுமென்று தினம் எம்மனம் துடிக்கும் பூப்போன்று மலரும் புன்சிரிப்பு பூரிக்க வைக்கும் மென்சொல் கலை நுட்பம் வாய்ந்த செயல்கள் இவையின்றி கனவாகிப்போனாலும் உம் நினைவுகள் என்றென்றும் எம் வாழ்வை வழிநடத்தும்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!
-என்றும் உங்கள் நினைவுகளுடன்
நாவலடி, உடுப்பிட்டி. **குடும்பத்தினர்.**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.